93

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

செயலக வெளியீடு

தொகுதி - 24 எண் - 2

ஏப்ரல் - 1992

©

D
V211,31/N92
N92.24.2.
11-94.

வெளியீடு

Issued 2-11-92

10 செப் 1993

779/93

# தமிழ்நாடு
## சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
### செயலக வெளியீடு

# TAMIL NADU
## LEGISLATIVE ASSEMBLY DEBATES

### OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 10, 1992 - தொகுதி 24 - எண் 2

**Friday the 10th April, 1992 - Volume 24 - No. 2**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

**Legislative Assembly Secretariat, Fort St. George
Madras-600 009**

விலை ரூ. 3.00] [Price Rs. 3-00

# உள்ளடக்கம்

**10—4—1992**


பக்கங்கள்

1. வினாக்கள்— விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் — 195-233

2. சிறப்புக் குறிப்புகள்—

(அ) வேலூர் சிறையிலிருந்து ஒரு கைதி தப்பியது குறித்து — 233—236

(ஆ) பேரவைத் தலைவர் அனுமதி மறுத்த பிரச்சினை — 241—248

3. கவன ஈர்ப்பு—

(அ) சாலைப் போக்குவரத்து நிறுவனத்தில் ஓட்டுநர் பயிற்சி பெற்றவர்களுக்கு பணி நியமனத்தில் முன்னுரிமை இல்லாதது குறித்து — 236—239

(ஆ) திருச்சி—குளத்தூர் கே-1 நகரப் பேருந்து நிறுத்தப்பட்டுள்ளது குறித்து — 239—241

4. [illegible]ககள் அளித்தல்— — 244

[illegible] உரிமைக் குழு

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு — 249

5. அரசினர் தீர்மானங்கள்—

(அ) ''இல்லஸ்ட்ரேடட் வீக்லி ஆப் இந்தியா'' மீதான உரிமைக் குழு அறிக்கை — 249—250

(ஆ) மதிப்பீட்டுக் குழு— உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல் — 251

(இ) பொதுக் கணக்குக் குழு—உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல் — 251—252

(ஈ) பொது நிறுவனங்கள் குழு—உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல்.

(உ) உரிமைக் குழு—உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல்.

6. அறிவிப்பு—

குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல். 253

7. மானியக் கோரிக்கைகள், 1992—93, விவாதமும் வாக்கெடுப்பும்—(தொடர்ச்சி)

கோரிக்கை எண் 30—சமூக நலன். 323–344

*மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி 254

திரு. சி. ஞானசேகரன் 255–263

திரு. ஆர். டி. அரங்கநாதன் 263–266

திரு. செ. கு. தமிழரசன் 266–273

திருமதி ஜெ. லோகாம்பாள் 273–276

டாக்டர் பீட்ரிக்ஸ் டி'சோசா 276–278

டாக்டர் வெ. புருஷோத்தமன் 278–282

திரு. சா. பன்னீர்செல்வம் 282–284

திரு. எச். எம். ராஜு 285–290

டாக்டர் எம். கருப்புசாமி 290–294

திருமதி ரமணி நல்லதம்பி 294–303

திருமதி கே. எம். கலைச்செல்வி 303–307

செல்வி கோ. மல்லிகா 307–309

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் 309–323

பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் 345

9. இணைப்புகள் 347–411



164940

D
V 2,11,31'N92
N92,24.2


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

## பங்குனி 28, பிரஜோற்பத்தி, திருவள்ளுவர் ஆண்டு 2023

## 1992 ஏப்ரல் 10, வெள்ளிக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்.''

தம் பசியைப் பொறுத்துக் கொள்வதென்பது சிறந்த ஆற்றலாகும். அவ்வரிய ஆற்றலைவிட பிறர் பசியைப் போக்கும் ஆற்றல் நனி சிறந்ததாகும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள். வினா எண் 495, திரு. வே. பெரியசாமி. இருக்கையில் இல்லை.

வினா எண் 534, திரு. கே. பி. ராஜு, திரு. வி. பி. சந்திரசேகர், டாக்டர் அ. ஸ்ரீதரன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

534—

**கோயம்புத்தூர் மாவட்ட வறட்சி பாதிப்புக்கு நிவாரணம்.**

*8491—திரு. கே. பி. ராஜு, திரு. வி. பி. சந்திரசேகர், டாக்டர் அ. ஸ்ரீதரன்:

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோயம்புத்தூர் மாவட்டம் வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதால் அதற்கு அரசு உடனடியாக நிவாரணம் அளிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

[1992 ஏப்ரல் 10

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் வசதியுள்ள மாவட்டம் என்று எல்லோரும் சொல்லுவார்கள். புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் எல்லா மாவட்டங்களிலும் மழை பெய்து குடிநீர்ப் பிரச்சினை தீர்ந்து விவசாயத்திற்கு நீரும் கிடைத்திருக்கிறது. ஆனால் துரதிருஷ்ட வசமாக எங்கள் மாவட்டத்தில் மட்டும் நீர் கிடைக்கவில்லை. மழை பெய்யவில்லை. நாங்கள் எல்லாம் அமைச்சரிடம் போராடி குடிநீருக்காக ஆழ்குழாய் கிணறுகளைத் தோண்டுவதற்காக குறைந்த அளவு தொகை இப்போது ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது போதாது. இது யானைப் பசிக்கு சோளப் பொரியைப் போலத்தான் இருக்கிறது. ஆகவே கோவை மாவட்டத்தில் இப்போது குடிநீரே கிடையாது. நாங்கள் கூட்டங்களுக்குச் சென்றால், குடங்களை வைத்துக் கொண்டு பொதுமக்கள் எங்களை மறிக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கே இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. கோவை மாவட்டத்தில் உள்ள குடிநீர்ப் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஆழ்குழாய்க் கிணறுகளை அமைத்தாலும் குடிநீர் கிடைக்கவில்லை. ஆகவே அமைச்சர் அவர்கள் அந்த மாவட்டத்தின் கிராமங்களுக்கு லாரி மூலம் தண்ணீர் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போதுதான் வெளியில் குடிபோகின்ற நிலைமை மாறும். அந்த நிலையில் கோவை மாவட்டம் இருக்கிறது. அதைப் போக்குவதற்கு அமைச்சர் அவர்கள் வழிவகை காண்பார்களா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திற்கு இந்த ஆண்டு 1992-ல் 97 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. ஆழ்குழாய்க் கிணறுகள் தோண்டுவதற்கு ரூ. 50 லட்சமும், ஆழ் குழாய்க் கிணறுகளை சுத்தம் செய்வதற்கு ரூ. 8 லட்சமும் மாண்புமிகு உறுப்பினர் கேட்டபடி லாரி மூலம் தண்ணீர் கொடுப்பதற்கு ரூ. 30 லட்சமும் மற்றவைகளுக்கு ரூ. 9 லட்சமும் கொடுக்கப்பட்டு இருக்கிறது. மாவட்டத்தின் நிலைமை பற்றி ஆட்சித் தலைவரிடம் அறிக்கை பெற்று தேவையான நிதி ஒதுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் கடுமையான வறட்சியின் பிடியில் சிக்கியிருக்கிறது. அதுவும் குறிப்பாக பொள்ளாச்சித் தொகுதியில் பொள்ளாச்சி தெற்கு ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பல கிராமங்களில் இன்றைக்கு குடிநீர் இல்லாமல் பல மைல் தூரம் அங்குள்ள பொதுமக்கள் நடந்து சென்று தண்ணீரைக் கொண்டுவருகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் கோவை மாவட்டத்திற்கு வறட்சிப் பணிக்காக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள்.



1992 ஏப்ரல் 10]

பொள்ளாச்சித்தொகுதிக்கு இதில் முன்னுரிமை அளித்து வறட்சி யால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிற பொள்ளாச்சி தெற்கு ஊராட்சி ஒன்றிய கிராமங்களுக்கு அதிக உதவிகள் செய்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலை வருடைய அறிக்கையைப் பெற்று இப்போது பணம் ஒதுக்கியிருக் கின்றோம். மாவட்ட ஆட்சித் தலைவர் அந்த மாவட்டத்தில் இருக்கின்ற ஊராட்சி ஒன்றியங்களில் எங்கெங்கே வறட்சி அதிகமாக இருக்கிறதோ அதற்கேற்றவாறு அந்தப் பணத்தை ஒதுக்கிச் செலவு செய்வார்கள், தேவைப்பட்டால் இந்த அரசு மேலும் ஒதுக்குவதற்குத் தயாராக இருக்கிறது.

முற்பகல் 9—35

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் வறட்சியால் பாதிக்கப்பட் டுள்ளது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்கு புரிந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவருடைய நேரடிப் பார்வையில் ஒரு சப்-கலெக்டர் அந் தஸ்தில் உள்ள அதிகாரியை ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற் கும், வறட்சி நிவாரணப் பணியை மேற்கொள்ளுவதற்காக டெப் யூட் பண்ணி போர்க்கால நடவடிக்கை எடுத்து குடிநீர்ப் பிரச் சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் ; பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி நிவாரணப் பணி எப்போதும் போர்க் கால அடிப்படையிலேதான் நடந்து கொண்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல் வருவாய்த்துறை நிர்வாகத்தினுடைய சிறப்பு ஆணையாளர் அவர்கள் அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறார் கள். தேவைப்பட்டால் அதனுடைய கடமையை உத்தேசித்து அங்கே அரசு சார்பாக தேவைப்படுகிற மாவட்டங்களுக்கு குழுக்களும் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் வறட்சிப் பகுதிகள் இருப் பதாக அறிவித்து அதற்கு நிதியும் ஒதுக்கியுள்ளார்கள். குடி நீர் பிரச்சினைதான் முக்கியமான பிரச்சினை என்ற காரணத் தால், குடிநீர் வழங்குவதற்காக அத்திக்கடவு குடிநீர்த் திட்டப்

பணிகள் நடந்து வருகின்றன. அந்தப் பணிகள் குறிப்பிட்டக் காலத்திற்குள் நடைபெறாமல் மெதுவாக நடைபெற்று வரு கின்றன. ஆகவே துரிதமாக நடவடிக்கை எடுத்து அந்தப் பணி களை நிறைவேற்றி நீண்டகால குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும் புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில தினங்களுக்கு முன்பு உள்ளாட்சித்துறை அமைச்சர், இங்கே மாநிலத்தில் இருக்கின்ற குடிநீர் பஞ்சத்தைப் போக்குவதற்காக தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவியினுடைய அனுமதியின் பேரில் சில திட்டங்கள் எல்லாம் விரிவுபடுத்தப்படும் என்று அறிக்கையாக வைத்திருக்கிறார்கள். அந்த அறிக்கை, கோவை மாவட்டமும் உள்ளிட்ட அறிக்கையாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வெ. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற கோவை மாவட்டத்திற்கு உட்பட்ட திருப்பூர் பகுதியில் ஏற்கெனவே கடுமையான குடி தண்ணீர் தட்டுப்பாடு இருப்பது. அரசு அறிந் ததே. அங்கே மேலும் கடுமையான பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே லாரிகள் மூலம் சப்ளை செய்வதில் திருப்பூருக்கு முன் னுரிமை அளிப்பதோடு, பரம்பிக்குளம்—ஆளியாறு வாய்க்கால் தண்ணீரை அந்தப் பகுதியில் உள்ள குட்டைகளுக்கு விடுவோ மேயானால் ஓரளவிற்குத் தண்ணீர் கஷ்டம் தீரும். அதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்டகாலத் திட்டம், உட னடித்திட்டம் என்பதை வருவாய்த் துறையின் மூலமாகப் பார்த் தாலும், நிரந்தரமாக பல இடங்களில் குடிநீர் பஞ்சத்தைப் போக்குவதற்காக கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக இந்த அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதைத்தான் நான் முதலிலே சொல்லுகிறபோது, உள்ளாட்சித் துறை அமைச்சர் இங்கே ஓர் அறிக்கையை வைத்தார் என்பதும் ]வைகள் எல்லாம் சேர்த்துத்தான் அந்த அறிக்கையை வைத்திருக்கிறார்கள் என்றும் தெரிவித்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : செல்வி எல். சுலோ சனா.

செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வருடம் கோவை மாவட்டம் மழை இல்லாமல் மிகவும் வறட்சியான மாவட்டம் என்று அறிவிக்கப்படாவிட்டா



லும், வறட்சி ஏற்பட்டக் காரணத்தால் அதிகமான நிதி ஒதுக் கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் இந்த மாவட்டத்திலேயே மேட்டுப்பாளையம் தாலுாக்காவில்தான் மிகவும் குறைவான மழை இந்த வருடம் பெய்துள்ளது. அதனாலே மேட்டுப் பாளையம் தாலுாக்காவில் அதிக ஆழ்குழாய் கிணறுகளை அமைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : கோவை மாவட்டம் வறட்சியாக இருக்கிறது என்று எல்லா உறுப்பினர் களும் கேட்பதால், மாநிலத்தில் இருக்கின்ற மற்ற மாவட்டங் களிலே எல்லாம் மழை பெய்திருக்கிறது என்று தவறாக கருத வேண்டாம். இன்றைக்கு பத்துப் பன்னிரெண்டு மாவட்டங் களில் சராசரியாக, இயல்பாக பெய்ய வேண்டிய மழைக் கூட குறைந்து இருக்கிறது. கோவை மாவட்டத்திற்கு மட்டுமல்ல, எல்லா மாவட்டங்களுக்கும்தான் சேர்ந்து தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ரூ. 9.72 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். அந்தந்த மாவட்டங்களுக்கு அதைப் பிரித்துக் கொடுத்திருக்கிறார்கள். அதே போல் மாண்புமிகு உறுப்பினர் கேட்டபடி அந்த இடத்திற்கும் தேவையான பணம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஒதுக்கி காரியங்களை விரைவாக நடத்துவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்ன சாமி, கோவை மாவட்டத்திற்கு உதவுவது போல துணைக் கேள்வி கேளுங்கள்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம், கோவை மாவட்டத்திலேயிருந்து குறுகிய காலத்திலேதான் பிரித்த மாவட்டம். மாண்புமிகு மேட்டுப்பாளையம் சட்டமன்ற உறுப்பினரும், அவினாசி சட்டமன்ற உறுப்பினரும் சொன்ன தைப் போல எங்களுடைய பவானிசாகர் அதை ஒட்டிய தொகுதி. ஒரே ஒரு ஊரிலேகூட இரண்டு தொகுதிகளுக்கு ஓட்டுப் போடும் நிலைமை அங்கே பல ஊர்களில் இருக்கிறது. ஆகவே அங்கே என்ன இயற்கை சூழ்நிலையோ அதே சூழ் நிலைதான்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங் கள்.

திரு. வி. கே. சின்னசாமி : எங்களுடைய நம்பியாறு ஊராட்சி ஒன்றியம், பவானி ஊராட்சி ஒன்றியம், புளியம் பட்டி ஊராட்சி ஒன்றியம் ஆகியவற்றிலும் அப்படித்தான் நிலைமை. அதற்காக வருவாய்த் துறை மானியத்தின் மீது

பேசும்போது அந்தப் பகுதிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டன என்று பேசியிருக்கிறேன். ஆகவே சிறப்பு ஆணையாளர் திரு. இராமதாஸ் வந்தபோது பெரியார் மாவட்டத்திலே சில பகுதிகளை மட்டும் பார்த்துவிட்டு எங்களுடைய பகுதியைப் பார்க்காமல் வந்திருக்கிறார். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்—ராமதாஸ், வந்தவர் பல்வேறு இடங்களைப் பார்த்துவிட்டு, பார்க்காமல் வந்திருக்கிற இடங்களை—அவற்றைப் பற்றி சட்டமன்றத்திலேயும் நான் வலியுறுத்தி பேசி இருக்கிறேன்—நம்பியூர் ஊராட்சி ஒன்றியம், புளியம்பட்டி ஆகிய பகுதிகளை வறட்சி நிவாரணப் பணியில் சேர்ப்பதற்கு அவரை மீண்டும் அங்கு சென்று பார்க்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசியதை இந்த அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டிருக்கிறது. பெரியார் மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும், பெய்த மழை இந்த ஆண்டு 635 மில்லி மீட்டர்; ஆனால் பெய்ய வேண்டியது 721 மில்லி மீட்டர்; 86 மில்லி மீட்டர் குறைவாகப் பெய்து இருக்கிறது. இதையெல்லாம் அரசு கணக்கிலே எடுத்துக்கொண்டு தான் சராசரியாக எந்தெந்த ஆண்டு எவ்வளவு பெய்ய வேண்டுமென்பது, இந்த ஆண்டு எவ்வளவு பெய்ய வேண்டுமென்பது ஆகியவற்றைக் கணக்கில் எடுத்துக் கொண்டுதான் வறட்சி நிவாரணப் பணிகள் தீவிரமாக நடக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொல்லியபடி அவருடைய தொகுதியும், ஒன்றியமும் இதிலே கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் மு. சீனியம்மாள்.

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் உள்ள அவினாசித் தொகுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதி என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஏற்கெனவே நிலத்தடி நீர் இல்லாது, குடிநீருக்கே எந்தவித நில ஆதாரமும் இல்லாமல் மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற வேளையில், அதிகமாக அக்கரை எடுத்து அமைச்சர் அவர்கள் ஆழ்குழாய் அமைத்துக் கொடுப்பதற்கும், டவுன் பஞ்சாயத்துகளில் கூட தண்ணீருக்காக மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற அவினாசித் தொகுதிக்கு அக்கரை எடுத்து ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 535, திரு. ஆ. கு. சீனிவாசன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

535—

அரசு மேல்நிலைப் பள்ளியைப் பழுதுபார்த்தல்.

*3581—திரு. ஆ. கு. சீனிவாசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரணமல்லூர் நகரில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளி இரண்டு ஆண்டுகாலமாக பழுதுபார்க்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தற்போது அரசு கடும் நிதிநெருக்கடி நிலையில் இருக்கிறது. நிதி ஒதுக்கீட்டின்படி சில மராமத்துப் பணிகள் தேர்வினடிப்படையில் செய்யப்பட உள்ளன. மேற்கண்ட பள்ளியின் உடனடி மராமத்துப் பணிக்கான தகுதியின் அடிப்படையிலும் முன்னுரிமையின் அடிப்படையிலும் பழுதுபணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 536, திரு. சி. சுவாமிநாதன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

536—

ஐந்தாம் வகுப்பு வரை பெண் ஆசிரியர்கள் நியமனம்.

*7953—திரு. சி. சுவாமிநாதன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஐந்தாம் வகுப்பு வரை பெண் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர் என்ற அரசு அறிவிப்பின் மூலம் தமிழகத்தில் தற்போது

[1992 ஏப்ரல் 10

ஆசிரியர் பயிற்சி முடித்த முப்பதாயிரம் ஆண் ஆசிரியர்களு ஏதேனும் சலுகை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பயிற்சி பெற்றுள்ள ஆண் ஆசிரியர்களுக்கு வேலை கொடுக்க அரசு முயற்சிக்கும்.

(ஆ) பயிற்சி பெற்று வேலைக்குக் காத்து இருப்போருக்கு நடுநிலைப் பள்ளி வகுப்புகளிலும் உயர்நிலை மற்றும் மேல் நிலைப் பள்ளிகளில் காலியுள்ள 6, 7, 8 வகுப்புகளிலும் நியமிக்க ஒழுங்கு செய்யப்படும்.

திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 ஆம் வகுப்புவரை பெண் ஆசிரியர்களே நியமிக்கப் படும் என்ற அரசின் கொள்கை அடிப்படையில் இப்பொழுது ஏறத்தாழ 30 ஆயிரம் ஆசிரியர்கள் பயிற்சி பெற்று வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு எத்தனை ஆண்டு களில் இந்த வேலை வாய்ப்பு அளிக்கப்படும் என்பதனையும், இனிமேல் ஆரம்பிக்க இருக்கின்ற பயிற்சி வகுப்புகளில் இப்படிப் படித்த ஆண் மாணவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படுமா அளிக்கப்படாதா என்பதனையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயிற்சி பெற்று வேலை இல்லா மல் இருக்கின்ற ஆசிரியர்களுக்கு. இவ்வளவு ஆண்டுகளுக்குள் வேலை கொடுக்கப்படும் என்கின்ற உறுதியை இந்த நேரத்தில் நாம் சொல்ல முடியாது. காரணம், ஒரு ஆண்டுக்கு 1,000, 1,200 பணியிடங்கள் தான் நிதிநிலை அறிக்கையின் மூலமாக தரப்படுகின்றன. அது தவிர, ஒய்வு பெற்றவர்கள் இடத்திலே சில பேரை நாம் நியமிக்கலாம். இந்த அடிப்படையிலே, வேலை இல்லாமல் இருக்கின்ற அப்பயிற்சி பெற்ற ஆசிரியர் களுக்கு வேலை வாய்ப்பு இருக்கிறது. இங்கே கேட்டு இருக்கிற கேள்வியினுடைய அடிப்படை 5 ஆம் வகுப்பு வரை பெண் களுக்கு தனி உரிமையாக வேலை கொடுக்க நேரிடுகிறபோது, ஆண்களுக்கு என்ன என்ற கேள்வி எழுகிறது. அந்த அடிப் படையில் கேள்வி கேட்கப்பட்டு இருக்கிறது. 5ஆம் வகுப்பு வரை என்று சொல்லுகிற போது, 6, 7 வகுப்புகளுக்கு ஆண்களை நாம் நியமிக்கலாம். அதுமட்டுமல்லாமல் இப்போது இருக்கிற சூழ்நிலையிலே பெரும்பாலும் பெண்கள் தான் அதிகமாக ஆசிரியர்களாக இருக்கிறார்கள். ஆண்கள் குறைந்த அளவு தான் இருக்கிறார்கள்.



1992 ஏப்ரல் 10]

முற்பகல் 9.45

திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஆளுகிற பொறுப்பிலே இருக்கிற மரியாதைக்குரிய புரட்சித் தலைவி அவர்கள் பெண்ணாக இருக்கிற காரணத்தால், இப்போது தமிழகத்தில் படித்த இளைஞர்களை ஒதுக்குகிறார்களோ என்ற எண்ணம் தமிழகத் தில் படித்த இளைஞர்கள் மத்தியில் ஏற்படும் என்பதை இந்த அரசு அறியுமா? அதற்கு ஒரு 50 சதவீதம் மட்டும் ஆண்களுக்கு சமமாக பெண்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கிற வகையில் இதைத் தீர்ப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்.: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அவர் ஒரு ஆண் தான். அவர் முதலமைச்சராக இருந்தபோது இந்த ஆசிரியர் பயிற்சியில் பெண்களை மட்டுமே நாம் சேர்த்துக் கொண்டு வந்தோம். ஆண்களுக்கு இடமே தரவில்லை. அதற்குப் பின்னாலே ஏற்பட்ட சில விரும்பத்தகாத விளைவுகளின் காரணமாக, இந்த ஆண்கள் பயிற்சி பெற்று இன்றைக்கு வேலைக்கு காத்திருக்கிற அந்த பட்டியல் நீண்டுகொண்டிருக்கிறது. அதை நாம் நிவர்த்திக்கிற முறையில் மறுபடியும் பழைய திட்டத்தை கொண்டு வரலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். ஆண்களுக்கு என்று கேட்கிற போது, ஆண்கள் அதிகமாக வேலைக்கு போய்க் கொண்டிருக்கிறார்கள். சமுதாயத்தில் பெண்களுக்கு வேலை வாய்ப்பு இல்லையென்கிற காரணத்தால் அந்த அடிப்படை யில் தான் பெண்களுக்கு முன்னுரிமை தருகிறோமே தவிர, ஆண்களுக்கு கொடுக்கக்கூடாது என்பது அல்ல. ஆகவே, ஆண்களுக்கு சமமாக பெண்களும் வேலைக்கு போகிறார்கள், சம்பாதிக்கிறார்கள், சுதந்திரமாக வாழ்கிறார்கள். அவர் களால் தனித்து வாழ முடியும். தமிழ்நாட்டுப் பெண்கள் யாருடைய தயவிலும் வாழவேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லை என்ற நிலையை ஏற்படுத்துகிற ஒரு புரட்சிகரமான, முன்னேற்றமான திட்டத்தின் அடிப்படையில் (மேசையைத் தட்டும் ஒலி) தான் இந்தக் காரியங்களை செய்து கொண்டிருக் கிறோம். பெண்களுக்கு ஆதரவு தந்து கொண்டிருக்கிறோம். இதிலே எல்லா பெரிய தலைவர்களும், பெரிய பெரிய சமுதாய சீர்திருத்தவாதிகளும் இந்த அடிப்படையிலேதான் கருத்துக்களைச் சொல்லி வருகிறார்கள். ஆகவே, பெண் களோடு, நாம் ஆண்களுக்கும் வேலைவாய்ப்பு தர வேண்டு மென்று கேட்கிற நேரத்தில் 6,7 வகுப்புகளில் அந்த வாய்ப்பு இருக்கிறது. வேறு பல வேலைகளுக்கும் அவர்கள் போக லாம். ஆகவே, பெண்களுக்கு என்று தருவது, அது இல்லாத உரிமையை நாம் அவர்களுக்கு தருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1 முதல் 5 வரை உள்ள பள்ளிகளில் பெண்களை மட்டுமே ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும் என்பதற்கு போட்டியாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கேள்வியை எழுப்பியிருப்பது மிகுந்த வேதனையைத் தருவதாக இருக்கிற காரணத்தால், நான் என்னுடைய கருத்தை கூற விழைகிறேன். பெண்களும், ஆண்களும் ஜனத்தொகையில் சரிநிகர் சமமாக இருக்கிறார்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்களுக்கு நீங்கள் கருத்து சொல்லிக் கொண்டிருப்பதற்கு இது நேரம் அல்ல, அமைச்சர் அவர்களிடமிருந்து ஏதாவது கருத்து அறிய விரும்பினால் கேளுங்கள்.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே, ஆண்களும் வேலைக்கு செல்கிற பெண்களைத் தான் திருமணம் செய்ய வேண்டுமென்று விரும்புகிற காலத்தின் கட்டாயம் இன்றைக்கு நிலவுகிற காரணத்தால். உயர்நிலைப் பள்ளிகளிலும் இந்த நிலை நீடிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ, அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக 30 சதவீதம் பெண்களுக்கு தர வேண்டுமென்கின்ற ஒரு கொள்கை அகில இந்திய அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன், அந்த அடிப்படையில நல் வாய்ப்புகளை அவர்கள் தந்துகொண்டு வருகிறார்கள். ஆகவே, சமுதாயத்தில் அவர்கள் முன்னேறுவதற்கான எல்லாவிதமான ஆக்கத்தையும் ஊக்கத்தையும் மத்திய, மாநில அரசுகள் தந்து கொண்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, வேலை வாய்ப்பு இல்லாத ஆண்களுக்கு அங்கே வேறு ஏதாவது செய்யமுடியுமா என்பதை பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு, சி, ஞானசேகரன்,

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு சமுதாயத்தில் சரிநிகர் சமமாக பெண்கள் இருக்கிறார்கள் என்ற காரணத்தால் முன்னுரிமை அளித்து 5 ஆம் வகுப்பு வரை நீங்கள் அவர்களுக்கு வாய்ப்பு அளித்து இருக்கிறீர்கள். அதே நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் ரமணி நல்லதம்பி அவர்கள் சொல்கிறபோது பெண்கள் வேலைக்கு சென்றால்தான் ஆண்கள் திருமணம் செய்து கொள்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆண்கள் ஒருவேளை வேலைக்குப் போகாமல் இருக்கிற நிலைமை வந்துவிட்டால் பெண்களுக்கு திருமணம் ஆகாமல் நின்று விடும். அவர்கள் திருமணம் செய்து கொள்ள மறுத்துவிடுகிற காலகட்டம் வரும். ஆகவே, 5-ஆம் வகுப்பிலிருந்து 10-ஆம வகுப்பு வரையில் நீங்கள் பெண்களுக்கு முன்னுரிமை அளித்து விட்டீர்கள். ஆண்களுக்கு பின்னுரிமையாவது அளித்து, 5-ஆம் வகுப்பு முதல் 10-ஆம் வகுப்பு வரையில் ஆண்கள் நியமிக்கப்படுவார்கள் என்ற ஒரு நிலையை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைத் தீர்க்க சுலபமான வழி ஆண்களும் சமையல் செய்யக் கற்றுக் கொள்ள வேண்டும். (சிரிப்பு.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி செ. சுந்தராம்பாள்.

திருமதி செ. சுந்தராம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 1 முதல் 5 ஆம வகுப்பு வரை பெண் ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்று கூறியுள்ளார்கள். 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை இதுவரையில் எத்தனை பெண் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை அறிவிக்க இயலுமா ? அவ்வாறு பெண் ஆசிரியர்கள் நியமிக்கப்படும் போது உடல் ஊனமுற்றோர், கைம்பெண்கள் ஆகியோருக்கு வயது வரம்பை தளர்த்தி, பணிகளில் அமர்த்தப்படுவார்களா ?

முற்பகல் 9-50

மாண்புமிகு டாக்டர் செ, அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அடிப்படையிலே புதிதாக வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்பட இருக்கின்றவர்கள் இனிமேல்தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். உடல் ஊனமுற்றவர்களுக்கும் ஆதரவற்றவர்களுக்கும் என்று தனி ஒதுக்கீடு இருக்கிறது. அதிலே இவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 537, டாக்டர் சு. மணிமேகலை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

[1992 ஏப்ரல் 10

537—

## சிமெண்ட் ஆலைகளிலிருந்து வெளிப்படும் புகையைத் தடுக்க மாற்று ஏற்பாடுகள் செய்தல்.

*2829—டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அரியலூர் தொகுதியில் உள்ள சிமெண்ட ஆலைகளிலிருந்து வெளிப்படும் புகை அப்பகுதியில் மோசமான சுகாதாரக் கேட்டை ஏற்படுத்துவதால், வெளிப்படும் புகையினைத் தடுக்க மாற்று ஏற்பாடுகள் மூலம் சுகாதாரக் கேடுகளைத் தவிர்க்கும் முயற்சியினை அரசு மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூரில் அமைந்துள்ள தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன், கிரஷர், ராமில் அடுப்புகள், சிமெண்ட் ஆலை மற்றும் மூட்டை கட்டும் பிரிவு ஆகியவற்றை அமைத்துள்ளது. இந்த மாசுத் தடுப்புச் சாதனங்கள் குறைந்த திறனுடன் இயங்கிவருவதால், அப்பகுதியில் தூசுக் கழிவுகள் ஏற்படுகின்றன. மாசுக் கட்டுப்பாடு சாதனங்கள், அதனுடைய செயல்முறைகள் உயர்த்தப்பட்டு சரிவர இயக்கப்படவேண்டும் என்ற எண்ணத்தை அந்த நிறுவனத்திற்கு இந்நிறுவனம் அறிவுறுத்தி இருக்கிறது.

டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா சிமெண்ட் ஆலைகளும் முறையாக பொருத்தப்பட்டு முழுமையாக செயல்பட்டு வரவில்லை என்று அமைச்சர் அவர்களே தெரிவிக்கிறார்கள். எனது தொகுதியில் 5 சிமெண்ட் ஆலைகள் உள்ளன. அவற்றில் Electrostatic Precipitator முழுமையாக பொருத்தப்படாமல், தொழிற்சாலையைச் சுற்றியுள்ள தாவரங்களில் கூட சிமெண்ட் படிந்து உள்ள நிலையை அரசு அறியுமா ? ஆம் எனில், அதைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன். அடுத்து, Electrostatic Precipitator—Volume sensitive as well as power sensitive என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள். ஆகவே, power fluctuation அல்லது சிறிய பவர் கட் ஏற்பட்டாலே இந்த பிராசசில் Reconstructing Process பாதிக்கப்படும். ஆகவே, இதைக் கண்காணிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.



1992 ஏப்ரல் 10]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாசுக் கட்டுப்பாடு வாரியம் இதைக் கவனித்து வருகிறது. மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திலே கேட்ட போது, இந்த நிறுவனத்திற்கு அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது. உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். அந்த மாசைக் கட்டுப்படுத்துவதற்காக வைக்கப்பட்டு இருக்கிற சாதனங்கள் முறையாக இயங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அவர்கள் அறிவுறுத்தியிருப்பதாக எனக்குத் தெரிவித்திருக்கிறார்கள். மேலும், இங்கே பவர் கட்டைப் பற்றித் தெரிவித்தார்கள். அப்படிப்பட்ட நிலை வருகிறபோது, தொடர்ந்து அவைகள் இயங்குவதற்காக, அவர்கள் ஜெனரேட்டர்களைப் பயன்படுத்த வேண்டும் என்று நாம் வலியுறுத்தலாம். எனவே, இதைத் தடுத்து நிறுத்துவதற்கு, முறைப்படி அதைச் செயல்படுத்த வைப்பதற்கு அந்த நிறுவனத்திற்கு அறிவுறுத்தப்படும்.

டாக்டர் சு. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி. ஆனால் இந்த Electrostatic Precipitator முறையாகப் பயன்படுத்தப் படுகிறதா என்பதைக் கவனிக்க தனிக் குழு அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஏற்கனவே வாரியமே அதற்காகத்தான் இருக்கிறது. மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் என்று அதற்காக அமைத்து, நாடு முழுவதும் இப்படிப்பட்ட பிரச்சினைகளைத் தடுப்பதற்காக அந்த வாரியம் இயங்கிக் கொண்டு இருக்கிறது, அநேகமாக இந்தியத் துணைக் கண்டத்திலேயே இந்த வாரியம் தான் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது என்று கூட தெரிவிக்கிறார்கள். எனவே, உரிய நடவடிக்கையை அவர்களே எடுத்து விடுவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ச. ஆரோக்கியசாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தைப் பற்றிச் சொன்னார்கள். ஆனால், அங்கே இருக்கிற தொழிற்சாலைகள் ஏற்படுத்தும் புகையினைத் தடுப்பதற்கு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் ஒன்று செயல்படுவதாகவே தெரியவில்லை. எங்கே போனாலும் மிகுந்த சுகாதாரக் கேடுகளை விளைவித்து வருகின்ற அந்தத் தொழிற்சாலைகளுக்கு உரிய அந்தத் தடுப்புகளைச் செய்வதற்கு நம்முடைய மாசுக் கட்டுப்பாடு வாரியம் இன்னும் முடுக்கி விடப்பட வேண்டிய

[1992 ஏப்ரல் 10

சூழ்நிலைதான் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு என்று தனியாக வேறு குழுக்களை அமைத்தால், நலமாக இருக்கும். அதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாசுக் கட்டுப்பாடு வாரியம் இயங்குவதே தெரியவில்லை என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர், அது இயங்குவது எப்படித் தெரிய வேண்டும் என்று எங்களுக்குத் தெரிவிக்கிறார்கள் என்று தெரியவில்லை. இந்த வாரியம் 1982-லேதான் உருவாக்கப்பட்டது. அதிலேயிருந்து மிகச் சிறப்பாக இயங்கிக் கொண்டு இருக்கிறது. ஆனால், இந்தத் தொழிற்சாலைகள் எல்லாம் அதற்கு முன்னாலேயிருந்து இயங்கிக் கொண்டு இருக்கிற தொழிற்சாலைகள். எனவே, தொழிலாளர்களைப் பற்றி கேள்வி வருகிறபோது, மாசுக் கட்டுப்பாடு வாரியம் அதைத் தடுத்து நிறுத்திவிட்ட காரணத்தால், ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று நீங்களே கூட கேட்கிறீர்கள். எனவேதான் அந்த வாரியம் இந்தக் காரியங்களைச் செய்கிறபோது, நிதானமாகவும், அதே நேரத்திலே இந்த மாசுகளை எல்லாம் தடுக்கின்ற வகையிலே, நடவடிக்கையைத் தொடர்ந்து எடுத்துக் கொண்டிருக்கிறது. எனவே, எந்தத் தொழிற்சாலையும் பாதிக்கப்படாமல், அங்கே இருக்கிற தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கின்ற வகையிலேயும். பொதுமக்களுக்கும் இடையூறு இல்லாமல். இந்த மாசுக் கட்டுப்பாடு வாரியம் நிச்சயமாக நல்ல காரியத்தைச் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 501, திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

501—

## மலைவாழ் மக்கள் அனுபவிக்கும் நிலங்களை அவர்களுக்கே மீண்டும் அளித்தல்.

*4028—திரு. சி. இராமசுவாமி :

மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கல்வராயன் மலைப் பகுதியில் வாழும் மலைவாழ் மக்கள் மீது வனத்துறையினர் வழக்குகள் போட்டு அவர்கள் அனுபவிக்கும் நிலங்களில் இருந்து அவர்களை வெளியேற்றி மரக்கன்று நடப்பட்டதை அரசு அறியுமா?



1992 ஏப்ரல் 10]

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு மீண்டும் அந்த இடங்களை அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நிலமற்ற மலைவாழ் மக்களுக்கு, ஒரு குடும்பத்திற்கு இரண்டு ஹெக்டேர்கள் வீதம் 10,000 ஹெக்டேர் நிலத்தை நில ஒப்படை செய்து தர, அரசு கொள்கை அளவில் ஒப்புக் கொண்டுள்ளது. இதற்குத் தகுதியான மலைவாழ் மக்கள் குடும்ப விவரங்கள், மற்றும் ஒப்படை செய்யப்பட தகுதியான நிலங்களைத் தேர்வு செய்யுமாறு தென்னாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவரை அரசு கேட்டுக் கொண்டுள்ளது. இது தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

முற்பகல் 9–55

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கல்வராயன் மலையில் வாழும் மலைவாழ் மக்கள் மீது வனத்துறையினர் பொய் வழக்குகள் போட்டு, அவர்கள் அனுபவித்து வரும் நிலங்களிலிருந்து அவர்களை அப்புறப்படுத்தி மரக் கன்றுகளை நட்டுள்ளார்கள். அந்த மரக் கன்றுகளை நட்டுள்ள நிலத்தை அரசு அவர்களிடமிருந்து கைப்பற்றி மீண்டும் மலை வாழ் மக்களிடத்திலே ஒப்படைக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டிய வயிறும், குழிவிழுந்த கண்களோடும் உழைக்கின்ற ஏழை எளிய மலைவாழ் மக்களுக்காக 10,000 எக்டேர் பரப்பிலே இருக்கின்ற நிலங்களை அவர்களுக்குக் கொடுப்பதற்காக நம்முடைய தமிழகத்தின் ஒப்பற்ற தலைவியாக இருக்கின்ற தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் தலா இரண்டு எக்டேர் வீதமாக அவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்கள்.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன் மலையிலுள்ள கீராப்பள்ளி, தேக்கம்பட்டு, சேராப்பட்டு, புரசம்பட்டு, ஆவலாறு, ஆத்துக்குழி போன்ற ஊர்களில் வனத்துறையினர் அவர்களுடைய நிலங்களைக் கைப்பற்றி மரக் கன்றுகளை நட்டுள்ளார்கள்.

வனத்துறையினர்மீது கள்ளக்குறிச்சி நீதிமன்றத்தில் நானே பல வழக்குகளை மலைவாழ் மக்களுக்காக தொடுத் துள்ளேன், எனவே அரசு அந்த நிலங்களைக் கைப்பற்றி. மீண்டும் அந்த பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கொடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புனல்காடு என்பது மலைவாழ் மக்கள் இரண்டு ஆண்டு காலத்திற்கு ஒரு முறை பயிர் செய்து விட்டு, வேறு இடத்திற்கு மாறி விடுகிறார்கள், அது வனத் துறைக்குச் சொந்த இடமாக இருக்கின்ற காரணத்தாலும், வனத்துறை அதிலே பல்வேறு பழத் தோட்டங்களை வளர்ப் பதற்கு வாய்ப்பு இருக்கின்ற காரணத்தாலும். குறிப்பிட்ட இடங்களிலே மலைவாழ் மக்களை அனுமதிக்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைத்தான் கருத்திலே கொண்டு, அந்த மலைவாழ் மக்களுடைய கண்ணீரைத் துடைக்கின்ற வகையிலே தென்னாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நம்முடைய தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். 10,000 எக்டேர் நிலப் பரப்பிலே அந்த நிலங்களைத் தேர்வு செய்து, ஒரு குடும்பத்திலே இருக்கின்ற அதாவது இரண்டு பேர், அல்லது மூன்று பேர் இருந்தாலும், அது குடும்பம் என்ற முறையில் இரண்டு எக்டேர் நிலங்களை அவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக் கிறோம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> வினா எண் 502. திரு. கே. கந்தசாமி. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

502—

<u>தம்மம்பட்டியில் அண்ணா போக்குவரத்துக் கழகப் பணிமனை.</u>

*8090—<u>திரு. கே. கந்தசாமி :</u>

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தம்மம்பட்டியில் அண்ணா போக்குவரத்துக் கழகப் பணிமனை (Depot) தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?



<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

<u>திரு. கே. கந்தசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தம்மம்பட்டியில் பணிமனை அமைத்தால், கங்கவல்லி ஒன்றியத்திலுள்ள பல கிராமங்கள் பஸ் வசதியைப் பெறும். எனவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலனை செய்து தம் மம்பட்டியில் பணிமனை ஏற்படுத்துவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தம்மம்பட்டி என்கின்ற இடத் தில் இப்போது அதற்காக 8 நகரப் பேருந்துகளும், இரண்டு புறநகர் பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன. சேலம், ஆத்தூர், ராசிபுரம், வாழப்பாடி போன்ற இடங்களிலிருந்து 6 புறநகர்ப் பேருந்துகளும், ஒரு டவுன் பேருந்தும் இயக்கப்படு கின்ற காரணத்தினாலே அந்த பகுதியிலே பணிமனை இப்போது தேவையில்லை என்று அரசு கருதுகின்றது.

<u>திரு. கே. கந்தசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரப் பேருந்துகளை விடுகின்றபோது " சர்வ்டு ஏரியாவிற்கு " 30 கிலோ மீட்டர் தூரம் என்றும், " அன் சர்வ்டு ஏரியாவிற்கு " 35 கிலோ மீட்டர் தூரம் என்றும் வரையறை நிர்ணயித்திருக்கிறார்கள். இப்போது பணிமனை ஆத்தூரில் மட்டுமே இருக்கிறது. ஆத்தூரிலிருந்து 30 கிலோ மீட்டர் என்ற கணக்கிலேதான் தம்மம்பட்டிக்கு பஸ் வசதி கிடைக்காமல் போய்விடுகிறது. எனவே, தம்மம்பட்டி ஏரியா வில் பணிமனை ஏற்படுத்தினால், தம்மம்பட்டியிலிருந்து 30 கிலோ மீட்டர் என்று கணக்கிட்டு பல கிராமங்கள்—மலை வாழ் மக்கள் வசிக்கும் கிராமங்கள் பலவும் பஸ் வசதியினைப் பெறும். எனவே, இதை மாண்புமிகு அமைச்சரவர்கள் மீண்டும் பரிசீலிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் குறிப்பிட்டிருப்பது தம்மம்பட்டி என்ற இடத்தில் ஒரு பணிமனை வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். 30 கிலோ மீட்டர் அளவிலேதான் நான் குறிப்பிட்ட இடங்களிலே, சேலம், ஆத்தூர், ராசிபுரம், வாழப் பாடி போன்ற இடங்களிலிருந்து பேருந்துகள் இயக்கப்படுகின்ற காரணத்தால் அனைத்துப் பகுதிகளிலும் 30-லிருந்து 35 கிலோ

மீட்டர் தூரம் வரையிலும் இப்போது நாம் நகரப் பேருந்து களை இயக்கிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பின ரவர்கள் குறிப்பிடுவதைப் போல அந்தப் பணிமனை அமைப்ப தற்கு இப்போது சாத்தியக் கூறுகள் இல்லை. இருந்தாலும்கூட, உறுப்பினரவர்கள் எந்தெந்த பகுதிகளுக்கு நகரப் பேருந்து விடவேண்டுமென்று அரசுக்குப் பரிந்துரை செய்தால், நம்முடைய தமிழகத்தின் முதல்வர், புரட்சித் தலைவி திட்டத்தின் அடிப் படையில் 1992-ஆம் ஆண்டு இறுதிக்குள்ளே அனைத்துப் பேருந்துகளும் இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : வினா எண் 538, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்.

538—

<u>மல்லசமுத்திரம் பகுதியில் நூற்பாலை அமைத்தல்</u>

*1564—<u>டாக்டர் வெ. சரோஜா</u> :

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதிக்கு உட்பட்ட மல்லசமுத்திரம் பகுதியில் நூற்பாலை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

<u>மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

<u>டாக்டர் வெ. சரோஜா</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 25,000-க்கும் அதிகப்பட்ட நெச வாளர் பெருங்குடி மக்கள் பயன்பெறும் வகையில் இந்தத் திட்டத்தை வரும் ஆண்டிலாவது பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—00

<u>மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்</u> : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், அம்மாப்பேட்



டையில் சேலம் மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை 50 ஆயிரம் கதிர்களுடன் இயங்கி வருகின்றது. அது மட்டும் அல்லாமல் தமிழகத்தில் ஏறத்தாழ 17 நூற்பு ஆலைகள் உள்ளன. அவை களில் ஏறத்தாழ 16 ஆயிரம் முதல் 18 ஆயிரம் பேல்கள் பஞ்சு உற்பத்தியாகின்றன. சாரி நூல் உற்பத்தி ஆகிறது. தற்போது தமிழகம் நூல் உற்பத்தியில்...... (குறுக்கீடு)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு கைத்தறி அமைச்சருக்கு அருகில் உள்ள அமைச்சர்கள் உதவிகரமாக இருக்க வேண்டும்.

<u>மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்</u> : தற்போது நாம் நூல் உற்பத்தியில் உபரி மாநிலமாக இருக்கிற காரணத்தாலே இய லாது என்பதை வருத்தத்தோடு மாண்புமிகு உறுப்பினர் அவர் களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>டாக்டர் வெ. சரோஜா</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அம்மாப் பேட்டையில் கூட்டுறவு நூற்பாலை இருக்கிறது என்று சொன் னார்கள். அம்மாபேட்டைக்கும் மல்ல சமுத்திரத்திற்கும் 21 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியிருப்பதாலும், நெசவாள பெருங்குடி மக்கள் அன்றாடம் சில சங்கடங்களை மேற்கொண்டு இந்தத் தொழிலை செய்வதாலும் நமது அமைச்சர் அவர்கள் ''ஆம்'' என்ற பதிலை அறிவிப்பார்களா என அறிய விரும்பு கிறேன்.

<u>மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர் கள் விரும்பினால் நான் போக்குவரத்துத்துறை அமைச்சரோடு கலந்து பேசி எத்தனை பஸ்கள் வேண்டுமோ அதை விடுவதற்கு ஏற்பாடு மேற்கொள்கிறேன். நீங்கள் எதற்கும் அஞ்ச வேண்டாம். (சிரிப்பு). புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக் காலத்தில்தான் நெசவாளர்களிடம் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இது வரையில் ஒதுக்கப்பட்டவர்களாக ஒடுக்கப்பட்டவர்களாக இருந்த நெசவாளி பெருங்குடி மக்கள் பேரறிஞர் அண்ணா காலத்தில் விலாசம் காட்டப்பட்டு, புரட்சித் தலைவருடைய ஆட்சி காலத்தில் வழிகாட்டப்பட்டு நம்முடைய தொலை நோக்கு தலைவியாக இருக்கிற ஒப்பற்ற தலைவி புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக் காலத்தில்தான் அவர்கள் காப்பாற்றப்படுகிறார்கள். அவர் களுக்கான (மேசையைத் தட்டும் ஒலி) தொலை நோக்கு திட்டங் கள் வகுக்கப்பட்டிருக்கின்றன என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. இன்னும் பல்வேறு திட்டங்கள் சேலம் மாவட்டத்

திலே இருக்கின்றன. அதனால் நீங்கள் அஞ்சத் தேவையில்லை. அதிலே ஒரு பகுதி உங்களுக்கு ஒதுக்கீடு செய்து தருவோம் என்பதை கோடிட்டுக் காட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 539, 540 மற்றும் 541 ஆகியவை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப் பெறுகின்றன.

வினா எண். 542, டாக்டர் வெ. புருஷோத்தமன், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

542—

## ஒகேனக்கல்லை நகரியமாக மாற்றும் திட்டம்.

*1054—டாக்டர் வெ. புருஷோத்தமன்:

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பென்னாகரம் தொகுதி ஒகேனக்கல்லை நகரியமாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நகரியமாக மாற்றப்படும்?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

டாக்டர் வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. ஆண்டு முழுவதும் அருவியிலே நீராடக்கூடிய ஒரு சூழ்நிலை அங்கே காணப்பட்டு சிறந்த சுற்றுலாத் தலமாக அந்த மாவட்டத்திலே விளங்குகிறது. அந்தப் பகுதி முன்னேறவில்லை. ஆகவே, அதை சிறிய ஒரு நகரியமாக ஏற்படுத்தினால் அந்தப் பகுதி முன்னேறும். லட்சக் கணக்கான மக்கள் அங்கே வந்து செல்கிறார்கள். ஆகவே, இப்போது இல்லை என்றாலும் வருங்காலத்திலாவது இருக்குமா என அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கிராமத்தை நகரியமாக மாற்றுவதற்கு பல்வேறு அடிப்படை தேவைகளை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆண்டு வருமானத்தையும் அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் தொகையையும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய காரணத்தினாலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற ஊராட்சியிலே ஆண்டு வருமானம் 91 ஆயிரம் ரூபாய் என்பதும் அதனுடைய மக்கள் தொகை சுமார் 500 என்ற காரணத்தினாலே அதனை கணக்கில் எடுத்துக்கொள்ள முடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் தலமாக இருக்கிற காரணத்தாலே ஆண்டு வருமானம் அதிகரிக்க வாய்ப்பு இருக்கிறது. அங்கு வருவாய்த் துறை மூலமாக வருகிற நிதியினுடைய கணக்கைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அங்கு ஊராட்சி ஒன்றியம் மூலமாக வருகிற வருவாயை கணக்கிட்டு, அங்குள்ள மக்கள் தொகையை கணக்கில் எடுக்காமல் அங்கு வருகிற லட்சக் கணக்கான சுற்றுலா பயணிகளை கணக்கில் கொண்டு, வரும் ஆண்டிலாவது அமைத்துக் கொடுக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: அரசு பரிசீலிக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 486, திரு. சிங்கை கோவிந்தராசு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

486—

## கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு கவுன்சில் ஹால் கட்டுதல்.

*3732—திரு. சிங்கை கோவிந்தராசு:

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு கவுன்சில் ஹால் புதியதாக கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

[1992 ஏப்ரல் 10

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோயம்புத்தூர் மாநகராட்சியில் புதியதாக கவுன்சில் ஹால் கட்டும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 10-05

திரு. சிங்கை கோவிந்தராசு : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் தமிழகத்தினுடைய ஒப்பற்ற தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வருகின்ற கூட்டுறவுத் தேர்தல் முடிந்ததற்குப் பின்னாலே உள்ளாட்சித் தேர்தல் நடைபெறும் என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே, மாநகராட்சி வளாகத்திலே கௌன்சில் ஹால் இல்லை என்பதை மனதிலே கொண்டு கட்டித்தர இனிமேலாவது அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி அலுவலக வளாகத்தில் நகராட்சி நூற்றாண்டு விழாக் கட்டிடம் ஒன்று முதல் மாடியில் கட்டப்பட்டிருக்கிறது. இதில் இரண்டாவது மாடிக் கட்டிடம் கட்டுவதற்கு ஏற்றதாக உள்ளது. மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், உள்ளாட்சி தேர்தல் பற்றி இந்த மாமன்றத்தில் ஏற்கனவே தெளிவாக தெரிவித்திருக்கின்ற காரண தினாலே விரைவில் உள்ளாட்சி தேர்தல்கள் வர இருக்கின்ற சூழ்நிலையில் தற்பொழுது நூற்றாண்டு விழா கட்டிடத்திலேயே இரண்டாவது மாடியில் மாநகராட்சி கவுன்சில் ஹால் கட்டு வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு : பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகரம் என்பது மாநகராட்சியாகி 10 ஆண்டுகள் ஆகின்றன. அதன் சுற்று வட்டாரங்களில் மக்கள் தொகை அதிகமாக இருக்கிறது. சென்னைக்கு அடுத்தபடி கோவையில் தான் இப்போது மக்கள் தொகை பெருகிக்கொண்டிருக்கிறது. ஆகவே, மக்கள் தொகை அதிகமாக இருக்கின்ற காரணத்தினா லும் மாநகராட்சியாகி 10 ஆண்டுகள் ஆகின்றன என்ற காரணத் தினாலும். மதுரைக்கு எப்படி தனியாக மாநகராட்சிக் கட்டிடம் இருக்கின்றதோ அதைப்போல கோவைக்கும் தனியாக மாநகராட்சிக் கட்டிடம் பெரிய அளவில் கட்டுகின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்பு கிறேன்.



1992 ஏப்ரல் 10]

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நூற்றாண்டு விழா மாடிக் கட்டிடத்திலேயே இரண்டாவது மாடி கட்டி அதிலே மாநகராட்சியின் கவுன்சில் ஹால் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத். தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சிங்கை கோவிந்தராசு : பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்திலேயே இப்படி ஒரு புதிய கட்டிடம் மாநகராட்சிக்கு கட்டுவதற்கும் அதற்குண்டான கருத்துரு செயல்பாடுகளும் ஏற்பாடாகி இருந்தது. கோவை மாநகராட்சி நூற்றாண்டு வளாகம் தற்போதைய நிலையில் அலுவலகங்களாக மாற்றப்பட்டு அங்கே அரசு மாநகராட்சி அலுவல்கள் செயல்பட்டு வருகின்றன அது மிகவும் குறைந்த வளாகமாக இருக்கின்ற கரணத்தினாலும் முன்னேறி வருகின்ற கோவை மாவட்டதினுடைய மிகப் பெரிய வளர்ச்சிக்கு அந்த கவுன்சில் ஹால் இடம் தராது என்பதையும் மனதிலே கொண்டு புதிதாக கட்டுவதற்கு ஏற்கனவே புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலே இருந்த செயற் குறிப்பு இப்போது நடைமுறைப்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள சூழ்நிலையில் இரண்டாவது மாடிக் கட்டிடத்திலேயே கவுன்சில் ஹால் கட்டுவதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்ற காரணத்தினாலே தனியாக ஒரு கட்டிடம் கட்டுவதற்கு அரசு ஆலோசிக்க முடியவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சி நகர சபையாக இருக்கின்றபோது 35 உறுப்பினர்கள் கொண்ட நகரசபையாக இருந்தது. அப்போது அந்த நகர மன்றம் கூட்டம் நடக்கின்ற ஹால் சிறியதாக இருந்தது. அந்த அறையில் கூட்டம் நடத்தப்பட்டு வந்தது. இப்போது 72 டிவிஷன்களாகப் பிரிக்கப்பட்டு 72 பேர்கள் கவுன்சிலர்களாக தேர்ந்தெடுக்கப்படுகின்றபோது அந்த அறை போதாது. இப்போது அறையையும் அலுவலகமாக மாற்றிவிட்டார்கள். இருக்கின்ற கட்டிடமும் நூறு ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட பழைய கட்டிடம். ஆகலால் புதியதாக மாநகராட்சி அலுவல்கள் சிறப்பாக நடைபெறவும், கவுன்சில் சிறப்பாக நடைபெறவும் வருகின்ற தேர்தலுக்குள் கட்டிடம் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே முடிவு எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

[1992 ஏப்ரல் 10

<u>மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி அலுவலக வளாகத்தில் இருக்கின்ற நகராட்சி நூற்றாண்டு விழா கட்டிடத்தின் இரண்டாவது மாடியிலே கவுன்சில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும். புதிய கட்டிடம் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். புதிதாக வேறு ஒரு இடத்தில் கட்டிடம் கட்டுவதற்கு பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> வினா எண் 543 டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு உணவு மற்றம் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

543—

<u>அத்தியாவசிய பண்டங்கள் சட்டத்திலிருந்து மிளகாயை நீக்குதல்.</u>

<u>*477—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :</u>

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அத்தியாவசிய பண்டங்கள் சட்டத்திலிருந்து மிளகாயை நீக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

<u>மாண்புமிகு திரு. ஜீ. விசுவநாதன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

<u>விவர அறிக்கை.</u>

அத்தியாவசியப் பண்டச் சட்டத்தில் இருந்து மிளகாயை நீக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால் 1955 ஆம் ஆண்டின் 10வது சட்டமான 1955 ஆம் ஆண்டைய இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் வகுக்கப்பட்ட 1984 ஆம் ஆண்டைய தமிழ்நாடு இன்றியமையாப் பொருட்கள் (வர்த்தகம் முறைப்படுத்தல்) ஆணையில், வணிகம் செய்வதற்கு உரிமம் பெறவேண்டி இன்றியமையாப் பண்டங்கள் அட்டவணை I-ல் இருந்து மிளகாயை (வற்றல்) நீக்கி உரிமம் பெறத் தேவையில்லாப் பண்டங்களின் அட்டவணை II-க்கு மிளகாயை (வற்றல்) மாற்றி அரசு ஆணை எண் (3D). 26, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள்



1992 ஏப்ரல் 10]

10–10–1991–ல் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. ஆனால் மிளகாய்வற்றலின் விலை தொடர்ந்து உயர்ந்து வந்ததால் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையரின் பரிந்துரையின் மேல் மிளகாய் (வற்றல்) மறுபடியும் 1984 ஆம் ஆண்டைய தமிழ்நாடு இன்றியமையாப் பொருட்கள் (வர்த்தகம் முறைப்படுத்தல்) ஆணையின் அட்டவணை 1-க்கு கொண்டுவர அரசு ஆணை (3D) எண் 1, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 20–1–92-ல் திரும்பவும் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

<u>டாக்டர் எஸ். சுந்தரராஜ்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, அத்தியாவசிய பண்ட சட்டத்திலிருந்து மிளகாயை நீக்கும் செயற்குறிப்பே இல்லை என்று விவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் உணவு மற்றும் கூட்டுறவுத் துறை 10—10—1991 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஆணையில் அதை நீக்கி இருக்கிறார்கள். மிளகாய் தொடர்ந்து விலை உயர்ந்து வருவதால் 20–1–1992 ஆம் ஆண்டு மீண்டும் அந்த விலையைக் கட்டுப்படுத்துவதற்கு மறுபடியும் அத்தியாவசியப் பண்டத்தில் மிளகாய் சேர்க்கப்பட்டுள்ளது. மிளகாய் பணப் பயிர் ஆகும். 4 மாதங்கள் தான் பயிராகின்றன. ஆகவே, உற்பத்தியாளர்களுக்கு அதிகமான விலை கிடைப்பதற்கு அரசே கொள்முதல் செய்கின்ற எண்ணம் ரெகுலேட்டரி மார்க்கெட் மூலமாக கொள்முதல் செய்கின்ற எண்ணம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

<u>மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிளகாய் வற்றலைப் பொறுத்தவரையில் இது ஆரம்பத்திலிருந்து மாறி, மாறி வந்து கொண்டிருக்கிறது. நமக்கு இருக்கின்ற சட்டத்தை வைத்து இதை முதலில் ஷெட்யூல் 1-ல் வைத்து இருந்தோம், உரிமம் பெற தேவையில்லை என்று. அதற்குப் பிறகு ஷெட்யூல் 2-க்கு போனது. அட்டவணை 11-க்குப் போனது. மறுபடியும் அட்டவணை 1-க்கு வந்தது. இப்போது மறுபடியும் கடைசியாக மாற்றி இவைகளுக்கு உரிமைப்பெறவேண்டும் என்று லைசன்ஸ் பெறவேண்டுமென்று மாற்றி இருப்பதற்கு காரணம் மிளகாய் வற்றலின் விலை அநியாயமாக விலை ஏறியது. உண்மையாகவே விவசாயிகளுக்கு கட்டுப்படி ஆகவேண்டிய விலை கிடைக்கவேண்டும் என்பதிலே இந்த அரசு அக்கறையாக இருக்கிறது. ஆனால் அதேநேரத்தில் ஒரே வருடத்தில் ஜனவரி 91-ல் 13 ரூபாயாக விற்ற மிளகாய் வற்றல் அந்த வருடம் நவம்பர் மாதத்தில் 50 ரூபாயை தாண்டிவிட்டது.

அதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில்
வாங்கிச் சாப்பிடுகின்ற மக்களை காப்பாற்றவேண்டும் என்ற
எண்ணத்தில் தான் 20–1–92-ல் மறுபடியும் லைசன்ஸ்
பெறவேண்டும் என்று அவைகளை மாற்றி அமைத்து இருக்
கிறோம். உண்மையாகவே விலை அதிகமாக குறைந்து
விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகின்ற சூழ்நிலை வருமானால்
அரசே கொள்முதல் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஒரு குடும்பத்திற்கு ஒரு வருடத்திற்கு 5 கிலோ
மிளகாய் வற்றல் தேவைப்படுகிறது. மிளகாயை ஒரு வருடத்
திற்கு மேல் ஸ்டாக் வைக்க முடியாது. இந்தியாவிலேயே
ஆந்திராவில் தான் அதிகமான மிளகாய் விளைகிறது.
ஆந்திராவில் அத்தியாவசிய பண்டங்கள் சட்டத்தின் கீழ்
மிளகாய் சேர்க்கப்படவில்லை. ஆகவே, அவ்வாறு அத்தியா
வசிய பண்டங்கள் சட்டத்தின் கீழ் இந்தியா முழுவதும்
உபயோகம் செய்கின்ற மிளகாய்க்கு தமிழ்நாட்டில் மட்டும்
தான் இந்த சட்டம் இருக்கிறது, ஆகவே அதை நீக்கிட
அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, ஆந்திராவில் அதிகமாக விளைகிறது
என்று சொன்னார்கள். அதனால் தான் அங்கே அந்த சட்டம்
தேவைப்படவில்லை. தமிழ்நாட்டில் விளைவது குறைவு.
ஆனாலும் சில வியாபாரிகள் கிலோ ஒன்றுக்கு 9 ரூபாய்க்கு
அல்லது 10 ரூபாய்க்கு வாங்கிய மிளகாய், 50 ரூபாய் விலை
என்று வந்தபோது கூட அந்த விலைக்கு விற்காமல் ஒரே ஒரு நபர்
கிட்டத்தட்ட ஆயிரம் மூட்டை மிளகாயை வைத்து இருந்
தார் என்ற தகவல் அரசுக்கு வந்தது. இப்படிப்பட்ட
பதுக்கலைத் தடுப்பதற்காகவும், இந்த மிளகாய் வற்றல்
விலையை கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜெ. பால
கங்காதரன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில்
மிளகாய் வற்றல் என்பது காமராஜர் மாவட்டம், இராம
நாதபுரம் மாவட்டம், பசும்பொன் மாவட்டம் ஆகிய
மாவட்டங்களில் அதிகமான அளவில் விளைச்சல் இருக்கிறது.
பொதுவாக இங்கே அதிக அளவுக்கு வறட்சி நிலவுவதால்



ஒருசில காலங்களில் உற்பத்தி செய்ய முடியாத நிலைமை
ஏற்பட்டுவிடுகிறது. அந்த அல்ட்டிமெட் லாஸானது விவ
சாயிகள் மீது செல்கிறது. எனவே, மிளகாய் வற்றல்
விலையை உயர்த்தவோ அல்லது 1-வது அட்டவணையி
லிருந்து 2-வது அட்டவணைக்கு மாற்றவோ அரசு முன்
வருமா? விவசாயிகளின் மற்ற பொருட்களுக்கு இன்ஷுரன்ஸ்
திட்டம் இருப்பதுபோல் மிளகாய் வற்றலுக்கும் இன்ஷுரன்ஸ்
திட்டம் ஏற்படுத்தித் தர முடியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, கேள்வியினுடைய முதல் பாதியைப்
பொறுத்தவரையில் இப்போது மிளகாய் விலையை குறைப்
பதற்கு என்ன நடவடிக்கை என்று தான் எல்லோருமே
கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மிளகாய் விலை கீழே
குறையவில்லை; இப்போது ஓரளவுக்கு குறைந்து இருக்
கிறது 50 ரூபாய், 60 ரூபாய் என்று விற்ற மிளகாயின் விலை
இப்போது ரூ. 30-லிருந்து ரூ. 35-க்கு வந்திருக்கிறது. அது
கட்டுப்படியாகக்கூடிய விலை என்று தான் நான் கருது
கிறேன். இரண்டாவது பகுதியைப் பொறுத்தவரையில்
மிளகாயை இன்ஷுரன்சில் சேர்க்கின்ற மாண்புமிகு உறுப்
பினர் அவர்களுடைய யோசனையை பரிசீலனை செய்ய
லாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ்.எஸ். ராம
சுப்பு.

திரு. எஸ்.எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நமது தமிழகத்தில் இந்த மிளகாய்
விலை கடந்த 2 ஆண்டுகளாக விலை ஏறியதற்கு ஒரு முக்கிய
மான காரணம் என்னவென்றால் எங்கள் பகுதியில் அதிகமான
மிளகாய் வற்றல் இல்லாமல் இப்போது விவசாயிகள் மிகவும்
கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த வற்றல்
விளைச்சல் அதிகமாகாத அளவில் ஏதோ ஒருவிதமான
நோயால் பற்றிக்கொண்டு அந்த விளைச்சல் பாதிக்கப்
பட்டிருக்கிறது. ஆகவே, இதை நீங்கள் அத்தியாவசிய பண்டங்
களுடைய சட்டத்தின் மூலமாக 1-வது அட்டவணைக்கு கொண்டு
வருவதால் விவசாயிகள் பாதிக்கப்படுவதோடு மட்டுமல்லாமல்,
இப்போது குண்டூரிலிருந்து மிளகாய் வற்றலை எல்லாம் இறக்குமதி
செய்வார்கள் வியாபாரிகள். அப்படி வியாபாரிகள் இங்கே
கொண்டுவரும் போது விலைவாசி இறங்குவதற்கு ஒரு வாய்ப்பு
இருக்கிறது. ஆகவே, அந்தச் சட்டத்தை நீங்கள் அத்தியாவசிய
பண்டங்கள் சட்டத்தில் இல்லாமல் இரண்டாவது அட்ட
வணைக்கு கொண்டு வந்தால் விவசாயிகளுக்கும் சரி, வணிகர்
களுக்கும் சரி அது விலை இறங்குவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும்

[1992 ஏப்ரல் 10

என்பதால் இதை அரசு மீண்டும் ஆய்ந்து அந்த ஆணை இடுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, மிளகாய் வற்றல் வியாபாரிகளை நானே அழைத்துப் பேசினேன். வெளி மாநிலங்களிலேயிருந்து மிளகாயை இறக்குமதி செய்து, தமிழ்நாட்டிற்குக் கொண்டு வந்து விற்பதற்கு எப்படிப்பட்ட தடைகளும் கிடையாது. வியாபாரிகளும் அப்படி இருப்பதாக எந்தப் புகாரும் சொல்லவில்லை. எனவே, அதைப்பற்றி இப்போது மறுபரிசீலனை செய்யத் தேவையில்லை என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 544, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

544—

பொது விநியோக முறையைச் சீரமைத்தல்.

*4085—திரு. ஆ. சுப்புரத்தினம் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொது விநியோக முறையைச் சீரமைப்பது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : பொது விநியோக முறையைச் சீரமைக்க பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது.

1. முதலாவதாக, மிக முக்கியமாகத் தேவைப்படும் இடங்களிலே புதிய நியாயவிலைக் கடைகளை நிறுவுதல்.

2. குடும்ப அட்டைதாரர்களுக்கு சென்றடைய வேண்டிய அத்தியாவசியப் பண்டங்கள் அரசு நிர்ணயித்த விலையிலும், சரியான அளவிலும், உரிய நேரத்திலும் சென்றடைகிறதா என்பதைக் கண்காணித்தல்;



1992 ஏப்ரல் 10]

3. பொது விநியோக முறையில் வழங்கப்பட வேண்டிய அத்தியாவசியப் பண்டங்கள் கள்ளச் சந்தைக்குச் செல்லாமல் தடுத்தல், .

4. போலி குடும்ப அட்டைகளை களைதல் போன்ற தீவிரமான நடவடிக்கைகளை இப்போது நாம் எடுத்துக் கொண்டு இருக்கிறோம்.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் பொது விநியோக முறையை சீரமைப்பது குறித்து நல்ல நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே எடுத்து இயம்பினார்கள். நான் கேட்க விரும்புவது, இன்றைக்கு பொது விநியோக முறை என்றால், ரேஷன் கார்டுகளில்தான் பல்வேறு தவறுகள் நடைபெறுகின்றன. அங்கே எடைகுறைவு இருக்கக் கூடிய நிலையும், போலி கார்டுகள் இருக்கக்கூடிய நிலையும் உள்ளதால் பிளையிங் ஸ்குவாட் போன்ற பறக்கும் படைகளை வைத்து இதுபோன்ற குறைகளைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடை குறைவு இருப்பதை தடுக்க வேண்டுமென்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து இருக்கின்றோம். முதலாவதாக, கடைக்கு வரும் பொழுதே, நியாய விலைக் கடைக்கு அந்தச் சரக்கு குறைவாக வருகிறது என்ற புகார் இருந்தது. அதை நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் சொல்லி, அங்கேயிருந்து கொடுக்கின்ற பொருள்களை, ஒழுங்காக 100 கிலோ என்றால், 100 கிலோவுக்குக் குறையாமல் கொடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறோம். அதேபோல கடைகளுக்கு வந்து இன்ஸ்பெக்ஷன் என்ற பெயரால் 10 பேர், 8 பேர் மாதத்திற்கு வந்து, அவர்களுடைய தொல்லையாலும் அங்கே தவறுகள் நடக்கின்றன என்பதை உணர்ந்து இப்போது குறிப்பிட்டவர்கள் மட்டும்தான் கடைக்குச் சென்று இன்ஸ்பெக்ஷன் செய்ய வேண்டும்; மேற்பார்வையிட வேண்டும் என்ற உத்தரவை போட்டு இருக்கிறோம். இதற்கு முன்னாலே சேல்ஸ்மேன் மட்டும் பொறுப்பாய் இருந்ததை மாற்றி, இன்றைக்கு அந்த நியாய விலைக் கடைகளை நடத்துகின்ற கூட்டுறவுச் சங்கத்தினுடைய தனி அலுவலர், செயலாளர், சேல்ஸ்மேன், கேஷியர் ஆகிய அந்த சொசைட்டிக்குச் சம்பந்தப்பட்ட அனைவருமே பொறுப்பு ஏற்க வேண்டும் என்று ஆணையிட்டு இருக்கிறோம். இதற்கு முன்னாலே, தவறு செய்தவர்களை மீண்டும் திரும்ப வேலைக்கு வைத்துக் கொள்வது, இனி நடக்காது. அவர்கள் ஒரு முறை வேண்டுமானால் மன்னிக்கப்படு

வார்கள். இரண்டாவது முறையும் தவறு செய்தால், வேலையை விட்டு நீக்கப்படுவார்கள். இப்படிப்பட்ட கடுமையான நடவடிக்கைகளை எடுத்து, எடை குறைவு இல்லாமல் பார்த்துக் கொள்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆ, சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் இந்த ரேஷன் கார்டுகளைப் பெறுவதற்கு மாத வருமானம் 300 ரூபாய் என்ற நிலை இருக்கிறது. இன்றைக்கு இருக்கக்கூடிய பண வீக்கத்தின் காரணமாக, பணத்தினுடைய மதிப்பு குறைந்து விட்ட நிலையில் சாதாரண கூலி விவசாயி கூட மாத வருமானம் 300 ரூபாய்க்கு மேலே பெறக் கூடிய நிலையினால், அந்த இன்கம் சீலிங்கே ஒரு பெரும் பிரச்சினையாக உள்ளது. எனவே, இதை மாற்றி இந்த மாத வருமானத்தினுடைய தொகையை உயர்த்தி, ரேஷன் கார்டுகளை அதிக அளவில் விநியோகம் செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டைகள் வழங்குவதற்கு மாத வருமானம் என்று எதுவுமே கிடையாது. இந்தியாவிலேயே தமிழ் நாட்டில் மட்டும்தான் எல்லோருக்கும் குடும்ப அட்டைகளை இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய அரசு அளித்துக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 1½ கோடி குடும்ப கார்டுகள், வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு தாராளமாகக் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட இன்கம் சீலிங் எதுவும் கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி கோ. மல்லிகா.

செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது விநியோக முறை சீரமைப்பின்படி, மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த புவனகிரி தொகுதியில் உள்ள புதுக் குப்பத்தில் நியாய விலைக் கடை அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்.



திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருமானம் அதிகம் உள்ளவர்களுக்கு, அரிசி, குடும்பக் கார்டில் இருந்து நீக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்பு நடைபெற்ற விவாதத்திலே கூட இப்படிப்பட்ட கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் அவற்றைப் பரிசீலனை செய்து முடிவு எடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 545, திரு. செ. து. வரதராஜன், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

545—

## கரும்பு வெட்டும் தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயம் செய்தல்.

* 4493—திரு. செ. து. வரதராஜன்:

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் கரும்பு வெட்டும் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்சக் கூலியை அரசு நிர்ணயம் செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கரும்பு வெட்டும் தொழிலுக்கு தனியாக குறைந்த பட்ச ஊதியம் ஏதும் நிர்ணயம் செய்யப்படவில்லை. ஆனால் விவசாயத்திற்கும் அதனைச் சார்ந்த தொழில்களுக்கும் 2—4—1989 ஆம் நாளிட்ட அரசாணை எண் 633ல் குறைந்த பட்ச அளவு ஊதியத்தை அரசு நிர்ணயம் செய்துள்ளது. அதில் நெல்லைத் தவிர ஏனைய பயிர்களை அறுவடை செய்ய நாளொன்றுக்கு ரூ. 16 குறைந்த பட்ச ஊதியமாக வழங்கப்பட வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி

கரும்பு வெட்டும் தொழிலாளர்கள் நாளொன்றுக்கு ரூ. 16 குறைந்த பட்ச ஊதியமாக பெற வாய்ப்புள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-20

திரு. செ. து. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பு வெட்டும் தொழிலாளர்கள் இரவு பகல் கடுமையாக உழைக்கிறார்கள். பாம்பு போன்ற விஷ ஜந்துக் களின் தாக்குதலுக்கும், கரும்புச் சோலையினுடைய அரிப்பு களுக்கும், வயல் காட்டிலேயிருந்து லாரி இருக்கின்ற ரோட் டிற்குத் தலையிலே கொண்டு வந்து அதற்குப் பிறகு அந்த லாரியிலே ஏற்றுமதி செய்யப்பட்டு அதற்குப் பிறகு மிட்டாதார், மிராசுதார்கள் பெரும் பகுதியாக இருக்கின்ற 90 சதவீத வேலை செய்யும் அரிசனங்களுக்கு வேலை முடிந்த பிறகு கூலி கொடுக் காமல் ஏமாற்றம் செய்கிறார்கள். அரசு கூலி நிர்ணயித்த அந்தக் கூலி இப்பொழுதுதான் மாண்புமிகு அமைச்சர் 16 ரூபாய் என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வரதராஜன், கேள்வி என்ன? கேள்வியைக் கேளுங்கள்.

திரு. செ. து. வரதராஜன்: அதனால் கூலி நிர்ணயம் அந்தக் கரும்பு வெட்டும் தொழிலாளர்களுக்கு தெரியவில்லை. இந்தக் கூலி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. தற்போதுள்ள விலைவாசி உயர்வின் காரணமாக அந்தக் கூலியை உயர்த்தித் தர அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் 16 ரூபாய் நிர்ணயம் செய்திருப்பதே விவசாயத் தொழிலாளர்களுக்குத் தெரியவில்லை என்று சொன்னார்கள். இது 1989 ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட குறைந்த பட்சக் கூலியாகும். தற்பொழுது அந்தக் குறைந்த பட்சக் கூலியை உயர்த்தித் தர வேண்டும்; அந்த ஊதிய விகிதங்களை மாற்றியமைக்க வேண்டுமென்ற கருத்து அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதை மட்டும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. து. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டிங் ஆர்டர் கொடுக்கும் பொழுதே இவர் களுக்குக் கட்டிங் செய்கிற தொழிலாளர்களினுடைய பெயர்



களைக் குறிப்பிட்டுக் கொடுத்தால் நலமாக இருக்கும். ஏனென் றால் அவர்கள் கட்டிங் ஆர்டர் முடிந்த பிறகு.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இரண்டாவது துணைக் கேள்வியிலும் விளக்கம் கொடுத்துக் கொண்டிருக்காமல் கேள்வியாகக் கேளுங்கள். துணைக் கேள்வி கேட்கின்ற உறுப் பினர்கள் கேள்வியாகக் கேட்க வேண்டுமே தவிர, கேள்வியில் பெரிய விளக்கம், விமர்சனம் எல்லாம் இருக்கக் கூடாது.

திரு. செ. து. வரதராஜன்: லாரி வாடகையை எப்படி சர்க்கரை ஆலை நிர்ணயிக்கிறதோ அதைப்போல இந்தக் கரும்பு வெட்டும் தொழிலாளர்களுக்குக் கூலியை அந்தச் சர்க்கரை ஆலை கொடுக்க வேண்டுமென்ற விதியே இருக்க வேண்டும். பைன்ட் ஓவர்-விவசாயிகளுக்கும் கரும்பு வெட்டுபவர்களுக்கும் பைன்ட் ஓவர் பண்ணுகின்ற வகையில் அப்படிச் செய்யுமானால் அரசுக்கு இதில் எந்த ஒருவிதமான செலவும் இல்லை. ஆனால் அந்தத் தொழிலாளர்களுக்கு அது நன்மையாகப் பயக்கும். ஆகவே நீங்கள் அப்படி பைன்ட் ஓவர் பண்ணியிருந்தால் இந்த மிட்டா தார், மிராசுதார்களெல்லாம் அந்த ஏழை மக்களை ஏமாற்றாமல் இருப்பார்கள் என்பதால் அரசு அவ்வாறு தெரிவிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படியே விளக்கமாகக் கேட்டுக் கொண்டிருந்தால் நேரம்தான் அதிகமாகிறது.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலச் சொந்தக்காரர்களுக்கு, கரும்பு வெட்டுவதற்கு கட்டிங், ஆர்டரைச் சர்க்கரை ஆலைகள் கொடுக் கின்றன. ஆனால் அவர்கள் யார் யார் வெட்ட வேண்டுமென்று விவசாயக் கூலிகளை நிர்ணயிக்க வேண்டுமென்று கட்டுப்படுத்த நம்மால் முடியாது. ஏனென்றால் எந்த நேரத்தில் யார் விவ சாயக் கூலிக்குக் கிடைக்கிறார்களோ அவர்களை வைத்துத்தான் அவர்கள் அன்றைக்கு கரும்புகளை வெட்ட இயலும். எனவே, இப்படியொரு உத்தரவை இட இயலாது என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 546, டாக்டர் தே. குமாரதாஸ், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர். அடுத்த வினாவும் ஒரே பொருள் பற்றியதாக இருக்கிற காரணத் தால் அதையும் சேர்த்து எடுத்துக் கொள்ளலாம். வினா எண் 547, திரு. அ. பாப்பா சுந்தரம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர். இரு வினாக்களுக்கும் சேர்த்தே அமைச்சர் விடை அளிக்கலாம்.

546—

கரும்புக்கு நிர்ணயிக்கப்பட்ட விலை.

* 3536—டாக்டர் தே. குமாரதாஸ்:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) நடப்பாண்டில் கரும்புக்கு நிர்ணயிக்கப்பட்ட விலை எவ்வளவு?

(ஆ) இதை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 1990–91 கரும்பு பருவத்திற்கு (அக்டோபர் 1990 முதல் செப்டம்பர் 1991) மைய அரசு நிர்ணயம் செய்த சட்டபூர்வ கரும்பு விலை டன் ஒன்றுக்கு ரூ.230. இதன் அடிப்படையில் மாநில அரசு பரிந்துரை விலையாக ஒரு டன் கரும்புக்கு (8.5 சதவீதம் சர்க்கரைத் திறன் கொண்டது) ரூ 280 என நிர்ணயம் செய்யப்பட்டது. இத்துடன் ஒரு டன்னுக்கு ரூ. 10ம் மானியமாக வழங்க ஆணையிடப்பட்டது. 8.5 சதவீதத்திற்கு மேல் கிடைக்கும் ஒவ்வொரு 0.1 % சர்க்கரைத் திறனுக்கும் குவிண்டால் ஒன்றுக்கு 32.9412 பைசா வீதம் கொடுக்கப்படும். தமிழகத்தில் உள்ள கரும்பு விவசாயிகளுக்கு சர்க்கரைத் திறன் அடிப்படையில் கொடுக்கப்படும் விலை அரசு மானியம் உட்பட ரூ. 290 முதல் ரூ. 362 வரையில் உள்ளது.

(ஆ) இல்லை.

547—

* 6143—திரு. அ. பாப்பா சுந்தரம் :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1991–92 ஆம் ஆண்டு 8.5 சதவீதம் சர்க்கரைச் சத்துள்ள கரும்புக்கு டன் ஒன்றுக்கு எவ்வளவு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது?

(ஆ) மைய அரசு அறிவித்தது எவ்வளவு?

(இ) மாநில அரசு கரும்புக்கு என்ன விலை நிர்ணயித்துள்ளது?



மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) (ஆ) மற்றும் (இ): மைய அரசு, 1991–92 ஆம் ஆண்டு கரும்புபருவத்திற்கு, 8.5 சதவீத சர்க்கரைச் சத்துள்ள கரும்புக்கு, சட்டபூர்வ குறைந்த பட்ச விலை ஒரு டன்னுக்கு ரூ. 260 என நிர்ணயம் செய்துள்ளது. 8.5 சதவீதத்திற்கு மேல் கிடைக்கும் ஒவ்வொரு 0.1 சதவீதத்திற்கும் சர்க்கரைச் சத்திற்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 30.5882 பைசா வீதம் வழங்கவும் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இதனடிப்படையில் மாநில அரசு, 1991–92 ஆம் ஆண்டு கரும்பு பருவத்திற்கு 8.5 சதவீத சர்க்கரைச் சத்துள்ள கரும்பு டன் ஒன்றுக்கு 300 ரூபாய் என தனது பரிந்துரை விலையை நிர்ணயம் செய்துள்ளது. 8.5 சதவீத சர்க்கரைச் சத்திற்கு மேல் கிடைக்கும் ஒவ்வொரு 0.1 சதவீத சர்க்கரைச் சத்திற்கும் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 35.2942 பைசா வீதம் வழங்கப்படும். கரும்பு உற்பத்திக்கு இடப்படும் மூலப் பொருட்களின் விலை உயர்வைக் கருதி, அரசு மானியமாக ஒரு டன் கரும்புக்கு ரூ. 10 வீதம் வழங்க ஆணை வெளியிட்டுள்ளது. எனவே, தமிழகத்தில் உள்ள கரும்பு விவசாயிகள் குறைந்த பட்சமாக ஒரு டன் கரும்புக்கு ரூ. 310 என்றும், அதிக பட்சமாக, சர்க்கரைச் சத்தின் அடிப்படையில் ரூ. 373.50 வரையிலும் பெறுவார்கள். சர்க்கரைச் சத்தின் அடிப்படையில் வழங்கப்படும் விலை, சென்ற ஆண்டைவிட (1990–91) இந்த ஆண்டு (1991–92) குறைவாக வழங்கும் நிலையில் உள்ள சர்க்கரை ஆலைகள் சென்ற ஆண்டு வழங்கிய விலையையே இந்த ஆண்டும் வழங்க வேண்டும் என்று ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

முற்பகல் 10–25

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிறபோது, தமிழகத்தில் 310 ரூபாய் டன்னுக்கு விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்றும் அதிக சர்க்கரை சத்துள்ளதற்கு 373 ரூபாய் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ரூ.310-க்கு மேலே நீங்கள் நிர்ணயிக்கப்பட்ட தொகையில் எத்தனை பேருக்கு வழங்கியிருக்கிறீர்கள் என்பதை அறிய ஆசைப்படுவதோடு, இன்றைய தினம் வேலிக் கருவை மரத்திற்குக்கூட ஒரு டன்னுக்கு 500 ரூபாய் இருக்கிறது. குறைந்த பட்சம் அந்த வேலிக் கருவை மரத்திற்குக் கொடுக்கக்கூடிய அந்த 500 ரூபாய் பணமாவது, கரும்பிற்கும் கொடுக்கிற விதத்தில் அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே 31 சக்கரை ஆலைகள்

இருக்கின்றன. அந்த ஆலைகள் இந்த ஆண்டு ரூபாய் 310-க்கு மேல்தான் ஒரு டன்னுக்கு கரும்பிற்கு வழங்குகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 8.5 கட்டுமான சத்துள்ள கரும்பிற்கு விலையை நம் அரசு நிர்ணயித்திருக்கிறது என்று சொன்னார்கள். நாங்கள் இந்தக் கேள் கேட்டது, ஆகஸ்டு மாதத்திலே கேட்கப்பட்ட கேள்விகள். இருந்தாலும், 8.5 கட்டு மான சர்க்கரை, எந்த ஆண்டு 8.5 என்று கணக்கிட்டு, அந்தத் தொகை வழங்கப்படுகிறது. சென்றஆண்டு வந்தகணக்கை வைத்து, இந்த ஆண்டு அந்த விலையைத் தருகிறார்கள். இந்த ஆண்டு சர்க்கரை கட்டுமானத்தை வைத்து, அடுத்த ஆண்டு விலையைத் தருகிறார்கள். ஆகவே, மத்திய அரசினுடைய கொள்கையே தவறாக இருக்கிறது என்பது விவசாயிகளுடைய கருத்து. ஆகவே, இந்த ஆண்டு கட்டுமான சர்க்கரைக்கு அந்தந்த ஆண்டு விலையையே நிர்ணயிக்கப்படுமா ? அல்லது, தனியாக விவசாயிகளினுடைய கரும்பை ஆராய்ந்து, அந்தக் கட்டுமானத்திற்கு விலை தரப்படுமா என்பதை நமது புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு மத்திய அரசுக்கு வற்புறுத்தி, அந்த விலைகளை, அந்தந்த ஆண்டு கட்டுமான சர்க்கரைக்குள்ள விலையையே, அல்லது தனிப்பட்ட அந்தந்த விவசாயிகளி னுடைய கரும்புச் சர்க்கரையினுடைய தரத்தை ஆராய்ந்து விலை தரப்படுமா என்பதை அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புவதோடு, இந்த 8.5 என்பதை குறிப்பது யார் ? அந்த ஆலைகளிலே நமது அரசு அதிகாரிகள் யாராவது இருக்கி றார்களா ? அது சரியான கணக்கா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்புக்கு விலை நிர்ணயம் செய்வது மத்திய அரசு. மத்திய அரசு நிர்ணயம் செய்யக்கூடிய விலை, விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகவில்லை என்ற கருத்திலே தான் மாநில அரசு அவ்வப்போது பரிந்துரைகளைச் சிபாரிசு செய்கிறது. இந்த 8.50 சதவிகிதம் சத்து என்பது கடந்த ஆண்டு சராசரியாக அந்த ஆலைக்குக் கிடைத்த சர்க்கரைச் சத்தின் அடிப்படையிலேதான் விலை நிர்ணயத்தை மத்திய அரசு செய்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர் களுடைய கருத்து பரிசீலிக்கக்கூடியது. வருகிற ஆண்டிலே மத்திய அரசுக்கு இது தொடர்பாக இவ்வரசு கடிதம் எழுதும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 548, திரு. பி. வி. இராஜேந்திரன், மாண்புமிகு மீனவளத் துறை அமைச்சர்.





548—

மீனவ மக்களுக்குக் கடன் வசதி மானியத்தொகையை அதிகரித்தல்.

*5415— திரு. பி. வி. இராஜேந்திரன் :

மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா வுக்கு விடையளிப்பாரா :

மீனவ மக்களுக்கு கட்டுமரத்தில் பொருத்தும் அவுட் போர்டு இஞ்சின் மானியத்துடன் கூடிய கடன் வசதி வழங்கு வதில் மானியத்தொகையினை அதிகப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வெளிப் பொருத்தும் இயந்திரம் ஒன்றுக்கு தற்போது ரூபாய் 7,500 என்று வழங்கப்பட்டதை, நமது தமிழக முதல மைச்சர், நம்பிக்கை நட்சத்திரமாக இருக்கக்கூடிய தமிழக முதல்வர் அவர்கள் இன்றைக்கு ரூ. 10 ஆயிரமாக உயர்த்தி உத்தரவிட்டிருக்கிறார்கள். இதற்கு மத்திய அரசும் நிர்வாக ஒப்புதல் தந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 549, திரு. கி. பாலசுப்பிரமணியன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

549—

சிறுதொழில் தொடங்க மூலப்பொருள் பெற நடவடிக்கை.

*4997— திரு. கி. பாலசுப்பிரமணியன் :

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தமிழகத்தில் தொழில் வளம் பெறுக ஏதுவாக தேவையான (Open General Licence) விதிகளைத் தளர்த்தி தமிழகத்தில் சிறுதொழில் தொடங்குவதற்கு மூலப் பொருட்கள்(Raw Materials) பெற்று வழங்க மைய அரசினை அணுகி அனுமதி பெற அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா ?

[1992 ஏப்ரல் 10

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிறு தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருட்களையும் வெளிப்படை பொது உரிமத்தின் (O.G.L.) கீழ் கொண்டுவர மைய அரசின் அனுமதிபெற வாய்ப்பில்லை.

முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. கி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகைகளுக்காக வரவழைக்கக்கூடிய அச்சடிக்கக்கூடிய காகிதங்களை எல்லாம் எஸ்.டி.சி. நிறுவனத்தின் மூலம் 'கேனலைஸ்' செய்ததை Decanalise செய்து விட்டார்கள். அதுபோன்று மைய அரசு கட்டுப்பாடுகளைத் தளர்த்தியுள்ளது. இந்த நிலையிலே பத்திரிகைகள் தொழில்கள் நன்கு வளர்ச்சியடையக்கூடும். அதே போன்று சிறு தொழில்களைத் தொடங்குவதற்கு வேண்டிய மூலப் பொருள்களை நாம் வெளி நாட்டிலிருந்து வாங்குவதற்கு கட்டுப்பாடுகளைத் தளர்த்தி Open General Licence மூலமாக வரவழைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். மத்திய அரசு இதை நிச்சயமாகச் செய்யும் என்று நான் எண்ணுகிறேன். ஆகவே, இந்தத் திட்டத்தை அரசு வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுதொழில் நிறுவனங்கள் பொது உரிமத்தின் கீழும் அதன் துணை உரிமத்தின் கீழும், வேண்டிய மூலப் பொருட்களை இறக்குமதி செய்ய மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. மேலும், மூலப் பொருள்களைப் பெறுவதற்கு வேறு வகையான தடை எதுவும் இருக்குமானால், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய மேலான ஆலோசனைப்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லிய விளக்கத்திற்கு நன்றி, மற்றும் சிறு தொழில் வளர்வதற்கு இது முன்னோடியாக இருக்கும் என்று கருதுகிறேன்.



1992 ஏப்ரல் 10]

495—

வீடுகளுக்குப் பட்டா வழங்கல்.

*1350—திரு. வே. பெரியசாமி :
மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரியார் மாவட்டம், உமாரெட்டியூரில் மேட்டுப்பாங்கான இடத்தில் கட்டியுள்ள வீடுகளுக்குப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம், பவானி வட்டம், அம்மாப்பேட்டை கிராமம் (உமாரெட்டியூர் மஜரா) புல எண். 414/2. நத்தம் புறம்போக்கில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்காக நத்தம் நில அளவை பணி நடைபெற்று வருகிறது. அப்பணி முடிந்ததும் அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் விரைவில் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

(குறிப்பு,—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி *இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்,)

## 2. சிறப்புக் குறிப்புகள்.

### (அ) வேலூர் சிறையிலிருந்து ஒரு கைதி தப்பியது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேலூர் சிறையிலிருந்து கைதி ஒருவர் தப்பித்துவிட்டது பற்றிய பிரச்சினையை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று திரு. ஆர். தங்கராஜ், திரு. ஆர். சிங்காரம், திரு. சி. ஞானசேகரன் மற்றும் திரு. ஜி. பழனிசாமி ஆகியோர் என்னுடைய கவனத்திற்கு கொண்டுவந்திருக்கிறார்கள். அப்பிரச்சினையை எழுப்ப அனுமதிக்கிறேன்., திரு. சி. ஞானசேகரன்.

*8—4—1992 ஆம் தேதிய பட்டியலில் இருந்தது. உறுப்பினரின் வேண்டுகோளுக்கிணங்க. பேரவைத் தலைவர் அனுமதியுடன் மீண்டும் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, சென்ற 4–4–1992 ஆம் தேதி வேலூர் தொரப்
பாடியில் உள்ள மத்திய சிறையிலிருந்து ஒரு தண்டனை அடைந்த
கைதி—பிரகாசம் என்பவர். தப்பித்து இருக்கிறார். சில மாதங்
களுக்கு முன்பு வேலூர் மத்திய சிறையிலிருந்து செங்கற்பட்டு
நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட 8 ஆயுள் கைதிகள் நள்ளிரவில்
உயரமான அந்தச் சிறையின் மதில் சுவரைத் தாண்டிக் குதித்து
தப்பித்துச் சென்றார்கள், சென்ற ஆண்டு வேலூர் ஜெயிலிலே
இருந்து ஆயுள் தண்டனை அடைந்த கைதி தப்பித்துச் சென்றார்,
வெள்ளையன் ஆண்ட காலம் தொட்டு சரித்திரப் புகழ் பெற்ற
சிறப்பாகப் பணியாற்றி வந்த வேலூர் மத்திய சிறை அதிகாரிகள்
சில ஆண்டுகளாக கவனக் குறைவாக நடந்து கொள்வது
வேதனையான ஒன்று. தமிழகத்தின் போலீஸ் திறமைக்குப்
பேர்போன போலீஸ் என்பதால் ஆயுட் கைதிகளை வலைவீசிப்
தேடிப் பிடித்து இருக்கிறார்கள். ஆனால் 8 ஆயுள் கைதிகளிலே
தப்பியவர்களில் 7 பேர்களைத்தான் பிடித்திருக்கிறார்கள்.
இன்னும் ஒருவர் பிடிபடவில்லை. சென்ற சனிக்கிழமை வேலூரி
லிருந்து தப்பியோடிய பிரகாசம் இன்னும் கைது செய்யப்பட
வில்லை, 8 ஆயுட் கைதிகள் அன்று எப்படித் தப்பி ஓடினார்கள்
என்று அறிய வேண்டி அவாவில் சட்டமன்ற உறுப்பினர் என்ற
வகையிலே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் தப்பி ஓடியவர்
பற்றிய பிரச்சினையை என் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்
கிறீர்கள். இதற்கு முன்னால் ஓடியவர்களைப் பற்றி எல்லாம்
கேட்க வேண்டாம். இப்போது நீங்கள் என்ன கேட்க விரும்பு
கிறீர்களோ அதை எழுப்புங்கள்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஜெயில் மேனுவல் என்று கடுமையான விதிகள்
எல்லாம் இருந்தும், சிறையிலிருந்த கைதி தப்பி ஓடியிருக்கிறார்,
சட்டமன்ற உறுப்பினராகிய நான் கூட ஒரு முறை அந்த
ஆயுள் கைதிகளைப் பார்க்க வேண்டுமென்று சொன்ன போது.
விதியிலே இடம் இல்லை என்று சொன்னவர்கள், கைதி தப்பி
ஓடுகின்ற வகையில், விதிகளை அவர்கள் சரியாகக் கவனிக்காமல்,
விழிப்புடன் இல்லாமல் இருந்துவிட்டதன் காரணத்தாலே தப்பி
ஓடிவிட்டார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட இப்போது
'அலார்ம்' வைப்பதற்கு ஒரு பெரும் முயற்சியை எடுத்திருக்
கிறோம் என்று சொன்னதற்காக நன்றியைத் தெரிவித்துக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். அதே நேரத்தில் அதிகாரி
கள் அவர்களாலான அளவுக்கு நிச்சயமாக விழிப்போடு நடந்து
கொள்ள வேண்டும். அவர்கள் எப்படி எப்படி நடந்து கொள்ள
வேண்டும் என்பதை, இப்போது 'ஆட்டோ சங்கர்' வழக்கிலே
நியமிக்கப்பட்ட இஸ்மாயில் கமிஷன் அறிக்கையை இந்த அவை





யிலே வைத்து நீங்கள் தீர ஆராய்ந்து அப்படி சட்ட விதிகளுக்கு
உட்பட்டு அதிகாரிகள் ஒழுங்காகப் பணியாற்ற வேண்டும்,
கவனமாக அவர்கள் பணியாற்ற வேண்டும் என்பதை அறிவுறுத்
தும் முகத்தான் இந்தப் பிரச்சினையை அரசின் கவனத்துற்கு
மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிங்காரம் அவர்கள் சார்பாக
வும், என் சார்பாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய
கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்டத் துறை
அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு.
ஞானசேகரன் அவர்கள் தெரிவித்தது போல் 4—4—1992 அன்று
சிறையில் வெளிக் குழுவிலிருந்து ஒரு சிறைவாசி தப்பித்திருக்கிறார்.
ஆனால் இவர்கள் தெரிவித்ததைப் போல அவர் கடுமையான
தண்டனைக்கு உள்ளானவர் அல்ல. நான்கு மாத சாதாரணத்
தண்டனைக்கு உள்ளானவர். வெளி வேலைக்கு எடுத்துச்
சென்ற நேரத்தில் அவர் தப்பித்திருக்கிறார். அவர் தப்பிக்க
உதவிய அந்த அதிகாரிகள் மீது இன்று நடவடிக்கை எடுக்கப்பட்டு
இருக்கிறது. குறிப்பாக அந்த சிறைவாசி இராணிப்பேட்டை
சரகத்தைச் சேர்ந்தவர். அங்கே இருக்கிற போலீஸ் அதிகாரி
களுக்குத் தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற ஏற்பாடு
களும் செய்யப்பட்டிருக்கின்றன. விரைவில் அந்தக் கைதி மீண்
டும் கைது செய்யப்பட்டு சிறைச்சாலைக்கு அழைத்து வரப்படு
வார்.

இரண்டு விவரங்களைச் சொன்னார்கள். நவம்பர் மாதம்
91 வரை 8 ஆயுள் கைதிகள் தப்பித்தார்கள் என்றும், அதில் 7
பேர் பிடிபட்டார்கள் என்றும் சொன்னார்கள். அவர்களில்
ஒருவர் மட்டும் இன்னும் பிடிபடாமல் இருக்கிறார். அவரும்
விரைவிலே பிடிபடுவார். அது போல் 13—3—1992 அன்று
உள்ளிருந்து ஒருவன் தப்பிக்க முயன்றான். ஆனால் விழிப்பாக
அங்கே இருந்த அதிகாரிகள் அவன் தப்பிக்காமல் காத்திருக்கிறார்
கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்ன
நடவ்டிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்ற விவரத்தை மாண்புமிகு
உறுப்பினர் திரு. ஞானசேகரன் கேட்டிருக்கிறார்கள். குறிப்
பாக இரண்டு எச்சரிக்கைகள். ஒன்று சிறையைத் திறக்கும்
போதும், மூடும் போதும் விதிகளின்படி, அவ்வப்போது நடை
பெறுகிற வகையில், முன்னறிவிப்பின்றி அறைகள் மற்றும்
சிறைவாசிகளைச் சோதனை செய்ய வேண்டும் என்றும், தப்
பித்து ஓடுவதற்கு ஏதுவாக பொருட்கள் ஏதேனும் வைக்கப்பட்டு

உள்ளதா எனவும் தப்பித்தலைக் கட்டுப்படுத்தும் பொருட்டு சோதனைகளைத் தீவிரமாகச் செய்ய வேண்டும் எனவும் அங்கே இருக்கிற அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அவ்வப்போது சோதனையிடும்போது சிறை அலுவலர் முதலானவர்கள் உடன் இருக்க வேண்டும் என்றும் இன்றைக்கு வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

அடுத்து வார்டர்கள். இரவில் சுற்றுக்குச் செல்லும் இரவு அலுவலர்கள், பணியிடங்களில் இருக்க வேண்டிய காவலர்கள் மற்றும் கதை சொல்லும் கடிகாரம் வைத்திருக்கும் காவலர்கள் எச்சரிக்கையாகவும், முறையாகவும் பணிபுரியவும் ஆவன செய்யப்பட்டிருக்கிறது ; அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

மூன்றாவதாக, தி.மு.க. ஆட்சி பற்றிச் சொன்னார்கள். குறிப்பாக 1990-ல் சென்னை மத்திய சிறைச்சாலையிலே இருந்து ஆட்டோ சங்கர் மற்றும் 4 பேர்கள் தப்பித்தார்கள். பிறகு அவர்கள் சிறை வைக்கப்பட்டார்கள். அவர்கள் எப்படித் தப்பித்தார்கள் தி.மு.க. ஆட்சியில், கருணாநிதி ஆட்சியில் என்று கண்டறிய ஜஸ்டிஸ் இஸ்மாயில் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழு அரசுக்கு அறிக்கை கொடுத்திருக்கிறது. போற்றுதற்குரிய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஒப்புதல் பெற்று விரைவில் அந்த அறிக்கை சட்ட மன்றத்தில் வைக்கப்படும். , அதில் சில வரைமுறைகள்; எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று அந்த அறிக்கை சொல்லியிருக்கிறது. அதன்படியும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களும் ஏற்கெனவே, இந்த சேஃப்டி பற்றி, அதாவது எலக்ட்ரிக் அலார்ம் 8 மத்திய சிறைச்சாலைகளிலும் வைக்க வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். அதுவும் துரிதமாக ஒரு ஆறு மாத காலத்திற்குள்ளாக அமைக்கப் பெற்றால் இப்படிப்பட்ட தவறுகள் சிறையில் நடைபெறாமல் இருக்க ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 3. கவன ஈர்ப்பு.

**(அ) சாலைப் போக்குவரத்து நிறுவனத்தில் ஓட்டுநர் பயிற்சி பெற்றவர்களுக்கு பணி நியமனத்தில் முன்னுரிமை இல்லாதது குறித்து.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து கவன ஈர்ப்பு. திரு. பி. வி. இராஜேந்திரன் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த





நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. பி. வி. இராஜேந்திரன்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சாலைப் போக்குவரத்து நிறுவனத்தில் ஓட்டுநர் பயிற்சி பெற்றவர்களுக்கு பணி நியமனத்தில் முன்னுரிமை அளிக்காதது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்த விவர அறிக்கை ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

### விவர அறிக்கை.

சாலைப் போக்குவரத்து நிறுவனத்தில் பயிற்சி பெறும் கனரக வாகன ஓட்டுநர்களுக்கு போக்குவரத்துக் கழகங்களில் வேலை வாய்ப்பு உண்டு என்ற உத்தரவாதத்தின் பேரில் மாணவர்களைச் சேர்ப்பதில்லை.

வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் பெறும் ஓட்டுநர்கள் பட்டியலில் சாலைப் போக்குவரத்து நிறுவனத்தில் பயிற்சி பெற்ற ஓட்டுநர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் ஓட்டுநர்களாக நியமிக்கப்படுகிறார்கள். தற்காலிக ஓட்டுநர் நியமனத்திற்கும் இந்த வழி முறையே பின்பற்றப்படுகிறது.

சாலைப் போக்குவரத்து நிறுவனத்தில் பயிற்சி பெற்ற ஓட்டுநர்களுக்கு மட்டுமே போக்குவரத்துக் கழகங்களில் வேலை வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை மற்றைய ஓட்டுநர்களின் எதிர்காலத்தை பாதிப்பதாக அமையும்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்து இருக்கிற அறிக்கையில் ஐ.ஆர்.டி.-யில் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு முன்னுரிமை, பணி நியமனத்தில் அளிக்கப்படுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் எனக்குத் தரப்பட்டிருக்கிற தகவல்கள் எல்லாம் குறிப்பாக நாகப்பட்டினத்தில் 200 மாணவர்கள் மூன்று ஆண்டு காலமாகக் காத்துக் கொண்டு இருக்கிறார்கள். அதிலும் சோழன் போக்குவரத்துக் கழகத்தில் கடந்த 6—1—1992 அன்று வெளியிலே இருந்து அதாவது கன்வென்

ஷனல் அடிப்படையில் அதாவது பாரம்பரிய முறையில் வருகிற டிரைவர்கள் மட்டும் இண்டர்வியூ-க்கு கூப்பிடப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இங்கே பயிற்சி பெற்றவர்கள் நாங்கள் ஒவ்வொருவரும் சுமார் 8,000 ரூபாய் செலவு செய்து பயிற்சி பெறுகிறோம்; நாங்கள் பயிற்சி பெற்றவர்கள் என்ற உத்தரவாதம் வேறு இருக்கிறது; அப்படி இருந்தும் எங்களை விட்டு விட்டு அதாவது ஐ.ஆர்.டி.-ஐப் புறக்கணித்துவிட்டு பாரம்பரிய முறையிலே வருகிறவர்களை ஏன் தேர்வு செய்ய வேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்களா என்று உங்கள் மூலம் நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓட்டுநர் பயிற்சி நிலையங்களிலே பயிற்சி அளிப்பது அவர்கள் பயிற்சி பெறுவதற்காகத்தானே தவிர, அவர்கள் அத்தனை பேர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கப்படும் என்னும் ஒரு உத்தரவாதத்தினை அவர்களிடத்திலே தருவதில்லை. வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்யப்பட்டு இருக்கின்ற ஓட்டுநர்கள் பல பேர்கள் இருக்கின்றார்கள். அவர்களும் எதிர்காலத்தில் பாதிக்கப்படாமல் இருக்கின்ற அளவுக்கு வேலை வாய்ப்பு அலுவலகத்திலேயிருந்து பயிற்சி பெற்றவர்கள் வருவார்களேயானால் அவர்களுக்கு முன் உரிமை வழங்கப்படும் என்றுதான் குறிப்பிட்டிருக்கின்றேனே தவிர, நீங்கள் குறிப்பிட்டதுபோல அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே ஒரு 'கோட்டா'-வையாவது நாம் நியமிக்க முடியும். குறைந்தது 75 சதவிகிதம் ஐ.ஆர்.டி. ஸ்டூடன்ஸ்க்கு என்றாவது, மீதம் இருக்கின்ற 25 விழுக்காடு பேர்களுககு பாரம்பரிய முறையிலே வருகின்ற ஓட்டுநர்களுக்கு என்கின்ற ஒரு முறையை விதித்து செய்ய வேண்டும். ஐ.ஆர்.டி. என்று இருக்கின்றது. அதிலே ஒரு அர்த்தம் இருக்கின்றது என்ற நம்பிக்கை வந்தால்தான் மேலும் மேலும் அதிலே மாணவர்கள் வந்து சேர்வார்கள். அதிலே படிப்பவர்கள் ஒரு உத்தரவாதம் உள்ள பயிற்சி பெற்ற டிரைவர்களாக இருக்கின்றார்கள் என்ற உத்தரவாதமும் பொதுமக்களுக்கு இருக்கும். ஐ.ஆர்.டி. நோக்கம் ஈடேறுவதற்காக நீங்கள் 'கோட்டா' வைத்து உங்களுடைய பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ்-லே இருக்கின்ற கார்ப்பரேஷன்களில் 75 சதவிகிதம் ஐ.ஆர்.டி. ஸ்டூடன்ஸ்கள் எடுக்கவேண்டும். மீதம் 25 சதவிகிதத்தை மற்றவர்களில் எடுக்கலாம் என்ற முறையைக் கொண்டுவருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.ஆர்.டி.-யிலே பயிற்சி பெறுகின்றவர்கள் நல்ல தேர்ச்சி பெற்ற பயிற்சியாளர்களாக வரவேண்டும் என்கின்ற நோக்கத்துடன் தான் இந்த திட்டத்தை அரசு அமல்படுத்திக்கொண்டிருக்கிறது. அதிலே தேர்ச்சிபெற்ற அத்தனை பேர்களுக்கும் அரசுத் துறையிலேயே வேலைவாய்ப்பு கொடுப்பது என்பது முடியாத ஒன்று. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு இருப்பது 75 சதவிகிதம் பேர்களுக்கு முன் உரிமை வழங்கப்படுமா என்று கேட்கிறார்கள். இதே உறுப்பினர் அவர்கள் நாளையதினம் கேட்கிறபோது, வேலைவாய்ப்பு அலுவலகத்திலே இருந்தவர்கள், அவர்களை ஓவர்லுக் செய்து நீங்கள் இவர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்குவதா என்று பல உறுப்பினர்கள் கேட்கக்கூடும். ஆகவே, வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே பதிவு செய்து அவர்கள் வருகின்றபோது, அந்த சான்று இருக்குமானால்தான் அவர்களுக்கு, ஐ.ஆர்.டி.-யிலே பயிற்சி பெற்றவர்களுக்கும் முன் உரிமை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமே தவிர, இதுபோன்ற திட்டத்தை அரசு ஏற்காது.

## (ஆ) திருச்சி-குளத்தூர் கே-1 நகரப் பேருந்து நிறுத்தப்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. சி. குழந்தைவேலு, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. குழந்தைவேலு.

திரு. சி. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்சி-குளத்தூர் கே-1, மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து நிறுத்தப்பட்டுள்ளது குறித்த" மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### விவர அறிக்கை.

குளத்தூர், திருச்சி-புதுக்கோட்டை பிரதான சாலையில் அமைந்துள்ளது. புதுக்கோட்டையிலிருந்து கீரனூருக்கு குளத்தூர் வழியாக 14 நகரப் பேருந்துகள் 84 நடைகள் இயக்கப்படுகின்றன. மேலும் புதுக்கோட்டையிலிருந்து குளத்தூர், கீரனூர் வழியாக திருச்சிக்கு புறநகர் பேருந்துகள் 177 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

திருச்சியிலிருந்து கீரனூர் வழியாக குளத்தூர் அவுட்டர் வரை இரண்டு நகரப் பேருந்துகள் இயக்கப்பட்டு வந்தன. திருச்சியிலிருந்து குளத்தூருக்கு நேரடிப் பயணிகள் 10 விழுக்காடு கூட கிடையாது. எனவே 5—12—1989 முதல் மேற்கூறிய இரண்டு பேருந்துகளும் திருச்சி முதல் கீரனூர் வரை இயக்கப்பட்டு வருகின்றன. கீரனூரிலிருந்து குளத்தூர் அவுட்டர் 1.4 கிலோமீட்டர் தூரமே ஆகும்.

இப்பேருந்துகள் நிறுத்தப்பட்டது குறித்தும் வேறு கோரிக்கைகள் சம்பந்தமாகவும் 26—3—1992 அன்று நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட பேருந்து மறியல் போராட்டம் குறித்து 24—3—1992 அன்று குளத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் சமாதானக் கூட்டம் நடைபெற்றது. மேற்படி கூட்டத்தில் அனைத்துபுற நகரப் பேருந்துகளையும் குளத்தூரில் நிறுத்தி பயணிகளை ஏற்றி இறக்கிச் செல்ல ஓட்டுநர் நடத்துநர்களுக்கு அறிவுறுத்த தீர்மானிக்கப்பட்டது. மேலும் கே. 1 நகரப் பேருந்தை மீண்டும் இயக்க மறுபரிசீலனை செய்யுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது. இது குறித்து மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகம் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

<u>திரு. சி, குழந்தைவேலு :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டையிலிருந்து கீரனூருக்கு குளத்தூர் வழியாக திருவள்ளுவர் பேருந்துகள் 177 தடவைகள் செல்வதாக கூறியுள்ளார்கள். திருவள்ளுவர் பேருந்துகள் குளத்தூரில் ஒன்று கூட நிற்பது இல்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். குளத்தூரைச் சுற்றி சுமார் 60 கிராமங்கள் உள்ளன. அந்த கிராமங்களில் இருந்து பள்ளிக்கு செல்லும் மாணவர்களும் தொழிலாளர்களும் ஏராளமானவர் இந்த கே. 1 பஸ் மூலமாகத்தான் பயன்பெற்று வருகின்றார்கள். இந்த கே. 1 பஸ் நின்றதன் மூலமாக அவர்கள் உரிய நேரத்தில் பள்ளிக்குச் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. திருச்சியிலிருந்து கீரனூர் பஸ்கள் வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த இரண்டு பஸ்களையாவது மீண்டும் குளத்தூர் வழியாக நீடித்துத்தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய திருநாட்டினுடைய வரலாற்றில் தமிழகத்தினுடைய போக்குவரத்துத் துறைதான் இன்றைக்குப் பல்வேறு மாற்றங்களை உருவாக்குவதற்கு நம்முடைய தமிழகத்தின் ஒப்பற்றத் தலைவியாக இருக்கின்ற தமிழகத்தின் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு அறிவுரை வழங்கி அதை நாம் ஏற்று நடத்திக்கொண்டு வருகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி).



குறிப்பாக, இங்கே இருக்கின்ற உறுப்பினர்களுக்குத் தெரியும், முதல்வர் அவர்களோ, அமைச்சர் பெருமக்களோ கலந்து கொண்டு உள்ள நிகழ்ச்சிகளில் நாளைய மறுதினத்திலே பேருந்து வேண்டுமென்று சொன்னால், இந்திய நாட்டினுடைய வரலாற்றில் தமிழ்நாட்டில் தான் அந்த பேருந்து இயங்க முடிகின்ற சரித்திரத்தை மாற்றி நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு இருப்பது கே. 1 பேருந்து இயக்கப்பட வேண்டும் என்று கேட்டு இருக்கின்றார்கள். குளத்தூர் வரையிலே இயக்கப்படுகின்ற அந்த பேருந்தில் 10 சதவிகிதம் கூட மக்கள் வரவில்லை. ஆகவே, அது நிறுத்தப்பட்டது. அதற்குப் பதிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருச்சி—கீரனூர் வரையிலே இயக்கப்படுகின்ற பேருந்தை நீடித்துத் தர முடியுமா என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். நாளைய மறுதினத்திலே அதை நீட்டித்துத் தருவதற்கு நம்முடைய புரட்சித் தலைவி அரசு மேற்கொள்ளும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. சி. குழந்தைவேலு :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்களுக்கும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைப் கூறி இந்த கே.1 பஸ்—ஐ திருச்சி—கீரனூர் செல்லும் பஸ்—ஐ மீண்டும் குளத்தூர் வரையில் விரைவில் இயக்க ஏற்பாடு செய்து தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

## 2. சிறப்புக் குறிப்புகள்— தொடர்ச்சி.

### (ஆ) பேரவைத் தலைவர் அனுமதி மறுத்த பிரச்சினை.

முற்பகல் 10–45

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். (குறுக்கீடுகள்) தயவு செய்து நீங்கள் முறையில்லாமல் இப்படி நாள்தோறும் நடக்கக் கூடாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். இது முறையல்ல. என்னுடைய அனுமதியை உங்களுக்கு வழங்கவில்லை. உட்காருங்கள். கேள்வி நேரம் முடிந்தவுடன் எழுப்புவது வேறு, நீங்கள் விரும்பிய நேரத்தில் எல்லாம் இப்படி நிற்பது முறையல்ல. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நான் உங்களுக்கு என்னுடைய அறையிலேயே அனுமதி வழங்கவில்லை. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நான் அனுமதி வழங்காததை நீங்கள் எப்படி இங்கே வந்து சொல்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

அஜென்டாவிற்குட் போயிருக்கிறோம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். முறை இல்லாமல் உங்களை அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நான் ஒவ்வொரு நாளும் சொல்கிறேன், முறையோடு நடந்துகொள்ளுங்கள் என்று. நான் அஜென்டாவுக்குள் போனதற்குப் பிறகு, கவன ஈர்ப்பு எல்லாம் முடிந்ததற்குப் பிறகு நீங்கள் இப்படி எழுப்ப எழுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். இது சரியல்ல. விதிமுறைகளைப் பின்பற்றப் பாருங்கள். வெளியிலே நீங்கள் எது வேண்டுமானாலும் செய்யலாம். (குறுக்கீடுகள்) தயவு செய்து உட்காருங்கள். விதிமுறை இல்லாமல் நீங்கள் நடந்து கொள்கிறீர்கள். (குறுக்கீடு) திரு. பழனிசாமி இது சரியல்ல. நீங்கள் எந்த விதியின் கீழ் எழுந்து நிற்கிறீர்கள்? (குறுக்கீடு) சரி, இப்போது நான் உங்களைக் கேட்கிறேன். இப்போது நீங்கள் எந்த விதியின் கீழ் எழுந்து நிற்கிறீர்கள்? திரு. பழனிசாமி சொல்லுங்கள். எந்த விதியின் கீழ் எழுந்து நிற்கிறீர்கள்? (குறுக்கீடு) நீங்கள் பேசுவதற்கு அனுமதி இல்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை, 'சீரோ அவர்' என்று ஒன்று இருக்கிறது. அதிலே தான் உறுப்பினர் இதுபோன்று தெரிவிக்க வேண்டும். ஆனால், உறுப்பினர் அவர்கள் எந்த நேரம் வேண்டுமானாலும் இதுபோன்ற நிலையை உருவாக்குவது சரிதானா என்பதை நான் இந்தச் சபையின் மூலம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சில விதிமுறைகள் இருக்கின்றன. கவன ஈர்ப்பு முடிந்ததற்குப் பிறகு, குழுக்களுடைய அறிக்கையை அளிக்கிற நேரத்தில் கூடாது. (குறுக்கீடு) இந்த அவையை விதிமுறைகளின்படி நடத்துவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும். (குறுக்கீடு) திரு. பழனிசாமி இது முறை அல்ல. (குறுக்கீடு) திரு. பழனிசாமி உட்கார வேண்டும். (குறுக்கீடு) நடவடிக்கை எடுக்க வேண்டி வரும், உட்காருங்கள். (குறுக்கீடு) ** ** ** நான் சொல்லிக்கொண்டே இருக்கிறேன். நீங்கள் பேசிக் கொண்டே இருப்பது முறை அல்ல. இது சட்டமன்றம். சட்டமன்ற விதிமுறைப்படி நடக்க வேண்டும் என்பதை நீங்கள் மனதிலே வைத்துக்கொண்டு பேச வேண்டும். (குறுக்கீடு) இது சட்டமன்றம், விதிமுறைப்படி நடக்க வேண்டிய ஒன்று. அதை மனதிலே வைத்துக்கொண்டு பேச வேண்டும். (குறுக்கீடு) உட்காருங்கள். இது முறையல்ல. (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாள்தோறும் நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான நிகழ்ச்சிகள் நடைபெறும். அது முறையோடும் நடக்கும், முறை இல்லாமலும் நடைபெறும். ஆனால் இந்த அவை சிலபல உரிமைகளைப் பெற்றிருக்கிறது. அந்தப் பிரச்சினைகளைப் பற்றி எழுப்புவதற்கு விதிமுறைகள் எல்லாம் வகுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, அவசர முக்கியத்துவம் வாய்ந்தப் பிரச்சினைக்கும் விதி வகுக்கப்பட்டிருக்கிறது. இந்த அவையை ஒத்திவைத்து விட்டு விவாதம் நடத்துவதற்கும் விதி வகுக்கப்பட்டிருக்கிறது. ஆக, எந்த ஒரு பிரச்சினையாக இருந்தாலும் விதிமுறைகளுக்கு உட்பட்டு மாண்புமிகு உறுப்பினர்கள் கொண்டு வருவார்களானால், அது பற்றி மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களுடைய அனுமதியைப்பெற்று, அதைப் பற்றி விவாதிக்கலாம். ஆனால், 'நான் அனுமதி மறுத்து விட்டேன் என்று சொன்னதற்குப் பிறகும் அந்தப் பிரச்சினையை மீண்டும் எழுப்புவது முறையல்ல. ஆகவே, எதுவாக இருந்தாலும் விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு இந்த அவையை நடத்திச் செல்வதுதான் பாங்கு முறை, வழி, நெறி ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து உட்காருங்கள். நாள்தோறும் சில இன்றியமையாத பிரச்சினைகள் என்று வருகிறபோது (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அந்தப் பிரச்சினைகளுடைய தன்மைக்கு ஏற்ப ஒவ்வொரு நாளும் என்னென்ன பிரச்சினைகளை எழுப்புவது என்று கேட்டு அறிந்து அரசுக்கும் அதற்குரிய தகவலைக் கொடுத்து விதி 56-ல் எடுக்க முடியாத பிரச்சினைகளைக் கூட "Special mention" என்ற முறையில் அனுமதித்து, இங்கே பிரச்சினைகள் எழுப்பப்பட்டு அதற்குப் பதில்களும் வழங்கப்பட்டு வருகின்றன. இன்றைக்கும் கூட சிறைக் கைதி ஒருவர் தப்பி விட்டார் என்ற பிரச்சினையை நான் அனுமதித்து அதற்குரிய பதிலையும் அரசாங்கம் கொடுத்துக் கொண்டிருக்கிறது, அப்படி நாள்தோறும் முக்கியமான பிரச்சினைகளை இங்கே எழுப்புவதற்கும் அனுமதித்து அரசாங்கமும் பதில் சொல்லிக்கொண்டிருக்கிற ஒரு முறை இருக்கிற போது, நான் என்னுடைய அறையிலேயே இன்று எழுப்புவதற்கு அனுமதி இல்லை—எழுதிக் கொடுத்துச் சொல்லியிருக்கிறீர்கள். நான் அரசாங்கத்தினுடைய பதிலைப் பெற்று பதில் இருக்கிற நேரத்தில் நான் அனுமதிக்கிற நிலையில் இருக்கிறேன், இன்றைக்கு அதற்குரிய வாய்ப்புக்குரிய அந்த நேரமும் கடந்து வந்ததற்குப் பிறகு, அதற்குப் பிறகு அடுத்து அஜெண்டாவில் இருக்கிற பிரச்சினைக்கு நான் சென்று பதிலும் அளிக்கப்பட்டு, இன்னொரு பிரச்சினைக்கு நான் போகிறபோது திரு. பழனிசாமி இந்த முறையிலே எழுந்து நேரடியாக

[பேரவைத் தலைவர்] [1992 ஏப்ரல் 10

நான் அனுமதி இல்லையென்று சொன்னதற்குப் பிறகும் பேசிக் கொண்டிருந்தது முறையல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

** ** ** **

என்று சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது,

குழுக்களின் அறிக்கையை அளித்தல், (குறுக்கீடு) தயவு செய்து இந்த நேரத்தை இப்படிப்பட்ட விவாதத்திற்குப் பயன்படுத்த முடியாது.

குழுக்களின் அறிக்கைகளை அளித்தல், (குறுக்கீடு) உட்காருங்கள். நான் இவ்வளவு சொன்னதற்குப் பிறகும் திரு, பழனிசாமி நீங்கள் நேரடியாகப் பிரச்சினையைப் பேச ஆரம்பித்தது சரியல்ல, நீங்கள் பேசியது எதுவுமே அவைக் குறிப்பிலே ஏறாது. (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு). எந்த விதியிலே நீங்கள் 3 பேரும் எழுந்து நிற்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுக்குப் பின்னர். இன்னொரு பிரச்சினைக்குச் சென்று விட்டோம், அப்படிச் சென்று விட்ட பிறகு இப்படி இடையே நின்று கொண்டிருப்பது முறையல்ல, விதி முறைகளுக்கு உட்பட்டதும் அல்ல.

முற்பகல் 10–50

## 4. அறிக்கைகள் அளித்தல்.

### (அ) உரிமைக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழுக்களின் அறிக்கைகளை அளித்தல், உரிமைக் குழுவின் அறிக்கையை அளித்தல், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மற்றும் உரிமைக் குழுவின் தலைவர்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கோவை மாலை முரசு' நாளிதழ் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை பற்றிய உரிமைக் குழுவின் அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன், (குறுக்கீடுகள்)

## 2. சிறப்புக் குறிப்புகள்—தொடர்ச்சி.

### (ஆ) பேரவைத் தலைவர் அனுமதி மறுத்த பிரச்சினை—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பழனிசாமி. மிக கடுமையாக இருக்க வேண்டியிருக்கும், இது முறையல்ல, எந்த விதியின் கீழ் பேசுகிறீர்கள், அதைச் சொல்லிவிட்டுப் பேசுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1992 ஏப்ரல் 10] [பேரவைத் தலைவர்]

(குறுக்கீடு) என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள், அறையிலேயே நான் உங்களுக்கு பதில் சொல்லியிருக்கிறேன், அப்படி அறையில் பதில் சொல்லியதற்குப்பிறகு இங்கே எழுப்புவது முறையல்ல. கண்டகண்ட நேரத்திலே கண்டகண்டபடி எழுந்து நின்று பேச முடியாது. (குறுக்கீடு) அடுத்து அரசாங்கத்திற்கு நான் தகவல் கொடுத்து, அவர்களுக்கு பதில் அளிக்க வாய்ப்பு அளித்து, உங்களுக்கு அனுமதி அளிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாண்புமிகு உறுப்பினர்கள் என்ன பிரச்சினையை இப்போது எழுப்ப முயன்றாலும் அதற்கான சரியான விவர அறிக்கையோ, பதிலோ அரசிடம் இருக்காது. எனவே அடுத்து சட்டசபை என்று கூடுகிறதோ அன்றைக்கு நீங்கள் அனுமதி வழங்கினால் அரசும் இதற்குத் தகுந்த பதில் அளிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் வேண்டாம், அவர் என்னுடைய அறையிலே கேட்டார். கேட்டதற்கு நான் பதில் சொல்லியிருக்கிறேன். எனவே இந்த நேரத்தில் வேண்டாம் என்பதற்காகச் சொல்கிறேன். (குறுக்கீடு) சரி. திரு. ச. இராமச்சந்திரன்.

*திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்பெஷல் மென்ஷனைப் பொறுத்தவரையில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஒரு தெளிவான தீர்ப்பு வழங்கினீர்கள், அதிலே ஒன்று சொல்ல விரும்புகிறேன், அதாவது, சில நேரங்களில் அரசினுடைய பதில் வருவதற்குக் காலதாமதம் ஆகும். ஆனால் பொது முக்கியத்துவம் கருதியும் அவசரம் கருதியும் அதை இங்கே சொல்லலாம், அரசாங்கம் கட்டாயம் பதில் சொல்லவேண்டுமென்று அவசியமில்லை, பாராளுமன்ற முறையிலே கூட அது உண்டு.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி எந்தப் பிரச்சினையை வேண்டுமானாலும் இங்கே சொல்லலாம் என்றால் அதற்கும் ஒரு நேரம் இருக்கிறது. அதற்குப் பெயர் ஜீரோ ஹவர். (மேசையைத் தட்டும் ஒலி) கேள்வி நேரம் முடிந்தவுடனேயே இதை எழுப்பி இருந்தால் நீங்கள் சொல்லியிருக்கலாம். வாய்ப்புக் கிடைத்திருக்கும். அது எல்லாம் முடிந்து, அடுத்து இன்றைய அலுவல்களுக்கு அவை சென்று விட்ட பிறகு, இதை எழுப்ப முயலுவது முறையல்ல என்பதை மட்டும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாராளுமன்றத்திலே இருக்கிற ஸ்பெஷல் மென்ஷன் என்பது பாராளுமன்ற விதிகளின் 377-வது பிரிவின்கீழ் அனுமதிக்கப்பட்ட ஒன்று. அது அஜென்டாவில் வந்துவிடும். இங்கே அப்படியல்ல. நம்முடைய விதி முறைகளில் அப்படித் தனி விதி இல்லை. விதி 377-ல் எழுப்ப அவர்களுக்கு உரிமை உண்டு. அஜென்டாவில் வரும். உறுப்பினர்கள் அந்தப் பிரச்சினையை எழுப்பலாம். அரசாங்கம் பதில் சொன்னாலும் சொல்லலாம், சொல்லாமலும் இருக்கலாம் என்பதற்கு விதி இருக்கிறது. நம்முடைய விதிகளில் அப்படி இல்லை. (குறுக்கீடுகள்) பதில் இருக்கக்கூடிய பிரச்சினைகளுக்கு அனுமதி அளிக்கிறேன். மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்பெஷல் மென்ஷன் என்று குறிப்பிட அனுமதிப்பது உங்கள் உரிமையேதவிர உறுப்பினருடைய உரிமையல்ல. Exclusive right of the Hon. Speaker. அதுதான் பாராளுமன்றத்திலே இருக்கிறது. சட்ட மன்றங்களிலும் இருக்கிறது. ஆகவே, உங்கள் முடிவுதான் இறுதி முடிவு. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள். முக்கியமான பிரச்சினைகளுக்கு நான் வாய்ப்பு அளித்திருக்கிறேன். இதை இந்த நேரத்திலே எழுப்பக் கூடாது, (குறுக்கீடு) அரசு உறுதி மொழிக் குழு அறிக்கையை அளித்தல் (குறுக்கீடு) உட்காருங்கள். டாக்டர் குமாரதாஸ், உட்காருங்கள். நேற்றே நீங்கள் முறை தவறி நடந்திருக்கிறீர்கள். எந்த விதியில் எழுந்திருக்கிறீர்கள் ? (குறுக்கீடு). உட்காருங்கள் (குறுக்கீடு) என்னுடைய அறையிலே இதை எல்லாம் கேட்க வேண்டும். இங்கே பேச முடியாது. (குறுக்கீடுகள்) இப்போது நீங்கள் 3 பேரும் செய்வதைப் பார்த்தால், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இங்கே அறிக்கை அளித்ததைத் தடுக்கும் நோக்கத்தோடுதான் செய்ததாகத் தெரிகிறது. (குறுக்கீடுகள்) பிறகு என்ன? இப்போது நீங்கள் 3 பேரும் எழுந்து நின்று கொண்டிருப்பது முறையல்ல. (குறுக்கீடு) என்னுடைய அறைக்கு வாருங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றை தலைவர் அவர்கள் விளக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் மானியக் கோரிக்கை விவாதம் நடக்கிறது. அன்றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களே கூட உங்களிடம் ஒரு கருத்தைக் கூறி, ஒரு மணிக்காவது பதிலுரை அளிக்க வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். தினந்தோறும் 3-00 மணி வரை ஆகிறது. கடைசி





யில் இரண்டரை மணியிலிருந்து மூன்று மணிவரை அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. இங்கே கேட்கப்படுகிற கேள்விகளுக்கு முழுமையான பதில்களைக் கொண்டு வந்து, அதற்கு தயாராக வந்தாலும் கூட, அவைகளைச் சொல்ல முடியாத நிலைமை ஏற்படுகிறது. இதுதான் அதற்குக் காரணம். எனவே இப்படி முக்கியமான நேரத்தை, அதுவும் 'ஜீரோ அவர்'க்குப் பின்னாலே, இப்படி காலத்தை வீணடிப்பது மிகவும் வேதனைக்குரிய ஒன்றாக இருக்கிறது. நீங்கள் திட்டமிட்டபடி இங்கே அமைகின்ற நிகழ்ச்சிகளை முறையாக நடத்த முடியாமல் தடை ஏற்படுகிறது. எனவே அமைச்சராக நாங்கள் இருக்கின்ற காரணத்தால் முழுமையாக பதில்களை சொல்ல முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே இப்போது உங்களால் எங்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அமைச்சர்களாக இருப்பதால் நாங்கள் சொல்ல முடியாத இடத்தில் இருக்கிற காரணத்தால் இந்தப் பாதுகாப்பைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு எந்தப் பொருளும் இல்லாமல் எந்தவிதமான விதிமுறைகளுக்கும் உட்பட்டு நடக்காமல் நம்முடைய அஜென்டாவில் இருக்கிற நிகழ்ச்சிகளுக்குப் போனபிறகு, இப்படி நின்றுகொண்டு இருப்பது (குறுக்கீடு) அவையின் நேரத்தை வீணடிக்கிற முயற்சியாகத்தான் இருக்கிறது. வேறு ஒன்றுமில்லை. அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அளித்தல். திரு. இரா. நடேசன், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர், (குறுக்கீடுகள்)

திரு. இரா. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(திரு. வே. தம்புசாமி, திரு. ஜி. பழனிசாமி ஆகியோர் வெளிநடப்புச் செய்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இரா. நடேசன், கொஞ்சம் இருங்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் திரு. பழனிசாமி அவர்களும் திரு. தம்புசாமி அவர்களும் எழுப்பிய பிரச்சினைகளைப் பற்றி தாங்கள் தீர்ப்பளித்து விட்டீர்கள். முறைப்படி நடக்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறீர்கள். இந்தப் பிரச்சினையை எடுக்க முடியாது என்றும் சொல்லவில்லை. பிரச்சினையை எடுக்க நான் ஆயத்தமாக இருக்கிறேன். ஆனால் அதற்கான பதில் அரசாங்கத்திடம்

இருந்து வந்துவிடுமேயானால் எடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறீர்கள். இதற்கெல்லாம் மேலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அதற்கான குறிப்புகள் இல்லாத நேரத்தில் பதில் சொல்ல முடியவில்லை என்றும், எந்தவொரு பிரச்சினை எழுப்பப்பட்டாலும் பதில் சொல்ல முடியவில்லையென்றால் அது நாட்டிலே பல குழப்பங்களுக்கும் பல உண்மைக்கு மாறான நிலைமைகளுக்கும்தான் இடம் தரும். எனவே பதில் தருகிற சூழ்நிலையில் எழுப்புவதுதான் நல்லது. அவர்கள் எழுப்புவதற்கும் முழு உரிமை இருக்கிறது. பதில் சொல்லி, இருக்கின்ற உண்மையான நிலைமையை வெளிக்காட்டுவதற்கும் அப்போதுதான் வாய்ப்பும் ஏற்படும். அந்த நிலைமையில்தான் அடுத்து கூடுகின்ற நாளில் இந்தப் பிரச்சினையை எழுப்புவார்களேயானால் பதில் சொல்கிறேன் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியதற்குப் பிறகும், தொடர்ந்து இந்த மாதிரி செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே வெளிநடந்தே தீரவேண்டுமென்று முதலிலேயே முடிவு செய்துவிட்டு இங்கே வந்துவிட்டதன் காரணமாகத்தான் (சிரிப்பு) எப்படியாவது அப்படிப்பட்ட சூழ்நிலையை உருவாக்கலாமா என்று முயன்று முயன்று பார்த்து அதிலே தோற்று, சரி, முடிவையாவது நிறைவேற்றுவோம் என்ற நிலைமைக்கு அவர்கள் வந்திருக்கிறார்கள் என்ற முடிவுக்குத்தான் வர வேண்டியிருக்கிறது. (குறுக்கீடு)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> டாக்டர் குமாரதாஸ், வேண்டாம். உட்காருங்கள். நீங்கள் நாள்தோறும் இப்படிச் செய்வதாக இருந்தால் நானும் ஒரு தெளிவான முடிவை இந்த அவைக்கு அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அவையில் மிகப் பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்டிருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்கே, காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்களுக்கோ, நான் அவர்களுடைய எண்ணிக்கைக்குத் தக்கபடி வாய்ப்பு அளிக்க முடியாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு உறுப்பினர் கொண்டிருக்கிற எல்லா கட்சிகளுக்கும், அதில் இருக்கிற உறுப்பினர்கள் பெறமுடியாத வாய்ப்பை உங்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறேன். அந்த வாய்ப்பே, இந்த அவை ஜனநாயகத்திற்குக் கொடுக்கிற மிக அதிகபட்ச மரியாதையைக் கொடுக்க வேண்டுமென்ற வகையிலே எடுத்த முடிவாகும். எனவே அந்தப் பெருந்தன்மையையும் நீங்கள் சீர்குலைக்க வேண்டுமென்று கருதினால் இப்படி நேரத்தை வீணாக்குகிற முயற்சியில் ஈடுபடலாம். திரு. இரா. நடேசன்.

<u>திரு. ஆர். சிங்காரம்:</u> இன்று முதல் மாற்றி விடுங்கள் அதை





## 4. அறிக்கைகள் அளித்தல்—தொடர்ச்சி

### (ஆ) அரசு உறுதிமொழிக் குழு.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. இரா. நடேசன்.

<u>திரு. இரா. நடேசன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991—92 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் (பத்தாவது சட்டமன்றப் பேரவை) ஐந்தாவது அறிக்கையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 11.00

## 5. அரசினர் தீர்மானங்கள்.

### (அ) இல்லஸ்ட்ரேடட் வீக்லி ஆஃப் இந்தியா மீதான உரிமைக் குழு அறிக்கை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அரசினர் தீர்மானங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"8—4—1992 ஆம் நாளன்று பேரவைக்கு அளிக்கப் பெற்ற 'இல்லஸ்ட்ரேடட் வீக்லி ஆஃப் இந்தியா' மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கை பேரவை விதி 229 (ஆ)-ன் கீழ் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

எனக் கோருகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

[1992 ஏப்ரல் 10

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" இல்லஸ்ட்ரேடட் வீக்லி ஆஃப் இந்தியா ' மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளை சட்டமன்றப் பேரவையின் விதி 229 (ஈ)-ன்படி இப்பேரவை இசைந்து ஏற்றுக்கொள்ள வேண்டும். " எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்த இந்த தீர்மானம் நிறைவேறியதையொட்டி அடுத்து I will take necessary steps to summon Thiru. Anil Dharkar, Editor and Publisher of 'Illustrated Weekly of India' and Thiru K. P. Sunil, the then columnist, to the Bar of this House to carry out the sentence pronounced upon them by the House. இதற்கான மொழி பெயர்ப்பையும் பேரவைக்கு அறிவித்துக் கொள்கிறேன்.

பேரவை முன்னவர் அவர்கள் ' இல்லஸ்ட்ரேடட் வீக்லி ஆஃப் இந்தியா ' பற்றி உரிமை மீறல் பிரச்சினையின் மீது பேரவைக்கு உரிமைக் குழு அளித்த அந்தப் பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க பேரவை ஏற்றுக்கொண்டதைத் தொடர்ந்து நான் அந்த 'இல்லஸ்ட்ரேடட் வீக்லி ஆஃப் இந்தியா' என்னும் பத்திரிகையின் ஆசிரியரும், வெளியீட்டாளருமான அனில் தார்கர் என்பவரையும் அந்தப் பத்திரிகையில் அந்த குறிப்பிட்ட கட்டுரையை எழுதிய கட்டுரையாளர் திரு. கே. பி. சுனில் என்பவரையும் இந்த அவையில் கூண்டுக்கு ஆஜராகுமாறு 'சம்மன்' செய்து இங்கே அந்த கூண்டிலே ஏற்றிவிட்டு, பேரவை வழங்கிய தண்டனையை நிறைவேற்றுவேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). அதற்குரிய கூண்டு தயாரிக்கப்பட்டு வருகிறது. அந்தக் குறிப்பிட்ட நாளில் இங்கே கொண்டு வந்து அது நிறுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)



1992 ஏப்ரல் 10]

(ஆ) மதிப்பீட்டுக் குழு — உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்பீட்டுக் குழுவிற்கு பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 195-வது விதியின்கீழ், 1992-93ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும் "

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(இ) பொதுக் கணக்குக் குழு—உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுக் கணக்குக் குழுவிற்குப் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 203-வது விதியின் கீழ், 1992-93 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும். "

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

[1992 ஏப்ரல் 10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(ஈ) பொது நிறுவனங்கள் குழு—உறுப்பினர்கள் தேர்ந் தெடுததல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது நிறுவனங்கள் குழுவிற்குப் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

முற்பகல் 11-05

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 211-வது விதியின் கீழ் 1992-93-ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி 16 உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிடும் நாள் அன்று இப் பேரவை தேர்ந்தெடுக்கும்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.



1992 ஏப்ரல் 10]

(உ) உரிமைக்குழு—உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமைக் குழுவிற்கு 14 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 227-வது விதியின் கீழ் 1992-93 ஆம் ஆண்டிற்கு, நிதியாண்டிற்காக உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி 14 உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிடும் நாள் அன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

6. அறிவிப்பு.

குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஒற்றை வாக்குமுறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ் மதிப்பீட்டுக் குழு ( Committee on Estimates), பொதுக் கணக்குக் குழு (Committee on Public Accounts), பொது நிறுவனங்கள் குழு (Committee on Public Untertakirgs), உரிமைக் குழு (Committee on Privileges) ஆகியவற்றிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள் வேட்புத் தாளை 1992 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள், 20 ஆம் நாள், திங்கட்கிழமை பிற்பகல் மூன்று மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத்

[பேரவைத் தலைவர்] [1992 ஏப்ரல் 10

தாளைச் செயலரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். வேட்புத்தாள்கள் 1992 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறும். விலகிகொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 1992 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22 ஆம் நாள், புதன்கிழமை பிற்பகல் மூன்று மணிக்குள் விலகிக்கொள்ளலாம். நியமனம் செய்யப்படும் வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கப் படும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

## 7. மானியக் கோரிக்கைகள், 1992–93, விவாதமும் வாக்கெடுப்பும்—(தொடர்ச்சி)

### கோரிக்கை எண் 30—சமூக நலன்.

மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண். 30—சமூக நலன். மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" சமூக நலன் குறித்த மூலதனச் செலவு பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் 403,76,70,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் " எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2047. திரு. பி. வி. இராஜேந்திரன்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ' உடல் ஊனமுற்ற அனைவருக்கும் மருத்துவமனை செல்ல, அலுவலகங்கள் செல்ல, இலவச பஸ் பாஸ் வசதி செய்திட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

" சமூக நலன் பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 403,76,70,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 2026. டாக்டர் தே. குமாரதாஸ்.



1992 ஏப்ரல் 10]

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ' கொள்கை பற்றி ' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

" சமூக நலன் பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 403,76,70,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும் ".

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 2037. திரு. ஜி. பழனிசாமி. இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத்திற்கான கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அவைமுன் வைக்கப்பட்டுள்ளன. @ அதில் தமிழில் உள்ள குறிப்பை நான் அவைமுன் படித்ததாக ஏற்றுக்கொண்டு, அவைக் குறிப்பில் பதிய வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் கொள்கை விளக்கக் குறிப்பின் மீது மேலான ஆலோசனைகளை எடுத்துரைக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். உறுப்பினர்களின் விவாதத்திற்குப் பிறகு என் பதிலுரையை அளிக்க விழைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992–93 ஆம் ஆண்டில் சமூக நலன் மானிய விவாதத்திலே எனது கருத்துக்களை எடுத்து இயம்ப நல் வாய்ப்பு நல்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு முதற்கண் என் நெஞ்சார்ந்த நன்றிகளை காணிக்கையாக்குகின்றேன். 'தனி ஒருவனுக்கு உணவு இல்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம் ' என்று பாடினான் பாரதி. தேசிய கவிஞரின் கருத்தினுக்கு செயல் வடிவம் கொடுக்கும் முகத்தான், படிக்கும் மாணவச் செல்வங்கள் வயிறார உண்டு கல்வி கற்கட்டும் என்று எண்ணி, மதிய உணவுத் திட்டத்தை மதியுடனே படிக்காத மேதை கர்ம வீரர் காமராஜர் கண்டெடுத்தார்கள்.

@347—411ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.

[திரு. சி. ஞானசேகரன்] [1992 ஏப்ரல் 10

முற்பகல் 11-10

இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி முழு செயல்வடிவம் கொடுத்து, சத்துணவுத் திட்டம் என்ற பெயரால், இந்தியாவில் எந்த பகுதியிலும், ஏன் அகில உலகத்தின் எந்தப் பகுதியிலும் நடத்த முடியாத, நடைபெறாத உன்னதமான திட்டத்தை, தமிழகத்தில் செயல்படுத்தி சத்துணவு தந்த சரித்திர நாயகனாக விளங்கினார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அரியணையில் அமர்ந்து, தமிழகத்தின் மூலை முடுக்குகளிலும் சத்துணவு தந்து ஆட்சி செய்தபோது, குழந்தைகளை படிப்பதற்கு பள்ளிக்கு அனுப்பினால் அவர்களை எச்சில் தட்டை ஏந்த வைத்து விட்டாரே எம்.ஜி.ஆர். என்று ஏளனம் பேசிய கருணையே இல்லாத முதல்வர் எல்லாம், அவர்கள் தப்பித் தவறி அரசியல் விபத்தால் ஆட்சிக்கு வந்தபோது, ஓட்டுகள் பறிபோகுமோ என்று அஞ்சி, ஓட்டின் மீது கண்ணை வைத்து, முட்டை போட்டு சத்துணவுத் திட்டம் விரிவுபடுத்தப்படும் என்று அறிவித்தார்கள். அந்த முன்னாள் முதல்வரின் தவறான அணுகுமுறையின் காரணமாக தமிழகத்தில் வரலாறு காணாத வகையில் கோழிகள் அரை முட்டைகள் போட்டன. எனவே, சத்துணவு மையங்களில் குழந்தைகளுக்கு அரை முட்டைகள் வழங்கப்பட்டன. அரை முட்டை போட்டு, தமிழக மக்களை எல்லாம் மொட்டையடிக்க வந்த முடிசூடா மன்னனுக்கு, முடியில்லா மன்னனுக்கு நன்றி மறவாத தமிழக மக்கள் தேர்தல் முடிவில் முழு முட்டை போட்டார்கள். நிதி நெருக்கடியின் காரணமாக முதல்வர் சாராயக் கடைகளைத் திறந்து விடுவார், சத்துணவுத் திட்டத்தை கை விடுவார் என்றெண்ணி, அதிலே அரசியல் ஆதாயம் தேடலாம் என்று ஏங்கி தவித்தவர்கள், வாயிலே மண்ணைப் போட்டு, கொள்கைகளை விலைபேசி குழித்தோண்டி புதைக்கும் வர்க்கம் நாங்கள் அல்ல என்பதை நிலைநாட்டி, கொள்கை என்றால் முதல்வர், முதல்வர் என்றால் கொள்கை என்ற வகையில், சத்துணவுத் திட்டத்திற்கு நடப்பாண்டில் 235.94 கோடி ரூபாயையும், வரும் ஆண்டில் 256.32 கோடி ரூபாயையும், சோதனை காலத்திலும் ஒதுக்கி திட்டமிட்டிருக்கும் சாதனைச் செல்விக்கு உளங்கனிந்த பாராட்டுகளை காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன்.

விலைவாசியைக் கருத்திற்கொண்டு சத்துணவு, அங்கன்வாடி, ஊட்டச் சத்து பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 150 ரூபாய்க்கு மேலே ஊதியம் பெறுவோருக்கு மாதம் 20 ரூபாயும், ரூபாய் 150-க்கு கீழ் பெறுவோருக்கு ரூபாய் 10-ம் சம்பள உயர்வு தந்து, சத்துணவுத் திட்டத்திற்கு மெருகூட்டியிருக்கும் பாரதி கண்ட புதுமைப் பெண், பாரதிதாசன் கண்ட நவீன பெண், புரட்சித் தலைவர் தன் ஒரே வாரிசு என்று அடையாளம் காட்டிச் சென்ற புரட்சிப் பெண்ணாம் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு சத்துணவு பணியாளர்கள் கூட்டமைப்பின் மாநில சட்ட ஆலோசகர் என்ற வகையில் என் நன்றி மலர்களை சமர்ப்பணம் செய்கிறேன். சத்துணவு திட்டத்தையும், சமுக நலத் திட்டத்தையும் சாமர்த்தியமாக செயல்படுத்தும் மாண்புமிகு சமூக நல அமைச்சர் அவர்களுக்கும் என் மனமார்ந்த பாராட்டுகளை உரித்தாக்குகிறேன்.



1992 ஏப்ரல் 10] [திரு. சி. ஞானசேகரன்]

பாராட்டுகிற அதே வேளையில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் ஒரு அன்பான வேண்டுகோளை வைப்பது என் தலையாய கடமையாகும்.

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்."

என்று செப்பியுள்ளார் வள்ளுவப் பெருந்தகை. எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் உண்மையான தோழர்கள் நாங்கள். நிறைகளைப் பாராட்டத் தெரியாத, குறையையே தீராத தாகத்தோடு தேடி அலையும் வறட்டு வேதாந்திகள் அல்ல நாங்கள். பெண்ணுரிமை, பெண்ணுரிமை என்று வாய் கிழிய பேசிவிட்டு, பெண் நாடாள வந்தபோது வயிறு எரிந்து, பித்து பிடித்து அலையும் எத்தர்கள் அல்ல நாங்கள்.

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு."

என்ற வள்ளுவரின் வாக்கின்படி நட்புக்கு இலக்கணமாக விளங்கும் எங்களுடைய யோசனையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிச்சயமாக செவிமடுப்பார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு நிறைய உண்டு.

பட்டப் படிப்பு படித்த பெண்டிரும், ஆடவரும் கடந்த 10 ஆண்டுகளாக ரூபாய் 210 மாத சம்பளத்தில் சத்துணவு அமைப்பாளர்களாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். பலர் 210 ரூபாய் சம்பளத்தில் ஊட்டச்சத்து, அங்கன்வாடி அமைப்பாளர்களாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். விலைவாசியை கருத்திற்கொண்டு அந்தப் பணியாளர்களுக்கு மாதா மாதம் 20 ரூபாய் என்றும், 10 ரூபாய் என்றும் சம்பளத்தை உயர்த்தி இருக்கிறீர்கள். விஷம்போல் ஏறிவரும், விண்ணை எட்டிப்பிடிக்கும் விலைவாசி விஸ்வரூபம் எடுத்து நம்மை மிரட்டிக் கொண்டிருக்கிறது. 20 ரூபாய், 10 ரூபாய் சம்பள உயர்வு ஒரு வேளை டிபனுக்கு கூட போதாது. ஒரு ஜாக்கெட் அல்லது சட்டை தைக்க டெய்லர் கூலிக்கு கூட

போதாது என்பது நாம் அறிந்த உண்மை. கிராமப்புற நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள் தினம் 14 ரூபாய் கூலி பெறும் வண்ணம் புதிய உறுதியான வேலை வாய்ப்புத் திட்டத்தை இந்த பட்ஜெட்டில் அறிவித்து புரட்சிதனை படைத்து இருக்கிறீர்கள். அந்த தினக்கூலி தொழிலாளி கட்டிய கோவணத்தோடும், கிழிந்த சேலையோடும் வேலைக்கு சென்று ரூபாய் 420 மாதா மாதம் பெற வழிகோலியுள்ள முதல்வர் 10 ஆண்டுகளுக்கு மேலாக சத்துணவுத் திட்டத்தில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிற, மாதா மாதம் 210 ரூபாய் மட்டும் சம்பளமாகப் பெறுகிற, வறுமையின் சின்னங்களாக, தியாக தீபங்களாக விளங்கிக் கொண்டிருக்கிற அந்த சத்துணவு அமைப்பாளர்களை சற்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

முற்பகல் 11-15

வாரத்திற்கு ஒருநாள் ஞாயிற்றுக்கிழமைகளிலே சத்துணவு போடுவதைத் தாங்கள் நிறுத்தினால், 50 கோடிக்கு மேலே உங்களுடைய அரசுக்கு பணம் மிச்சமாகும். ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை முதல்வர் அவர்கள் அடிக்கலாம். ஞாயிற்றுக்கிழமைகளிலே சத்துணவு, ஊட்டச் சத்து, அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு விடுமுறையும் விடலாம். அதனால் மிச்சமாகும் பணத்தை வைத்து அந்தப் பணியாளர்களுக்கு குறைந்தது மாதம் ரூ. 500 சம்பளமாகக் கொடுக்கலாம். பாம்பின் கால் பாம்பு அறியும் என்பார்கள். மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும், ரூ. 240 சம்பளத்தை முழுமையாக செலவிட்டாலும் கூட, ஒரு நல்ல புடவையைக் கூட வாங்க முடியாது என்று. அவர்களுக்கு வீட்டு வாடகை குறைந்தது மாதம் ரூ. 100, பள்ளிக்குச் சென்று வர பஸ் கட்டணம் ரூ. 60, சோப்பு, சீப்பு, எண்ணெய், பவுடர், ஸ்டிக்கர் பொட்டு, ரப்பர் பேண்ட், என்று கணக்கு போட்டால், சிக்கனத்தின் மன்னனாக, சிக்கனத்தின் சின்னமாக விளங்குகிற மாண்புமிகு நாவலரே பட்ஜெட் போட்டால் கூட, பற்றாக்குறை பட்ஜெட்டைத்தான் போட முடியும். இந்நிலை சத்துணவுப் பணியாளர்களின் தலைவிதியாக இன்று இருந்து கொண்டு இருக்கிறது.

சத்துணவுப் பணியாளர்கள் என்ற குழந்தைகள், பசி, பசி என்று அழுது துடித்துக் கொண்டு இருக்கின்றன. கருணையின் வடிவமாக விளங்கும், ஏழை எளியவர்களுடைய நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குகின்ற தாய் உள்ளம் கொண்ட முதல்வர் அவர்கள், தாயாக இருந்து, நொடிந்து போன அந்தக் குழந்தைகளை ரட்சிக்கவேண்டும். எவ்வளவுதான் நிதி நெருக்கடி இருப்பினும், எப்படி தாய், தன் குழந்தைகளை, அவர்களுடைய பசியைப் போக்க, முனைவாளோ அவ்வண்ணமே, தாங்களும், தண்ணீரில் மிதக்கும், கண்ணீரில் மிதந்து



கொண்டு இருக்கிற அந்தச் சத்துணவுப் பணியாளர்கள் என்னும் குழந்தைகளை எப்படியாவது, எப்பாடு பட்டாவது, காப்பாற்றுங்கள். பல கோடி போட்டு சத்துணவு திட்டம் என்னும் யானையை வாங்கியுள்ளீர்கள். நேற்றுகூட மாண்புமிகு உறுப்பினர் ராசாராமன் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க நிஜ யானையை வாங்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களே, உத்தரவு போட்ட வீராங்கனை நீங்கள். யானையை வாங்கத் துணிந்த தங்களுக்கு அதை வழி நடத்தும் பாகர்களுக்குத் தேவையான அங்குசத்தை வாங்குவது ஒரு பெரிய காரியம் அல்ல. அங்குசமாக விளங்கும் சத்துணவுப் பணியாளர்களின் சம்பளத்தை இந்த மாதம் முதலே குறைந்தது அமைப்பாளர்களுக்கு 500 ரூபாய் என்று பரிவோடு தாருங்கள். அவர்களை முழு நேர அரசு ஊழியர்கள் என்று முத்திரை குத்துங்கள். காலை 8-30 மணி முதல் மாலை 4-15 மணி வரையில் நாளும், முழுநேரமும் உழைக்கும் அங்கன்வாடி, ஊட்டச்சத்துப் பணியாளர்களை பகுதி நேர ஊழியர்கள் என்று கூறுவது வேதனையான ஒன்று. பெண் உரிமைக்கு முதலிடம் தருவது இவ்வரசு என்பது கண்கூடு. பெண் நாடாளும்போது கூட, லட்சக்கணக்கிலே சத்துணவிலே வேலை செய்யும் பெண்கள், நியாயம் பெறவில்லை என்று சொன்னால், வேறு எப்போதுதான் அவர்கள் பெறப்போகிறார்கள்? நீதியும் நியாயமும் இன்றே வெல்லட்டும். இப்பணியாளர்களை நிரந்தர அரசுப் பணியாளர்களாக மாற்றி உத்தரவு வழங்குவது மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தலையாய கடமையாகும். மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் நிச்சயமாக இதைச் செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

தமிழகத்திலே சுமார் 4 ஆயிரம் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அப்பள்ளிகளில் பணியாற்றும் சத்துணவு அமைப்பாளர்களுக்கு கோடை விடுமுறையிலே சம்பளம் வழங்கப்படுவதில்லை. அவர்களுக்கு கிடைப்பது மிக மிகக் குறைந்த சம்பளம். அதுகூட இல்லாமல் 1½ மாதம் அவர்கள் வாடுவது கொடுமையிலும் கொடுமை. அவர்களுக்கு சம்பளம் வழங்க நீங்கள் என்னதான் கணக்குப் போட்டாலும் 20 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் தான் ஆகிறது. பரிதாபத்தோடு மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களும், அவர்களுக்கு கோடை விடுமுறையிலே சம்பளம் வழங்க உத்தரவுகளைப் பிறப்பியுங்கள்.

சத்துணவு, அங்கன்வாடி, ஊட்டச் சத்துத் திட்டத்திலே பணிபுரிகின்ற பணியாளர்களுக்கு மாதத்திற்கு 2 நாட்களுக்கு விடுமுறை அளிக்கப்படுகின்றது. அதைப் பணியாளர்கள் அந்த

[திரு. சி. ஞானசேகரன்] [1992 ஏப்ரல் 10

மாதத்திலே பயன்படுத்தவில்லை என்றால் அது பயன் அற்றுப் போகிறது. அடுத்த மாதத்திலே அந்த விடுமுறையை அவர்கள் எடுக்க முடியாது. இந்த முறையை மாற்றி, வருடத்திற்கு 24 நாட்கள் எப்போதாவது, அவர்கள் விரும்புகிற வண்ணம், விடு முறையை எடுக்கலாம் என்ற உத்தரவை நீங்கள் தயவு செய்து பிறப்பியுங்கள்.

இரண்டு நாட்களுக்கு முன்னால்கூட, மத்திய அரசு, ஊழியர் களுக்கு டி. ஏ. அறிவித்திருக்கிறது. மாநில அரசும், தன்னுடைய அரசு ஊழியர்களுக்கு டி. ஏ. வழங்க இருக்கிறார்கள். அதே போல், சத்துணவு, அங்கன்வாடி, ஊட்டச் சத்துப் பணியாளர் களுக்கும், வருடா வருடம் டி. ஏ. வழங்குவதற்கு தயவுசெய்து உத்தரவினைப் பிறப்பியுங்கள்.

1984 ஆம் ஆண்டு முதல், ஒரு மாணவனுக்கு விறகுக்கு 5 காசு, காய்கறிக்கு 5 காசு, தாளிப்புக்குச் செலவுக்கு 3 காசு என்று 13 காசை மானியமாகக் கொடுக்கிறீர்கள். அதிலே உப்பை நீங்களே சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக வழங்கு வதால் அரை பைசாவைப் பிடித்துக் கொள்கிறீர்கள். எனவே, ஒரு மாணவனுக்கு 12½ பைசாவை வழங்குகிறீர்கள். இன் றைய விலைவாசியில் 12½ பைசாவிலே என்ன வாங்க முடியும் என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். 5 காசு விறகு மானியத்திலே, அவர்கள் முட்டையையும் வேகவைக்க வேண்டும். 5 காசு மானியத்தில் ஒரு சுண்டைக்காய் கூட வராது என்பது நாம் அறிந்த உண்மை. இந்த 12½ காசு மானி யத்தை தயவு செய்து, நீங்கள் 30 காசாகவோ, அல்லது 50 காசாகவோ மாற்றுங்கள். 'உப்பில்லாப் பண்டம் குப்பையிலே' என்பார்கள். அரை பைசா உப்பை நீங்கள் ஒரு மாணவனுக்கு வழங்குவது இப்போது போதவில்லை. உப்பு இல்லை என்றால், சுவை இல்லை என்று சொல்லி, மாணவர்கள் அதைச் சாப் பிட மறுக்கிறார்கள். எனவே, பல மையங்களிலே அமைப்பா ளர்கள் தங்கள் சொந்தச் செலவிலே உப்பை வாங்கிப் போட நேரிடுகிறது. ஒரு பைசா உப்பையாவது ஒரு மாணவனுக்குத் தாருங்கள். விற்கின்ற விலைவாசியில் ரூபாய் இருக்கிற இடமே தெரியவில்லை. நீங்கள் பைசா கணக்குப் போட்டால் சத்துணவுத் திட்டம் அவ்வாறே இங்கே சத்தியமாக இருக்காது என்றே சொல்லலாம். எனவே நீங்கள் தயவுசெய்து இந்த மானியத்தை 50 பைசாவாக மாற்றுவதற்கு இன்றே உத்தரவு பிறப்பிக்க வேண்டு மென்று அன்போடு வேண்டுகிறேன்.

முற்பகல் 11-20.

சத்துணவுப் பணியாளர்களுக்கு சம்பளம் மிகக் குறைவு என்ப தாலே அவர்கள் பள்ளிக்குச் சென்று வர 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு, மாணவர்களுக்கு, உடல் ஊனமுற்றோருக்கு எல்



1992 ஏப்ரல் 10] [திரு. சி. ஞானசேகரன்]

லாம் வழங்குவதைப் போல இலவச பஸ் பாசை தயவு செய்து வழங்குங்கள். ஆண்டு ஒன்றுக்கு 5 தரமான வேட்டியையும் அல்லது டெரிகாட்டன் பேண்டையும், நல்ல ஷிப்பான் போன்ற சேலைகளையும் நீங்கள் அவர்களுக்கு வழங்குவதற்கான உத்தர வுகளை பிறப்பியுங்கள். அங்கன்வாடி ஊட்டச் சத்து மையங் களுக்கு இலவசமாகத் தந்தால்கூட, குழந்தைகள் தானாக வராத காரணத்தாலே ஆயாக்கள் குழந்தைகளைத் தேடி அலைந்து அவர்களைப் பிடித்து வருகிறார்கள். பெற்றோர் களுக்கு குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பும் ஆர்வம் இல்லை. இதைப் போக்க அங்கன்வாடி ஊட்டச் சத்து மையத்திலே படிக்கும் குழந்தைகளுக்கு முதல் வகுப்பிலே முன்னுரிமை அளிக் கப்படும் என்று நீங்கள் உத்தரவைப் பிறப்பித்தால், அவர்கள் இந்தச் சத்துணவு மையங்களிலே, ஊட்டச் சத்துக் கூடங்களில் பிள்ளைகளை அவர்களாகவே கொண்டு வந்து சேர்ப்பார்கள். அவர்களுக்கு ஊக்கமும் வரும். தற்போதுள்ள சத்துணவு மையங் களின் மாணவர்களின் எண்ணிக்கையிலே வேலை நாட்களில் 25 சதவீதமும், விடுமுறை நாட்களில் 50 சதவீதமும் குறைக்க வேண்டுமென்று பல இடங்களில் அரசு அதிகாரிகள் ஆணை பிறப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். இதை தயவுசெய்து மாண்புமிகு சத்துணவு அமைச்சர் அவர்கள் உடனடியாக நிறுத்த வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த சத்துணவுப் பணியாளர்கள் இறப்பார்களேயானால், அவர்களின் குடும்பங்களுக்கு குடும்ப நல நிதி வழங்குவதற்காக மாதாமாதம் பணத்தை சம்பளத்திலேயிருந்து பிடிக்க வேண்டும். ஆனால் சில மாவட்டங்களில் பணமே பிடிக்கப்படுவது இல்லை. சில மாவட்டங்களிலே இறந்தால்கூட, இன்னும் பணம் வந்தபாடில்லை. ஆகவே தமிழ்நாடு முழுமைக்கும் ஒரு 'யூனிபார்ம் பாலிஸி'யை நீங்கள் வகுத்து தமிழகம் முழுவதிலும் நீங்கள் சத்துணவுப் பணியாளர்களிடமிருந்து பணம் பிடித்தம் செய்து, யாராவது இறந்தால், உடனடியாக அவர்களுக்கு பணம் வழங்குவதற்காக நீங்கள் உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென்று நான் உங்களை மெத்த பணிவன்போடு வேண்டிக் கொள்கிறேன்.

அங்கன்வாடி மையங்களிலே குழந்தைகளை தூங்க வைக்க வேண்டியிருக்கிறது. பல மையங்களிலே பாய்கள்கூட வழங்கப் படவில்லை. பழைய பாய்கள் கிழிந்து போய் ரொம்ப நாட்க ளாகிவிட்டன. தரை கூட சமமாக இல்லை. சிமெண்ட் தரை இல்லாமல் குழிப் பள்ளத்திலே, பாவம், மண்ணிலே அந்தக் குழந்தைகள் படுக்கும் அவலநிலைமை இருக்கிறது. இதைத் தவிர்க்க அரசு ஆவன செய்யவேண்டும்.

குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைக்கு ஆள் பிடிக்க வில்லை என்று சொன்னால், உடனடியாக பல பி.டி.ஓ.க்கள் இன்று அதைக் குற்றச் சாட்டாக வைத்தும், சில இடங்களில்

வேறு பல குற்றச்சாட்டுகளைப் புனைந்தும், இந்த ஆள் பிடிக்காதவர்களை எல்லாம் இன்றைக்கு 'சஸ்பெண்டு' செய்துகொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திலே சொல்கிறபோது அதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். ஆனால் மாண்புமிகு சத்துணவுத் துறை அமைச்சருடைய உத்தரவுகள் சில பி.டி.ஓ.க்கள் காதுகளிலே ஏறவில்லை. அங்கன்வாடிகளிலேகூட குடும்பக் கட்டுப்பாட்டிற்கு ஆள் பிடிக்கவில்லை என்ற காரணத்தைச் சொல்லியே 'சஸ்பெண்டு' செய்திருக்கிறார்கள். இதை நீங்கள் தவிர்க்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவு அங்கன்வாடி, ஊட்டச் சத்து அமைப்பாளர்களை முழு நேர ஆசிரியர்களாக நீங்கள் பதவி உயர்வு அறிவித்து, அவர்களுடைய வாழ்விலே முதல்வர் அவர்கள் ஒளியேற்றவேண்டும். இருண்ட அவர்களது வாழ்விலே ஒளி விளக்காய் நீங்கள் திகழவேண்டும்.

உடல் ஊனமுற்றோருக்கு 20 வயது வரை இலவச பஸ் பாஸ் என்று அறிவித்திருக்கிறீர்கள். பாவம், அந்த உடல் ஊனமுற்றோருக்கு நீங்கள் வயது வரம்பின்றி அவர்கள் எந்த வயதினராலும் இந்த இலவச பஸ் பாஸோடு பயணத்தை மேற்கொள்ளலாம் என்று தயவு செய்து அறிவியுங்கள்.

சத்துணவுத் திட்டத்திலே ஒரு மாணவனுக்கு ஒரு கிராம் எண்ணெயை நீங்கள் உயர்த்தியிருக்கிறீர்கள். அதாவது இப்போது அவர்கள் பெறுவது 2 கிராம். தாராள மனதோடு இன்று சமூகநலத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு கிராம் எண்ணெயைக் கூட்டியிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த மாமன்றத்தின் சார்பாகவும், அதே போன்று சத்துணவுப் பணியாளர்களின் சார்பாகவும் நான் நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு சத்துணவுத் துறை அமைச்சர் அவர்கள் பெண்ணாக இருக்கின்ற காரணத்தினாலேயும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் பெண்ணாக இருக்கின்ற காரணத்தினாலேயும், நிச்சயமாக இன்றைக்கு லட்சக்கணக்கிலே வேலை செய்து கொண்டிருக்கிற அந்தச் சத்துணவுக்கூட பெண்மணிகளுடைய குறையை அறிந்து, அவர்களின் பணியை நிரந்தரமாக்குவதற்காக நீங்கள் தயவுசெய்து முயற்சிகளை எடுக்கவேண்டும். சர்வீஸ் கமிஷன் மூலமாக வருடத்திற்கு ஆயிரம் பேரை எடுப்பதாக பல கூட்டங்களிலேயும் மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அறிவித்திருக்கிறார்கள். ஆனால் அதற்கான வழிமுறைகளை இந்த



சர்வீஸ் கமிஷனிலே ஏற்படுத்தவில்லை என்று அறிகிறேன். ஆகவே எப்படியாவது மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்கள் படிப்படியாக இன்றைக்கு சத்துணவுக்காக தங்களை அர்ப்பணித்துக்கொண்டிருக்கிற அந்த படித்த, பட்டம் பெற்ற பெண்கள், ஆடவர்களை சர்வீஸ் கமிஷன் மூலமாவது அவர்களை பர்மனென்ட் செய்ய முயற்சி எடுங்கள், அல்லது வேறு வகையிலேயாவது உங்களை நம்பி 10 ஆண்டுக்காலமாக நம்பி வாழ்ந்துகொண்டிருக்கிற அந்த சத்துணவுப் பணியாளர்களின் வீட்டில் எல்லாம் நிச்சயமாக ஒளி தீபம் எரியவேண்டும். அவர்களும் பிழைக்கவேண்டும். இன்றைக்கு கூலிக்கு போனால்கூட, சாதாரண கூலித் தொழிலாளர்கள் கூட ரூ. 15 கூலியாக வாங்குகிறார்கள். ஆனால் அதைவிட இன்று மோசமான நிலைமையில் இருக்கிறார்கள். 210 ரூபாய் என்பதை 230 ரூபாயாக மட்டும் உயர்த்தி தந்திருக்கிறார்கள். அது மாதத்திற்கு சத்தியமாக போதாது. ஆகவே எப்படியாவது குறைந்தபட்சம் 500 ரூபாய் சத்துணவுப் பணியாளர்களுக்கு பெற்றே தீருமாறு இந்த மாதம் முதல் நீங்கள் உத்தரவு பிறப்பித்து அவர்களை ரட்சிக்க வேண்டும் என்று சொல்லி, இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி அமைகிறேன். ஜெய் ஹிந்த்.

முற்பகல் 11-25

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. ஆர். டி. அரங்கநாதன்.

<u>திரு. ஆர். டி. அரங்கநாதன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட மானியக் கோரிக்கைமீது பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றியை செலுத்தி இந்த மாமன்றத்திலே என்னைப்போல சாதாரண சாமானியன் எல்லாம் இங்கே பேசுவதற்கு வாய்ப்பினை உருவாக்கித் தந்த என்னுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பாதங்களை வணங்கி இங்கே பேச விழைகிறேன். தமிழ் நாட்டினுடைய முதல்வராக இன்று கொலுவீற்றிருக்கும் பொன்மனத்தலைவி டாக்டர் புரட்சித் தலைவியின் கருணையால் தமிழ்நாட்டில் வாழும் லட்சோப லட்சம் ஏழை எளிய தாய்மார்கள் கண்ணீரை துடைக்கும் திட்டங்கள் இந்த மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளன. இவற்றில் குறிப்பாக ஒருங்கிணைந்த மகளிர் வளர்ச்சித் திட்டங்களும் ஏழை விதவைகளின் மகள் திருமணத்திற்கு நிதி உதவித் திட்டங்களும் 8 ஆம் வகுப்பு வரை படித்த ஏழைப் பெண்களுக்கு திருமண நிதி உதவித் திட்டங்களும், வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள பெண்களுக்கு மகப்பேறு உதவித் திட்டங்களும் போன்ற

[திரு. ஆர். டி. அரங்கநாதன்] [1992 ஏப்ரல் 10

அதோடு கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட மகளிருக்கான உதவித் திட்டங்களும் போன்ற பல்வேறு திட்டங்களை இந்த கடும் நிதிநெருக்கடியிலும் தீட்டிய, தாய் உள்ளம் கொண்ட தர்மதேவதை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த பாராட்டுகளை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். எந்த நாடு, எந்த தேசம் மகளிரை மதிக்க வில்லையோ அந்த நாடு, அந்த தேசம் என்றும் உயர்ந்த நாடாக ஆனது இல்லை, எதிர்காலத்திலும் ஆகப்போவ தில்லை என்ற சுவாமி விவேகானந்தர் அவர்களின் வாக்கைப் போல, இன்றைக்கு தமிழ்நாட்டில் தாய் உள்ளம் கொண்டு ஆட்சி செலுத்தும் நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை ஒரு பெண் என்றும் பாராது கொடுமைப் படுத்திய கொலை மதியாளர்களின் கதி இன்று என்ன என்பதை நாடு அறியும், நாமும் அறிவோம்.

எட்டும் அறிவினில் ஆணுக்கு இங்கே பெண் இளைப்பில்லை காண் என்று கும்மியடி என்ற பாரதியின் ஆனந்தக் கூத்திற்கு ஏற்ப பெண்களை ஆண்களுக்கு சமமாகவும் துணிச்சலாகவும் வாழ வைக்க பெண்களுக்கு வளர்ச்சித் திட்டங்களை அமல் படுத்தி, பெண்கள் மனத்தை பெண்களே அறிவர் என்ற நீதிக்கு ஏற்ப ஏழைத் தாய்மார்களின் மற்றும் மகளிரின் குறைகளை அறிந்து அவர்களுக்கு அரிய பல திட்டங்களை வழங்கிக் கொண்டிருக்கும் எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு ஒரு பணிவான வேண்டுகோளை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். ரூபாய் ஆயிரம் கோடி செலவில் கரும்புச் சக்கையிலிருந்து காகிதம் தயாரிக்கும் பெரும் தொழிற்சாலை ஒன்று தென்னாற்காடு மாவட்டத்திலே ஆரம்பிக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது தொகுதி மக்கள் சார்பாக வும் என் நெஞ்சார்ந்த நன்றியை இந்த நேரத்திலே தெரிவித் துக் கொண்டு மேலும் அந்த காகிதத் தொழிற்சாலையை தென் னாற்காடு மாவட்டத்திலே மிகவும் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப் பட்ட மக்கள் அதிகம் வசிக்கிற என்னுடைய விருத்தாசலம் தொகுதியில் அமைத்துக் கொடுக்கும்படி பணிவுடன் வேண்டு கிறேன். ஏனென்றால் விருத்தாசலத்தில் ஏற்கெனவே கடந்த 30 ஆண்டுகளாக இயங்கி வந்த டேசல் செராமிக் தொழிற்சாலை மூடப்பட்டு இருப்பதால் அந்த தொழிற்சாலையில் பணி புரிந்த சுமார் ஆயிரம் தொழிலாளர்களின் குடும்பங்கள் மிகவும் துயரமான சூழ்நிலையில் வாழ்ந்து வருகிறார்கள் ஏழைகளின் துயரைத் துடைக்க, ஏழை மக்களை கண்ணை இமை காப்பது போல் காக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் விருத்தாசலத்திலே அந்த காகித தொழிற்சாலையை அமைத்துக் கொடுத்து அதில் பெண்களுக்கு அதிக வேலை



1992 ஏப்ரல் 10] [திரு. ஆர். டி. ரெங்கநாதன்]

வாய்ப்பு ஒதுக்கீடு தந்து ஏழை மற்றும் நடுத்தர தாய்மார் களின் வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்ய வேண்டும் என்று பணிவுடன் வணங்கிக் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-30

வயிற்றிற்கு சோறிட வேண்டும் இங்கு வாழும் உயிர்களுக்கு எல்லாம், என்ற மகாகவியின் கனவை நினைவாக்கிய பசிப்பிணி மருத்துவர், மறைந்தும் மறையாது மக்கள் மனம் தனில் வீற்றிருக்கும் டாக்டர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். பெயரால் இயங்கிக் கொண்டிருக்கும் இந்த சத்துணவுத் திட்டத்தை சிறந்த முறையில் நிறைவேற்றிக் கொண்டிருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத் திற்கு இந்த நேரத்திலே ஒரு வேண்டுகோளை வைக்கிறேன். சத்துணவு உண்ணும் லட்சோப லட்சம் ஏழைக் குழந்தை களுக்கு பண்டிகைக் காலங்களில் மற்றும் சிறப்பான நாட் களில் இனிப்புடன் கூடிய சத்துணவு வழங்கப்பட்டுக் கொண் டிருக்கிறது. அதை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் ஒவ்வொரு பிறந்தநாள் அன்றும் இனிப் புடன் கூடிய சத்துணவு வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக் கொண்டு அதற்கான அறிவிப்பை மாண்புமிகு சத்துணவு அமைச்சர் அவர்கள் வெளியிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் எனது விருத்தாசலம் தொகுதியில் சத்துணவுக் கட்டி டங்கள் பல சொந்தக் கட்டிடங்கள் இன்றி கூரை கொட்ட கைகளில் இயங்கி வருகின்றன. கடந்த புயல் வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட சத்துணவுக் கூடங்கள் சில இன்னும் சீரமைக் கப்படாமல் உள்ளன. குழந்தைகள் நலன் கருதி சத்துணவுக் கூடங்களை சீரமைத்து குழந்தைகள் வந்து சத்துணவு உண்ணு வதற்கு வழிவகை செய்கின்ற வகையில் மாண்புமிகு முதல்வர் அவர்களும், சத்துணவு அமைச்சர் அவர்களும் விரைவாக அந்த சத்துணவுக் கூடங்களுக்கு கட்டிடங்களை உருவாக்கித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட ஆதனூர், கம்மாபுரம், தர்மநல்லூர், குளப்பாக்கம், அரசுமொழி போன்ற இன்னும் பல்வேறு கிராமங்களில் சத்துணவு பொறுப்பாளர்கள் இன்னும் நியமிக்கப்படாமல் உள்ள நிலையில் அந்த சத்துணவுக் கூடங்களுடைய செயல்பாடு சற்று தொய்வு அடைந்த நிலையில் இருக்கின்ற நிலையை மாற்றியமைக்க உடனடியாக அந்த கிராமங்களுக்கு சத்துணவு பொறுப்பாளர்களை நியமித்து சத்துணவுத் திட்டம் சிறப்படைவதற்கு வாய்ப் பினை உருவாக்கித் தரும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களை இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். ஏற்றமிகு எதிர்காலத்தை நிர்ணயிக்கும் இளம் தலைமுறை, பின்னை பசியற்ற, பிணியற்ற வளம் மிக்க தலைமுறை

[திரு. ஆர். டி. ரெங்கநாதன்] [1992 ஏப்ரல் 10

பிள்ளையாக வளர்க்க அல்லும் பகலும் அரும்பாடு பட்டுக்
கொண்டிருக்கும் நம்முடைய இதய தெய்வம் புரட்சித்
தலைவி அவர்கள் ஊனம் உற்றோர் வாழ்வில் ஊக்கமும்
ஆக்கமும் தரவும், செவித்திறன், பார்வைத் திறன் மற்றும் பேசு
திறன் அற்றோர் வாழ்வில் ஒளி பெறவும்
சீரிய பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி, எங்களையும்
வழி நடத்திச் செல்ல அவர்களுக்கு நோய் நொடியற்ற நீண்ட
ஆயுளைக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே இறை
வனை வேண்டி கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்திலே
இந்த மண்ணிலே இதய தெய்வம் புரட்சித் தலைவர்
அவர்களால் கொண்டுவரப்பட்ட சத்துணவுத் திட்டம் இருக்
கின்ற வரையிலே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சி
இன்னும் இந்த மண்ணிலே நீடிக்கும் என்று சொல்லி, நம்முடைய
புரட்சித் தலைவி அவர்கள் இருக்கின்ற வரையில் எத்தர்களு
டைய ஆட்சி மீண்டும் வராது என்பதைத் தெரிவித்து. இந்த
சத்துணவுத் திட்டத்தை சிறப்போடு மேன்மைப் படுத்தி, இன்
னும் பல்வேறு வழிகளிலே இந்த சத்துணவுத் திட்டத்தை
சிறப்படையச் செய்து இந்த சத்துணவுத் திட்டம் வளர்ச்சி
அடைவதற்கும், வளம் பெறுவதற்கும் மாண்புமிகு இதய
தெய்வம் புரட்சித் தலைவி அவர்களும், மாண்புமிகு அமைச்சர்
அவர்களும் வாய்ப்பினை உருவாக்கித்தர வேண்டும் என்று
இந்த நேரத்திலே கேட்டு வாய்ப்பினைத் தந்த பேரவைத்
தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.
நன்றி. வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. செ. கு. தமிழரசன்.

<u>திரு. செ. கு. தமிழரசன் :</u> பேரவைத் தலைவர் அவர்
களே, மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களால்
கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த நிதிக்கோரிக்கையின் பேரிலே
இந்திய குடியரசுக் கட்சியின் சார்பிலே பேசுவதற்கு
வாய்ப்பு தந்த உங்களுக்கு முதலிலே என்னுடைய நன்றியைத்
தெரிவித்துக் கொள்கிறேன். சமுதாய நலன் ஒரு இன்றியமை
யாத துறை. அதிலும் ஏராளமான ஜாதிகளும், மதங்களும்,
மொழிகளும், சுரண்டல் முறைகளும், அடிமை முறைகளும்
மலிந்து கிடக்கின்ற நம்முடைய இந்திய துணைக் கண்டத்திலே
இது மிக மிக இன்றியமையாத துறை ஆகும். எனவே தான்
இந்தத் துறைக்கு 404 கோடி ரூபாய்க்கு மேலே நாம் ஒதுக்கிக்
கொண்டிருக்கிறோம். சமுதாயம் என்று சொன்னாலே அதிலே
பெரும் பங்கு வகிப்பவர்கள் பெண்கள் தான். ஒரு மனிதன்
கருவிலே உருவாவதிலிருந்து அவன், உருவாகிப் போகின்ற
வரையிலும் அன்னையாக, மனைவியாக, சகோதரியாக
எல்லா விதங்களிலும், வாழ்வின் இன்றியமையாத துணை
களாக இருந்து கொண்டிருக்கின்ற பெண்கள் சமுதாயத்தினு



1992 ஏப்ரல் 10] [திரு. [செ. கு. தமிழரசன்]

டைய கண்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. ஆனா
லும் கூட வரலாறு தொடர்ந்து அவர்களைப் புறக்கணித்துக்
கொண்டே வருகிறது. நாம் வரலாற்றைச் சொல்கின்றபோது
கூட ஹிஸ்டரி என்று சொல்லுகிறோமே தவிர ஹெர்டரி என்று
சொல்வதில்லை. எனவே அங்கேயே பெண்கள் புறக்கணிக்கப்
படுகின்ற அந்த புறக்கணிப்பு தொடங்கிவிடுகிறது. ஒரு காலத்
திலே இந்தச் சமுதாயத்தை உருவாக்கியவர்களே பெண்கள்
தான். தாய்வழி சமுதாயமாக இருந்த இந்தச் சமுதாயம்
தந்தை வழிச் சமுதாயமாக மாறியது இருக்கிறதே அதற்கு
அடிப்படைக் காரணம் சொத்துரிமை தான். ஃபெடரிக் ஏஞ்
சல்ஸ் ஒரு மிகப் பெரிய சமூக அறிஞர். அவர், பேமலி,
ப்ராபர்ட்டி அண்டு ஃபார்மேஷன் ஆப் தி கவர்ன்மெண்ட் என்
கிற ஒப்புயர்வற்ற அந்த நூலிலே, தாய் வழிச் சமுதாயம்,
தந்தை வழிச் சமுதாயமாக இன்றைக்கு மாறி தந்தையி
னுடைய இனிசியலை நாம் போட்டுக்கொள்கிற விதத்தில்
இந்த தந்தை வழிச் சமுதாயமாக மாறியதற்கு அடிப்படைக்
காரணம் சொத்து உரிமை தான் என்பதை மிகத் தெளிவாக
விளக்கியிருக்கிறார்கள். எனவே தான் சமுதாயத்திலே பெண்
களுக்கு ஆண்களைப் போல எல்லாவிதமான சொத்து உரி
மைகளையும் வழங்கவேண்டுமென்ற கோரிக்கையை நாம்
தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். அந்த சட்டம் வெறும்
சட்டமாக இருக்கிறதே ஒழிய செயல்பாட்டில் முழுமையாக
இல்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

முற்பகல் 11-35

இந்தச் சட்டத்தைக் கொண்டுவரவேண்டும் என்பதற்
காகவே இந்திய துணைக் கண்டத்தினுடைய முதல் அரசியல்
சட்ட அமைச்சராக விளங்கிய, அன்றைக்கு முதல் சமூக
நலத்துறை அமைச்சராக விளங்கிய பாபா சாகிப் அம்பேத்
கார் அவர்கள் தன்னுடைய அமைச்சர் பதவியைக் கூட ராஜி
னாமா செய்தார்கள். பெண்களுக்கு சொத்து உரிமை வழங்க
வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி அவர் தன்னுடைய
அமைச்சர் பதவியைக் கூட ராஜினாமா செய்தார்கள். ஆனால்
இன்றைக்கும் கூட இந்த சொத்து உரிமை விஷயத்தில் பெண்கள்
தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகிறார்கள். எனவே
சொத்து உரிமை பெண்களுக்கு சமமாக அளிக்கப்பட
வேண்டும் என்று சட்டம் கடுமையாக ஆக்கப்பட வேண்டும்
என்று வலியுறுத்த விரும்புகிறேன்.

இன்றைக்கு நம்முடைய தமிழகத்தில் உலகத்திற்கே
ஒரு எடுத்துக்காட்டாக பெண்ணின் பெருமையை வலியுறுத்து
கிறவராக நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழக

[திரு. செ, கு. தமிழரசன்] [1992 ஏப்ரல் 10

முதலமைச்சராக இருந்து கொண்டு, ஏராளமான பெண்கள்
நலத் திட்டங்களை அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.
ஒவ்வொரு நாளும் புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டு,
செயற்படுத்தப்பட்டு வருகின்றன. பெண் குழந்தைகள் ஏழைக்
குடும்பத்தில் பிறந்தால் அவர்களின் எதிர்காலத்தை முன்
னிட்டு அந்த எதிர்காலத்தை கருத்தில் கொண்டு அவர்
களுக்கு வைப்புத் தொகையாக 2,000 ரூபாய் தரப்படுகிற
திட்டம் இருக்கிறதே, இது பாராட்டுக்குரிய திட்டம்.

அதேபோல் தொடர்ந்து வரலாற்றில் விபச்சாரத்தில்
ஈடுபடுகிறவர்களுக்கு பெண்களுக்கு மட்டுமே தண்டனை
என்ற ஒரு வஞ்சனை இருந்தது. கவிஞர் கண்ணதாசன்
கூட மிக அழகாக தன்னுடைய பாடலில் குறிப்பிட்டிருக்
கிறார், வண்டு வந்து தேன் குடித்தால் மலருக்குத் தண்
டனை, வழுக்கி விழும் பெண்களுக்கு சட்டத்திலும் வஞ்
சனை என்று. அந்தநிலைமையை மாற்றி உலகம் முழுவதும் இத்
தகைய ஒரு ஓரவஞ்சனை நிலைமை இருந்ததை மாற்றி இன்
றைக்கு தமிழகத்தில் விபச்சாரத்தில் ஈடுபடுகிறவர்கள் பெண்
களாக இருந்தாலும் சரி, ஆண்களாக இருந்தாலும் சரி, யாராக
இருந்தாலும் சரி பெண்களுக்கு கொடுப்பது போலவே ஆண்
களுக்கும் கடுமையான தண்டனை விதிக்கப்படும் என்ற சட்டத்
திருத்தம் விரைவில் செயற்படுத்த இருக்கிறோம் என்று மாண்பு
மிகு புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள்.
இது ஒரு சிறந்த மறுமலர்ச்சித் திட்டம்.

அதேபோல் பெண்கள் மட்டுமே வேண்டும் என்பதற்காக
பெண்களுக்காகவே காவல் நிலையம்; பெண்களுக்காகவே ஒரு
கூட்டுறவு நூற்பாலை, இப்படி பல முயற்சிகளை நம்முடைய
முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு நடை
முறைப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். இவைகளையெல்லாம்
நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் இந்த நேரத்
தில் வேறு ஒன்றை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கலப்புத் திருமணம் செய்கிறவர்களுக்கு குறைந்தபட்சம்
நாம் ஒரு 10 விழுக்காடாவது கல்வியில், வேலை வாய்ப்புகளில்
இட ஒதுக்கீடு தரவேண்டும். நாம் சாதிகள் அற்ற சமுதாயத்தை
உருவாக்க வேண்டுமாயின் கலப்புத் திருமணத்தை ஊக்குவிக்க
வேண்டும், செஞ்சீனத்தில் மாவோ, இன்றைக்கு ஓரளவுக்கு
சாதிகளை ஒழித்து இருக்கிறார்கள் என்று சொன்னால்
மாவோவினுடைய கல்சுரல் ரெவலூஷன் என்று சொல்லப்படு
கிற கலாச்சாரப் புரட்சி அங்கே செயற்படுத்தப்பட்டு சீனாவில்
திருமணம் என்றால் அது கலப்புத் திருமணமாகத்தான் இருக்க
வேண்டும். அதை மட்டுமே அந்த அரசு அங்கீகாரம் செய்யும்
என்கிற ஒரு நிலைமையை அங்கே கடுமையாக்கி அதன் மூலம்



1992 ஏப்ரல் 10] [திரு, செ. கு. தமிழரசன்]

அங்கே ஓரளவுக்கு சமத்துவ சமுதாயத்தை அவர்கள் நிர்ணயித்து
இருக்கிறார்கள். நாம் அந்த அளவுக்கு இங்கே கடுமையாக
செயற்படுத்த முடியாது, திருமணம் என்றால் அது கலப்புத்
திருமணமாகத்தான் இருக்க வேண்டும் என்று நாம் இங்கே
வலியுறுத்த முடியாது. இது ஒரு சனநாயக நாடு. இருந்தாலும்
கூட ஓரளவுக்கு நாம் சமத்துவ வாழ்க்கையை, சமத்துவ
சமுதாயத்தை உருவாக்குவதற்கு இந்த் கலப்புத் திருமணத்தை
ஊக்குவித்து அவர்களுக்கு எல்லாவிதங்களிலும் ஒரு 10 சதவீத
இட ஒதுக்கீடு தந்து அவர்களை நாம் உற்சாகப்படுத்த வேண்டு
மென்று இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஏன் என்றால் இன்றைக்கு கலப்புத் திருமணம் செய்கிறவர்
கள் அவர்கள் ஒரு தனி சாதியாக வந்துவிடுகிறார்கள். அதிலே
தாயின் வழி சாதியாகவும் அமைவது இல்லை; தந்தையின்
வழி சாதியாகவும் அமைவது இல்லை. ஆக இரண்டு சாதி
யாலும் புறக்கணிக்கப்பட்டு அவர்களுடைய குழந்தை நாளைக்கு
திருமணம் செய்து கொள்வதற்கு என்ன ஆகுமோ என்ற ஒரு
ஏக்கம் வந்து அது ஒரு தனி சாதியாக வளர்ந்து விடுகிற நிலைமை
இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட அந்த
அச்சத்தாலும். பயத்தாலும் இருக்கின்ற அவர்களை மீட்க
வேண்டுமானால் அவர்களுக்கு உதவியாக கல்வி, வேலை
வாய்ப்புகளில் இட ஒதுக்கீடு தருவதன் மூலம்தான் அந்த
உற்சாகத்தை நாம் உருவாக்க முடியும். எனவே இதை நான்
சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பெண் என்றாலே இன்றைக்கு அலங்கார பொம்மைகளாக
இருந்து கொண்டிருக்கிற ஒரு அவல நிலைமை இருந்து கொண்
டிருக்கிறது. அலுவலகங்கள் ஆனாலும், எந்த வியாபார
நிலையங்கள் ஆனாலும் காட்சிப் பொருட்களாக, அலங்கார
பொம்மைகளாக நாம் பெண்களைத்தான் பயன்படுத்திக்
கொள்கிறோம். பிளேடு விளம்பரமானாலும் சரி; பீடி விளம்பர
மானாலும் சரி அந்த விளம்பரங்களின் மாடலாக இருப்பது
பெண்கள்தான். இப்படிப்பட்ட விளம்பரங்களுக்கு மாடலாக
இருப்பது பெண்களாகத்தான் இருக்க முடியும். பெண்களுக்கும்,
பீடிக்கும், பிளேடுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? ஆகவே,
அவர்கள் ஒரு அலங்காரப் பொருளாக, காட்சிப் பொருளாக,
இன்றைக்கு, ஏதோ ஒரு 500 ரூபாய் கொடுத்தால், ரிசப்ஷனிலே
இருந்து கொண்டு பணியாற்றக்கூடிய, அப்படிப்பட்ட ஒரு
நிலைமையும் இருந்து கொண்டு இருக்கிறது. இதற்கு ஒரு
வரையறையைக் கொண்டு வரவேண்டும், 7 மணிக்கு மேலே
அலுவலகத்திலே பெண்கள் வேலை செய்யக் கூடாது. அவர்
களுக்கெல்லாம் ஒரு வரையறைப்படி இப்படித்தான் இருக்க
வேண்டும் என்கிற ஒரு வரையறையை நம்முடைய சமூக நலத்
துறை கொண்டு வர வேண்டும். ரொம்ப எக்ஸ்ப்ளாய்டேஷன்,

சுரண்டல் முறை என்கிறோமே அது ரொம்ப அதிகமாக இன்றைக்கு இருக்கிறது. அதை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-40

மிகச் சிறப்பான சத்துணவுத் திட்டத்தை . (மணியடிக்கப் பெற்றது) இரண்டு நிமிடங்களில் முடித்து விடுகிறேன். மிகச் சிறப்பான சத்துணவுத் திட்டத்தை இன்றைக்கு இந்த நாட்டுக்கு எடுத்துக்காட்டுகிற ஒரு சிறப்பான திட்டமாக விளங்குகிற வண்ணம் நம்முடைய அரசு ஒரு முன்மாதிரியாக இதில் செயலாற்றி வருகிறது. " தனி ஒருவனுக்கு உணவில்லை என்றால் இந்த ஜெகத்தினை அழித்து விடுவோம் " என்றார் பாரதியார்.

" இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான் ".

ஒருவன் பிச்சையெடுத்து வாழ்கிற நிலைமை இருக்குமேயானால் உலகத்தை படைத்ததாகச் சொல்லப்படுகிற அந்த இறைவனையே அழித்து விடுவோம் என்றெல்லாம் பசிக்கொடுமையை எதிர்த்து அன்றைக்கு புலவர்கள் பாடினார்கள். அந்தப் பசிக் கொடுமையை இன்றைக்கு ஒழித்திடும் வண்ணம் இந்தச் சத்துணவுத் திட்டத்தை மிகச் சிறப்பாக நம்முடைய அரசு செயல்படுத்தி வருகிறது. ஆனால் கொஞ்ச காலமாக அதற்கு ஏதோ ஒரு சீலிங் வைத்து விட்டதைப்போல கிராமங்களிலே பேசுகிறார்கள். 50 பேருக்கு மேலே சேர்க்கக் கூடாது. அப்படி ஒரு சீலிங் இருப்பதைப்போல, ஒரு வரையறை இருப்பதைப் போல, அதற்கு மேலே சேர்க்கக் கூடாது என்கிற ஒரு நிலைமை உருவாக்கினால், ஒப்புயர்வற்ற இந்த திட்டத்தை அறிமுகப்படுத்தினோமே, அதற்கு அர்த்தம் இல்லாமல் போய் விடும். எனவே, அப்படிப்பட்ட ஒரு சீலிங் முறை ஏதேனும் இருந்தால் அதை நீக்கிவிட வேண்டும் என்று நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

கிராமப்புறங்களில் பெண்கள் படிக்கின்ற சதவீதம் இருக்கிறதே அது கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து கொண்டே வருகிறது. ஒரு ஆண் படித்தால் ஒரு வேலைக்கு உத்தரவாதம் கிடைக்கும். ஆனால் ஒரு பெண் படித்தால் அது ஒரு தலைமுறைக்கே, வழி காட்டுதலாக இருக்கும். அடுத்த சமுதாயத்தை உருவாக்குகிற பெரும் பங்கு ஒரு பெண்ணுக்குத்தான் இருக்கிறது. அது ஒரு தலைமுறைக்கே பலன் அளிக்கும். எனவே, கிராமப்புறங்களிலே இன்றைக்குப் பெண்கள் கல்வியினுடைய





சதவீதம் குறைந்து கொண்டிருக்கிறது. ஆகவே, கிராமப்புற பெண்கள் கல்விக்கு ஒரு முக்கிய இடம் தந்து, அதை நீங்கள் செயலாக்க வேண்டுமென்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இலவச மிதியடிகள் தருகின்ற திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அது ஒரு மிகப் பெரிய ஒப்புயர்வற்ற திட்டம். கிராமப் புறங்களிலே தாழ்த்தப்பட்ட மக்கள், செருப்பு அணியக்கூட முடியாத ஒரு நிலைமை இருந்தது. அதை மாற்றி அரசே செருப்பு தருகிற, இலவசமாகத் தருகிற அந்தத் திட்டத்தை புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்தார்கள். ஆனால் அதிலே ஒரு தொய்வு இருக்கிறது. இன்றைக்கு அது அந்த அளவிற்கு வழங்கப்படவில்லை. எனவே, அதைத் தீவிரப்படுத்தி கிராமப்புறங்களிலே இலவச மிதியடிகள் தருகிற அந்தத் திட்டத்தை. மேலும் அதிகப்படியாக செயல்படுத்திட நீங்கள் முனைய வேண்டும். அதன்மூலம் ஒரு சமுதாயத்திற்கு தொழில் தருகிற நல்ல ஒரு காரியத்தை நாம் செய்கிறோம். எனவே, அதற்கும் நீங்கள் யோசிக்க வேண்டுமென்று நான் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல, வீட்டு வேலைகளுக்குப் பயன்படுத்தப்படுகிற பெண்கள் இருக்கிறார்களே, அதற்கு சின்ன சின்ன குழந்தைகளையெல்லாம் பயன்படுத்துகிறார்கள். நம்முடைய தொழிலாளர் நல திட்டத்திலே, சின்ன குழந்தைகளையெல்லாம் கடுமையான பணிகளுக்குப் பயன்படுத்தக்கூடாது என்று இருக்கிறது. ஆனால் பல வீடுகளிலே 8 வயது குழந்தைகளையோ அல்லது 10 வயது குழந்தைகளையோதான் வீட்டு வேலைகளுக்கு பயன்படுத்துகிறார்கள். இதனால் அவர்களுடைய படிப்பும் போகிறது. இப்படிப்பட்ட ஒரு முறைகேடான, எக்ஸ்பிளாய்டேஷன், சுரண்டல் முறை நடக்கிறது. எனவே, இவர்களையெல்லாம் வீட்டு வேலைக்குப் பயன்படுத்துவதை, ஒரு பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்துதான் வீட்டு வேலைகளுக்கே ஆட்களை வைத்துக் கொள்ளவேண்டும், என்கிற நிலைமையைக் கொண்டுவந்து, அவர்களை ஒரு அலுவலகத்திலே பதிவு செய்தால் வீட்டு வேலைகளுக்கு வைத்துக் கொள்ளலாம் என்ற நிலைமையைக் கொண்டு வரவேண்டும். இப்படிப்பட்ட குழந்தைகள் பல வீடுகளிலே மர்மமான முறையிலே இறந்துவிடுகின்றன. பெண் குழந்தைகளைத்தான் அதிகமாக வேலைகளுக்குப் பயன்படுத்துகிறார்கள். அவைகள் மர்மமாக இறந்து போகின்றன. வேறு பிரச்சினைகளும் வருகின்றன. தூக்கி எறிகிறார்கள். இந்த நிலைமைகளை எல்லாம் தவிர்க்க வேண்டும். அவர்களைப் பதிவு செய்த பிறகுதான் வீட்டு வேலைகளுக்கே

பயன்படுத்த வேண்டும். பத்திரிக்கைகளைப் புரட்டினால்,
வேலைக்காரிகள் என்றாலே அவர்களைக் கேவலப்படுத்துவதைப்
போன்ற கார்ட்டூன்கள் எல்லாம் வந்திருக்கும். வேலைக்காரி
களை வைத்துத்தான் கார்ட்டூன்களே இருக்கும். இது ஒரு
சமுதாயத்தை இழிவு படுத்துகின்ற நிலைமை. எனவே,
வீட்டு வேலைகளை செய்கின்ற குழந்தைகளை பதிவு செய்
கின்ற ஒரு முறையைக் கொண்டுவர வேண்டுமென்று நான்
சொல்ல விரும்புகிறேன். (மணியடிக்கப் பெற்றது) சீக்கிரம்
முடித்து விடுகிறேன். ஒரே ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.
சமூக நலன் என்றாலே இதிலே நிறைய சொல்வதற்கு இருந்
தாலும்கூட, சீக்கிரம் முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விரைவில் முடிப்பதுதான் இந்த சமூகத்திற்கு நலம்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சீக்கிரம் முடித்து விடுகிறேன்.

சுற்றுப்புறத் தூய்மை இருக்கிறதே, இதை நாம் வலியுறுத்த
வேண்டுமானாலும், கிராமப்புறத்திலே இருக்கிற பெண்களிடத்
திலே அவைகளையெல்லாம் நாம் பரப்பவேண்டும். இன்றைக்கு
நிலைமை என்னவென்றால், ஒரு கதைகூட சொன்
னார்கள். மகளிர் மன்றங்கள் எல்லாம் நிறைய இருக்கின்றன.
ஒரு மகளிர் மன்றத்தினுடைய, ஒரு சொசைட்டி வுமன் அங்கே
இருக்கிற கிராமப் பெண்களையெல்லாம் அழைத்து, எப்படி
சுத்தமாக இருப்பது ; எப்படி ஒழுக்கமாக இருப்பது ; எப்படி
துவைப்பது ; எப்படி வீட்டை அழகாக வைத்துக் கொள்வது
என்று ஒரு அரை மணி நேரம் சொல்லிய பின்னாலே, அங்கே
யிருந்து ஒரு வேலைக்காரி சொன்னாள். இதையெல்லாம்
நீங்கள் சொல்கிறீர்கள், ஆனால் உங்கள் வீட்டிலே செய்வது
நான்தான் என்று. ஆகவே, இந்த வேலைகளைச் செய்கின்ற
வேலைக்காரிகள் இருக்கிறார்களே அவர்களுக்கு போதிய
வசதியும், வாய்ப்பும் நாம் உருவாக்கித் தருவோமேயானால்
நலமாக இருக்கும். அவர்கள் இந்த வேலைகளைச் செய்து
கொண்டு இருக்கிறார்களேயொழிய, அவர்களுடைய பகுதி
களான இடங்கள், இன்னமும் நான் இழிவாகச் சொல்கிற
குப்பங்களாக, களங்களாக, ஸ்லம்களாக, ஒதுக்குப்புறங்களாக
இருந்துக்கொண்டிருக்கின்றன. எனவே, நாம் பிராக்டிக
லாக, யதார்த்த பூர்வமாக இதை அணுகி, இதை நாம் ஒரு
புதிய அணுகுமுறையோடு அணுகி, அவர்களுக்கு மன்றங்களை
ஏற்படுத்தி, அங்கே அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து
தந்து, அவர்கள் குடியிருக்கின்ற அந்தப் பகுதிகளில் சுற்றுப்புறத்
தூய்மையை உருவாக்க வேண்டுமென்று நான் சொல்ல விரும்பு
கிறேன்.





முற்பகல் 11-45

சமூக நலத் துறையிலே ஏராளமாக, 400 கோடிக்கு மேலே நாம் ஒதுக்கி, பல நலத் திட்டங்களைச் செய்கிறோம். ஆனாலும்கூட, சமூக நலத் துறை நேரடியாக இதைச் செய்ய வில்லை. எஜென்சி மூலமாகத் தருகிறார்கள். பி.டி.ஓ. விடம் தருகிறார்கள்; சில விஷயங்களிலே தாசில்தாரிடம் தருகிறார்கள். ஓய்வூதியமா, தாசில்தாரிடம் போக வேண்டும். வேறு ஏதாவது, மூவலூர் இராமாமிர்தம் திட்டமா, அதற்குப் பி. டி. ஓ. விடம் போக வேண்டும். ஆகவே ஏஜென்சி முறையிலே இருக்கிறது. ஏஜென்சி முறை என்றாலே, அண்ணா அவர்கள் குறிப்பிட்டதைப் போல, இந்த நலத் திட்டம் என்பது இருக்கிறதே, அது ஒரு ஐஸ்கட்டி. அது கை மாறி மாறிப் போகும்பொழுது அது எப்படிப் போகும் என்று அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். ஏஜென்சியிடம் நாம் தருகிறபொழுது கடைசியிலே போய்ச் சேர்வதற்கு முன்னாலே அதிலே முறைகேடுகள், அதிலே தவறான விஷயங்கள் எல்லாம் வந்து விடுகின்றன. எனவே, நேரடியாகச் சமூக நலத் துறையே நேரடி நிர்வாகத்தின்கீழ் இவைகளையெல்லாம் வழங்க வேண்டுமென்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த நல்ல துறை, இந்தத் துறை செயல்படுவதன் மூலம் தான் நாம் மறுமலர்ச்சிக்கு வித்திட முடியும். எனவே இந்தச் சிறப்பான துறையைக் குறிப்பாக ஒரு பெண்ணினத்தின் பிரதிநிதியிடமே புரட்சித் தலைவி அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். இந்தத் துறை சிறப்பாக அமைய இந்த மானியக் கோரிக்கைகளை நான் வரவேற்று அமைகின்றேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி ஜெ. லோகாம்பாள்.

திருமதி ஜெ. லோகாம்பாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கம். எனக்கு இந்த சமூக நலத் துறை மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி.

தமிழ் நாட்டிலே மகளிர் மன்றங்கள் சமூக நலத் துறை மூலமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் மகளிர் மன்றங்களின் கன்வீனர்களுக்கு வேண்டிய பயிற்சியும் வழிகாட்டுதலும் இல்லாமல் சரியாக இயங்க முடியாமலிருக்கின்றன. எனவே, அவர்களுக்குப் பயிற்சி மையங்கள் அமைத்துப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். மகளிர் மன்ற உறுப்பினர்களுக்கு ஊக்கத் தொகையை உடனடியாக உயர்த்த வேண்டும். வட்டார வளர்ச்சி வட்டத்தில் உள்ள வளர்ச்சித் திட்டங்களை

[திருமதி ஜெ. லோகாம்பாள்] [1992 ஏப்ரல் 10

கிராம சேவிகாக்கள், முக்கிய சேவிகாக்கள், பால்வாடிகள் பணியினை இந்த மகளிர் மன்றங்கள் பார்வையிடச் செய்து மேம்படுத்த வேண்டும். கிராமத்தில் உள்ள எந்த ஒரு பெண்களுக்கான, முதியோருக்கான வளர்ச்சித் திட்டங்களையும் இந்த மகளிர் மன்றங்கள் கண்காணிக்க அரசு உத்திரவிட வேண்டும்.

கணவனால் கைவிடப்பட்ட விதவைகளுக்கு அரசு அளிக்கும் உதவி, மானியம் சரியாகப் போய்ச் சேருவதில்லை. இதை நிவர்த்தி செய்ய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எட்டாவது வகுப்பு வரை படித்த ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவித் தொகை சரியாக வழங்கப்படவில்லை. மிகுந்த தாமதமாக வழங்கப்படுகிறது. திருமணம் உரிய தேதியில் நடைபெறும் வகையில் இந்தத் திருமண உதவித் தொகையை வழங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சத்துணவுத் திட்டத்தில் வேலை செய்கிறவர்கள் குடும்ப நலத் திட்டத்திற்கு ஆள் பிடித்து வரவில்லை என்று மரியாதைக் குறைவாக நடத்தப்படுகிறார்கள். இதை நிவர்த்தி செய்ய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். சத்துணவில் வேலை செய்கிறவர்களுக்கு ஊதியத்தை மேலும் உயர்த்த வேண்டும்.

ஒவ்வொரு மகளிர் மன்றத்திற்கும் ஒரு குழந்தைகள் காப்பகம் ஏற்படுத்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தற்போதுள்ள விலைவாசியில் குடும்பத்தில் ஒரு பெண்ணுக்கு வேலை வாய்ப்புத் தரும் வகையில் ஒரு சீரிய திட்டத்தைப் புரட்சித் தலைவி அரசு தீட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். பெண்கள் வருவாயைப் பெருக்கும் திட்டங்களை மகளிர் மன்றங்கள் மூலமாகச் செயல்படுத்தினால் கிராமப்புறப் பெண்கள் பயன்பெற முடியும்.

டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சியில் பெண்களைக் கோவில் பணியாளர்களாக நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கோவில் அர்ச்சகர்களாகப் பயிற்சி பெற எந்த வித அமைப்புமில்லை. எனவே, கோவில் அர்ச்சகர்களுக்கு சமஸ்கிருதப் பயிற்சி அளிக்கப் பயிற்சிப் பள்ளி ஆரம்பிக்க உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேல்மருவத்தூர் ஆதி பராசக்தி கோவிலில் பெண்கள் மிக அற்புதமாக அர்ச்சனை செய்கிறார்கள்.



1992 ஏப்ரல் 10] [திருமதி ஜெ. லோகாம்பாள்]

தமிழ்நாட்டில் தொழு நோயாளிகள் இல்லங்கள் தனியார் தொண்டு நிறுவனங்கள் மற்றும் அரசாங்க விடுதிகளும் உள்ளன. இவற்றில் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் நிறுவனங்களில் மாதாவரம் மற்றும் கும்பகோணத்திலும் மிகச் சிறப்பாக நடந்து வருகின்றன. சமீபத்தில் சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள்கூட இந்த இல்லங்களில் விஜயம் செய்து பாராட்டி உள்ளார். முதியோர், விதவை, கணவனால் கைவிடப்பட்டவர்கள் இவர்களுக்குக் கிடைக்கும் பென்சனைப் போல் தொழுநோயாளிகளுக்கும் 'பென்சன்' கிடைக்க அரசாங்கம் உதவி செய்ய வேண்டும். தொழுநோயாளிகள் குணம் ஆனவுடன் இவர்களுக்கு வேலைவாய்ப்பு உதவி மற்றும் இருக்க இடம் தமிழகத்தில் இவர்களை பரவலாக இருக்க ஏற்பாடு செய்தால் தொழுநோய் தொற்றுநோய் இல்லை எனவும், அவர்கள் சமூகத்திலிருந்து ஒதுக்கப்படுபவர்கள் அல்ல என உற்சாகத்துடன் செயல்பட தமிழக அரசு உடனடியாக ஏற்பாடு செய்து தர வேண்டும். மற்றும் தமிழகத்தில் உள்ள தொண்டு நிறுவனங்கள் மூலமாக கிராமங்களில் உள்ள பிரச்சினையை உடனுக்குடன் தெரிந்து கொள்ள தமிழக அரசு தொண்டு நிறுவனங்களை உற்சாகப்படுத்த அரசு உத்திரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆதரவற்ற அநாதைக் குழந்தைகளைப் பராமரித்து வரும் இல்லங்கள் தமிழகத்தில் மத்திய, மாநில அரசு மானியம் வழங்கும் அநாதைக் குழந்தைகள் காப்பகங்கள் 140-க்கு மேல் உள்ளன. உண்மையிலேயே தமிழக அரசு இந்த இல்லங்களை மேன்மைப் படுத்தி சமூக நலத்துறை நல்ல பல திட்டங்களை அமைத்துத் தர குழந்தைகளின் எதிர்காலத் திட்டங்களை ஊக்கப்படுத்தக் கேட்டுக் கொள்கிறேன். இந்தத் தொண்டு நிறுவனத்தினரை, தமிழக அரசு அடிக்கடி சந்தித்து உற்சாகப்படுத்த வேண்டுகிறேன்.

முற்பகல் 11-50

தமிழக அரசு வெளியிடும் ''தமிழரசு'' புத்தகம் அனைத்துத் தொண்டு நிறுவனங்களிலும் இருத்தல் வேண்டும். அவ்வாறு இருந்தால், அந்தத் தொண்டு நிறுவனங்கள் அரசின் திட்டங்களையும், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் செயல்படுத்துகின்ற திட்டங்களையும் அறிய இயலும். இவ்வாறான தொண்டு நிறுவனங்களுக்குத் தெரிந்தால், தமிழக மக்களுக்கே தெரிந்தது போலாகும். மேலும், தொண்டு நிறுவனங்களுக்காக 'தமிழரசு' புத்தகம் விநியோகம் செய்வதற்கென சமூக நலத் துறை மூலம் பணம் வசூலிக்கப்படுகிறது. ஆனால், எந்த ஒரு தொண்டு நிறுவனத்திற்கும் 'தமிழரசு' விநியோகம் செய்யப்படுவதில்லை. இதனை சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள்

[திருமதி ஜெ. லோகாம்பாள்] [1992 ஏப்ரல் 10

கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த சமூகநலத் துறை மகளிர் மன்றம் மூலமாகத்தான் இந்தச் சட்டப் பேரவைக்கே அனுப்பப்பட்டேன் என்று கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி, சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன் வணக்கம்.

*Hon. Deputy Speaker*: Dr. Beatrix D' Souza.

*Dr. Beatrix D' Souza*: Hon. Deptuy Speaker Sir, the Policy Note of the Social Welfare Demand, 1992-93 quoting Vivekananda states: "There is no hope in that family where women live in sadness". The Department adds that the Government is charged with the task of removing this sadness and instilling the hope of a better life. On my part, I would like to quote the first Women President of Ireland who has said "The hand that rocks the cradle can rock the system". With Dr. Jayalalitha as Tamil Nadu's first women Chief Minister, feminism in its best sense is now part of the philosophy of Tamil Nadu. A philosophy that will not only rock but revolutionise the system that still has a strong male ethos where women are still victims of a society created by men for men.

Much has been done as evidenced in the policy note to create a new social order stressing the needs of women of the weaker sections of society, children, old people and the handicapped. Tamil Nadu will soon be a welfare State in the truer sense. Women however will have to be vigilant. It is in that context that I wish to plead for the setting up of a State Commission for women in Tamil Nadu. A draft bill has been prepared by a Committee of Women's Organisations and presented to the Government. It envisages an autonomous body with a statutory status. It would not have executive functions but will serve as a watch dog monitoring and investigative powers on women's rights and recommendatory powers on Legislation. While investigating violation of rights, the Commission shall have all powers of a Civil Court as well as powers under the Commission of Enquiry Act.

The Chairperson of the recently constituted National Commission for women has stated there is no need for a State Commission. If Kerala has set up a State Commission for women and Karnataka is preparing its own draft bill, we in Tamil Nadu should realise that our interests peculiar to Tamil Nadu are best served by a State Commission. I plead for a closer rapport between the Welfare Department and Women's organisations and between women's organisations and women legislators.



1992 ஏப்ரல் 10] [Dr. Beatrix D'Souza]

Women are affected by laws governing marriage, divorce, child custody and maintenance. Tamil Nadu Bishops and the Tamil Nadu Christian Council have presented to the Government a draft bill to amend the Christian Divorce Act of 1869, a Central Act, in its application to the State of Tamil Nadu. These amendments propose to give relief to the Christian women governed by the Act in certain areas like desertion and judicial separation. The Christian community requests that this draft bill be introduced in the present Budget session. The Bill will be called the Indian Divorce Act-Tamil Nadu Amendment Bill, 1992. Uttar Pradesh made amendments to the 1869 Act in 1952 itself.

முற்பகல் 11-55

There is an urgent need for the setting up of a Media Advisory Committee to monitor the portrayel of Women in Films, T. V. and Advertisements to prevent a negative impact on Women's progress.

Explicit rape scenes and violence against women should be heavily censored. Our Films and T.V. serials send out contradictory signals, Women are stereo-typed and fall into 2 groups— the Virgin and the Vamp and chances are more in the masala films. The masala mixture of these films should be labelled very hot and very dangerous. When life imitates art we get not only eve-teasers but we also get serial killers.

Women are used to advertise everything from Washing Powder to Cars and Condoms. I would like to refer particularly to offensive and embarrassing Kamasutra Condom Advertisement. It amounts to unfair business practice when soft porn—an explicit sexual picture of a couple and an excerpt from the sex treatise—Kamasutra—is used to sell a product. The threat from aids is real and the necessity for family Planning is urgent but pornography is not the answer.

On 24th July 1982, a meeting was held between Government Officials of Home Department, Law Department, Local Administration Department, Public Department and Corporation of Madras and others with the representatives of Women's Organisations. It was decided to make for legislation to ban obscene posters and hoardings.

The Tamil Nadu Acquisition of Hoardings Act, 1985 was challenged by the Tamil Nadu Joint Action Council for Women as the Act's sole concern seemed to be to create a monopoly in the hoardings advertising trade in the hands of Government to leasen traffic hazards in the public's

[Dr. Beatrix D' Souza] [1992 ஏப்ரல் 10

interest instead of regulating Prolifiration of hoardings and poster the size of the hoardings and the visual content of the hoarding was obscene.

Madras is the only City in India that permits exploitation by the man media in its gigantic and often obscene cinema hoardings and advertisements. These visual are a source of titillation and not only cause traffic accidents but lead to anti-social acts. The Nuns of Church Park have been trying for over 10 years to have the Posters removed from the entrance of the School.

A time bound investigation of trial of Crimes against women like Dowry Deaths, Rape etc., is essential for successful prosecution. All such crimes are to be investigated and decisions taken within six months.

Regarding maiantenance Rs. 1,000 must be the minimum for a Woman when she is deserted and salaries of the husband should be attached. I would also like to mention lastly about one thing.

I would like to mention that the Secretariat Creche that caters to the children of about 40 women about which I also spoke in the last Budget Session, is in a disgraceful condition. I pointed out this in the last Budget Session after I had visited the Creche personally. The Government may take it over, introduce the necessary amenities and make it a model Creche. The workers may be made Government employees and given a proper salary.

I thank the Hon'ble Deputy Speaker for having given me this opportunity to talk.

Thank you.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் வெ. புருஷோத்தமன்.

டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வுகள் இருக்கக் கூடாது. உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பேதம் மறைய வேண்டும். வறியவர், வசதி படைத்தவர் என்ற பாகுபாடு இன்றி, எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் என்ற அடிப்படையிலே இந்தியாவிலேயே நமது தமிழ்நாட்டை ஒரு சிறந்த மாநிலமாக ஆக்கும் வண்ணம், வெளிநாட்டவரும்



1992 ஏப்ரல் 10] [டாக்டர் வெ. புருஷோத்தமன்]

பாராட்டும் வண்ணம் ஆட்சி செய்துவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு சமூக நலத்துறையின் மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்ததற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமூக நலத் துறையிலே குறிப்பாக பெண்கள் முன்னேற்றம், பெண்கள் பயிற்சி வகுப்புக்கள், பாதுகாப்பு மையங்கள், சேவை இல்லங்கள், குழந்தைகள் நலம், உடல் ஊனமுற்றோர் நலம் மற்றும் முதியோர்களுடைய நல்வாழ்வுத் திட்டங்கள். இப்படிப்பட்ட திட்டங்கள் இந்த சமூக நலத் துறையின் மூலமாக நம்முடைய மாவட்டங்களிலே செயல்பட்டு வருகின்றது.

நண்பகல் 12-00

சமூக நலத் துறையிலே கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், விதவைகள், ஏழைத் தாய்மார்கள், இவர்கள் எல்லாம் என்னுடைய தொகுதியில் அதிகமாக இருக்கிறார்கள். ஏனென்றால் வாக்காளர்களிலே பாதிப்பேர் பெண்களாக இருக்கிறார்கள். வருடத்திற்கு 180 நாட்கள் மட்டுமே பணி வேலை நாட்கள் அங்கே பயன்படுத்துகிற ஒரு சூழ்நிலை உள்ளது. ஆகவே இப்படிப்பட்ட என்னுடைய தொகுதியில் முதலிலே சமதர்ம சமுதாயத்தை உருவாக்குகிற பொறுப்பு இந்த சமூக நலத் துறைக்கு இருக்கிறது என்று இந்த மாமன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். மகளிருக்காக போடப்படுகிற திட்டங்கள் மகளிருக்குச் சென்றடைகிறதா? அந்தத் திட்டங்கள் எப்படி தீட்டப்படுகின்றன? மாவட்டத்தில் உள்ள மக்களுக்கும் அதிகாரிகளுக்கும் நீண்ட இடைவெளி இருக்கிறது. மாவட்டத்தில் உள்ள அதிகாரிகளுக்கும், சென்னையில் உள்ள அதிகாரிகளுக்கும் இடைவெளி அதிகமாக இருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட நீண்ட இடைவெளியை நாம் குறைத்தாக வேண்டும். என்னென்ன திட்டங்கள் இந்தப் பெண்களுக்காக இருக்கின்றன என்றே இன்றுவரை கிராமப்புற மக்களுக்கு தெரியவில்லை. காலணி தயாரிப்பாளர்கள் கூட்டுறவுச் சங்கம்; எழுதுபொருள் தயாரிப்பவர் சங்கம்; உணவு தயாரிப்போர் கூட்டுறவுச் சங்கம்; மகளிர் பயிற்சி நிலையம் என பல பொருளாதாரத் திட்டங்கள் உள்ளன. கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், இந்தத் திட்டங்கள் மூலமாகவும். இந்த ஏழைப் பெண்களுக்கு வாழ்வு கிடைக்கும் என்பதே கிராமப்புற மக்களுக்கு தெரியவில்லை, காரணம், சமூகநலத்துறையில் கிராமப்புற மக்களுக்கு சரியாக ஒரு ஈடுபாடு இல்லாத காரணத்தால்தான். ஆகவே இப்படிப்பட்ட இந்தத் முறையைச் சரியாக சீர்திருத்தம் செய்ய வேண்டும்; செம்மைப்படுத்த வேண்டும்.

[டாக்டர் வெ. புருஷோத்தமன்] [1992 ஏப்ரல் 10

ஒரு இன்டெக்ரேஷன் வேண்டும். கம்யூனிகேஷன் கேப்-ஐ குறைத்து மக்களுக்கு சேவை அதிகமாகக் கிடைக்க வேண்டும்,

அடுத்ததாகக் இந்தக் குழந்தைகள் நலம். இந்தக் குழந்தைகள் நலனைப் பொறுத்தவரையில் சத்துணவுத் திட்டத்திலே இதற்கென்று தனி அதிகாரி இல்லை. மாவட்ட ஆட்சித் தலைவருடைய பி. ஏ. ஒருவர்தான் இதனை நிர்வகித்து வருகிறார். ஆனால் அவருக்கு பல்வேறு வேலைகள் இருக்கின்றன, சத்துணவு மையங்களில் காலி ஏற்படுகிற பணியிடங்களில் உடனடியாக ஆட்கள் நியமிக்கப்படுவதில்லை, 6 மாதங்கள், 8 மாதங்கள், 9 மாதங்கள் என்று ஆகியும் அந்த காலியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன, இதற்குக் காரணம் என்ன என்றே தெரியவில்லை, ஆகவே இந்த குறைபாட்டைக் களைய சத்துணவுச் செயல்பாட்டிற்கென்று ஒரு தனி அதிகாரி மாவட்ட அளவில் இருந்து செயல்பட்டால் இந்தச் சத்துணவுத்திட்டம் செம்மையாக நடைபெறும்.

அடுத்து சத்துணவுக் கூடத்தை பல்வேறு இலாக்கா அதிகாரிகள் பார்வையிடுகிறார்கள். அப்படி பல்வேறு இலாக்கா அதிகாரிகள் பார்வையிடுகிற காரணத்தால் இதிலே குறைபாடுகள் அதிகமாக காணப்படுகிறது. ஆகவே ஏதாவது ஒரு துறை அதிகாரி மாதத்திற்கு ஒருமுறை சென்று சத்துணவுக் கூடத்தை பார்வையிட வசதியாக இந்தத் திட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும்.

அடுத்ததாக கிராமப்புறத்தைப் பொறுத்தவரையில் முதியோர் சத்துணவு சரியாக நிர்வகிக்கப்படவில்லை, காரணம் என்னவென்றே தெரியவில்லை. ஆகவே இப்படிப் பட்ட குறைகள் இன்று இருக்கின்றன. சத்துணவுக் குழந்தைகளுக்குச் சரியாக சீருடைகள் வழங்கப்படுவதில்லை. பள்ளிப் பாடப் புத்தகங்கள் சரியாக வழங்கப்படுவதில்லை. இதிலே முறைகேடுகள் இருக்கின்றன. எனவே இத்திட்டங்களை ஒருங்கிணைக்க வேண்டும். ஒருங்கிணைத்தால் தான் இத்திட்டம் சிறப்பாகச் செயல்படும். அப்படிச் செயல்பட வேண்டும் என்று இந்த மாமன்றத்திலே தாழ்மையாக நான் கூறிக்கொள்கிறேன்.

அடுத்ததாக உடல் ஊனமுற்றவர்கள். இந்த உடல் ஊனமுற்றோருக்கு தனியாக பாஸ்புத்தகம் வழங்கப்பட்டிருக்கிறது. நகரங்களிலே உள்ள உடல் ஊனமுற்றோர்கள் நகரப் பேருந்துகளிலே இலவசமாகப் பள்ளிக்கு செல்லலாம். ஆனால் அதே நேரத்தில் கிராமங்களிலே உள்ள உடல் ஊனமுற்ற குழந்தைகள் அவ்வாறு செல்ல முடியாத ஒரு சூழ்நிலை



1992 ஏப்ரல் 10] [டாக்டர் வெ. புருஷோத்தமன்]

உள்ளது. ஆகவே அரசாங்கம் இன்றைக்கு விதியைத் தளர்த்தி இந்த கிராமப்புற மக்களுக்கும் இந்த இலவச பஸ் பாஸ் வழங்குவதற்கு இந்த இலாக்காவிலிருந்து ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக முதியோர் நல ஓய்வுத் திட்டம். முதியோர் உதவித் தொகை உடனுக்குடன் கிடைக்கவேண்டும். அவர்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படுகிற வேஷ்டி, சேலைகள் சரியாகச் சென்றடையவில்லை, அவர்களுக்கு சரியாகக் கொடுக்கப்படுவதில்லை. மதிய உணவுத் திட்டத்தில் உணவு வழங்குவதற்கு வகை செய்யப்பட வேண்டும். மாவட்டத்திற்கு ஒரு முதியோர் கல்வி மற்றும் முதியோர் பாதுகாப்பு இல்லம் ஏற்படுத்தப்பட வேண்டும். உடல் ஊனமுற்றவர்களுக்கு பல்வேறுவிதமான வாய்ப்புக்களும் வசதிகளும் கிடைப்பதற்காக வழங்கப்பட்டது போல் இந்த ஏழை விதவைத் தாய்மார்களுக்கும் அட்டைகள் வழங்கப்பட வேண்டும். மேலும், வழங்கப்படுகிற மானியத் தொகை அதிகரிக்கப்பட வேண்டும்.

கடன்கள் சரியாக முறையாக வழங்கப்படவில்லை. இந்தக் கடன்களைச் சரியாக வழங்குவதற்கு ஒரு அமைப்பு ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சமூகநல அலுவலர்கள் கிராமங்களில் முகாமிட்டு மக்களுக்கான திட்டங்களை விரிவாகச் சொல்லவேண்டும்: விளக்க வேண்டும்.

சத்துணவு மையங்களைப் பழுதுபார்க்கும்போது, அவைகளை உடனடியாக பழுதுபார்த்து அவ்வப்போது சீரமைக்கப்பட வேண்டும் என்று கூறிக் கொள்கிறேன். அடுத்தது இந்த சமூக நல வாரியத்தில் பல்வேறு மகளிர் நலம், மகளிர் மேம்பாடு திட்டம், சிறுவர்கள், குழந்தைகள் நலம், முதியோர் நலத் திட்டங்கள் இப்படி நல்ல பல்வேறு திட்டங்கள் 404 கோடி ரூபாய்க்கு மானிய கோரிக்கையில், இந்த இனத்தவர்களுக்காக தனியாக உறுப்பினர் அட்டை வழங்கப்பட வேண்டும். அப்படி வழங்கினால்தான் இவர்களில் யார் ஊனமுற்றவர்கள், யார் அனாதைகள், யார் விதவைகள், யார் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் என்று சிறப்பாக அறிய முடியும். அப்படி இருந்தால்தான் அவர்களுக்கு அந்த பலன் போய் சேரும். ஆகவே வருங்காலத்தில் இப்படிப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்தால் இந்த துறை மிகவும் சீரிய துறையாக மாறும். மக்களும் நல்லமுறையிலே ஏற்றுக்கொள

வார்கள். ஆகவே இந்த நீண்ட இடைவெளியை குறைக்க வேண்டும் என்று சொல்லி வாய்ப்புக்கொடுத்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன்.

பிற்பகல் 12-05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சா. பன்னீர்செல்வம்.

திரு. சா. பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் சமூகநலம் மற்றும் சத்துணவு மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய நன்றியினை கூறி, ஒரு சில கருத்துக்களை கூற விழைகிறேன்.

சமீபத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட—ஒரு லட்சம் பெண்களுக்கு வேலை வாய்ப்பளிக்கக்கூடிய ஒருங்கிணைந்த மகளிர் வளர்ச்சித் திட்டம் மிகவும் நல்ல திட்டம். இத்திட்டத்தை அமுல்படுத்திய மாண்புமிகு முதல்வர் அவர்களை மனமாரப் பாராட்டுகிறேன். இத்திட்டத்தின் மூலம் பயன்பெறக்கூடிய ஒரு இலட்சம் பெண்களில் மூன்றில் ஒரு பகுதியினர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினராகவும், 10,000 உடல் ஊனமுற்ற பெண்களும் இருப்பார்கள் என்பது வரவேற்கத்தக்கதாகும்.

ஒரு ஏழை விதவையின் மகள், திருமண உதவித் திட்டத்தின்கீழ் ஒரு பெண் பயன் பெறுவதற்கு அந்த பெண்ணின் விதவைத்தாயின் ஆண்டு வருமானம் ரூ. 6,400-க்கும் குறைவாக இருக்கவேண்டும் என்று அரசு நிபந்தனை விதித்து இருக்கிறது. பணத்தின் மதிப்பு குறைந்துள்ள இந்த காலத்திலே இந்த வருமான வரம்பை ரூ. 9,000 என்று உயர்த்தி மாற்றியமைக்க வேண்டுமென்று அரசை கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் அப்படி திருமண உதவி கோரும் பெண்ணுக்கு அதிக பட்ச வயதாக 30 இருக்கவேண்டும் என்று சொல்வதும் சரியல்ல. இந்த நிபந்தனையை மாற்றி 28 வயதுக்கு மேல் 35 வயதுவரை என்று அரசு அறிவிக்கவேண்டும். அதே போல் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம் போன்ற திட்டங்களுக்காக விதிக்கப்பட்டுள்ள ஆண்டு வருமான வரம்பை ரூ. 9,000 என்று உயர்த்தவேண்டுமென அரசை கேட்டுக் கொள்கிறேன்.

கலப்புத் திருமணம் செய்து கொண்ட கணவன் மனைவி இருவரும் வேலையில்லாது இருக்கும் பட்சத்தில் யாராவது ஒருவருக்கு தகுதியிருக்கும் பட்சத்தில் அரசுத் துறை நிறுவனங்





களில் பணிபுரிவதற்கு முன்னுரிமை அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி முன்னுரிமை அடிப்படையில் வேலை கிடைத்த பிறகு தம்பதியினர் பிரிய நேரிட்டால் இருவரில் யார் அந்த முன்னுரிமையைப் பயன்படுத்தி வேலை பெற்றார்களோ அவர்கள் அந்த வேலையை இழக்கவேண்டும். அப்படி முன்னுரிமை அளிக்கும்போது சில விதிகளை நாம் பின்பற்றலாம். உதாரணமாக, தம்பதியர் இருவரும் வேறுபட்ட மதத்தைச் சார்ந்தவர்களாக இருத்தல்வேண்டும் என்று அரசு ஆணையிடலாம். அல்லது ஒரே மதத்தைச் சார்ந்தவர்களாக தம்பதியர் இருக்கும் பட்சத்தில் ஒருவர் தாழ்ந்த சாதியைச் சார்ந்தவராக இருந்தால் இன்னொருவர் உயர்ந்த சாதியினராக இருக்கவேண்டும் என்றும் அரசு கூறலாம். உதாரணத்திற்கு ஒருவர் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்திருந்தால் இன்னொருவர் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினராகவோ அல்லது ஆதி திராவிடராகவோ இருக்க வேண்டும் என்று சொல்லலாம்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிதியுதவி நபருக்கு ரூ. 200 என்ற அளவிலிருந்து ரூ. 300 என இந்த ஆண்டுமுதல் உயர்த்தியுள்ள அரசைப் பாராட்டுகிறேன். தாய்மைப்பேறு அடைந்த பெண்களுக்கு இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படவிருக்கின்ற ரூ. 300-ஐயும் ரொக்கமாக கொடுப்பதற்கு பதில் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு மருந்துகளையும் மற்றும் ஊட்ட சத்துமிக்க பொருட்களையும் வழங்கவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

நம்நாட்டின் முன்னேற்றம் அது சமுதாய ரீதியிலானாலும் அல்லது பொருளாதார ரீதியிலானாலும்—பெண்களையே சார்ந்திருக்கிறது. ஏனென்றால் பெண்களிடையே போதிய விழிப்புணர்ச்சி இருந்தால் அது குழந்தைகளின் வளர்ச்சியை பலவகையிலும் ஏற்படுத்தும். அப்படி குழந்தைகளிடையே இன்றைக்கு ஏற்படும் வளர்ச்சி நாளை நாட்டின் வளர்ச்சியாக மாறும். எனவேதான் நமது மத்திய மாநில அரசுகள் பெண்களின் அதிலும் குறிப்பாக கிராமத்திலுள்ள பெண்களின் முன்னேற்றத்தில் கவனம் செலுத்த வேண்டுகிறேன்.

பிற்பகல் 12-10

'மகிளா யோசனா' என்கின்ற அந்தத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வரப்படும் என்று நம்புகிறேன். அப்படிப்பட்ட திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதற்கு ஒவ்வொரு கிராமத்திலும் மகளிர் மன்றங்கள் அமைக்கப்படவேண்டும்.

[திரு. சா. பன்னீர்செல்வம்] [1992 ஏப்ரல் 10

இன்றைக்கு நாம் ஒவ்வொரு கிராமத்திலும் மகளிர் மன்றத்தை ஏற்படுத்தி அவர்கள் மூலம் அரசு கொண்டுவரும் எல்லா சமூக மேம்பாட்டுத் திட்டங்களையும் சிறப்பான முறையில் நிறைவேற்றலாம். இதனால் அரசு எதிர்பார்க்கிற அளவு நாட்டின் வளர்ச்சியை இன்னும் நாம் காண முடியும். இந்த வகையில் நான் சில யோசனைகளை அரசுக்குத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன். ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு மகளிர் மன்றத்தை ஏற்படுத்தி அதற்கு பொறுப்பாளர் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுப்பாளர்களுக்கு ஆலோசனை வழங்கி ஒத்துழைப்பு நல்கிட கிராமம் தோறும் ஒவ்வொரு குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். அந்தக் குழுவிலே கிராமப் பஞ்சாயத்துத் தலைவர் உட்பட மற்ற பஞ்சாயத்து உறுப்பினர்கள். கிராம நிர்வாக அதிகாரிகள், அந்தக் கிராமப் பள்ளியிலே பணிபுரியும் ஆசிரியை மற்றும் சத்துணவு மைய பொறுப்பாளர்கள் ஆகியோர் இடம் பெற வேண்டும். கிராம நிர்வாக அதிகாரிகள் இந்தக் குழுவிலே இருப்பதால் இந்த கிராம மகளிர் மன்றத்தினுடைய வளர்ச்சிக்கு அரசின் உதவி தேவைப்பட்டால் அதை உடன் பெற்றிட ஏதுவாக இருக்கும். மேலும் அந்த கிராமத்திலுள்ள ஆசிரியையும் இந்தக் குழுவிலே இடம் பெற்றிருப்பதால் மகளிர் மன்றத்துக்கு ஒரு நல்ல வழிகாட்டியாக இருப்பார். மேலும் இந்தக் குழுவிலே உறுப்பினராக சத்துணவு மைய பொறுப்பாளரும் இருப்பதால், மகளிர் மன்ற உறுப்பினர்கள், சத்துணவு மையங்களின் செயல்பாடுகளில் வரும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வாய்ப்புக் கிடைக்கும். இப்படி ஒவ்வொரு கிராமத்திலும் ஏற்படுத்தி மகளிர் மன்றச் செயல்பாடுகளை முறைப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

அடுத்து, சத்துணவு மையங்களில் பயிலும் பிள்ளைகளுக்கு தினமும் ஏதாவது நீதியை வலியுறுத்தும் வகையில் கதைகள் சொல்லப்பட வேண்டும். கதைகள் தேசிய ஒற்றுமையை வலியுறுத்தி, ஜாதி மத பேதத்தை நீக்கக்கூடியதாக இருக்க வேண்டும். அதற்கு உதவியாக அறிஞர் குழு ஒன்றை அமைத்து அந்தக் குழு பரிந்துரை செய்யும் கதைகளை போதிக்க வாய்ப்பாக ஒவ்வொரு சத்துணவு மையத்திற்கும் ஒரு புத்தகம் வீதம் அனுப்பி அதிலுள்ள கதைகளை வாரத்திற்கு ஒன்று அல்லது இரண்டு வீதம் சொல்லித் தர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்... ... ... (மணியடிக்கப்பெற்றது.)

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> திரு. எச். எம். ராஜு.



1992 ஏப்ரல் 10]

<u>*திரு. எச். எம். ராஜு :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1992–93ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை எண் 30. சமூக நலன் பற்றி பேச எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சமூக நலன் பற்றிய மானியக் கோரிக்கையானது மிகவும் முக்கியமான கோரிக்கையாகும்.

<u>டாக்டர் தே. குமாரதாஸ் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோரம் இல்லை.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> கோரம் இருக்கிறது, உட்காருங்கள்.

<u>*திரு. எச். எம். ராஜு :</u> இது தாய்க்குலத்தின் நலன், குழந்தைகளின் நலன், ஊனமுற்றவர்களின் நலன் மற்றும் அவர்களுடைய முன்னேற்றம் பற்றிய ஒரு கோரிக்கையாகும். இன்றைய தினம் 403,76,70,000 ரூபாய் இந்த மானியக் கோரிக்கையிலே ஒதுக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இந்த மானியத்திற்கு நல்ல வகையிலே, சிறப்பான வகையிலே இந்த நிதி ஒதுக்கத்தை கூடுதலாக செய்வதற்கு காரணம், 1990–91ல் அன்றைக்கு இருந்த அரசு 139,42,59,000 ரூபாய்தான் அளித்தது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

"Service to humanity is service to God" என்று சுவாமி விவேகானந்தர் அவர்கள் சொல்லியதுபோல இந்தத் துறையானது மக்களுக்காக, மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற முறையில் நல்ல முறையில் சேவை செய்ய ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. 13–4–1992 அன்று காலை 8–30 மணிக்கு இந்தியாவிலேயே முதல் முறையாக ஆயிரம் விளக்குப் பகுதியில் புரட்சித் தலைவி அவர்கள் மகளிருக்காக ஒரு காவல் நிலையத்தை ஏற்படுத்த இருக்கிறார்கள். இந்த மாதிரி மகளிருக்கு சேவை செய்ய இம்மாதிரி துறைகள் முன்வர வேண்டியது அவர்களுடைய கடமையாகும்.

இருப்பினும் இன்றைய தினம் உசிலம்பட்டி போன்ற பகுதிகளில் பெண் குழந்தைகள் பிறந்தால் கள்ளிப்பாலின் மூலமாகவும், நெல்மணிகளை குழந்தைகளின் மூக்கு துவாரத்தில் அடைக்க வைத்தும் சாகடிக்கப்படுகிறார்கள். இந்தக் கொடுமையை அரசு உடனடியாக தடுத்து நிறுத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அம்னியோசென்டசிஸ் என்ற முறையைப் பற்றி மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இந்த அவையில் நன்றாக சொன்னார்கள். ஆணும் பெண்ணும் சமம் என்ற வகையிலே, குழந்தை பிறப்பதற்கு முன்பே அது ஆணா பெண்ணா என்று யாரும் அறியக்கூடாது என்ற வகையில் அந்தக் கருத்தை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குழந்தைகளுடைய சிறு வயதுத் திருமணம் அறவே ஒழிக்கப்பட வேண்டும். சிறு வயதிலேயே பெண் குழந்தைகள் விதவைகள் ஆவதற்கு அரசு இடம் கொடுக்கக்கூடாது.

பிற்பகல் 12–15

வரதட்சணையின் கொடுமைகள், குடிப் பழக்கத்தின் தீமைகள், போதை மருந்தின் துன்பங்கள் போன்ற குற்றம் செய்பவர்களுக்கு கடுமையான தண்டனைக்கு வழி வகை செய்ய வேண்டும். இவற்றின் மூலமாக மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் வகையில் அரசு நல்ல பல சிறப்புத் திட்டங்களைத் தீட்ட வேண்டும். இம்மாதிரி வாழ்க்கைக் கல்விப் பாடங்களை குழந்தைகள் கற்கும் வகையில் ஆரம்பப் பள்ளிக்கூடங்களிலேயே அறிமுகப் படுத்துமாறு வேண்டுகிறேன்.

1992 ஆம் வருடம் ஜனவரி மாதத்தில் ஒரு ஆய்வு செய்ததில், பள்ளிக்குச் செல்லும் பெண் குழந்தைகள், ஆண் குழந்தைகளின் டிராப்-அவுட் விகிதத்தை நான் சொல்ல விரும்புகிறேன். 100 குழந்தைகள் பள்ளிக்கூடம் சென்றால், முதல் வகுப்பிலே 39 பேர் பள்ளிக்கூடத்திற்குச் செல்வதில்லை. இரண்டாவது வகுப்பிலே 11 பேர்கள் செல்வதில்லை. 3 ஆம் வகுப்பிலே 8 பேர்கள் செல்வதில்லை. 4 ஆம் வகுப்பில் 8 பேர்கள் செல்வதில்லை. 5 ஆம் வகுப்பில் 7 பேர்கள் செல்வதில்லை. ஆகவே 5 ஆம் வகுப்புக்குள்ளாக 73 குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்குப் போவதில்லை. அதைக் கட்டுப்படுத்த சமூக நலத் துறை முன் வர வேண்டும். அதற்கு சில காரணங்கள் உண்டு. இந்த முக்கியமான துறையினால்தான் இந்த அவல நிலையை மாற்ற முடியும். குழந்தைகளுடைய வளர்ச்சியில் பிறந்த முதல் 5 வருடங்கள் மிக முக்கியம். அதில் முதல் 18 மாதங்கள் மிகவும் முக்கியமான நேரம். மூளை வளர்ச்சி அந்தச் சமயத்தில்தான் வளர்ச்சி அடைய ஏதுவாகிறது என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். சிறப்பான சத்துணவைக் கொடுப்பதன் மூலமாக இந்த டிராப்-அவுட் என்ற நிலையை நாம் நிறுத்தலாம், சத்துணவு என்றவுடன் நமக்குத் தெரிவதெல்லாம் பெருந்தலைவர் காமராஜ் அவர்களும், புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களும்தான்; அவர்கள் மட்டும் நினைவுக்கு வருகிறார்கள். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் எளிமையான வகையிலே இதை ஆரம்பித்தாலும், புரட்சித்



தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் உலக நாடுகள் வியக்கும் வகையிலே இந்தச் சத்துணவுத் திட்டத்தை ஆரம்பித்து, இன்றைய தினம் பல நாடுகளில் இந்த சிறப்பான திட்டத்தை எவ்வாறு அமல்படுத்தலாம். எவ்வாறு மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் அமுல்படுத்தினார்கள், அதை ஏன் நாம் செய்யக் கூடாது என்று அவர்களெல்லாம் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே என்னுடைய ஒரு தாழ்மையான கருத்தாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், 3வது வகுப்பு வரை குழந்தைகளுக்கு நல்ல சத்துணவை அளிக்க வேண்டும். இப்போது நல்ல புதுரக வாசனை அரிசி, கடந்த சில தினங்களுக்கு முன்பாக தமிழ்நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. பாசுமதி ஜேய்.ஜேய். அரிசி என்று பெயரிடப்பட்டுள்ள சிறப்பான அரிசியை குழந்தைகளுக்குக் கொடுக்கலாம் என்ற தாழ்மையான கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து காப்பகங்கள் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். காப்பகங்கள் மிகவும் முக்கியமான இடமாகும், இந்த இடம் மிகுந்த சுத்தமாக வைக்கப்பட்டு, குழந்தைகளை நல்ல வகையிலே, செம்மையான வகையிலே— அவர்கள் வருங்காலத்தில் தலைவர்களாக வர வேண்டிய குழந்தைகள் என்ற வகையில் பாதுகாக்கப்பட வேண்டும், இப்போது 5 வயதுக் குழந்தைகளுக்கு மட்டும் நாம் சீருடை வழங்குகிறோம், அதை பால்வாடியில் படிக்கும் 2½ வயதுக் குழந்தைகளுக்கும் கொடுத்தால் நன்றாக இருக்கும். இன்னும் விதவைகளுக்கும், கணவனால் கைவிடப்பட்டவர்களுக்கும், ஊனமுற்றவர்களுக்கும் வேலை வாய்ப்பிலே முன்னுரிமை வழங்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். எல்லா மாவட்டங்களிலும் சத்துணவிற்காக டிஸ்டிரிபியூஷன் சென்டர் (விநியோக மையம்) ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிசி, பருப்பு, காய்கறிகள். பால், முட்டை, விறகு போன்றவற்றை வாங்குவதற்கு தனியாக ஒவ்வொரு மாவட்டத்திலும் தாய்மார்கள் கொண்ட கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்த வேண்டுமென்ற தாழ்மையான கருத்தை இங்கே வைக்க விருப்புகிறேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழு அமைத்து, மாதம் 2 முறை கூடி, இந்தத் துறைக்கு ஆலோசனை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேமாதிரி மாநில அளவிலும், பாராளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய அட்வைசரி கமிட்டி அமைத்து, மாதம் ஒரு முறையாவது கண்டிப்பாக கூடி. இந்த நல்ல துறைக்கு ஆலோசனை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கருவுற்ற தாய்மார்களுக்கு 200 ரூபாய் கொடுத்ததை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் 300 ரூபாய் என்று சொல்லி இருக்கிறார்கள், வரவேற்கிறோம், ஆனால் அதே சமயத்தில் இடைத்தரகர்கள் இங்கே குறுக்கிடாமல். அந்தந்த மருத்துவ மனைகளில் யாரையும் கேட்காமலேயே ஒரு குழந்தை பெற்றவர்களுக்கும், 2 குழந்தைகள் பெற்றவர்களுக்கும், மருத்துவ மனையிலேயே அந்த ரூபாயைக் கொடுக்க நமது மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதேமாதிரி திருமணத் திட்டத்தில் கொடுக்கப்படும் 5,000 ரூபாய் தாமதமாகக் கொடுக்கப்படுகிறது, அனேக திருமணங்கள் நடந்த பிறகு. சட்ட மன்ற உறுப்பினரிடம் வந்து எங்களுக்குப் பணம் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் இதை உடனடியாகக் கவனிக்க வேண்டும். 3 மாதங்களுக்கும் முன்பாகவே அவர்கள் திருமணத்திற்கு இன்விடேஷன் தருகிறார்கள், எனவே அவர்கள் திருமணத்திற்கு முன்பாக இந்தப் பணம் அவர்களைச் சேர வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட சமூக நல அதிகாரிகளை ஒரு வருடத்திற்கு மேலே நீட்டிக்க வைக்கக் கூடாது. ஏனென்றால் இது ஒரு சென்சிடிவ் போஸ்ட். ஒரு மாவட்டத்திலே ஒருவர் நன்றாக வேலை செய்தாலும்கூட சில மாவட்டங்களில் சிலர் நன்றாக வேலை செய்ய இயலாத நிலை இருக்கிறது. ஆகவே, மற்ற இடங்களில் மீதியுள்ள 2 வருடங்களுக்கு மற்ற அதிகாரிகள் வர ஏதுவாகும்.

பிற்பகல் 12-20

ஆகவே, மாவட்ட சமூக நல அதிகாரிகளை ஒரு வருடத்திற்கு மேல் அங்கே வைக்கக்கூடாது என்ற கருத்தைச் சொல்லிக் கொள்கிறேன். மூன்றாண்டுகளுக்கு மேல் ஒரு இடத்தில் பணியில் இருப்பவர்களை மாற்றம் செய்யும் முறையை உடல் ஊனமுற்றவர்களைப் பொறுத்த வரையில் வைக்க வேண்டாம். அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் எங்கெங்கே செல்ல விரும்புகிறார்களோ அப்படி அவர்களுக்கு மாற்றுதல் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசு பணிபுரியும் போது ஊனமுற்றவர்களுக்கு விபத்து ஏற்பட்டால், அவர்களின் எதிர்காலத்தைக் கருதி, அவர்களுக்கு ஒரு பதவி உயர்வு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சத்துணவு மையங்கள் பழுதுபார்க்கப்பட வேண்டும். சில சத்துணவு மையங்கள் வெள்ளையடித்துப் பல காலங்களாகிவிட்டன. அவைகளை உடனடியாக பழுது பார்த்து வெள்ளை



யடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேமாதிரி, சத்துணவு மையங்களில் உள்ள பழைய பாத்திரங்கள் எல்லாம் புதிய பாத்திரங்களாக நிலையில் மாற்றிக் கொடுக்க வேண்டும். சில பாத்திரங்கள் ரொம்பவும் மோசமான நிலையில் பழுதடைந்திருக்கின்றன. புதிய பாத்திரங்களைக் கொடுப்பதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு சுகாதார வசதி ஏற்படும். அதற்கு வழி வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முக்கியமான வளர்ச்சித் திட்டமான ஒருங்கிணைந்த மகளிர் வளர்ச்சித் திட்டத்தை இரண்டாவது கட்டமாக நமது மாவட்டமான நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்த வேண்டுமென்று உங்களை வேண்டிக் கொள்கிறேன். ஊட்டியில் உள்ள காது கேளாதோர் பள்ளிக்கு புதிய கட்டிடம் கண்டிப்பாகத் தேவைப்படுகிறது. அதே மாதிரி அந்தக் குழந்தைகளுக்காக விடுதியும் இல்லை. அந்த விடுதியையும், பள்ளிக் கட்டிடத்தையும் உங்கள் ஆட்சிக் காலத்தில் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பார்வையற்றவர்கள் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவசமாக பயணம் செய்யக் கூடாது என்று விதி இருக்கிறது. பார்வையில்லாதவர்களால் வெளியுலகைப் பார்க்க முடிவதில்லை. திருவள்ளுவர் பேருந்துகளிலும் அவர்கள் பயணம் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

முதியோர் பென்ஷன் திட்டம் சிறப்பாகச் செயல்பட வேண்டும். சில தாய்மார்கள் தங்களுக்குப் பென்ஷன் உதவி கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். இதை விசாரிக்கும் வகையில் அதிகாரிகள் திட்டவட்டமாக என்கொயரி செய்து, இவர்களுக்கு கொடுக்க வேண்டுமா, கொடுக்க வேண்டாமா என்ற வகையில் ஆராய்ந்து பார்த்து செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அக்கவுண்டன்சி, டைப்ரைட்டிங், சுருக்கெழுத்து, டைலரிங், போன்ற பயிற்சிகளுக்கு ஸ்காலர்ஷிப் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இந்த துறை கொடுக்கிறது. அந்த ஸ்காலர்ஷிப்பை மிகவும் பின்தங்கியவர்களுக்கும் வழங்கவேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். அதேமாதிரி, சத்துணவு சமைக்கும் செலவைப் பொறுத்தவரையில் விலைவாசி காரணமாக, இப்போது கொடுக்கப்படும் 13 பைசாவுக்குப் பதிலாக அதை உயர்த்தி 15 முதல் 20 பைசா வரை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே மாதிரி குடும்பநல பாதுகாப்பு நிதி. இந்தத்

துறையில் யார் இறந்தாலும் அவர்களுக்கு ரூ. 60,000 கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இன்னமும் ஒரு சில இடங்களில் மாதாமாதம் பிடிக்கப்படும் ரூ. 10ஐ யாரும் வந்து வாங்குவதில்லை என்று பல பேர்கள் என்னிடம் மனுக்கள் கொடுத்திருக்கிறார்கள். அந்த மனுக்களையும் அரசு பரிசீலித்து பார்க்க வேண்டும். இந்தத் துறையில் யார் இறந்தாலும் அந்த 60,000 ரூபாயை கொடுக்க வேண்டும். சமையல்காரர்களுக்கும் சத்துணவு உதவியாளர்களுக்கும் ஒரே சீரான ஊதியத்தைக் கொடுத்து அவர்களையும் ஊக்குவிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் துறைக்கு புரட்சித் தலைவி அவர்கள் 403 கோடியே 76 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள் என்றால் எந்தக் குறை இருந்தாலும் அந்தக் குறைகள் யாவும் களையப்பட்டு குறைகளை நீக்கி, இத்துறை செவ்வனே செய்யப்படவேண்டுமென்றுதான் ஒதுக்கியிருக்கிறார்கள் என்று சொல்லி, இந்த அருமையான சந்தர்ப்பத்தைக் கொடுத்த தலைவர் அவர்களுக்கும் நல்ல உள்ளங்களுக்கும் நல்வாழ்த்துக்களையும் நன்றியையும் சொல்லி விடைபெறுகிறேன். ஜெய் ஹிந்த்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் எம். கருப்பு சாமி.

டாக்டர் எம். கருப்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992—93ஆம் ஆண்டுக்கான சமூகநலத்துறை மானியக் கோரிக்கை மீது பேச அனுமதித்த உங்களுக்கும், புதுமை பல ஊட்டுகின்ற புத்துலகச் சிற்பியாம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தற்போது '' தடா'' வில் கைது செய்யப்பட்டிருக்கிற மாஜி அமைச்சர் அவர்கள் தி.மு.க ஆட்சியின்போது குன்னூர் வந்தபோது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் படம் அரவேடு சத்துணவுக் கூடத்தில் மாட்டியிருந்தது என்ற ஒரே காரணத்திற்காக அங்கே பணி செய்த நவமணி என்ற பெண்ணை வேலை நீக்கம் செய்தார்கள். அதை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களிடம் கூறியவுடன் அந்தப் பெண்ணை மீண்டும் பணியில் சேர்த்த அந்தத் தாயுள்ளம் கொண்ட தனிப்பெருந்தலைவியாம் அம்மா அவர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சமூகநலத்துறைக்காக ரூ. 403 கோடி ஒதுக்கியிருப்பது பாராட்டத் தக்கதாகும். அரசு கொள்கைப்படி அனைத்து சத்துணவு மையங்களும் நர்சரிப் பள்ளிகளாக முழு அளவில் செயல்பட உள்ளதென்பது எதிர் காலத்தை நிர்ணயிக்கின்ற அந்த இளம் பிஞ்சு நெஞ்சங்களில் கல்வியறிவை ஊட்டி உழைப்பின் மென்மையை உணர்த்தி அவர்கள் தன்னம்பிக்கையோடு வாழ வகை செய்யும் என்பது திண்ணம்,





பிற்பகல் 12-25

அந்த திட்டம் ஊழல் பேர்வழிகளையெல்லாம் உருட்டி தள்ளிவிட்டு ஒண்கதிர் வியூகப்போரின் சிரஞ்சீவி பெட்டகமாம் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய சிந்தனையின் செயலாக்கம் என்பதை தமிழக மக்கள் புரிந்து கொண்டு பூரிப்படைந்துள்ளனர். இதுவும் பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

சத்துணவுக் கூடங்களில் உள்ள குழந்தைகளுக்கு முட்டை வழங்கப்படுகிறது. ஆனால் வைட்டமின் ' ஏ ' மிக அதிகமாக உள்ள, மிகவும் குறைந்த விலையில் உள்ள கேரட் துண்டுகளை தினமும் ஒவ்வொரு குழந்தைக்கும் அளித்து வந்தால் கண்நோய் வருவது குறையும். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சற்று யோசித்து ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். குழந்தைகளை மாதத்திற்கு ஒருமுறை மருத்துவர்கள் வந்து பரிசோதிக்கிறார்கள். அதை மாற்றி ஒவ்வொரு தாலுக்காவிற்கும் ஒரு மருத்துவரை சத்துணவு மையங்களில் குழந்தைகளை பரிசோதிப்பதற்கும்,பாதுகாப்பதற்கும் நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் '' நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் '' என்பதன் பலனை மழலைச் செல்வங்கள் அனுபவிக்க முடியும் என்று கூறிக்கொள்கிறேன்.

பகுதிநேர ஊழியர்களாக உள்ள சத்துணவு அமைப்பாளர்களை முழுநேர ஊழியர்களாக மாற்ற வேண்டும். சத்துணவு அமைப்பாளர்கள், பெரும்பகுதியினர் மிகவும் ஏழையாக உள்ளார்கள். இப்போது அவர்களுக்கு கிடைக்கும் சம்பளம் அவர்களுடைய குடும்பத்தை நடத்திச் செல்வதற்கு போதாமல் இருப்பதால் தாயுள்ளம் கொண்ட இதய தெய்வம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் இதை பரிசீலித்து சத்துணவு அமைப்பாளர்களுக்கு நல்ல சம்பளத்தை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குன்னூர் தொகுதியில் உள்ள பல்வேறு சத்துணவு மையங்களிலும் உள்ள அமைப்பாளர்கள் அனைவரும் தங்களுக்கு வழங்கப்படும் அரிசி மூட்டை பிரிக்காமல் இருக்கும் போதுகூட இரண்டு கிலோ, மூன்று கிலோ குறைந்துவிடுவதாகக் கூறுகிறார்கள். ஏழையான அவர்கள் இவ்வாறு அரிசி குறைந்து விடுவதால் பழி வாங்கப்படுகிறார்கள். அதாவது ' தோல் இருக்க களை முழுங்கி ' என்பதைப் போல மூட்டைகளில் இருக்கும் அரிசியை சில கயவர்கள் குத்தூசியின் மூலம் களவாடிவிடுகிறார்கள். அதைக் கண்டித்து சத்துணவு கூடங்களுக்கும் அரிசி அளவு குறையாமல் மூட்டைகளை வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[டாக்டர். எம். கருப்புசாமி] [1992 ஏப்ரல் 10

குன்னூரில் சீதோஷ்ண நிலை மிகவும் நன்றாக இருக்கிறது' அதாவது 23 டிகிரி சென்டிகிரேட் இருக்கிறது. அங்கு சமூகநலத். துறையில் 'நிட்டிங் செண்டர்' அமைத்து அங்குள்ள பெண்களுக்கு பயிற்சியையும், தொழில் வசதியையும் செய்து தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவுக் கூடங்களுக்காக மார்க்கெட்டிலும் மற்ற பகுதிகளிலும் காய்கறிகள் வாங்குகிறார்கள். ஆனால் சில சமயங்களில் புதிய காய்கறிகள் கிடைப்பதில்லை. ஆகவே, சத்துணவுக் கூடங்களுக்கு அருகில் உள்ள இடங்களில் கீரை, காய்கறி போன்ற வற்றை பயிரிட்டோ அல்லது பத்துப் பதினைந்து சத்துணவுக் கூடங்களுக்கு ஒரு காய்கறி தோட்டம் அமைத்து பயிர் செய்யப்பட்டால் அங்குள்ள குழந்தைகளுக்கு நல்ல பசுமையான புதிய காய்கறிகள் கிடைக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை பரிசீலிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

குன்னூர் தொகுதியில் உள்ள 'டைகர் ஹில்ஸ்' என்ற பகுதியில் சுமார் 300 குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்கள் பயன் பெறும் வகையில் ஒரு புதிய சத்துணவுக் கூடம் அமைத்துத்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப் பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. துரைமுருகன், நேராக உட்காருங்கள்.

டாக்டர் எம். கருப்புசாமி : குன்னூரில் பணிபுரியும் மகளிருக்காக அரசின் சார்பில் ஒரு மகளிர் விடுதியை கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நீலகிரி மாவட்டத்தில் இன்று மழை இல்லாத காரணத்தால்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுவாக அமைச்சர்களிடத்திலே போய் ஏதாவது சில குறிப்புகளைக் கொடுக்க வேண்டும் என்று விரும்புகிற உறுப்பினர்கள், அமைச்சருக்குப் பின் இருக்கையில் போய் உட்கார்ந்துகொண்டு யாருக்கும் இடையூறு செய்யாத அளவில் சீட்டுகளைக் கொடுக்க வேண்டும். அதைப்போல ஓர் இருக்கையிலிருந்து இன்னோர் இருக்கைக்கு செல்லும்போதோ அல்லது வெளியே செல்லுகிற போதோ கொஞ்சம் தலை குனிந்தவாறே செல்ல வேண்டும். சில உறுப்பினர்கள் நிமிர்ந்த நன்னடையோடு போய்க் கொண்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் விதிகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1992 ஏப்ரல் 10]

டாக்டர் எம். கருப்புசாமி : நீலகிரி மாவட்டத்திலே இன்று மழை இல்லாத காரணத்தால் மஞ்சள் சிறகுகள் கொஞ்சித் தவழும் அந்த மாமலையில் உள்ள சதுப்பு நிலங்களில் உள்ள நீர் எல்லாம் வற்றிவிட்டதால், அந்த ஜீவாதார ஊற்றுக்கள் எல்லாம் வற்றிவிட்டதால் அங்கேயுள்ள மக்கள் குடிநீருக்காக மிகவும் அவதிப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. மழை இல்லாத காரணத்தினால் தேயிலை செடிகள் எல்லாம் காய்ந்துவிட்டதால் நீலகிரி மக்கள் எல்லாம் பொருளாதார நிலையில் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, நீலகிரி மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து அங்குள்ள மக்களுக்கு குடிநீரும் மற்ற வசதிகளும் பெருக்கி அங்குள்ள மக்களின் வாழ்விலே ஒளியேற்றும்படி கருணை உள்ளம் கொண்ட தாய்க் குலத்தின் தலைமகளாக விளங்கிக்கொண்டிருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பனிக் காலத்தில், நவம்பர், டிசம்பர் போன்ற காலங்களில் அங்கு பெய்கின்ற கொட்டும் பனியால், தேயிலை செடிகள் எல்லாம் கருகிவிடுகின்றன. ஆகவே, அதற்கும் நிவாரண நிதி ஒன்று வழங்கும்படி தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–30

கரும்புக்கு விலை நிர்ணயம் செய்து அதை ஒழுங்குபடுத்தியது போல் சிறுசிறு விவசாயிகள் எல்லாம் பயிர் செய்கின்ற தேயிலைப் பயிருக்கும் ஒரு விலையை நிர்ணயம் செய்ய வேண்டும். கோனாடு பகுதியில் ஒரு எலக்ட்ரானிக் தொழிற்சாலை அமைப்பதாக இருந்தது. அதை விரைவில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தேயிலைத் தோட்டங்களில் பெரும்பாலும் பெண்களே வேலை செய்வதால் இந்த ஆண்டு தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் பயிரிடப் போகும் 7,500 ஏக்கரில் குறைந்தது 3,000 ஏக்கர் நிலங்கள் குன்னூர் பகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஹை குவாலிட்டி என்று கூறப்படுகிற மிக உயர்ந்த தேயிலை குன்னூர் பகுதியில் பயிரிடப்பட்டால் அங்குள்ள பெண்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்; அதற்கும் ஆவன செய்யுமாறு மாண்புமிகு இதய தெய்வம் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

குன்னூர் பகுதியில் ஆனைப்பள்ளம் என்று ஒரு பகுதி இருக்கின்றது. சின்னாளப்பட்டி என்று ஒரு பகுதி இருக்கிறது. அங்கே பெரும்பாலும் மலை சாதியைச் சேர்ந்த மக்கள் தான் வாழ்கிறார்கள். இந்த நாள் வரை அந்த ஊருக்கு செல்வதற்கு ஒரு சாலை கிடையாது; ஒரு மருத்துவ வசதி இல்லை. ஆகவே, மாண்புமிகு இதய தெய்வம் அவர்கள், ஆனைப்பள்ளம் போன்ற பகுதிகளுக்கு ஒரு சாலை அமைத்துத்தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

வாலன்டரி அசோசியேஷன் என்று சொல்லப்படுகின்ற தொண்டு நிறுவனங்கள் இருக்கின்றன. தமிழகத்திலுள்ள பெரும்பாலான நிறுவனங்கள் ஏதோ நல்ல முறையில் செயல்பட்டாலும், மக்களை ஏமாற்றுவதற்கென்றே சில வாலண்டரி அசோசியேஷன்ஸ் இருக்கின்றன. அவர்கள் வெளிநாடுகளிலிருந்தும், அரசாங்கத்திடம் இருந்தும் பணத்தைப் பெற்றுக்கொண்டு ஏழைகளுக்கு உதவுவதாகக் கூறிக்கொண்டு அந்தப் பணத்தையெல்லாம் ஏய்த்து விடுகிறார்கள். உதாரணத்திற்கு, ரூரல் டெவலப்மென்ட அசோசியேஷன் என்று சொல்லப்படுகின்ற ஆர்.டி.ஏ. நிறுவனம் குன்னூர் பகுதியில் இருக்கிறது. முன்பு அந்த நிறுவனத்தைக் கவனித்து வந்தவர் பெரும் ஊழல் செய்ததாலும், கோடிக் கணக்கான பணத்தை எல்லாம் கொள்ளையடித்துக்கொண்டு அமெரிக்காவுக்குச் சென்று இன்று அந்த நாட்டுக் குடியுரிமையைப் பெற்று விட்டார். அவ்வாறு ஏழை மக்களுக்கு உதவுவதாகக் கூறிக்கொண்டு, அவர்களுக்குக் கிடைக்கின்ற பணத்தையெல்லாம், அவர்கள் அபகரித்துக்கொண்டு வெளிநாடு சென்று விடுகிறார்கள். அரசாங்க பணத்தை ஏமாற்றுகிறார்கள். (மணி அடிக்கப்பெற்றது). கிட்டத்தட்ட கோடிக் கணக்கான பணத்தை எல்லாம் ஏழை மக்களின் பெயரைச் சொல்லி ஏமாற்றுகின்ற நயவஞ்சகர்களை எல்லாம் அடையாளம் கண்டு, அதற்காக ஒரு தனிக் குழு அமைத்து அவர்களை எல்லாம் கட்டுப்படுத்த வேண்டும். ஏழை மக்களின் பெயரைச் சொல்லிக் கொண்டு, தொண்டு நிறுவனங்கள் என்று கூறிக்கொண்டு, மற்ற நிறுவனங்களின் பெயரையும் கெடுப்பதால், ஒவ்வொரு தொண்டு நிறுவனத்திற்கும் அந்தப் பகுதியிலுள்ள மக்களின் குழுவை அமைக்க வேண்டும்; அரசாங்க அதிகாரிகளை அழைத்து அந்த நிறுவனங்களின் செயல்பாடுகளையும் அவர்கள் கண்காணித்து வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஓரிரு மாதங்களுக்கு முன்பாக அந்த ஆர். டி. ஏ. என்ற நிறுவனத்திற்காக வாங்கப்பட்ட, பொது மக்களின் பெயரால் வாங்கப்பட்ட கிட்டத்தட்ட 70 ஏக்கர் நிலத்தை விற்றுவிட்டார்கள். அந்தப் பணத்தையும் சுருட்டிக்கொண்டு போய்விட்டார்கள். இவ்வாறாக மக்களின் பெயரைச் சொல்லி ஏமாற்றுகிற தொண்டு நிறுவனங்களின் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து ஒரு கண்காணிப்புக் குழு அமைக்க வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறைக்கான மானியக் கோரிக்கையிலே பேசுகின்ற வாய்ப்புக் கிடைத்தமைக்காக நன்றி கூறி என்னுடைய கருத்துக்களைக் கூற



ஆரம்பிக்கின்றேன். இந்தப் புத்தகத்தைத் திறந்து படிக்கின்றபோது, ''எந்த நாடு, எந்த தேசம் மகளிரை மதிக்கவில்லையோ, அந்த நாடு, அந்த தேசம் என்றும் உயர்ந்த நாடாக ஆனதில்லை; எக்காலத்திலும் உயர்ந்த நாடாக ஆகப்போவதுமில்லை. எந்தக் குடும்பத்தில் பெண் கவலையுடன் வாழ்கிறாளோ அக்குடும்பத்தில் வாழ்வுக்கு வழியும் இல்லை; நம்பிக்கையும் இல்லை'' என்கிறார். சுவாமி விவேகானந்தர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆக, இந்த மானியம், இந்தத் துறை, இந்த அரசு மகளிருடைய நிலை, எந்த அளவுக்கு உயர்த்தப்படவேண்டும்; மகளிருடைய நிலை இன்றைக்கு எந்த நிலையில் இருக்கின்றது என்பதனை உணர்ந்து செயல்படுகின்றது என்பதை இதிலே தெளிவாக உணர முடிகின்றது.

இதிலே இன்னொரு வரி குறிப்பிடப்பட்டுள்ளது. 'ஆடவர் மகளிர் விகிதாசாரம் சமநிலை அடைந்துவிட்டது' என்று. இந்த சம நிலை விகிதாசாரம் என்று சொல்வது. அது வேண்டுமானால் எண்ணிக்கையில் இருக்கலாம்; ஆனால் அவர்களுடைய எண்ணத்திலே இல்லை என்பது தான், அந்த சம நிலை எண்ணத்திலே வரவில்லை என்பது தான் என்னுடைய கருத்து. இன்றைக்கு நாம் பார்ப்போமேயானால், மகாத்மா காந்தியடிகள் கூறி இருக்கின்றார்கள். அதாவது அரசியல் சுதந்திரம் வேறு; பரிபூரண சுதந்திரம் என்று சொல்லப்படுகின்ற சுதந்திரம் வேறு. பரிபூரண சுதந்திரம் எது என்று சொன்னால் ஒரு பெண் நள்ளிரவிலே எல்லா அணிகலன்களையும் அணிந்துகொண்டு தன் இல்லத்திலிருந்து புறப்பட்டுச் சென்று மீண்டும் எப்படிப் புறப்பட்டுச் சென்றாளோ அப்படி எதையுமே இழக்காமல் கற்பு முதல் நகை முதல் எதையுமே இழக்காமல் அச்சமின்றி திரும்பி தன் இல்லத்தை அடைகின்ற ஒரு நிலை வரவேண்டும்; அந்த நிலை தான் பரிபூரண சுதந்திரம் என்று குறிப்பிட்டுள்ளார். ஆக அந்த நிலையை நாம் அடையவில்லை என்பதை நாம் கண்கூடாகக் கண்டுகொண்டிருக்கிறோம். இதற்கெல்லாம் காரணம் என்னவென்று பார்க்கிறபோது இந்த சமுதாயத்தில் ஒரு ஆண் ஆதிக்க உணர்வு இருந்திருக்கிறது. male chauvinism ஒரு பெண் தன் கணவனை இழந்து விட்டால் உடனே உடன் கட்டை ஏறுவது சதி—உயிரோடு வைத்து எரித்து விடுவது—எரித்துவிட்டு அதற்கு ஒரு கோவிலைக் கட்டி வணங்குவது—வணங்கி—இப்படிப்பட்ட கொடிய முறையை அமல்படுத்தி, பெண்களை ஏமாற்றுகிற முறையெல்லாம் இருந்து வருகிறது, இருந்திருக்கிறது. ஆகவே, எந்தவொரு மனைவியாவது இறந்த இடத்தில்' ஏதாவது ஒரு கணவனாவது வரலாற்றில் இடம் பெறுகிற வகையில் உடன்கட்டை ஏறினான் என்று இருக்கிறதா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே, இப்படிப்பட்ட நிலைகளை எல்லாம் இந்த சமுதாயத்தில் உருவாக்கி இருக்கிறார்கள்.

பிற்பகல் 12—35

அதைப்போல இந்தப் புத்தகத்தில் பல்வேறு இடங்களில் விதவைகளுக்கு உதவிகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு உதவிகள் என்று கூறப்பட்டு, அதற்கான சான்றிதழ்களுக்கு எல்லாம் அங்கே ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று வருகிறது. ஆனால் மனைவியால் கைவிடப்பட்ட கணவன், மனைவியை இழந்த கணவன் என்று வரவில்லை. காரணம் என்னவென்று கேட்டால் (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள். நீங்கள் யாரும் பேசுகிறபோது நான் என்றைக்கும் தலையிட்டதில்லை. (குறுக்கீடு) பாதிக்காது. நான் வழி சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேறொன்றும் அவர் சொல்லவில்லை. திரு. வி.கே. சின்னசாமி அப்படி ஏதாவது ஏற்பட்டால் நான் உடன்கட்டை ஏறிவிடுவேன் என்று சொல்கிறார். (சிரிப்பு).

திருமதி ரமணி நல்லதம்பி : தலைவர் அவர்களே, வரவேற்கிறேன். கணவனை இழந்துவிட்ட மனைவியை விதவை என்று பட்டமும் வழங்கி, அவளை சமுதாயத்தில் அமங்கலப் பொருளாக்கி, ஒத்திப்போ, வழியில் வராதே, எதிரில் வராதே என்று சகுனப் பிசகாக எல்லாம் கருதி இழிவு செய்திருக்கிற நிலையையெல்லாம் கண்கூடாகக் கண்டு இருக்கிறோம். வரலாற்றில் படித்து இருக்கிறோம். இன்றைக்கு கொஞ்சம் மாறுபாடு இருக்கிறது. இல்லையென்று சொல்லவில்லை. முற்றிலுமாக மாறவில்லை என்பதுதான் என்னுடைய வாதம். ஆகவே, படிப்பு வசதியை எடுத்துக்கொண்டாலும் ஒவ்வொரு குடும்பத்திலும் இரண்டு பிள்ளைகள் இருந்தால், ஆண் பிள்ளை கற்று கல்வியில் தேர்ச்சி உடையவனாக ஆக்குவதில் காட்டுகின்ற ஆர்வத்தை, அந்தக் குடும்பத்தில் அந்தப் பெண்ணுக்குக் காட்டத் தவறுகிறார்கள். இந்த நிலையெல்லாம் மாற வேண்டும் என்பதற்காக இதையெல்லாம் குறிப்பிட்டு, அவர்களுக்குப் பல்வேறு திட்டங்களையெல்லாம் அறிமுகம் செய்து, இந்தத் துறை இயங்கி வருகிறது. இந்த அரசு அதிலே நாட்டம் காட்டுகிறது.

அடுத்தபடியாக வரதட்சணைக் கொடுமை. பேப்பரில் பார்த்தால் ஸ்டவ் வெடித்து இளம் பெண் மரணம். தூக்கிட்டு தற்கொலை என்று வருகிற இந்த இரண்டுமே கொலையை மறைக்கிற ஒரு செயலே தவிர வேறு எதுவும் இல்லை. காவல் துறை அந்தக் கொலையை அப்படியே மறைக்கிறது. குலத் தொழில் கல்லாமல் பாடம் பெறும் என்று சொல்வார்கள். குலத் தொழிலாக வருகிற சமையல் தொழிலில் கேர்லஸ்ஸாக இருந்து யாரும் சாகமாட்டார்கள். ஸ்டவ்வை நானும் வைத்து தான் பார்க்கிறேன். வெடிக்க மாட்டேன் என்கிறது. ஆகவே



ஓட்டல்களில் சமையல் அறையில் ஆண்கள்தான் சமையல் செய்கிறார்கள். எந்தப் பத்திரிகையிலாவது ஓட்டலில் சமைக்கும் போது ஆண் சமையல்காரன் செத்துப்போய் விட்டான் என்று வந்திருக்கிறதா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வரவில்லை. ஆகவே, It is gross murder nothing but murder இப்படிப்பட்ட நிலைகளையெல்லாம் மாற்றி, அதற்கான வழிமுறைகளை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் செய்ய வேண்டும் என்பதற்காக இதைக் குறிப்பிடுகிறேன். அதாவது திருமணமாகி ஓரிரு ஆண்டுகளுக்குள் சந்தேகத்திற்குரிய முறையில் மரணம் ஏற்பட்டால் ஆர்.டி.ஓ. என்குயரி வைக்கிறோம். அதைப் போல ஸ்டவ் வெடித்து மரணம், பெண் தூக்கிட்டு தற்கொலை என்று முடிக்கிறார்களே, இதிலே கூட ஆர்.டி.ஓ. என்குயரி வைப்பதற்கு வழி செய்ய வேண்டும். அதற்கு ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வர வேண்டும்.

அடுத்தபடியாக விபச்சார வழக்குகள். மர்டர் கேசை எடுத்துக்கொண்டால் ஆயுதம் கொடுத்தவன், காட்டிக் கொடுத்தவன், வழி போனவன் இவர்களுக்கெல்லாம் குற்றவாளிகள் அக்கியூஸ்ட் நம்பர் 1, 2, 3 என்று போடுகிறார்கள். அதைப்போல திருட்டு நடந்தால் அந்தத் திருட்டிலே வாங்கியவனும் குற்றவாளி, திருடியவனும் குற்றவாளி—இரண்டுபேருக்கும் தண்டனை இருக்கிறது. ஆனால், விபச்சாரக் குற்றத்தில் 50 சதவீதம் , 50 சதவீதம் தப்பு பண்ணுகிறார்கள் இரண்டு பேரும். ஆனால், பெண்ணை தான் கைது செய்து இழிவுபடுத்தி, காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று, அங்கேயும் துன்புறுத்தி, பிறகு வாக்கு மூலங்கள் எல்லாம் வாங்கி, கோர்ட்டுக்கு அழைத்துச் சென்று, அங்கேயும் இழிவுபடுத்தி, பத்திரிகைகளில் எல்லாம் போட்டு இழிவுபடுத்துகிறார்கள். உண்மையாக இந்த சமுதாயத்திற்கு விபச்சாரத்தை ஒழிக்க வேண்டுமென்ற ஒரு உணர்வு இருக்குமானால் என்ன செய்ய வேண்டும்? ஆணையும் தண்டிக்க வேண்டும். அந்தக் குற்றவாளிகள் இரண்டு பேரையும் சமநிலையில் சீர்தூக்கிப் பார்த்தால்— should be treated on par. அந்த தண்டனை வழங்கினால், விபச்சாரக் குற்றங்கள் குறைய வாய்ப்பு இருக்கிறது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வேலையா இதிலே என்ன சொல்லப் போகிறீர்கள்?

திரு. டி. வேலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சட்ட பாயின்ட் சொல்கிறேன். முக்கியமான விளக்கம். அவர்களுக்கும் பிரயோஜனமாகத் தான் சொல்கிறேன். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி சொல்லுங்கள். அவர் ஏதோ சட்ட பாயிண்ட் சொல்கிறேன் என்கிறார்.

திரு. டி. வேலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, procurement of prostitution is an offence. Doing prostitution is not made an offence in law. Procurement of prostitution is made an offence in law. பெண்கள் விபச்சாரத்திற்கு கூப்பிடுகிறார்கள் என்பதற்குத்தான் அவர்கள் மீது வழக்குப்போடுகிறோமே தவிர, விபச்சாரம் செய்கிறார்கள் என்பதற்காக வழக்குப் போடவில்லை. அதனால், தான் ஆண்களை வழக்கிலே சேர்க்காமல், பெண்களை மட்டும் சேர்க்கிறார்கள்.

பிற்பகல் 12-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆண்களையும் சேர்க்க வேண்டும் என்பதுதான், திருமதி ரமணி நல்லதம்பி அவர்களுடைய கோரிக்கை. திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: ஆண்களையும் சேர்க்க வேண்டும். அதற்குத்தான், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும் ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து, அது மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. அங்கேயிருந்து உத்தரவு வந்தவுடன், நடைமுறைப்படுத்தப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, தண்டனை இருவருக்கும்தான்.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கருத்தைக் கூற குறுக்கீடுகள் இல்லாமல் தொடர, என்னை அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏன் என்றால், இந்தச் சமுதாயம் உய்வடைய வேண்டும், சமுதாயம் மேன்மை அடைய வேண்டும், நிலைநாட்டப்பட வேண்டும் என்று சொன்னால், அந்தக் காலத்திலே சட்டம் இயற்றிய நிபுணர்கள் ஆண் ஆதிக்கத்தின் காரணத்தினாலேதான் இப்படிப்பட்ட சட்டங்களை எல்லாம் இயற்றி இருக்கிறார்கள். எப்படி பெண்களுக்குத்தான் கற்பு என்று எண்ணுகிறோமோ, அப்படி, இது ஆண்களுக்கும் பொருத்தம் உடையது என்றே நான் எண்ணுகிறேன். வீட்டிலே இருக்கிற ஒவ்வொரு மனைவியும் என்ன நினைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், தன் புருஷன் ஏக பத்தினி விரதன் என்று எண்ணிக்கொண்டிருக்கிறாள், சரியான நடைமுறை இல்லாத காரணத்தாலே, இந்தப் பெண் மாத்திரம் அழைத்தால் எப்படி விபச்சாரம் நடக்கும்? அழைக்கின்றாளாம், நடக்கின்றதாம், எப்படி நடக்கும்? ஆகவே தான் நான் கேட்கிறேன் இருவரையும் கைது செய்து, வழக்கு மன்றத்திற்குக் கொண்டு வந்து, பேப்பரிலே எல்லாம் வந்துவிட்டது என்று சொன்னால், இன்னாரும் இன்னாரும் விபச்சாரம் செய்யும்போது, கையும் மெய்யுமாக பிடிபட்டு கோர்ட்டிலே புரட்யூஸ் பண்ணப்பட்டார்கள் என்று செய்தி வருமேயானால், பெண்களும் தங்கள் புருஷனைப் பற்றி தெரிந்து கொள்வார்கள்.



அவனும், நம் ஐ.ஏ.எஸ். வெளியே வந்துவிட்டதே, நம் ஐ.பி.எஸ். வெளியே வந்துவிட்டதே, நம் காலேஜ் புரபசர் வெளியே வந்துவிட்டதே என்று வெட்கப்படுவான், நிச்சயமாக தவிர்க்கப்படும் அல்லது குறையவாவது செய்யும். ஆகவே, இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர தனி நபர் தீர்மானத்தைக் கொண்டு வந்து இருக்கிறேன். மத்திய அரசை வலியுறுத்துகின்ற வகையில், இதை நான் கொடுத்து இருக்கிறேன். வரும் என்று எண்ணுகிறேன். அப்படி வருகின்ற வேளையிலே, நல்ல எண்ணம் உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள், அதற்கு ஆதரவு தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக நீங்கள் பார்த்தால், இந்த விபச்சார வழக்கிலே இப்படி பிடித்துக் கொண்டு வந்து கேவலப்படுத்துவது போதாது என்று சொல்லி, போன தமிழக முதல்வர் கருணாநிதி காலத்திலே, பெரிய பிளாஷ் பண்ணி ஒரு செய்தி நடந்தது. பத்திரிகைகள் எல்லாம் பக்கம் பக்கமாக எழுதினார்கள். என்ன என்று கேட்டால், தமிழக விபச்சார அழகிகள், பம்பாயில் விபச்சாரம் செய்ததாகப் பிடிபட்டு, அவர்களைக் காத்து மீட்டுக் கொண்டு வந்து, அவர்களுக்கு புனர்வாழ்வு தருகிறோம் என்று ஸ்டண்ட் விளம்பரம் எல்லாம் பண்ணி, இங்கேயிருந்து, டக்கு ஜிக்கு, டக்கு ஜிக்கு என்று படையோடு புறப்பட்டுப் போய், கொண்டு வந்து, வீதியிலே அவர்களை விட்டு சந்தி சிரிக்கவைத்தார்கள். இப்படிப்பட்ட கொடுமைகள் ஏன் நிகழ்கிறது? ஏன் அப்படி 400 ஆண்களைப் பிடித்துக் கொண்டுபோய் நிறுத்தியிருக்கலாமே, அதையெல்லாம் செய்வதற்கு துணிவற்ற அந்த முதல்வர் இப்படியெல்லாம் செய்து, தமிழக மக்களை தலைகுனியச் செய்து, அப்படியா, இன்னார் வீட்டிலே இந்தப் பிள்ளை இப்படியா என்று சொல்லி, எல்லோருக்கும் தெரிய வைத்து, அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களைத் தலைகுனிய வைத்து, இழிவுகளையெல்லாம் ஏற்படுத்திச் சென்றிருக்கிறார், சாதனை மன்னன். அவர்களிடம் நாங்கள் கேட்கும்போது, சட்டமன்றத்திலே கேட்கின்ற போது, விடுதலைப் புலிகள் இங்கே ஓடுகிறதே, அங்கே ஓடுகிறதே என்று கேட்கும்போது, ஐயய்யோ, அவர்கள் எல்லாம் ஆடவர்கள். அவர்கள் கையிலே ஆயுதங்கள் இருக்கின்றன என்று சொல்லி, அந்த டி.ஜி.பி-யும், அந்த முதல்வரும் நடவடிக்கை எடுக்கத் தயங்கினார்கள். சிகப்பு விளக்குச் சிங்காரிகள் பம்பாயிலே இருக்கிறார்கள் என்று சொல்லி, வீறு கொண்டு எழுந்து பிடித்துவந்தார்கள், அவர்களை. பொம்பளைகள் என்றால் இளிச்சவாயா ? அதிலேயும் சாதனை படைக்கவேண்டும் என்று சொன்னால், பெண்களிடம்தான்.

அதேமாதிரிதான், இந்தச் சட்டமன்றத்திலே எதிர்க்கட்சித் தலைவராக இன்றைய முதலமைச்சர் அமர்ந்திருக்கிறபோது இரண்டு மாடத்திலேயும், தன்னுடைய இரு மனைவிகளையும் வைத்துக் கொண்டு, இந்தக் காரியத்தை இங்கே நடத்துகிறார்

என்று சொன்னால், என்ன துணிச்சல் என்று பாருங்கள், ஒரு வருக்கு ஒருத்தி என்கிறபோது, இரண்டு தடவை திருமணம் செய்துவிட்டால், இரண்டாவது மனைவியே அந்தக் கணவனைக் கைது செய்யலாம் என்று சட்டம் இருக்கிறது. ஆனால், எந்தப் பத்திரிகையும் இதை எழுதவில்லை. அதாவது ஒரு பெண், தன்னுடைய இரு கணவரோடு இந்தச் சட்டமன்றத்திற்கு உள்ளே நுழைந்து அமர்ந்து இருந்தால், இந்தப் பத்திரிகைகள் சும்மா யிருந்து இருக்குமா என்பதை நீங்கள் சிந்தித்துப்பார்க்க வேண் டும் என்று கேட்டுக் கொள்கிறேன் '' சமன் செய்து சீர் தூக்கும் கோல்போல் '' என்று சொல்லிக் கொண்டு, ஏன் இதிலே மட்டும் '' டேக் இட் ஈசி பாலிசியிலே '' போக வேண்டும் என்று நான் கேட்கிறேன். அந்தப் பத்திரிகைகள் இதை எழுதி இருக்கலாம், அல்லவா ? கருணாநிதி அவர்கள் செல்வி ஜெயலலிதா அவர் களை சட்டமன்றத்திலே தாக்குகின்றபோது, தன்னுடைய இரண்டு மனைவிகளையும் இரண்டு மாடங்களிலே வைத்துக் கொண்டுதான், இதைச் செயல்படுத்தினார்கள் என்று எழுதி இருக்கலாம் அல்லவா ? ஆகவேதான் சொல்கிறேன். எல்லோ ருக்கும் '' மேல் சாவனிசம் '', ஆண் ஆதிக்க உணர்வு இருக் கின்றது. ஆகவே, இந்தச் சமூகத்திலே ஒரு மேன்மையான நிலை ஒரு நல்ல சமதர்ம சமுதாயம் உருவாக வேண்டும் என்று சொன்னால், அரசு போடுகின்ற திட்டங்கள் எல்லாம் செயல் படுத்தப்பட வேண்டும். உண்மையான பயனைத் தர வேண்டும் என்று சொன்னால், நிச்சயமாக இந்தச் சமத்துவம் வந்தேயாக வேண்டும், இந்த நிலையிலே தான், இந்த மானியக் கோரிக்கை புத்தகத்திலே குறிப்புகள் வந்து இருக்கின்றன. ஆகவே, இவை களை எல்லாம் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும், பெண் களுக்கு இருக்கிற இந்தக் கொடுமைகளையும், சமூக நிலை களையும், பார்த்துத் தான் சிசுவதை ஏற்படுகிறது. எல்லாருமே என்ன என்னமோ சொன்னார்கள், ஆனால், எனக்கு ஒரு அச்சம், நம்மை மாதிரி நம் பெண்ணும் கஷ்டப்பட வேண்டிய திருக்கும், நம்மை மாதிரி நம் மகளுக்கும் வரதட்சணை பிரச் சினை வரும். தன்மானத்தோடு தன்னுடைய கணவன் வீட்டிலே, அவள் வாழமுடியாது. ஒருவேளை தற்கொலை செய்ய வேண்டிய நிலை அந்த வீட்டுப் பெண்ணைப் போல, நம் வீட்டுப் பிள்ளைக் கும் வந்துவிடுமோ என்று அஞ்சுகின்ற காரணத்தாலே, அந்த அளவுக்கு நகையும், ரொக்கமும் நம்மால் சம்பாதிக்க முடியாதே என்ற அச்சத்தாலேதான், பெண்மகளை கொலை செய்து விடு கின்ற நிலைக்கு அவர்கள் ஆளாக்கப்படுகிறார்கள், அதனால் வயிற்றிலே வளர்கின்ற குழந்தை ஆண். என்றால். வைத்துக் கொள்ளவும். பெண் என்றால். அதை அழித்து விடவும் துணி கின்ற அவல நிலை ஏற்படுகிறது. ஆகவே, கேட்கிறேன் இந்த நிலை நீடித்து, பெண் குழந்தைகளை எல்லாம் கொல்லுகின்ற நிலை இந்தச் சமுதாயத்திலே உருவாகுமேயானால், பிறகு பெண்கள் பஞ்சம் வந்துவிடும். என்னவோ சமநிலை வந்து விட்டது என்று சொல்கின்றார்களே, விகிதாச்சாரத்திலே இது



குறைந்து விடுமேயானால், பிறகு ஃபாரினிலே போய் மணம களைத் தேட வேண்டிய அவல நிலைகூட வந்தாலும் வந்துவிடும், அப்படிப்பட்ட சூழ்நிலைகள் எல்லாம் தவிர்க்கப்பட வேண்டு மென்று சொன்னால், ஒரு [illegible] இந்தச் சமூதாயத்திலே ஏற்படுகின்ற வகையிலே [illegible] குறை தன்னுடைய பிரச்சாரத்தை மேற்[illegible]வேண்டுமென்[illegible] நான் கேட்டுக் கொள்கிறேன்.

164940

[illegible] பிற்பகல் 12–45

'' செல்ஃப் டிஃபென்[illegible] அனைத்[illegible] பற்றி இங்கே நிறைய திட்டங்கள் இருக்கின்ற[illegible] பெண்கள் [illegible]களுடைய சொந்தக் காலில் சுயமாக வேலை பார்த்து [illegible]திக்க வேண்டுமென்பதற் காக பல்வேறு திட்டங்களை அறிவித்து இருக்கிறார்கள். ஆசிரியர்களில்கூட, 5ஆம் வகுப்பு வரையில் அந்தப் பெண் களையே போட வேண்டுமென்று ஒரு முன்னோடித் திட்டத்தை நம்முடைய முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதைப்பாராட்டுகிறேன், அதைப் போன்று '' டிரைவராக '' ஒரு பெண்ணைப் போட்டிருக்கிறார்கள். நம்முடைய டிரான்ஸ் போர்ட் மினிஸ்ட்டர் கன்னியாகுமரி மாவட்டத்தில், முன்னோடி யாக, இந்த விதமாக பெண்களுக்கு வேலை வாய்ப்பிலே உரிமை களைத் தருகிறார்கள். நான் என்னுடைய வேண்டுகோளாகக் கடந்த சட்டமன்றத் தொடரிலேகூட இதைப் பற்றி பேசி யிருக்கிறேன். அந்த மணமகன் மணமகள் கல்வி கற்றவளாக இருக்கவேண்டுமென்று எண்ணுகின்ற காரணத்தால் டிரெயினிங் படிக்கின்ற வாய்ப்புகளை அவர்களுக்குப் பெருக்கித் தர வேண்டும். நர்ஸ் டிரெயினிங் படிக்கின்ற வாய்ப்புக்களை அவர்களுக்குப் பெருக்கித் தர வேண்டும். வேலை வாய்ப்புத் தர முடியுமோ, தரமுடியாதோ அவர்களுக்கு அந்தக் கல்வியை தந்துவிடுவோம் என்று சொன்னால், நிச்சயமாக நமக்கு ஒரு பிரச்சினை வருகின்றபோது வேலை செய்து பிழைத்துக் கொள்ள லாம் என்கின்ற மனோதிடம் அவர்களுக்கு வந்துவிடும். அப்படி வருகின்ற வேளையிலே, நிச்சயமாக மணவாழ்க்கையில் கசப்புகள், மன முறிவுகள் எல்லாம் ஏற்படுகின்ற வாய்ப்புக்கள் தவிர்க்கப் படும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்த கருத்திற்கு நான் செல்ல விழைகிறேன். அடுத்து மது. மங்கையருடைய மகிழ்வினை குலைக்கிறது இந்த மது. வீட்டில் வந்து மனைவி மக்களை அடித்துக் கொல்கிறான். வறுமை ஒருபுறம், அடி உதை ஒருபுறம். ஆகவேதான் நாம் இந்த மதுவை நிச்சயமாக பூரண மதுவிலக்கைக் கொண்டுவர வேண்டும் என்று போராடுகிறோம். வாதாடுகிறோம், கேட்கிறோம், கோரிக்கையாக வைக்கின்றோம். இந்த மது நிச்சயமாக ஒழிக்கப்பட்டேயாக வேண்டும். மதுவினை அருந்திக் கொண்டு எவனாவது ஒருவன் தன்னுடைய மனைவியை

அடிக்கிறான் என்று சொன்னால், அந்த மனைவி காவல் நிலையத்திற்குச் சென்று, என் கணவர் என்னை அடித்துவிட்டார் என்ற புகாரைத் தருவாளேயானால், உடனடியாக வழக்கு பதிவு செய்து அவர்மீது நடவடிக்கை எடுத்து, அந்த மனைவி சரீரப் பிரகாரமான சித்தரவதைக்கு ஆளாக்கப்படுவதிலிருந்து மீட்கப்படவேண்டுமென்று ஒரு கோரிக்கையை நான் இந்த மன்றத்தின் மூலமாக மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் வைக்கிறேன். 'சில்ரன் ஆஃப் டுடே ஆர் தி சிடிசன்ஸ் ஆஃப் டுமாரோ' இன்றைய குழந்தைகள்தான் நாளைய குடிமக்கள் என்கின்ற நிலையில் நல்ல பிரஜைகளை உருவாக்குவதற்காக இந்த குழந்தைகளைப் பேண அவர்களுக்கு நல்ல ஊட்டச் சத்து எல்லாம் தந்துகொண்டிருக்கிறோம். ஆகவே, இவை எல்லாம் ஊனமுற்றவர்களுக்காக நல்ல பல திட்டங்களை, இலவச பாஸ் ஊன்றுகோல், கண்ணாடி, கேட்கும் கருவி, பிறகு ஸ்காலர் ஷிப், படிக்கின்ற வசதிகள், இடவசதிகள், நல்ல வேலை வாய்ப்பு வசதிகள் போன்றவற்றை எல்லாம் கொடுத்திருக்கி றோம். நல்ல தொழிலுக்கான பயிற்சிகளை எல்லாம் கொடுத்திருக்கிறோம். நல்ல தொழிலுக்கான பயிற்சி களை நாம் அறிவித்திருக்கிறோம். 'ப்ரிவென்ஷன் இஸ் பெட்டர் தேன் க்யூர்' ரொம்ப சந்தோஷம். முதல் வரிசையிலே விவேகானந்தர் அவர்களுடைய வாக்கைப் போட்டிருக்கிறீர்கள். எனவே, மனைவி சந்தோஷமாக நிம்மதியாக வாழ்வாளேயானால், அந்த அடி உதை இல்லாமல் அந்த கர்ப்ப காலத்தில் ஒரு பெண் இருப்பாளேயானால், நிச்சயமாக ஊனமுற்ற குழந்தை பிறப்பது தவிர்க்கப்படும், மன வளர்ச்சி குன்றிய குழந்தை பிறப்பது தவிர்க்கப்படும் என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள். ஆகவே, அந்த வகையில் பெண்களுக்கு பாதுகாப்பான, நிம்மதியான வாழ்க்கை ஏற்படக் கூடிய அளவிலே சமுதாயத்திலே ஒரு மறுமலர்ச்சி, ஒரு புரட்சி ஏற்பட வேண்டும். இந்த மன மாற்றத்திற்கான ஏற்பாடுகளை அரசு மனமுவந்து செய்ய முன்வரவேண்டும்.

இந்த சத்துணவு ஊழியர்களைப் பொறுத்தவரையில் அவர் களுடைய வேலை நிரந்தரம் செய்யப்படவேண்டும். ஏனென்றால் நிறைய பெண்கள்தான் அதில் இருக்கிறார்கள். கருணாநிதி ஆட்சியில் இளைஞர் அணி என்ற ஒரு அணி வைத்து ரூ. 175 சம்பளத்திற்கு அவர்களைப் போட்டார்கள். புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். காலத்தில் அத்தனை பேரையும் எங் கெங்கே வேலைகள் காலியாக இருந்ததோ அங்கே யெல்லாம் 'அப்சார்ப்' பண்ணினார்கள். அதே மாதிரி பல்வேறு துறைகளிலேயும் வேலைகள் காலியாக இருக் கின்றது. இவ்வளவு நாட்கள் அவர்கள் குறைந்த ஊதியத்தில் பணியாற்றி இருக்கிறார்களே இதனைக் கருத்திலேகொண்டு, அவர்கள் கல்வித் தகுதிக்கேற்ப எங்கெங்கே வேலை வாய்ப்புகள் காலியாக இருக்கிறதோ, அங்கேயெல்லாம் இவர்களை



'அப்சார்ப்' செய்துகொள்ள வேண்டுமென்று சொல்லி, அடுத்தபடியாக இன்னொரு சற்று அதிக சத்துணவு மையங்களை அவர்களுக்காக செலக்ட் பண்ணுவோமேயானால் இரண்டு செட் அரசு ஊழியர்கள் நமக்கு ஆதரவாளர்களாக இருப்ப தற்கு வாய்ப்பு இருக்கிறது. இன்றைக்கும் அரசுத் துறை யிலே திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரிக்கின்ற அதிகாரிகள் அதிகமாக இருக்கிறார்களே என்று சொன்னால் அதற்குக் காரணம், அவர்கள் அந்த வகையிலே அவர்களுக்கு உதவி செய்திருக்கிறார்கள். அப்படி வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். அந்த எண்ணத்திலே அவர்கள் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அதனால்தான் அவர்கள் அப்படி இருக்கிறார்கள்.

அடுத்து சமூக பாதுகாப்பு துறை. இதன் மூலமாக வாழ்வு இழந்தவர்கள், தடுக்கி விழுந்தவர்கள், அந்த வாழ்க்கை யிலே ஈடுபட்டவர்களை எல்லாம் மீட்டு வீட்டிலே ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். பெண்கள் தவறி விட்டால் அவள் அதற்குப் பொறுப்பல்ல, சூழ்நிலைதான் காரணம், அல்லது சமூகவிரோதிகள் தான் காரணம் என்ற நல்ல எண்ணத்தோடு வீட்டில் வைத்து, அந்தப் பெண்களை வாழ வைக்கின்ற ஒரு நிலை இல்லாத காரணத்தினாலே, அவர்களை வீட்டை விட்டு விரட்டிவிடுகின்றார்கள். இப்படிப்பட்ட அபலைகளுக்காக காப்பகங்களை வைத்து, இந்த அரசு நல்ல பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இந்த பெண்களுக்காக இன்னும் அதிகமாக வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தித்தர வேண்டும். சிறார்களை அந்த 'பாஸ்டல்' ஸ்கூலில் போடுகிறார்கள். அந்த காப்பகம் இருக்கிறது. 'ஹார்டன்டு கிரிமினலாக' அவர்கள் வெளியே வந்துவிடாமல் சுய வேலைகளை, அதற் காகப் படித்து விட்டு வெளியே வந்தவுடன், ஏதாவது வேலை வாய்ப்பை ஏற்படுத்தித்தர அல்லது தொழிலை ஏற்படுத்தித் தர வகை செய்கின்ற வகையிலே இன்னும் அதிக கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திருமதி கே. எம். கலைச் செல்வி.

பிற்பகல் 12.50

<u>திருமதி கே. எம். கலைச்செல்வி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனையோ லட்சியக் குயில்களின் குரல் வளைகள் நெறிககப்பட்டு, எத்தனையோ லட்சிய மலர்கள் கசக்கி எறியப்பட்டு, எத்தனையோ கொள்கை குன்றுகளின் தோள்கள் முறிக்கப்பட்டு, எத்தனை எத்தனையோ லட்சிய தீபங்கள் அணைக்கப்பட்டு உருவான இயக்கத்தின் உயிர் மூச்சாய் காலத்தால் கண்டு எடுக்கப்பட்டு இந்த அவனி

போற்ற பவனி வருபவர் தான் நம் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள். இப்படிப்பட்ட கழகத்தின் திருச் சபையிலே நாங்கள் தினந்தோறும் உச்சரிக்கும் சுப்ரபாதமே புரட்சித் தலைவி, புரட்சித் தலைவி புரட்சித் தலைவிதான். அதே போல ஏழைகளின் இதயம் என்னும் தேவாலயத்தில் நிரந்தர இறைவனாக தினந்தோறும் பூஜிக்கப்படுபவரும் புரட்சித் தலைவி புரட்சித் தலைவியே.

அன்றொரு நாள் இதே அவையில் புரட்சித் தலைவியை அவமதித்து அலங்கோலப்படுத்தி உதாசீனப்படுத்திய உன் மத்தர்கள் கண் முன்னாலேயே கொடுங்கோலர்களின் கொட்டத்தை அடக்கி, செங்கோலை நிமர்த்தி சிந்துபாடி இந்த அவையின் தலைமை பீடத்தை அலங்கரித்து வருகிற வரலாறுதான் தமிழகத்தில் புரட்சித் தலைவியின் வரலாறு, இந்த புனிதம் மிக்க தமிழ் மண்ணை கறைப்படுத்தி கயவர் களின் ஆயுத கலாச்சாரத்தினை வேரோடும் வேரடி மண் ணோடும் சாய்த்து சங்கநாதம் முழங்கிய வரலாறுதான் புரட்சி தலைவியின் வரலாறு. எத்தனையோ விசித்திர மான செயற்கை தலைவர்களை எதிர்த்து குரல் கொடுத்த புனிதமான பூமிதான் தமிழகம். அந்த நிலம் தாமாகவே ஏற்றுக் கொண்ட தலைவிதான் புரட்சி தலைவி. தமிழகம் முழுவதுமான ஒரு பொற்காலம் மலரும் வரை புரட்சி தலைவி யின் ஆட்சியே மலரும். தொடரும். புரட்சித் தலைவி பொன்னை விதைத்து இருக்கிறார்கள். அதனால் ஒரு பொற்காலத்தை அறுவடை செய்யப்போகிறார்கள்.

சுமைகள் வரும்போது அவற்றை அவர் பிறரோடு பகிர்ந்து கொள்வதில்லை. எல்லாவற்றையும் அவரே சுமந்து கொள்கிறார். ஆனால் சுகம் வரும்போது அதை அவர் பிறருடைய முகவரிகளுக்கு பகிர்ந்து அனுப்பி விடுகிற தியாகத் தின் மறு உருவம் தான் புரட்சி தலைவி என்றால் அது மிகை யாகாது. அதைப்போல எல்லையற்ற கருணை பிரவாகத்தின் வெளியீடாகவே அவரது ஒவ்வொரு செயலும் விளங்குகிறது. தீர்க்க தரிசனம் நிறைந்த அவரது சிந்தனை ஓட்டங்கள் பிரச்சினைகளை வெற்றி கொள்வதற்கே பிறக்கின்றன என்பது தான் உண்மையிலும் உண்மை. அண்ணா பெரியாருடன் பொன் மனச் செம்மல் புரட்சித் தலைவருடன் அடித்தளத்தில் சலனம் இன்றி கலந்து திராவிட இயக்கத்தில் திரிவேணி சங்கமத்தை உருவாக்கிய உலகம் வியக்கும் உன்னத தலைவி தான் நம்முடைய புரட்சித் தலைவி. மைல்கற்களை தாண்டிக்கொண்டே போகிறவர்கள் மலைச் சிகரத்தை தொடுவது போல பல்வேறுபட்ட திருப்பு முனைகளை எட்டிபுரட்சித் தலைவியின் ஆட்சியில் தமிழகத்தில் —, முன்பெல்லாம் கோவிலே இருட்டாக இருந்தது — இப்போது இவருடைய ஆட்சியின் கோவிலே ஆயிரம் கோபுர தீபங்கள்.



அந்தகார இருட்டை போக்கிய கலங்கரை விளக்கம்தான் புரட்சித் தலைவி. எதுவரை நீல அலைகள் பாடுமோ எது வரை வானம் நட்சத்திரப் புள்ளிகளை எழுதுமோ எது வரையில் செந்தமிழ் நாட்டில் தென்றல் காற்று வீசுமோ அது வரை. புரட்சித் தலைவியின் புகழ் நிலைக்கும் என்று கூறி, இப்படி ஒரு நெடிய இனிய வரலாற்றுக்கே சொந்தமாகி விட்ட புரட்சித் தலைவியின் தலைமையில் விளங்கும் இந்த பத்தாவது சட்டமன்றத்திலே அதனுடைய பேரேட்டிலே என் பெயரையும் பதித்து ராமனுக்கு உதவிய சிறு அணிலின் பணி என் பணியாக இருந்தாலும் அந்தப் பேற்றை பெற வரம் கொடுத்து அருளிய அன்னையின் தலைவியின் பொன் மலர் பாதங்களில் என் பணி வான சிரம் தாழ்த்தி கரம் குவித்து வணங்கி இந்த மானியக் கோரிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களைக் கூற விழை கிறேன்.

எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும் இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும் என்ற வாக்கிற்கு இணங்க இன்று சமூக நலத் துறையின் மூலம் பெண்களின் மறுமலர்ச்சிக்காக தமிழகத்தில் புரட்சி தலைவி எடுத்துள்ள முடிவுகளும், குழந்தை களின் நலத்திற்காக அவர் ஏற்படுத்தி உள்ள திட்டங்களும் அதே சமயத்தில் சமூகத்தில் பின்னால் தள்ளப்பட்டிருக்கிற விதவைகள் போன்ற ஆதரவற்ற பெண்களுக்கும் புரட்சித் தலைவி இன்று அருமையான திட்டங்களை வழங்கி யிருக்கிறார்கள். சமூக நலத்துறையை எண்ணும்போது அதில் முதன்மையாக கருதப்படுவது சத்துணவுத் திட்டம். புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் அன்று 80 லட்சம் குழந்தை களுக்கு அந்தத் திட்டத்தை அளித்து, தான் இளமையில் பசியின் கொடுமையை உணர்ந்து, கொடிது கொடிது இளமையில் வறுமை என்பதை உணர்ந்து நமது முன்னாள் முதல்வர் பொன் மனச் செம்மல் புரட்சித் தலைவர் அவர்களால் கொண்டு வரப் பட்ட திட்டம்தான் சத்துணவுத் திட்டம்.

உலகமே பாராட்டி வியந்த அந்த பொன்னான திட்டத்தை புரட்சித் தலைவர் அவர்கள் முதலில் ஏற்றுக் கொண்டபோது இதை புரட்சித் தலைவர் அவர்களால் நடத்தி விட முடியுமா என்று எல்லோரும் வியந்தார்கள். ஆனால் நான் பிச்சை எடுத் தாவது இந்தத் திட்டத்தை நிறைவேற்றியே தீருவேன், இந்த நாட்டு மழலைச் செல்வங்களின் வறுமையைப் போக்கியே தீருவேன், அவர்களின் பசிப் பிணியை அறவே நீக்கியே தீருவேன் என்று புரட்சித் தலைவர் அன்று கங்கணம் எடுத்துக் கொண்டு உண்டி கொடுத்தார் உயிர் கொடுத்தார் என்பதற்கு இணங்க நடத்திக் காட்டினார். அதைத் தொடர்ந்து நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் அந்த 80 லட்சம் குழந்தைகளின் பசியைப் போக்கி வருகிறார்கள். இந்த இடத்தில் நம்முடைய புரட்சித் தலைவி அவர்களால் உருவாக்கப்பட்ட இந்த சத்துணவு

[திருமதி கே. எம். கலைச்செல்வி] [1992 ஏப்ரல் 10

அமைப்பாளர்கள் பகுதி நேர ஊழியர்களாக நிரந்தரம் ஆக்கப்படாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் அந்தப் பகுதி நேர ஊழியர்களை நிரந்தரமாக்கி அவர்களுக்கு இப்போது வழங்கி உள்ள தொகையை இன்னும் அதிகப்படுத்தி அவர்களுடைய பணியை முழுமையாக ஏற்றுக்கொண்டு அவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று மெத்தப் பணிவோடு வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

எனவே அந்தத் திட்டத்தைத் தொடங்கியபோது ஒருசில சமயங்களில் ஒன்றிய அலுவலகத்தில் பி.டி.ஓ. வந்து அமர்ந்து ஒன்றியத்திலுள்ள அத்தனை விதவைகளையும் வரவழைத்து விசாரணை செய்கிறார்கள். அத்தனை விதவைகளுக்கும் கடனை வழங்கும் திட்டத்தை அமல்படுத்த வரும்போது ஒன்றியத்திலுள்ள எல்லா விதவைகளையும் வரவழைத்து அந்தக் கடனை வழங்க அவர்கள் பரிசீலனை செய்கிறார்கள். ஒரு ஒன்றியத்திற்கு இவ்வளவு பேர்களுக்குத்தான் கடன் வழங்க முடியும் என்ற நிலை இருக்கும்போது அதை வரையறுத்து, நம்முடைய கிராம சேவகர்கள் மூலம் அவர்களைத் தேர்ந்தெடுத்து, அந்தக் கடனை வழங்கலாம். ஆனால் ஒன்றியத்திலுள்ள அத்தனை பேர்களையும் வரவழைத்து, சிலருக்கு இல்லை என்கிறபோது, அவர்கள் ஏமாற்றத்தோடு செல்லுகின்ற நிலையைத் தவிர்க்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் என்னுடைய தொகுதிப் பிரச்சினைகள் சிலவற்றை இப்போது கூற விரும்புகிறேன். என்னுடைய காட்பாடி தொகுதியில், காட்பாடி, தாராபடுகோடு கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு 35 இலட்சம் ரூபாய் ஆகும் என்று குடிநீர் வடிகால் வாரியத்தால் மதிப்பீடு செய்யப்பட்டது. அதற்கு நம்முடைய மாண்புமிகு இதயதெய்வம் அவர்கள் அனுமதி அளித்து, அந்தத் திட்டத்தை அடுத்த ஆண்டிலாவது நிறைவேற்றித் தரவேண்டுமென்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் நான் ஏற்கெனவே இந்த மன்றத்தில் வலியுறுத்தியதுபோல காட்பாடியை தனித் தாலுகாவாகப் பிரிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அதை வேலூர் தாலுகாவில் சேர்ப்பதாகக் கூறியுள்ளார்கள். என்னுடைய தொகுதி காட்பாடி ஆர்.எஸ்.லிருந்து திருவலம் வரையில் விரிந்திருக்கிற ஒரு தொகுதி. ஏறத்தாழ 35 கிலோமீட்டர் தூரம் இருக்கிறது. அந்த 35 கிலோமீட்டர் தூரம்



1992 ஏப்ரல் 10] [திருமதி கே. எம். கலைச்செல்வி]

சென்றுவர இப்போதே மிகவும் கஷ்டப்படுகிறார்கள். வேலூர் பெரிய தாலுகாவாக இருப்பதால் அதில் இந்தக் காட்பாடியையும் இணைத்தால் மேலும் அதிக சிரமம் ஏற்படும் என்பதால் காட்பாடியைத் தனித் தாலுகாவாக வைக்க நீங்கள் அவசியம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மெத்தப் பணிவோடு கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : செல்வி கோ. மல்லிகா.

<u>செல்வி கோ. மல்லிகா</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்தில் உள்ள அனாதைகள், ஆதரவற்றோர், இல்வாழ்க்கைத் துணைவனை இழந்தோர், ஈகைக் குணம் கொண்டோர் கொடையை எதிர்நோக்கி ஏங்கும் எளியோர். உடல் ஊனமுற்றோர் ஆகியோரின் நல்வாழ்வு மற்றும் மகளிர் மேம்பாடு என்கிற உயர்ந்த திட்டங்களைத் தமிழக மக்கள் அடைய திட்டமிடப்பட்டு, தரப்பட்டுள்ள இந்தச் சமூகநலன் குறித்த மானியக் கோரிக்கையை வரவேற்று என் அன்பு அன்னை, இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவியின் சிந்தனையால், உணர்வால், எண்ணத்தால், கருத்தால் தீட்டப்பட்டு, அவை மன வைக்கப்பட்டுள்ள இந்தக் கொள்கைக் குறிப்பிலே அறிவிக்கப்பட்டுள்ள நல்ல திட்டங்கள் நாட்டு மக்கள் மத்தியிலே நல்லதொரு வரவேற்பைப் பெறும் என்கிற என் எண்ணத்தை வெளிப்படுத்தி, இதயதெய்வத்தின் பொற்பாதங்களை வணங்கி, ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

கடற்கரைப் பகுதிகளை அதிகமாகக் கொண்டுள்ள புவனகிரி தொகுதியில் அதிகமான அளவில் வாழ்வோர் மீனவ மக்களே ஆவர். அந்த மீனவர்கள் நலன் கருதி நல்ல பல திட்டங்கள் நடைமுறையில் உள்ளன என்றாலும் அந்த மகளிர் மாற்றுப்பணி புரிய சமூக நலத்துறை சில புதிய திட்டங்களைத் தீட்டியுள்ளதை நான் வரவேற்கிறேன். குறிப்பாக கூடை முடைதல். பாய் நெய்தல், தையல் பயிற்சி அளித்தல் போன்றவற்றில் அந்த மகளிரை ஈடுபடுத்துவதன் மூலம் கடலில் சென்று பணி செய்யாத உள்ள சூழ்நிலைக் காலங்களில் மகளிர் மேற்கொள்ளும் இத்தகைய பணிகள் அவர்களுடைய வாழ்க்கையை செம்மையுறச் செய்யும் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போலவே விவசாயத் துறையில் நாற்று நடுதல், களை பிடுங்குதல் போன்ற பணிகளில் ஈடுபடுகின்ற மகளிர் சமூகக் காடுகள் வளர்க்கும் திட்டத்தில் பங்கேற்க வைப்பதன் மூலம் ஆண்டு பூராவும் அந்த மகளிர் வாழ்வு மகிழ்ச்சியாக இருக்கும் வாய்ப்பு உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[செல்வி கோ. மல்லிகா] [1992 ஏப்ரல் 10

அரசு அலுவலகங்களில் 30 சதவீதம் பணி இடங்கள் மகளிருக்கு ஒதுக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் பணி செய்யும் மகளிர் எல்லா இடங்களிலும் உள்ளனர். எனவே, தாலுகா அளவிலும் ஒன்றிய அளவிலும் கூட பணி செய்யும் மகளிர் விடுதி கட்ட அரசு திட்டமிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு அஞ்சல் கல்வித் திட்டம் மூலம் எண்ணற்ற மகளிர் ஏற்றமிக்க பட்டம் பெற விழைகின்றனர். குறிப்பாக இன்றைக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அஞ்சல் வழி மூலம் ஆயிரக்கணக்கான பெண்கள் படிக்கின்றனர். இவர்கள் நேர்முகப் படிப்புக்காக சிதம்பரம் வரவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறபோது தங்கும் வசதியின்றி தவிக்கின்றனர். எனவே, பணி செய்யும் மகளிருக்கு விடுதிகள் ஆங்காங்கே இருப்பது போல சிதம்பரம், அண்ணாமலை நகர் மற்றும் அருகிலுள்ள புவனகிரி ஆகிய இடங்களில் படிக்கும் மகளிருக்கு என்று தங்கும் விடுதிகள் ஏற்படுத்தித் தர அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெற்றோரும் இன்றி, உற்றோரும் இன்றி, உதவி செய்ய மறுத்து உதறித் தள்ளப்படும் ஆதரவற்றோர்களுக்கான இல்லங்கள் தாலுகாதோறும் ஏற்படுத்தப்பட வேண்டும். அந்த ஆதரவற்றோர் இல்லத்தில் முறையான கல்வி கற்க ஏற்பாடு செய்வதோடு நல்ல தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று கோருகிறேன்.

பிற்பகல் 1-00

கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு உதவிக்கரம் நீட்டத் தயங்காது திட்டங்களை அறிவிக்கும் நமது புரட்சித் தலைவியின் ஆட்சிக் காலத்தில் அத்தகைய மகளிருக்கு மேல் படிப்பு படிக்க வேலை வாய்ப்பில் முன்னுரிமை பெற அரசு ஆணைகள் வெளியிடப்பட வேண்டும் என்று கூறிக்கொள்கிறேன். இந்த மகளிருக்கு வேலை வாய்ப்பைத் தரவும், கல்லூரிக் கல்வி பெறவும் வயது வரம்பைத் தளர்த்தி சலுகை அளிக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், பச்சிளம் சிறுவர்கள் பள்ளி செல்ல வேண்டும், அங்கு பசியோடு பாடம் கேட்கும் நிலை மாற வேண்டும் என்கிற விழுமிய நோக்கத்தில் ஆரம்பிக்கப்பட்டதாகும் அது சிறப்பான முறையில் நடைபெற்று வருவதை நாட்டு மக்கள் பாராட்டுகிறார்கள். அந்த மையங்களில் பணியாற்றும் சத்துணவுப் பணியாளர்கள் கல்வித் தகுதி இருப்பின் அவர்களுக்கு ஆசிரியர் வேலை அல்லது பள்ளிகளில் உதவியாளர் வேலை அளிப்பதில் முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வரதட்சணை மறுமணம் போன்றவற்றில் கொடுமைப்படுத்தப்படுகின்ற பெண்களுக்குப் பாதுகாப்பு அளிக்க,



1992 ஏப்ரல் 10] [செல்வி கோ. மல்லிகா]

உயிர் பாதுகாப்பு அளிக்க பெண் காவலர்களையே கொண்ட காவல்துறை தனிப் பிரிவு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அமைத்தல் வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். குடும்பத் தலைவர் இறந்து விட்டால் அதற்காக அரசு அளிக்கின்ற மானியத் தொகை 3 மாதத்திற்குள் விண்ணப்பிக்க வேண்டும் என்று தற்போது விதி உள்ளது. தலைவனை இழந்து தாங்கொணாத துன்பத்தில் உள்ள மங்கையர் விழிப்புணர்ச்சி பெற்று தங்கள் இயல்பான நிலையை அடைய தற்போதுள்ள சமுதாய சூழ்நிலையில் 3 மாதங்களுக்கு மேல் ஆகிவிடுவதால், இந்த விதியை 6 மாத காலத்திற்குள் என்று மாற்றியமைக்க அரசு முன்வர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஒருங்கிணைந்த மகளிர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தென் ஆற்காடு மாவட்டத்தில் செயல்படவுள்ள மகளிர் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் புவனகிரி தொகுதி மகளிருக்கு வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 73 மகளிர் தையல் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மாநிலம் முழுவதும் உள்ளன. என் புவனகிரி தொகுதியிலும் ஒரு தையல் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்த வேண்டும் என்று மெத்தப்பணிவோடு கேட்டுக் கொண்டு வாய்ப்பு அளித்ததற்கு மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்த பெண்கள், குழந்தைகள், ஊனமுற்றோர் ஆகியோருடைய நலத் திட்டங்களை நான் முழு மனத்தோடு வரவேற்று என்னுடைய ஒரு சில கருத்துக்களைச் சொல்வதற்கு முன்பாக இன்றைய தினம் நம்முடைய மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் காரிலே வந்திருக்கிறார்கள்—உதவி செய்கின்ற அந்த எண்ணத்தைச் சொல்கிறேன்— அவர்கள் காரிலே வரும்போது குழந்தைகள் அங்கே ஆக்ஸிடென்ட்டாகி அவர்கள் ஒரே கூட்டமாக இருந்த நேரத்திலே அமைச்சர் அவர்கள் தன்னுடைய காரை நிறுத்தி அந்தக் குழந்தைகளைப் பார்த்துவிட்டு, தன்னுடைய காரிலேயே அந்தக் குழந்தைகளை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டு அவர்கள் வேறொரு வண்டியிலே வந்தார்கள் என்பதை அறிந்தபோது நான் உண்மையிலேயே மகிழ்ச்சி அடைந்தேன். தான் ஒரு அமைச்சர். தனக்குப் போலீஸ் பாதுகாப்பு இருந்தது. ஆனாலும் போங்கள் என்று சொல்லவில்லை. அங்கே நிறுத்தி அந்த உதவி செய்ததான அந்த எண்ணத்தை உடைய ஒரு அமைச்சர் கையிலே நம்முடைய முதல்வர் அவர்கள் இந்தப் பொறுப்பினைக் கொடுத்ததற்காக நான் மனமார அவர்களுக்குப்

பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து என்னுனுடைய உரையை ஆரம்பிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

நல்லதோர் குடும்பம் பல்கலைக் கழகம் என்று முன்னோர்கள் சொல்கிறார்கள். ஒரு குடும்பம் நன்றாக இருக்க வேண்டும் என்றால், ஒரு தெரு நன்றாக இருக்க வேண்டுமென்றால், ஒரு ஊர் நன்றாக இருக்க வேண்டுமென்றால், ஒரு ஜில்லா, ஒரு மாநிலம், ஒரு தாலுக்கா நன்றாக இருக்க வேண்டுமென்றால், நல்ல வளர்ச்சி அடைய வேண்டுமென்றால் சகலமும் பெண்கள் கையிலே தான் இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இங்கே சற்று நேரத்திற்கு முன்பு கோரம் இருக்கிறதா இல்லையா என்ற ஒரு நிலைமை ஏற்பட்டது. நாம் எல்லோரும் வெளியே போனாலும்கூட, ஐயோ முதல்வர் வந்து விடுவார்களே என்று எல்லோருக்கும் எனக்குக் கூட ஒரு அச்சம் இருக்கிறது. காரணம் அந்த அளவிற்கு ஒவ்வொரு துறையிலும், அந்தத் துறையைப் பற்றி அறிந்து, ஆராய்ந்து, அந்தந்த அமைச்சர்களுக்கும், இதை இப்படிச் சொல்லுங்கள், அப்படிச் சொல்லுங்கள் என்று சொல்லி, இங்கேயும் அவர்கள் ஏதாவது ஒரு சில சமயங்களில் விட்டுவிட்டால் அதை எடுத்துச் சொல்லக்கூடிய நிலைமையிலே இருக்கின்றார். முதல்வர் அவர்கள் இங்கே இந்த அவையிலே உட்கார்ந்து இருக்கும்போது, அவர்கள் இருக்கும்போது நாம் உட்கார்ந்து கொண்டு இருக்கிறோமே—தபால் வந்தால் கூட எனக்கு எடுத்துக் கொண்டு வருவதற்குப் பயம் தான். ஏனென்றால்—எழுதும்போது அவர்கள் பார்க்கிறார்களே, மறைத்து எழுத முடியவில்லையே என்று இருக்கிறது. இந்த சபைக்கு, இவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து, இதை நல்ல முறையிலே நடத்திச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் கொண்ட முதல்வராக இருக்கின்ற காரணத்தினாலே தான் நான் இதைச் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.) எனவே சகலத்திற்கும் பெண்கள். அந்தப் பெண்களுடைய வாழ்க்கை, அந்தப் பெண்களுடைய வளம் சகலத்தையும் இன்றைக்கு உருவாக்கி அவற்றை நல்ல முறையிலே கொண்டு வருவதற்கான திட்டங்கள் இந்த அவைக் குறிப்பிலே இருக்கிறது. அதற்கு நான் என்னுடைய மனமார்ந்த பாராட்டுதலையும், நன்றியறிதலையும் கூறிக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

பிறகு நேற்றையதினம் கூட நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே பெண்களுக்காகத் தனியாக ஒரு பாங்க் ஆரம்பித்து அந்த பாங்கில் அவர்களை வேலைக்கு வைத்து அவர்கள் மூலமாகப் பெண்களுடைய குறைபாடுகளைத் தீர்க்க வேண்டுமென்று சொன்னார்கள். அப்போது எனக்கு பேசுவதற்கு சந்தர்ப்பம் இல்லாத காரணத்தாலும், அடிக்கடி எழுந்து





இண்டரப்ட் செய்து கேட்கக்கூடாது என்ற காரணத்தாலும் நான் அமர்ந்து கொண்டு இருந்தேன். அதற்காகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுக்கும் பெண்கள் சார்பில் என்னுடைய மனமார்ந்த நன்றியை இரண்டாவதாகத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

இப்போது இங்கே எந்தத் துறையாக இருந்தாலும், நான் இப்போது ஆண் எம்.எல்.ஏ.-க்களுக்கு என்னுடைய வேண்டுகோளாக, உங்களுக்கு எல்லாம் மூத்த அக்கா என்ற முறையிலே உங்களுக்கு நான் வேண்டுகோள் விடுவது சட்டமன்றத்திலே இவ்வளவு நேரம் நமக்கு கோரம் இருக்கிறதா ? கோரம் இல்லையே என்று எம்.எல்.ஏ. ஒருவர் எழுந்து கோரம், கோரம் என்று சொன்னார் நான் அதற்கு முன்பாகவே எண்ணிப் பார்த்துவிட்டேன். கோரம் இருந்தது. அந்தக் கோரம் இருக்கிறதா என்று எண்ணக்கூடிய அளவுக்கு நீங்கள் வைத்து விடக் கூடாது. ஏன் என்றால் தாயில் சிறந்த தயாவரம் பெற்றவனே, தாயை விட, அந்த தாயிற் சிறந்த, என்று அந்த தாயைத் தான் காட்டுகிறார்கள். நாயன்மார்கள் கூட தாயிக்கு தான் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அந்தப் பெண்ணுக்குப் பெருமை கொடுக்கிறார்கள். அந்த அளவுக்கு இந்த மானியக் கோரிக்கையில் ஒரு பெண் அமைச்சர் இந்த நாட்டில் முதலமைச்சராக ஒரு பெண் முதல் அமைச்சர், அதுவும் ஒரு வில்பவர், தன்னம்பிக்கை பெற்ற பெண் முதலமைச்சர் நிறைவேற்றக்கூடிய அதிகாரிகள் பெண்கள், ஆகையினால் நீங்கள்என்ன செய்து இருக்கவேண்டும், உங்களுக்கு என்னதான், எல்லோருக்கும் ஒரு இது இருந்தாலும் கூட உங்களுக்கு எல்லாம் சமையல் செய்து போடுபவர், எனக்கு அந்தப் பழக்கம் இல்லை, ஒன்றும் இல்லை. சமையல் எல்லாம் செய்து போடுகிற நிலைமை இருந்தால் கூட இதற்கு நீங்கள் முக்கியத்துவம் கொடுத்து இருக்கவேண்டும். அந்த தாய்க்குலம் சரியாக இயங்கினால் தான், தாய்க்குலம் நன்றாக இருந்தால் தான் நீங்களும் அரசியல் பண்ண முடியும். அவர்கள் முகம் கோணிக் கொள்வார்களானால் உங்களுடைய வீட்டில் இல்லத்தரசிகள் உங்களைப் பார்த்து எங்கே போய் விட்டார் ; இரவு இவ்வளவு நேரம் ஆகிறதே, என்னவாவது செய்து போகட்டும் போ என்று போட்டுவிட்டால் நம் பிழைப்பு அரசியல் கூடச் சரியாக நடத்த முடியாது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பிறகு மற்ற விஷயங்களுக்குப் போவதற்கு முன்பாக, நான் அன்றைக்குக் கல்வி மானியத்திலே நம்முடைய உத்தமத் தலைவி டாக்டர் ஜெயலலிதா அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், . . . . .

இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன். ஏனென்றால், இதுவரையில் தமிழக வர
லாற்றில் எந்த முதலமைச்சரும் அனாதை குழந்தைகளைப் பற்றி
யும், அனாதை பெண்களைப் பற்றியும் கவலைப்பட்ட வரலாறே
கிடையாது. ஆனால், நம்முடைய முதலமைச்சர் புரட்சித்
தலைவி அவர்கள் இந்த புத்தாண்டு தினத்தன்று 32,000
குழந்தைகளுக்கும், அனாதைப் பெண்களுக்கும், தன்னுடைய
சொந்த செலவில்-சமூகநலத் துறையில் இருக்கிற குழந்தைகளுக்கு
—இனிப்பு வழங்க இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும்
ஒலி)

இந்த முதலமைச்சரின் காலத்தில் வாழ்கிறோம் என்று
சொல்வதே நமக்கு பெருமை. எப்படி சந்திரகுப்தர் காலத்தை
பொற்காலம் என்று சொல்வார்களோ, அதைப்போல தமிழகத்
தில் ஒரு பொற்காலம் என்று சரித்திரத்தில் எழுதப்பட்டால்
அது புரட்சித் தலைவி அவர்களின் காலம் தான் என்று எழுதப்
'டும். (மேசையைத் தட்டும் ஒலி). நம்முடைய முதலமைச்
'ர் நீண்ட ஆயுளோடு, எங்களுடைய ஆயுளையும் சேர்த்து,
ீண்ட ஆயுளோடு வாழ வேண்டும் என்று இந்த நேரத்தில்
இறைவனைப் பிரார்த்தித்து, அவர் இப்படிப்பட்ட நல்ல
காரியங்களைச் செய்வதற்கு, உடல் தெம்பையும், மனத்
தெம்பையும் இறைவன் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு,
இந்த மானியக் கோரிக்கையை, வெட்டுத் தீர்மானங்களைத்
திரும்பப் பெற்றுக் கொண்டு, நிறைவேற்றித் தர வேண்டுமெனறு
மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களை கேட்டு அமைகிறேன்.
நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த சத்துணவு மையங்களில் காய்கறிகளை சத்
துணவு அமைப்பாளர்கள் தான் வாங்கிப் போட வேண்டுமென்று
அரசாணை இருக்கிறது. ஆனால், அந்த அரசாணையை பல
இடங்களில் பி.டி.ஓ.க்கள் செயல்படுத்தாமல் இருக்கிறார்கள்.
அதைப்போல, குடும்ப நல நிதிக்கு என்று பணம்
தமிழகம் முழுமையும் பிடிக்க வேண்டுமென்று அரசாணை
இருந்தும், பிடிக்கப்படாமல் இருக்கிறது. இதை உடனடியாக
தமிழகம் முழுமைக்கும் 'யூனிபார்ம் பாலிசி'யை கடைப்பிடித்து,
இந்த குடும்ப நல நிதிக்கு பணம் பிடிக்கப்படும், பணம் கொடுக்
கப்படும் என்ற நிலையை அமைச்சர் அவர்கள் உருவாக்கித்
தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, சில இடங்களில் பிடிக்கப்படு
கிறது. சில இடங்களில் பிடிக்கப்படவில்லை என்கிற தகவலைச்



தது; போதிய கோரம் இல்லையோ என்று அனைவரும் இங்கே
பேசினார்கள். இப்போது பெண் உறுப்பினர்கள் வந்து அமர்ந்து
விட்டார்கள், அவை நிறைந்த மாதிரி தெரிகிறது. (சிரிப்பு).

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சரை அவர்கள்
அங்கே வந்து சந்திப்பது முதலிலேயே எனக்குத் தெரியும். இருந்
தாலும் அவர்களை நீங்கள் அழைக்கும்போது அது மிகப்பெரிய
வரப்பிரசாதம் தான். ஏன் என்றால் உங்களிடம் சொல்லக்கூடிய
காரியங்கள் அத்தனையும் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் நிறைந்து இருந்தால்
அவை நிறைந்தது போல் இருக்கும் என்று மாண்புமிகு முதலமைச்
சர் அவர்கள் சொன்னதற்குப் பிறகு ஆண்கள் எல்லாம் கவலைப்
படாமல் இருந்து விடாதீர்கள். (சிரிப்பு) கட்டாயம் இன்னும்
நிறைவு செய்கிற அளவுக்கு வரவேண்டுமென்று மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டபடி நானும்
கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1—10

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, ஆண் உறுப்பினர்கள் எல்லோருமே,
உண்மையிலேயே மரியாதைக்குரியவர்கள்தான். அவர்கள்
நல்லமுறையிலே பணியாற்றக்கூடியவர்கள் என்பதை நான்
அறிந்து வந்திருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)
எனக்கு நன்றாகத் தெரியும். என்னைக்கூட அவர்கள் அன்
போடு ''அக்கா'' என்று அழைக்கிறார்கள் என்றால் இதைவிட
ஒரு பெருமை எனக்கு வேறு ஒன்றுமே வேண்டாம். (மேசை
யைத்தட்டும் ஒலி) அப்படிப்பட்ட மாண்புமிகு உறுப்பினர்
கள் எல்லோருமே இங்கே அமர்ந்திருந்தால் நன்றாக இருக்கும்
என்று எனக்கு ஒரு சபலம். அதைத்தான் சொன்னேனே தவிர
வேறு ஒன்றையும் நான் தவறாகச் சொல்லவில்லை என்பதை
இந்த நேரத்திலே நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

சத்துணவு மையங்களிலே, ஆதிதிராவிட இனத்தைச்
சேர்ந்த குழந்தைகளுக்கு, கிட்டத்தட்ட 65 இலட்சம் குழந்
தைகளுக்கு நம்முடைய மாநிலத்தில் இருக்கக் கூடிய 73 கூட்
டுறவு தையல் பயிற்சி நிலையங்களின் மூலமாக நாம் துணி
களைத் தைத்துக் கொடுக்கின்றோம். அந்தத் துணிகளை
நாம் தைத்துக் கொடுப்பது டிசம்பர் மாதம் வரைக்கும் சென்று
விடுகிறது. ஆகையினால், ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒவ்
வொரு தாலுகாவிற்கும் இந்த கூட்டுறவுச்சங்கங்கள் அமைக்
கப்படுமேயானால் அந்தத் துணிகளை சீக்கிரமாக அவர்களுக்

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1992 ஏப்ரல் 10

குத் தைத்துக் கொடுப்பதற்கான ஒரு நிலைமை உருவாகும் என்பதையும் இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு ஜுன், ஜுலை மாதத்திற்குள்ளேயே துணிகளைக் கொடுத்து விட வேண்டும். அப்பொழுதுதான் குழந்தைகள் ஸ்கூலுக்குச் செல்லும்போது, அது அவர்களுக்கு உபயோகமாக இருக்கும் என்பதையும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். 30 சதவீதம், பெண்களுக்கு வேலைவாய்ப்பு என்று நம்முடைய மறைந்த முன்னாள் தலைவர் பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்கள் கொண்டு வந்தார்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும், அமைச்சர் அவர்களும் இந்தத் திட்டத்தை முழுமையாக நிறைவேற்ற வேண்டுமென்று இங்கேயும் கொண்டு வந்து இன்றைக்கு அவர்கள் பல காரியங்களைச் செய்து கொண்டு இருக்கிறார்கள். இந்தத் திட்டத்திற்கு இன்றைக்கு ஒரு முழு வடிவம் கிடைக்கவேண்டுமென்றால், திட்டத்தை நல்லமுறையில் பயன்படுத்தினால்தான் பெண்களுக்கு முழுமையாக வேலை கிடைக்கும். அதற்கு ஒரு முழு வடிவம் கிடைக்க வேண்டுமென்றால், எப்படி ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் என்ற அடிப்படையிலே அவர்கள் பணத்தை ஒதுக்கி ரோடுகள் போடுவதற்கு, கண்மாய்கள் வெட்டுவதற்கு, கிணறுகளை வெட்டுவதற்கெல்லாம் பணத்தை ஒதுக்கிக்கொண்டு இருக்கிறோமோ அப்படியே இதற்கும் நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களுடைய பெயரால் இந்தப் பெண்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதற்கு, முதல்வருடைய திட்டம் என்று இதை அறிவிப்போமேயானால் முதல்வர் மூலமாகவே 'ஜெ ஜெ திட்டம்' என்று அறிவிப்போமேயானால் இந்தத் திட்டத்தின் மூலமாக ஒவ்வொரு துறையிலும் எங்கெங்கே விழுக்காடு எவ்வளவு இருக்கிறது? அந்தந்தத் துறைகளிலே இருக்கின்ற அதிகாரிகள், எங்கெங்கே விழுக்காடு இருக்கிறது; இதிலே 30 சதவீதம் போடவேண்டுமா என்று அவர்கள் ஆராய்ந்து பார்த்து, அதை உடனுக்குடனே பூர்த்தி செய்வதற்கான ஒரு நல்ல நடவடிக்கையை எடுப்பார்கள். அதன் மூலமாகப் பெண்களுக்கு நாம் வேலைவாய்ப்பு கொடுப்பதற்கு ஒரு நல்ல சூழ்நிலை உருவாகும் என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதே போன்றுதான் தனியார் துறைகளிலும், நாம்தான் அவர்களுக்கு லைசன்ஸ் கொடுக்கின்றோம்; நாம்தான் கடன் கொடுக்கின்றோம். மத்திய மாநில அரசுகள், தனியார் துறைகளுக்குக் கடன் கொடுக்கின்றன. லைசன்ஸ் கொடுக்கிறோம். அவர்களிடத்திலே, இந்தப் பெண்களுக்கு ஒதுக்கக்கூடிய சதவீதத்திலே அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவேண்டுமென்ற ஒரு நிலையை நாம் உருவாக்கிக் கொடுப்போமேயானால் பல பெண்களுக்கு நல்ல முறையிலே வேலை கிடைப்பதற்கான ஒரு வாய்ப்பாக அது இருக்கும் என்பதையும் நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



1992 ஏப்ரல் 10] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

இந்த ஐ.சி.டி.எஸ். பற்றி நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். இன்டக்கரேட்டட் சைல்டு டெவலப்மெண்ட் ஸ்கீம். இன்றைக்கு எப்படி நாம் பால்வாடியை ஒவ்வொரு ஊரிலும் ஆரம்பித்துக்கொண்டு இருக்கிறோமோ அதே போன்று எல்லா யூனியன்களிலும், 386 யூனியன்கள் என்று நினைக்கிறேன். அந்த 386 யூனியன்களுக்கும் இந்த ஐ.சி.டி.எஸ். திட்டத்தை நாம் அமல்படுத்துவோமேயானால் ஒவ்வொரு யூனியனிலும் கிட்டத்தட்ட 100, 150 பால்வாடிகளை நாம் ஆரம்பிக்க முடியும். அப்படி ஆரம்பிப்போமேயானால் பெண்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க ஏதுவாக இருக்கும். ஏனென்றால், நிலக்கோட்டை ஒன்றியத்திற்கென்று ஐ.சி.டி.எஸ். திட்டம் மூலம், 1977—லே கவர்னர் ஆட்சியிலே வாங்கினேன். அப்போது நான் சோசியல் வெல்பேர் போர்ட் மெம்பராக இருந்தேன். அப்போது வாங்கிய காரணத்தினாலே இப்போது 100லிருந்து 120 பால்வாடிகள் அங்கே ஆரம்பிக்கப்பட்டு நடந்து கொண்டு இருக்கின்றன. அந்த பால்வாடிகளில், ஒவ்வொரு பால்வாடியிலும் 3 பேர்களை வேலைக்கு அமர்த்தினோம். அந்த 3 பேரை வேலைக்கு அமர்த்திய காரணத்தினாலேதான் 300—க்கும் மேற்பட்ட பெண்கள் இப்போது நிலக்கோட்டை ஒன்றியத்திலே மட்டும் இன்றைக்கு வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இதேபோன்று மாநிலத்திலுள்ள அத்தனை யூனியன்களிலும் இந்த ஐ.சி.டி.எஸ். திட்டத்தை அமல்படுத்துவதற்கான முயற்சியை நாம் நடைமுறைப் படுத்துவோமேயானால் அதிக அளவில் பெண்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. அதற்கு மத்திய அரசும் நிறைய பணம் ஒதுக்குகிறது. அதனால் பல பெண்களுக்கு, ஆயிரக்கணக்கான பெண்களுக்கு, 1 இலட்சம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப் போகிறோம் என்று நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கருணை உள்ளத்தோடு அறிவித்து இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே பெண்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதற்கான ஒரு நல்ல சூழ்நிலை உருவாகும் என்பதையும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சுவீடன் நாட்டு உதவியுடன் காப்பகங்களை ஆரம்பிப்பதற்கு, அந்த முழுப் பணத்தையும் அவர்களே கொடுப்பார்கள். அதன்மூலமாக எத்தனை ஜில்லாக்களை எடுக்கலாம்; அதிலே பெண்களில் எத்தனை பேர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கலாம் என்பதனையும் நீங்கள் சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமாத்திரமல்லாமல், கிரீச்சுகள் பற்றி கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதாவது 6 மாதத்திலேயிருந்து 2½ ஆண்டு, அதாவது 30 மாதம் வரைக்கும் உள்ள சிறிய சிறிய பால் அருந்தும் குழந்தைகள், அந்தக் குழந்தைகளை வைத்துக்

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1992 ஏப்ரல் 10

கொண்டு கிராமத்துப் பெண்கள் வேலைக்குச் செல்வது மிகவும் சிரமமாக இருக்கிறது. அவர்கள் அந்தக் குழந்தைகளையும் பார்க்க வேண்டும். அதே நேரத்தில் கூலி வேலையையும் செய்ய வேண்டும். இப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருக்கின்ற காரணத்தினாலே கிரீச்சுகளை எவ்வளவு அதிகப்படியாக ஆரம்பிக்க முடியுமோ, அவற்றை அதிகப்படியாக ஆரம்பிக்க வேண்டும். அதில் 30 குழந்தைகளையோ அல்லது 20 குழந்தைகளையோ, 6 மாதத்திலிருந்து 30 மாதத்திற்குள்ளாக இருக்கக் கூடிய குழந்தைகளைப், பராமரிப்பதற்கு, பார்த்துக் கொள்வதற்கு கிரீச்சுகளை ஒவ்வொரு ஊரிலும் ஆரம்பிப்பதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும். ஒவ்வொரு ஊரிலும் ஆரம்பிக்க முடியாது. ஒவ்வொரு பஞ்சாயத்துக்களிலாவது, அதாவது 10 ஊர், 15 ஊர்களைச் சேர்த்து ஒரு இடத்திலே ஆரம்பித்து அங்கே இந்தக் குழந்தைகளைக் கொண்டுபோய்விட்டு, அந்தக் குழந்தைகளைப் பார்த்துக்கொள்வதற்குப் பொறுப்பாளராக 2 பேர்களை நியமிப்போமேயானால், அந்தப் பெண்களுக்கு உதவியாக இருக்கும். இதற்கு முழுப் பணமும் மத்திய அரசு கொடுக்கிறது. அதையும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பல பாஷைகள் தெரிகின்ற காரணத்தினாலே—நான் படிக்கவில்லையே என்று எனக்கு வருத்தம் இருக்கின்றது அவர்களுக்கு—பல பாஷைகள் தெரிந்திருக்கின்ற காரணத்தினாலேதான், யார் வந்தாலும், தெலுங்கு தேசத்திலேயிருந்து வருகிறார்களா, தெலுங்கிலே உரையாற்றுகின்றார்கள், கன்னடத்திலே பேசுகின்றவர்கள் வருகிறார்கள், அவர்களிடத்திலே கன்னடத்திலே உரையாடுகின்றார்கள். இந்தியிலே பேசக் கூடிய தலைவர்கள் வருகிறார்களா, அவர்களிடம் இந்தியிலே உரையாடுகிறார்கள். அதைப் பார்த்தே அசந்து போகிறார்கள் தலைவர்களெல்லாம். அப்படியொரு நிலைமை உருவாகிற அளவிற்கு இந்தக் குழந்தைகளுக்கு ஆரம்பத்திலே நர்சரி பள்ளிகளாக வேண்டும் என்று நாம் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அதைச் செய்தால் உண்மையிலே நமக்கு மிகப்பெரிய பெருமையாக இருக்குமென்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-15

ஸ்வீடன் நாடு — அது சம்பந்தமாக இப்பொழுது செங்கல் பட்டை மட்டும் எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதை எல்லா ஜில்லாக்களிலும் நடைமுறைப்படுத்துவதற்கு வழி இருக்கிறதா என்பதைப் பார்த்து அதையும் நாம் சேர்த்துச் செய்வோமேயானால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



1992 ஏப்ரல் 10] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

பெண்களுக்கு முதல்வர் பெயரால் அதுவேண்டுமென்று நான் எதற்காகக் கேட்கிறேன் என்றால், அப்பொழுதுதான் பல பேர்கள் இப்பொழுது மருத்துவ முகாமை நடத்துவதற்கு அவர்களுடைய பெயராலே நடத்துகிறோம். அந்த மருத்துவ முகாம் நடத்துவதிலேகூட அவர்கள் பெயர் இருக்கின்ற காரணத்தினாலேதான் அந்த ஆண்களும், பெண்களும், தங்களுக்கு வியாதி இருக்கிறதோ இல்லையோ வந்து கூடுகிறார்கள். 1,000, 1,500 பேர். இது முதல்வருடைய திட்டம், இது முதல்வருடைய திட்டம் என்று அவர்கள் கூடுகிறார்கள் என்றால் அவர்களுக்கு ஒரு ஆங்கைசட்டி, சரி, அங்கே சென்றால் நமக்கு என்ன நோய் இருக்கிறது என்று பார்ப்பார்கள், அந்த நோய்க்குத் தகுந்த மருந்துகளைக் கொடுப்பார்கள், நாம் ஒரு சீரான வாழ்க்கை வாழ்வதற்கு வழியேற்படும் என்ற நம்பிக்கையை வைத்திருக்கிறார்கள். அந்த நம்பிக்கையை வைத்திருக்கின்ற காரணத்தாலேதான் இந்த வேலைவாய்ப்புத் திட்டத்திற்குக் கூட முதல்வரவர்கள் பெயர் இருந்தால் அது மிகவும் சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்கிறேன். அதற்கு வேண்டிய வழிவகைகை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வேலை வாய்ப்பிலே நமக்குக் கூட்டுறவுத் துறையிலே 73 சங்கங்கள் இருக்கின்றன. அந்த 73 சங்கங்களிலே தைக்கக் கூடிய துணிகளுக்கு வெளிநாட்டிலே நிறைய கிராக்கி ஏற்பட்டிருக்கிறது. அப்படி வெளிநாட்டிலே ஏற்பட்டிருக்கின்ற கிராக்கிகளை நாம் நிறைவு செய்ய வேண்டுமென்றால், அதாவது நிறைய வெளிநாடுகளிலே துணிகளை வெட்டிக் கொடுத்து விடுகிறார்களாம், அப்படி வெட்டிக் கொடுப்பதை அந்தச் சங்கங்கள் வாங்கி அதைத் தைத்து அவர்களிடம் கொடுத்தால் அதற்கு நல்ல கூலி கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. சில பெண்கள் கூட சிலயிடங்களிலே வைத்து நடத்துவதாகக் கூடச் சொன்னார்கள். நான் கூட தாம்பரத்திலே இருக்கின்ற ஒரு தையல் தொழிற்சாலை தொழில் துறைக்குச் செல்லலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன். நேரம் கிடைக்காத காரணத்தாலே சென்று பார்க்க முடியவில்லை. அப்படிப்பட்ட இந்தத் துணிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்ய தைத்துக் கொடுக்கின்ற ஒரு நிலைமையை உருவாக்கினோமேயானால் பல பெண்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்போம் என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமாத்திரம் அல்ல. தொழில் துறை. தொழில் துறையில் அவர்களுக்கு ஐ.டி.ஐ. வேண்டும். பத்தாவது பாஸ் பண்ணியிருக்கிறார்களா, அதில் அவர்களைச் சேர்க்க வேண்டும். ஒவ்வொரு தொகுதியிலேயும் பெண்களுக்கு இந்த ஐ. டி. ஐ.-யை ஆரம்பிக்க வேண்டும். ஐ.டி.ஐ.யை ஆரம்பித்து அதில் கல்வித் துறை மூலமாகவோ அல்லது வேறு எந்தத் துறையின் மூலமாகவோ அவர்களுக்கு இந்தப் பயிற்சியை அளிப்போமேயானால் அவர்கள்

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1992 ஏப்ரல் 10

தன் காலிலேயே நிற்பதற்கான சூழ்நிலை உருவாகும். எனக்கு முன் பேசிய மாண்புமிகு உறுப்பினர் ரமணி நல்லதம்பி அவர்கள் சொன்னார்களே, அதுபோல, என்னுடைய கணவன் என்னை விட்டுவிட்டார், நான் மூன்று குழந்தைகளை வைத்திருக்கிறேன், நான் எங்கே போக முடியும், எனக்கு ஏதாவது பாதுகாப்புக் கொடுங்கள், அம்மா அவர்களிடத்தில் சொல்லி என்னைக் காப்பாற்றுங்கள் என்று அவர்கள் வந்து காலிலே விழுந்து அழும்பொழுது என்ன என்றே புரியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இதையெல்லாம் கணக்கெடுத்து ஒவ்வொரு தாலுக்காவிலும் பெண்களுக்காக ஒரு ஐ.டி.ஐ. ஆரம்பித்து, அதிலே அவர்களைச் சேர்த்து ஒரு 50 பேரையாவது சேர்த்து, அவர்களுக்குத் தன் காலிலேயே நிற்கக் கூடிய ஒரு நிலைமையை நாம் உருவாக்கிக் கொடுப்போமேயானால் பேங்குகளிலே பணம் வாங்கிக் கொடுக்கலாம், அம்மாதிரி ஒரு நிலைமையை உருவாக்குவோமேயானால் நிச்சயமாக அவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளக் கூடிய ஒரு நல்லநிலைமையேற்படும் என்பதையும் இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது.) நான் முடித்து விடுகிறேன்.

நகரப் பெண்களுக்குக் கூட, டி.வி. அசெம்பிள் செய்வது, குளிர் சாதனப் பெட்டிகளை ரிப்பேர் செய்வது, எலக்ட்ரானிக் பொருட்கள் இருக்கின்றனவே அதைச் செய்வது போன்ற இப்படிப்பட்ட பயிற்சிகளை நாம் 'பேஸிக் புரோகிராமாகப்' போட்டு, ஆண்டொன்றுக்கு 5,000 பேர்களுக்கு இந்தப் பயிற்சி கொடுப்போமேயானால் அவர்கள் வெளியிலே வந்தால் நிச்சயமாகப் பல பெண்களுக்கு இந்தப் பயிற்சியை அளிக்கக் கூடிய ஒரு நிலைமை உண்டாகும் என்பதையும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, இதையெல்லாம் கருத்தில்கொண்டு இதைச் செய்வோமேயானால் எல்லாத் துறைகளிலும் சாலச் சிறந்ததாக இருக்கும்.

பக்கவாதம் இருக்கிறதே, அதனால் பேச முடியாமல் பல ஊர்களிலே இருக்கிறார்கள். பேச முடியவில்லை. அவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். அந்தப் பயிற்சி அளிப்பதற்காக இந்தப் பெண்களுக்கு ஏதாவது ஒரு பயிற்சி நிலையம் ஏற்படுத்தி, இந்தப் பக்கவாதத்தாலே பாதிக்கப்பட்டவர்களுக்குப் பேசுவதற்கு எப்படிப் பேச வேண்டும் என்று, சில இடங்களிலே அம்மாதிரி எக்சர்சைஸ்களை, அதை ஆண்களைவிட அந்தப் பெண்கள் செய்து காட்டுவார்களேயானால் அது நிச்சயமாக அவர்கள் கடமையுணர்வோடு— அதற்காக ஆண்கள் செய்யவில்லை என்று சொல்லவில்லை— இருந்தாலும் கூட இது தாய்மை உணர்வோடு ஒரு தாய் தன்னுடைய குழந்தைக்கு ஏதாவது வந்துவிட்டால் அந்தக் குழந்தையைச் சரியாக்குவதற்கு அந்தத் தாய்க்கு என்ன ஒரு பொறுப்பு இருக்குமோ அந்தப் பொறுப்போடு அவர்கள் செய்வார்கள். அதற்



1992 ஏப்ரல் 10] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

காக ஒரு பயிற்சி நிலையம் ஆரம்பித்தால்கூட அது நன்றாக இருக்கும் என்பதையும், அதுவும் ஒரு கல்லூரியிலே இந்தப் பேச்சுப் பயிற்சி கொடுப்பதற்கான ஒரு நிலைமையை உருவாக்குவார்களேயானால் அது சாலச் சிறந்ததாக இருக்குமென்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு உடல் ஊனமுற்றவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். ஒரு உடல் ஊனமுற்ற ஆணையோ அல்லது ஒரு உடல் ஊனமுற்ற பெண்ணையோ கல்யாணம் செய்து கொண்டால், அவர்களுக்கு முழுப் பாதுகாப்பு நாம் அளிக்க வேண்டும். ஏனென்றால், பல இடங்களிலே இன்றைக்கு உடல் ஊனமுற்றவர்களுக்கு சரியான படி ஒரு கல்விச் சான்று இல்லை; கல்வி போதாத நிலைமை என்று சொல்லி, அவர்களுக்குப், போதுமான அளவுக்கு வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. அது போன்றவர்களுக்கெல்லாம் வேலைவாய்ப்பு கொடுக்கக்கூடிய ஒரு நிலைமையை நாம் உருவாக்கிக் கொடுக்க வேண்டும்.

பிற்பகல் 1–20

கிராமப்புறங்களிலே முயல் வளர்ப்பது; முட்டைக் கோழி வளர்ப்பது; கறிக் கோழி வளர்ப்பது; இதற்கெல்லாம் முக்கிய சேவிகாக்கள் எல்லாம் இருக்கிறார்கள் ஒவ்வொரு யூனியனிலும். இந்த முக்கிய சேவிகாக்களுக்கு முந்தைய மாதிரி வேலை இல்லை, இப்போது அவர்கள் சும்மா இருக்கிறார்கள், வேலை ஒன்றும் ஜாஸ்தி இல்லை. அவர்கள் மூலமாக முயல் எப்படி வளர்ப்பது? கோழி எப்படி வளர்ப்பது? கோழி வளர்ப்பதிலே முட்டைக் கோழி, கறிக்கோழி என்பதையெல்லாம் வளர்ப்பதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொடுப்போமேயானால், பெண்கள் பல துறைகளிலே முன்னுக்கு வருவதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்கி கொடுப்போமேயானால் பெண்கள் பல துறைகளிலே முன்னுக்கு வருவதற்கான ஒரு சூழ்நிலை உருவாகும் என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, ரேஷன் கடைகள்—ரேஷன் கடைகளிலே ஆண்கள்தான் சாமான்களை எடுத்துப்போடுகிறார்கள்; அதை அளந்து போடுகிறவர்களும் அவர்கள்தான். அதிலே அளந்து போடுவதிலே அவர்கள் இருக்கட்டும், ஆனால், பல ஆயிரக் கணக்கான ரேஷன் கடைகள் இருக்கின்றன; அவற்றிலே ஒவ்வொன்றிற்கும் இரண்டு பெண்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்போமேயானால் பல ஆயிரக் கணக்கான பெண்களுக்கு வேலை வாய்ப்பு இடைக்கக்கூடிய ஒரு நிலைமை உருவாகும் என்பதை இந்த நேரத்திலே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்கும் நிச்சயமாக வேலை கொடுக்கிறோம். அவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படுகிறது நியாய விலைக் கடைகளில் என்பதை இந்த நேரத்தில் அக்கா அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பெண்களின் சார்பிலே, அமைச்சர் அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம், அதை உணர்ந்து செய்கிறீர்களே அது மிகப் பெரிய தர்மம்; ஏனென்றால், பெண்கள் வேலையில்லாமல் இருக்கிறார்களே; ஒரு துணிவுதானே !

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்,

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள் பேசுகிறபோது, நிறைய பெண்கள் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், தங்களுக்கு குழந்தைகளைக் காப்பாற்றுவதற்கும், வாழ்வதற்கும் வழி இல்லையென்று கேட்கிறார்கள்; அவர்களுக்கெல்லாம் சுய வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்றெல்லாம் இங்கே கேட்டுக் கொண்டார்கள். ஏற்கெனவே, தொழில் மானியக் கோரிக்கையின்மீது, நடைபெற்ற விவாதத்திற்கு நான் பதில் அளிக்கும்போது, சில திட்டங்களை அறிவித்தேன். அதில் 'எல்காட்' மூலமாக பெண்களுக்கு அவர்களுடைய இல்லங்களிலேயே எலக்ட்ரானிக் சம்பந்தமாக தொழில்களைச் செய்வதற்கு—'அசெம்பிள்' செய்வதற்கு நிறைய வேலைவாய்ப்புகள் கொடுக்கப்பட, ஒரு புதிய திட்டத்தை நான் அறிவித்திருக்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் சொன்ன காரணத்திலேதான் அது மீண்டும் எங்கள் உள்ளங்களிலே இருக்கிறது என்பதைத் தெரியப்படுத்தினேன். அதற்காகத்தான் சொன்னேன். நீங்கள் சொன்னதை அன்றைக்கு முழுமையாக உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தேன். அது பெண்களுக்கு ஒரு மிகப்பெரிய வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது. அதற்குள்ளே அதைப் பற்றி எல்லோரிடமும் சொல்லி விட்டேன் நான். இப்போது கூட லீவில் போய் இருந்தேனே, எங்கெங்கேயெல்லாம் பெண்கள் வந்தார்களோ அங்கேயெல்லாம் அவர்களிடம் சொல்லியாகி



விட்டது. அந்த அளவிற்கு இதை மீண்டும் ஞாபகப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் சொன்னேனே தவிர, அதை மறந்து விட்டு சொல்லவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்,

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அவர்களுடைய உத்தரவின்பேரில், இப்போது பட்டா கொடுப்பதுகூட பெண்களுக்குத்தான் கொடுக்க வேண்டும் என்று உத்தரவுப் போட்டிருச்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்பு பேசிய மதிப்பிற்குரிய ரமணி நல்லதம்பி அவர்கள் சொன்னதைப் போல, அதைப் பெண்களுடைய கையிலே கொடுத்தால்தான் அது சிறப்பாக இருக்கும்; சீராக இருக்கும் ; பட்டாவை விற்க மாட்டார்கள். ஆகையினாலேதான், அந்த உள்ளத்தை அறிந்த நம் தலைவி அவர்கள், அந்த ஒரு நல்ல உத்தரவைப் போட்டிருக்கிறார்கள். அதற்காக என் பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது மட்டுமல்ல ; இப்போது திங்கட்கிழமைதோறும் நாம் பொதுமக்களிடம் மனுக்களைப் பெறுகிறோம். இங்கே ஏராளமான பெண்கள் வந்து மனுக்களைக் கொடுக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள். இந்தப் பெண்கள் எல்லோரும் என்னிடத்தில், எங்களுக்கு இரண்டு குழந்தைகள் இருக்கின்றன ; மூன்று குழந்தைகள் இருக்கின்றன ; கணவனால் கைவிடப்பட்டு விட்டோம் ; எங்களுக்கு வாழ வழியில்லை ; ஏதாவது வழி செய்து கொடுங்கள் என்று கேட்கிறார்கள். அதனால்தான் இந்த எண்ணம் மனதிலே வேரூன்றி, பெண்கள் ஆண்களின் தயவு இல்லாமல், ஆண்களையே சார்ந்திருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லாமல், தாங்களாகவே, தங்கள் சொந்தக் காலில் நின்று வாழ்க்கையை நடத்தும் அளவிற்கு, அவர்களுக்குத் திறமையையூட்ட வேண்டும் என்பதற்காகத்

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1992 ஏப்ரல் 10

தான் இப்போது பெண்களுக்கு 'இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்' —அரசாங்கம் நடத்துகிற தொழிற்பேட்டையில், 'இண்டஸ் ட்ரியல் ஷெட்ஸ்'—தொழிற்கூடங்களில் 30 சதவிகிதம் பெண்களுக்காகவே ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பெண்களுக்கு தொழிற் பயிற்சி அளிக்கவில்லை என்றால், இந்தத் தொழிற் கூடங்களை ஒதுக்குவதால் என்ன லாபம் என்று கேட்பீர்கள். எனவே, அதற்காகவும் திட்டங்களை ஏற் கனவே அறிவித்திருக்கிறேன் என்பதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன். பெண்களுக்கு training Ent-apreneurship அதாவது சுயமாகத் தொழில் தொடங்குவதற்கு பயிற்சி அளிப் பதற்கு ஒரு திட்டம் வகுக்கப்பட்டு, நாங்கள் ஆட்சிப் பொறுப் பிற்கு வந்த பிறகு, இந்த கடந்த 9 மாத காலத்திலேயே 800 பெண்களுக்கு அந்தப் பயிற்சி அளித்து முடிக்கப்பட்டிருக்கிறது என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதோடு ஒட்டுமொத்தமாக ஒரு லட்சம் பெண்களுக்கு இத்தகைய பயிற்சி அளிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-25

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அக்காள் அவர்களுடைய கோரிக்கைகளில் பெரும்பகுதியை முதலமைச்சர் அவர்களே நிறைவேற்றி விட்டார்கள். எனவே, மணி 1.25 ஆகிவிட்டது. முடியுங்கள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, முடித்து விடுகிறேன். ஆக, நம்முடைய முதல்வர் அவர்களுடைய காலத்தில் இந்தப் பெண்கள் வாழ்வு வளம் பெற வேண்டுமென்ற ஆசையில் தான் சொல்கின்றேன். அன் றைக்கே சொல்லும்போது கவனித்தேன். ஆனால் 800 பேர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு முடியப்போகிறது என்பது தான் தெரியாமல் போய்விட்டது. அது முடிந்து போய் விட்டது. அதனால் எவ்வளவு பெருமை தரக்கூடிய விஷயம் பாருங்கள். அதற்காக தயவு செய்து ஆண் சகோதரர்கள் கொஞ்சம் எங்கள் மேல் பொறாமைப்படாமல், சரி அது நடக் கட்டும். இந்தத் தாய்க்குலம் நன்றாக இருக்கட்டும். நன்றாக இருந்தால்தான், நாடு நன்றாக இருக்கும் என்பதை உணர்வார்கள் என்று கருதுகிறேன். எனவே, அதற்காகத்தான் ஆண்டவனே பார்த்து ஒரு காலத்திலே இந்த நிலைமை நடைபெற்றவுடனே, நான் முதலமைச்சராக மீண்டும் சபைக்கு வந்தால் வருவேன்.



1992 ஏப்ரல் 10] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

இல்லாவிட்டால் வரமாட்டேன் என்று சபதம் எடுத்தீர்களே (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சபதம் நிறைவேறி, இன் றைக்கு நலிந்து கிடக்கும் மக்களுக்கும்,ஏழை மக்களுக்கும், பெண் களுக்கும் ஒரு புனருத்தாரணம் கிடைத்திருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியுடன், பெருமையுடன் கூறிக் கொண்டு எல் லோருக்கும் நன்றி சொல்லி, விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

*மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்தாய் தவமிருந்து இந்த தலைமுறைக்கு ஈந்திட்ட
தாழைபோல் மணக்கும் எங்கள் தங்கமே!
கார்முகில் மழைபொழிய ஆரம்பித்தால்
காடென்றும், கழனி என்றும், பார்ப்பதில்லை
துரோகி என்று யாரையும் நீர் ஒதுக்கித் தள்ளாமல்
விரோதமின்றி நட்புக்கரம் நீட்டிய நம்பிக்கை நட்சத்திரமே!
திங்கள்கிழமைதோறும் கோட்டை நோக்கி வரும் ஏழைமக்கள்
வாழ்வின் மேட்டைக்காண வழிவகுக்கும் கருணை வடிவமே!
குத்தும், கொலையும், கொடிய வன்முறைச் செயலும்,
நித்தம், நித்தம், நடைபெற்ற தமிழ்நாட்டில்
நிலைத்த அமைதிக்கு வழிகண்ட தலைவியே!
தான்தான் உயர்ந்தோர், எனத் தனித்துச் சென்றோர்
தமக்கென ஒரு முகவுரை எழுதும்போதே
அவர்களுக்கு முடிவுரை எழுதிய அரசியல் மேதையே
(மேசையைத் தட்டும் ஒலி)
தமிழ்நாட்டில்
நீதியை நிலைநாட்ட நாதியில்லை என்றிருந்த வேளையில்
பொதிகைமலை தென்றல் நிலை மாறி
பொங்கி எழும் எரிமலையாய் ஆகி
பொய்யர்கள் ஆதிக்கத்தை பொசுக்கித் தள்ளி
அவர்களை விலாசம் தேடி வீதியிலே அலையவிட்ட
வீராங்கனையே! (மேசையைத் தட்டும் ஒலி)
மழைத்துளி ஒன்றாய் சேர்ந்தால் மாநதி உருவாகும்
இழையெல்லாம் ஒன்றாய் சேர்ந்தால் எழிற்சேலை உருவாகும்
தங்களின் அறிவுரைகள் அனைத்தும் கேட்டு
ஆற்றுகின்ற சமூக நலப் பணிக்கு
என்னை அமைச்சராக்கிய அன்னையே!
உம் பொற்பாதங்களை தொட்டு வணங்கி,
சமூக நலத் துறையின் மானிய கோரிக்கையை இந்த
மன்றத்தில் வைக்கிறேன்.

சமூகநலம் மற்றும் சத்துணவுத் துறை என்று அழைக்கப்படும் இந்தத் துறையில் நலிந்தோர் மற்றும் குழந்தைகள் நலம் காக்கப்படுகிறது. சமுதாயத்தில் பல நூற்றாண்டு காலமாக புறக்கணிக்கப்பட்டு, வீட்டுக்குள் முடக்கி வைக்கப்பட்டு வந்த பெண்கள், வளரும் வயதில் போதிய ஊட்டச்சத்து நிறைந்த உணவு கிடைக்காமல் வாடும் குழந்தைகள், தங்கள் உடல் ஊனத்தால் அல்லலுறும் ஊனமுற்றோர் என இந்த மூன்று வகையினரும் சமுதாயத்தில் நலிவுற்றவர்களே. இந்த நலிவுற்றவர்களைக் கவனிப்பதையே தலையாய கடமையாகக் கொண்டு செயலாற்றும் இந்த சமூக நலத்துறையும் நலிவடைந்துவிடாமல் அதனைப் பாதுகாக்கும் பொறுப்பினை ஏற்று, இயன்ற அளவிற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யும் வகையில் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு இருக்கின்ற நிதிநிலை நெருக்கடியிலும் 59 கோடி ரூபாய் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அதிகப்படுத்திக் கொடுத்து உதவி இருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்றால், நலிவுற்றோர் நலத்தில் இந்தியத் துணைக் கண்டத்திலேயே புரட்சித் தலைவி அவர்களைப் போல் அக்கறையுள்ள ஒரு தலைவரை இனி இந்தியா பார்க்க முடியாது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சென்ற ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றதுமே மக்களுக்குத் தான் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்பதையும், சமுதாயத்தில் அடித்தளத்தில் வாழும் மக்களை முன்னேற்ற வேண்டும் என்பதிலும், இந்த அரசின் செயல் இலக்காகக் கொள்ள வேண்டும் என்பதை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எங்களுக்கு அறிவுரையாகக் கூறினார்கள். அந்த அறிவுரைக்கேற்ப சமூக நலத் துறை தன் திட்டங்களைப் பெண்கள் முன்னேற்றம் என்ற பாதையில் செலுத்தி வருகிறது.

பிற்பகல் 1-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விம்மி அழுது, வேதனைப்பட்டு, நிலைகெட்டு, கண்ணீர்விட்டு, வாழ வழி கேட்டு நிற்கும் ஏழைத் தாய்மார்களின் உயர்விற்கென, அவர்களின் பொருளாதார நிலையையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவதில் கண்ணும் கருத்துமாக இருந்து செயல் திட்டங்களைத்





தீட்டி வருகிற மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒருங்கிணைந்த பெண்கள் மேம்பாட்டுத் திட்டம் என்ற புதிய திட்டத்தை உருவாக்கி இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் ஒரு இலட்சம் பெண்கள் இதன் மூலம் பயன்பெறுவார்கள். இதில் 10,000 உடல் ஊனமுற்ற பெண்கள் வேலைவாய்ப்பினைப் பெறுகின்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 3–3–1992 அன்று மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் வறியவர்களுக்கு வாரி வழங்கும் தன் பொற்கரங்களால் முதன் முதலாக 11,000 பேருக்கு ஒரே தடவையாக வேலை வாய்ப்பு அளித்து இத்திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது வரலாற்று சரித்திரத்தில் முதன் முதலமைச்சராக புரட்சித் தலைவி செய்த மாபெரும் சாதனை என்பதை இந்த மன்றத்தில் எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தற்போது மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பெண்களைக் குழுக்களாகச் சேர்த்து பயிற்சி அளிப்பதற்கான பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். வரும் ஆண்டில் இத்திட்டம் முழுமையாகச் செயல்படுத்தப்படும்.

மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள். 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' என்ற முதுமொழிக்கேற்ப, 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்ற பாரதியின் வாக்கிற்கேற்ப பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் பல்வேறு முறையில் 164 கூட்டுறவுச் சங்கங்கள் இத்துறையில் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களின் மூலம் 20,000 பெண்கள் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். விடுதலைப் புலிகளுக்குத் துணி தைத்துக் கொடுத்த கடந்த கால சமூக நலத்துறையின் நிலையை மாற்றி ஏழைக் குழந்தைகளின் இன்முகத்தைப் பார்ப்பதற்கென புரட்சித் தலைவியின் ஆட்சியில் புத்தாடை தருவதற்கு 65 இலட்சம் பேருக்கு சீருடை தைத்து வழங்கப்படுகிறது. தையற் கூலியாக மட்டும் 3.88 கோடி ரூபாய் இந்த ஆண்டு செலவிடப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏதோ எல்லாம் தங்களுக்குத்தான் தெரியும் என்பது போல் நினைத்துக் கொண்டு கேள்விகளை அவையில் எழுப்பி, அதற்குப் பதில் அளிக்கும் அறிவாற்றல் மிக்க புரட்சித் தலைவியின் கிடுக்கிப்பிடியில் சிக்கி, மண்ணில் நெளியும் சிலதைப் போல் இந்த மாமன்றத்தில் நெளியும் சில உறுப்பினர்களும் இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் உறுப்

பினர்கள் கேட்கின்ற கேள்விகள் பயனுள்ளவையாய் இருப்பின் அதற்கு உடனடி நடவடிக்கைகளைத் துறைகளின் மூலம் எடுக்கவேண்டும் என்று விரும்புபவர்தான் எங்கள் தங்கத் தலைவி புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில் இன்றைய தினம் மாண்புமிகு திருமதி பொன்னம்மாள் அவர்களும், நேற்றைய முன் தினம் மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சரஸ்வதி அவர்களும் இங்கே பேசியதைக் கவனத்திலே கொண்டு அதன் பேரில் உடனடி நடவடிக்கையாக தையல் கலையிலும், ஆயத்த உடை அதாவது ரெடிமேட் ஆடை தயாரிப்பதிலும் சிறந்த பயிற்சி பெற்ற பெண்களைக் கொண்டு ஒரு அமைப்பை ஏற்படுத்துவதும் அதன்மூலம் ஆயத்த ஆடைகளைத் தயாரிப்பதிலும். இதைத்தவிர பெண்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தயாரிக்கும் ஆயத்த ஆடைகளையும் வாங்கி வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி சமூக நலத்துறைக்குப் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடன் ஊட்டச்சத்து மாவு தயாரிக்கும் ஐந்து கூட்டுறவு சங்கங்களைத் துவக்க, அரசு முடிவு செய்துள்ளது. இதன்மூலம் சுமார் 250 ஏழைப் பெண்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இந்த ஆண்டு எங்கள் தங்கத் தலைவியைத் தங்கள் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த பர்கூர் தொகுதியில் 350 பெண்கள் பயனடையக் கூடிய வகையில் இரண்டு தையல் கூட்டுறவுச் சங்கங்கள் துவக்கப்படும் என்பதை பெரு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாநில பெண்கள் நலக்குழு. இங்கே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திருமதி டி. சோசா அவர்களும், திருமதி ரமணி நல்லதம்பி அவர்களும் இதன்பேரில் தங்கள் கருத்துக்களைப் பேசுகிறபோது எடுத்துச் சொன்னார்கள். வரதட்சிணைக் கொடுமை, பெண்கள் தங்களுக்கான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நல்யோசனைகள் தந்து, பெண்களுக்கு இழைக்கப்படுகிற அநீதிகள், கொடுமைகள் ஆகியவற்றிற்கு தீர்வு காணுகின்ற வகையில் பெண்களுக்கென்று மாநில பெண்கள் நலக் குழு (ஸ்டேட் வுமென்ஸ் கமிஷன்) அமைக்கப்படும். இதன்மூலமாகத் தமிழகத்தில் இக்குழுவை அமைக்கிற முதல் முதலமைச்சராக மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களே இந்தப் பெருமையைப் பெறுகிறார்.



(மேசையைத் தட்டும் ஒலி) நிதி உதவி அளிக்கும் திட்டங்கள். ஏழைகளிடத்தில் அன்பு, இரக்கம் காட்டி அவர்களுக்கு அருள் செய்தல் நல்லரசின் கடமை என்பதை

'' கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்து இவ்வுலகு ''

என வான்மறை தந்த வள்ளுவர் கூறுகிறார். இந்த அரசினுடைய பல்வேறு வேலை வாய்ப்புத் திட்டங்கள் மூலமாகவும். சேவை இல்லங்கள், ஆதரவற்றோர் இல்லங்கள் போன்றவற்றின் மூலமாகவும் பலன்பெற இயலாமல் சிரமப்படும் பெண்களை புரட்சித் தலைவியின் புனித அரசு கைவிட்டுவிடுவதில்லை. அவர்களின் நலனுக்காக பல்வேறு நிதி உதவித் திட்டங்களை அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. ஆதரவற்ற பெண்கள் திருமணத்திற்காக ரூ. 1,000 நிதியுதவி அளிக்கப்படுகிறது. விதவைத் தாயின் மகளுக்காக ரூ. 2,000 மும், தாயும் தந்தையும் இல்லாத ஆதரவற்ற பெண்ணுக்கு ரூ. 1,000-மும் திருமண உதவியாக அளிப்பது முரண்பாடாக உள்ளது என்பதை கருத்திலே கொண்டு இந்த முரண்பாட்டை நீக்கி ஆதரவற்ற பெண்களுக்கும் இனிமேல் ஆயிரம் ரூபாய் அரசு அளித்த தொகையை ரூ. 2,000 ஆக அளிக்கவேண்டும் என தாயுள்ளம் கொண்ட தானைத் தலைவி மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் உத்திரவிட்டிருக்கிறார்கள் என்பதை உவகையோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–35

தமிழகத்தில் ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு 30 வீதம், 11,500 மகளிர் மன்றங்கள் இருக்கின்றன. இங்கே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ராஜூ அவர்கள் பேசுகிறபோது குறிப்பிட்டார்கள். இவற்றிற்காக ஆண்டுதோறும் ரூ. 50 இலட்சம் செலவிடப்படுகிறது. ஆனால் இந்த மன்றங்கள் சரிவர செயல்படுவதில்லை; மக்கள் விழிப்புணர்ச்சி, அவர்களுக்கான பயிற்சித் திட்டங்கள், கல்வி ஆகியவற்றை வளர்த்திடும் பாசறைகளாக இந்த மன்றங்களை மேம்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டு இருக்கின்றார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்பட்டு வரும் வழிகாட்டி மையத்தையும், இந்த மகளிர் மன்றங்களையும், இணைத்து மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் மகளிர் நலத்துக்காக சிறந்த சேவை புரியும்

வகையில், இந்த மன்றங்களின் அமைப்பு மாற்றி அமைக்கப்படுவது பற்றி புரட்சித் தலைவியினுடைய அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்து வருகிறது.

ஊனமுற்றோர் நலன், ஊனமுற்றோர் அமைப்புகளும்' ஊனமுற்றோரும் தங்கள் நலனை கவனிப்பதற்கென தனியாக ஒரு துறையை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று பல ஆண்டு காலமாக கோரிக்கை விடுத்து வந்தனர். கடந்த ஆட்சியில் இந்த ஊனமுற்றோரின் எதிர்பார்ப்புகள் எல்லாம் ஏமாற்றங்களாகவே இருந்து வந்தன. ஆனால் ஊனமுற்றோர்களின் வாழ்வுக்கு ஊன்றுகோலாய், பார்வையற்ற மனிதர்களுக்கு பார்க்கும் விழியாய் செயல்படும் எங்கள் தன்னிகரில்லாத் தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் இவர்கள் தங்களுக்கென்று ஒரு தனித்துறையைப் பெறுகிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலும் ஊனமுற்றோர் நலனுக்கென ஏற்படுத்துகின்ற இந்த தனித்துறையை, இந்த ஆண்டே செயல் படுத்தவேண்டுமென்று (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பூந்தமல்லியில் இயங்கிவரும் பார்வையற்றோருக்கான பள்ளியில் உள்ள 'ப்ரெய்லி அச்சு இயந்திரம்' வாங்கப்பட்டு சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. இதனை பலமுறை பழுதுபார்த்தும் பலனற்றுப் போய்விட்டது. புதிதாக இயந்திரம் வாங்கவேண்டும் என்றும் அரசுக்கு முறையிடப்பட்டது. கடந்த இரண்டு ஆண்டுகால ஆட்சியில் நியாயமான இந்த முறையீடுகள் கேட்பாரற்றுக் கிடந்தன. ஆனால் புரட்சித் தலைவியின் புனித ஆட்சியில் இந்த 'ப்ரெய்லி' அச்சு இயந்திரம் ஒரு புதிய வடிவம் பெற்று இருக்கிறது. ரூ. 11 இலட்சம் செலவில் புதிய அச்சு இயந்திரத்தினை வெளிநாட்டிலிருந்து வாங்குவதற்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்திரவிட்டிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பார்வையிழந்த மாணவர்களுக்கு ப்ரெய்லி முறைப் புத்தகங்களை அச்சடித்து தருவதற்கு இந்த இயந்திரம் மிகப் பெரிய ஒரு வரப்பிரசாதமாக அமைகிறது.

உடல் ஊனமுற்றோர்களுக்கும் மூன்று சக்கர வண்டி, சக்கர நாற்காலி, காது கேட்கும் கருவி, கைத்தடி போன்றவை கடந்த காலத்தில் மிகக்குறைந்த அளவில் விநியோகிக்கப்பட்டு வந்தன. அவர்களுடைய தேவைக்கும், அரசினுடைய நிதி



ஒதுக்கீட்டிற்கும் தொடர்பு இல்லாமல் இருந்து வந்தது. திங்கட்கிழமைதோறும் மக்களைச் சந்திப்பதால்,

முல்லைக்கு தேர்கொடுத்த பாரி
வாடிய மயிலுக்கு போர்வைகொடுத்த பேகன்
நாடி வந்த புறாவிற்கு சதைகொடுத்த சிபி மன்னன்
நீதி கேட்டு ஓடி வந்த பசுவிற்காக தன்
மகனை இழந்த மனுநீதி சோழன்—

வரலாறுகள் தமிழகத்தில் புரட்சித் தலைவியின் வடிவில் மீண்டும் உருவெடுத்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதனால் உபகரணங்கள் வேண்டி வந்து நிற்கும் ஆயிரக்கணக்கானவர்கள் கோரிக்கைகளைத் தீர்க்க என்ன வழி என்று ஆலோசனை செய்தார்கள். இதையடுத்து இந்த உபகரணங்களுக்காக காத்து இருக்கும் அனைவருக்கும் இந்த ஆண்டே வழங்கிவிடுவதென்று ஒரு முடிவு செய்து இந்த மானியக் கோரிக்கையில் ஒதுக்கி இருப்பதைவிட இதற்காக ரூ. 35 இலட்சத்தை கூடுதலாக ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

போலியோ நோய் வருவதைத் தடுப்பதும், இந்த நோயுற்றவர்களைப் பராமரிப்பதும் ஆன 'ஆப்பரேஷன் போலியோ புரோகிராம்' என்ற திட்டத்தினை இந்த அரசு வரும் ஆண்டிலும் 4-வது கட்டமாக 40 வட்டாரங்களில் செயல்படுத்த உள்ளது. இதற்கென ரூ. 76·17 இலட்சம் புரட்சித் தலைவியினுடைய இதயம், வள்ளல் இதயம், வழங்கியிருக்கிறது என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1—40

போலியோ நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கவும், இந்த நோய் வராமல் தடுக்கவும், தமிழக அரசு ஒரு சிறப்புத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு ஊராட்சி ஒன்றியப் பகுதிகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இதுவரை 131 ஊராட்சி ஒன்றியங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. போலியோ நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவில் மறுவாழ்வு கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இதற்கென ஒரு புதிய வழிமுறையை வகுத்துத் தந்திருக்கிறார்கள். இதன்படி, ஒவ்வொரு மாவட்டத்திலும்

[திருமதி இரா. இந்திரகுமாரி] [1992 ஏப்ரல் 10

இரண்டு ஊராட்சி ஒன்றியங்களில் தொடர்ந்து இத்திட்டம்
செயல்படுத்தப்படும். இத்துடன் ஆண்டுதோறும் ஒவ்வொரு
மாவட்டத்திலுமுள்ள எல்லா எஞ்சிய வட்டாரங்களில் இத்
திட்டம் முழுமையாக செயல்படுத்தப்பட்டு முடிக்கப்படும்.
இந்த ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் இத்திட்டம் எல்லா
வட்டாரங்களிலும் செயல்படுத்தப்படும். இதற்காக ரூ. 15
இலட்சம் கூடுதலாக ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை மகிழ்
வுடன் தெரியப்படுத்திக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும்
ஒலி)

உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்புக்கு தனி
ஒதுக்கீடு இருந்தபோதிலும், அதில் பார்வையற்றவர்களுக்கு
போதிய அளவில் வேலை வாய்ப்பு கிடைப்பது இல்லை. அவர்
களுக்கு என தனியாக வேலை வாய்ப்பு வசதிகளை உருவாக்கி
தர வேண்டுமென்று கோரிக்கை விடுத்து வருகிறார்கள். வேலை
வாய்ப்பின்றி இருக்கும் பார்வையற்றவர்களுக்கு வழங்கிவரும்
அரசின் உதவித் தொகையை காலத்தால் உருவாக்கப்பட்ட
நம்முடைய காவியத் தலைவி மாண்புமிகு முதல்வர் டாக்டர்
புரட்சித் தலைவி அவர்கள் அதிகப்படுத்தி உத்தரவு பிறப்பித்
திருக்கிறார்கள். அதன்படி இனிமேல் வேலை வாய்ப்பு அலு
வலகத்தில் பதிவு செய்து காத்திருக்கும் பார்வையற்ற பட்ட
தாரிகளுக்கு இதுவரை வழங்கப்பட்ட உதவித் தொகை ரூ. 200,
ரூ. 250-ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. (மேசையைத்
தட்டும் ஒலி) பள்ளி இறுதியாண்டு படித்த பார்வையற்றவர்
களுக்கு இதுவரை வழங்கப்பட்ட ரூபாய் 150, 200 ரூபாயாக
உயர்த்தப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) பள்ளி
இறுதியாண்டிற்கும் குறைவாக படித்தவர்களுக்கு ரூ. 100-
லிருந்து ரூ. 150 ஆக உயர்த்தப்படுகிறது. (மேசையைத்
தட்டும் ஒலி) என்பதை மகிழ்வுடன் இம்மாமன்றத்தில் தெரி
வித்துக் கொள்கிறேன். அதனால் அரசுக்கு கூடுதலாக
ரூபாய் 9 இலட்சம் செலவாகும்.

பார்வையற்றவர்களில் பலர் ஓரளவுக்கு மட்டும் படித்து
நாற்காலி பின்னுவதைத் தவிர வேறு எவ்வித தொழிலும்
தெரியாமல் சிரமப்பட்டு வருகின்றனர்.

"கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே
காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணருளும் கண்ணே"

என்ற வள்ளலாரின் வாக்கினை மெய்ப்பிக்க வந்துள்ள மாண்பு
மிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பார்வையற்றவர்
களுக்கு வேலை வாய்ப்பு வசதியை ஏற்படுத்தி தரும் வகையில்
ஒவ்வொரு மாவட்டத்திலும் பார்வையற்ற ஒருவருக்கு நாற்



1992 ஏப்ரல் 10] [திருமதி இரா. இந்திரகுமாரி]

காலி பின்னும் வேலை தரப்பட வேண்டுமென்றும், அவருக்கு
ரூபாய் 800 ஒட்டு மொத்த தொகையாக வழங்கப்பட வேண்டு
மென்றும் ஆணையிட்டிருக்கிறார்கள். அரசுக்கு இதனால்
ரூபாய் இரண்டு இலட்சம் கூடுதலாக செலவாகும் என்பதைத்
தெரியப்படுத்திக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஊனம் உற்றவர்களுக்கு அதிக அளவில் வேலை வாய்ப்பு
தரும் தனியார் நிறுவனங்களுக்கும், அரசு மற்றும் பொதுத்
துறை நிறுவனங்களுக்கும், அவர்களை ஊக்கப்படுத்தும் வகை
யில், மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி
அவர்களுடைய பெயரில் சிறப்பு விருது இனிமேல் வழங்கப்படும்.
(மேசையைத் தட்டும் ஒலி)

"தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி சிறப்பு
விருது" என்று இது அறிவிக்கப்பட்டு ஒவ்வொரு குடியரசு
நாளில் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களு
டைய திருக்கரங்களால் பெருமைக்குரிய இந்த சிறப்பு விருது
வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

குடியரசு தின விழாவில் ஊனமுற்றோர் நலனுக்கு என
எவ்விதத் திட்டமோ, அறிவிப்போ இதுவரை எந்த அரசாலும்
செய்யப்படவில்லை. ஆனால் ஊனமுற்றவர்கள் நலனில்
அக்கறைக் கொண்டு அவர்களுக்கு வேலைவாய்ப்பு வசதிகளை
அதிகப்படுத்த வேண்டும் என்று இந்த விருது வழங்கும் திட்டத்தை
தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்
தனது ஆட்சிக்காலத்தில் முதல் முதலமைச்சராக அறிவித்திருக்
கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைப் பெருமை
யோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஊனமுற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு வசதிகளை ஏற்
படுத்தித் தருவது பற்றி பொது மக்களுக்கும், தனியார் நிறு
வனங்களுக்கும் விரிவாக அறிவிக்கும் வகையில், உரிய முறை
யில் விளம்பரம் செய்யப்படும். உடல் ஊனமுற்றவர்களுக்கு
ஏற்ற பணிகள் என்னென்ன என்பதையும், உடல் ஊனமுற்ற
சகோதர சகோதரிகளுக்கு உதவுவது எப்படி நமது தலையாய
கடமை என்பதைப் பற்றியும் தொலைக்காட்சி, வானொலி,
பத்திரிகைகள் போன்றவற்றின் மூலமாக முழுமையாக விளம்
பரம் செய்யப்படும்.

உடல் ஊனமுற்றவர்களை அதிக அளவில் வேலைக்கு
அமர்த்தும் தனியார் நிறுவனங்களுக்கு இனி திட்ட முதலீட்டில்
5 சதவிகிதம் கூடுதலாக மானிய உதவி அளிப்பதை முதல்வர்
டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கொள்கை அளவில் ஏற்

றுக் கொண்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதைச் செயல்படுத்துவது பற்றிய நடைமுறைகள் பரிசீலனை செய்யப்பட்டு பின்னர் அறிவிக்கப்படும்.

பிற்பகல் 1-45

உடல் ஊனமுற்றோர் மறுவாழ்விற்காக மத்திய அரசினுடைய மையங்கள் டேராடூன், கல்கத்தா, ஐதராபாத், பம்பாய் போன்ற இடங்களில் இருந்தாலும் தமிழ்நாட்டில் ஒன்று கூட இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. பல்வகை ஊனமுற்றோருக்கும் உதவிடும் அளவிலான புனர்வாழ்வு மையம் ஒன்றைத் தமிழ்நாட்டில் அமைக்க வேண்டுமென்பதை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மத்திய அரசிடம் வற்புறுத்தியுள்ளார்கள். மத்திய நலத் துறை அமைச்சர் மாண்புமிகு சீத்தாராம் கேசரி அவர்கள் இந்தக் கோரிக்கையை ஏற்று. கொள்கையளவில் இசைவு தெரிவித்திருக்கிறார்கள். சென்னைக்கருகே முட்டுக்காடு என்ற இடத்தில் இந்த நேஷனல் இன்ஸ்டிடியூட்டைப் பெறுவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஊனமுற்றவர்கள் உயரத்தில் ஏறிவர முடியாது என்பதற்காக தானே கீழே இறங்கி வந்து அவர்களின் மனுக்களைப் பெறும் தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவி தமிழகத்தில் இனிமேல் கட்டப்படும் அரசுத் துறை பலமாடிக் கட்டிடங்களில் ஊனமுற்றவர்கள் சிரமமின்றி செல்வதற்கென சரிவான நடைபாதை வசதி ஏற்படுத்த வேண்டுமென்று ஆணையிட்டுள்ளார்கள். இது அமுலாக்குவது பற்றி சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்துடன் (எம்.எம்.டி.ஏ.) ஆலோசித்து முடிவு எடுக்கப்படும். பெற்ற தாய்தனை மகன் மறந்தாலும், பிள்ளையை தாய் மறந்தாலும், உற்ற உயிர்தனை உடல் மறந்தாலும், உடலை மேவிய உயிர் மறந்தாலும் உதவி தேடியலையும் ஊனமுற்றோர்களை புரட்சித் தலைவியின் உள்ளம் என்றைக்கும் மறப்பதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) உடல் ஊனமுற்றோருக்கு இந்த உயரிய உதவிகளை உருவாக்கித் தந்த புரட்சித் தலைவி அவர்களை தமிழ்ச் சமுதாயம் என்றும் மறப்பதற்கில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

சேவை இல்லம் :

"உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேரவும்
இது பற்பல நூல்வகை கற்கவும்



திலக வாணுதலார் தங்கள் பாரத
தேசமோங்க உழைத்திடல் வேண்டுமாம்"
"விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை
வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பாராம்"

என்ற பாரதியாரின் கனவினை நனவாக்கும் வண்ணம் பெண்களுக்குப் பற்பல வசதிகளை சமூக நலத் துறை செய்து கொடுக்கிறது. இம்மாநிலத்தில் 6 இடங்களில் ஆதரவற்ற பெண்களுக்கென சேவை இல்லங்கள் நடத்தப்படுகின்றன. தவிர குழந்தை இல்லங்கள் 24-ம் பணிபுரியும் பெண்கள் விடுதிகள் 8-ம் ஆகிய அனைத்திற்கும் சேர்த்து ஒவ்வொன்றிற்கும் ரூ. 4,800 மதிப்பில் புத்தகங்கள் வாங்கி, நூலகம் ஏற்படுத்த ரூ. 1.08 இலட்சம் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இந்த இல்லங்களை பராமரிக்க மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவியின் வள்ளல் இதயம் ரூ. 55.46 இலட்சத்தை இந்த ஆண்டு ஒதுக்கியுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

சமூக நலத்துறையின் கீழ் 58 பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இங்கு தையற்கலை, பனை ஓலைப் பொருட்கள் செய்தல், பொம்மை தயாரித்தல் போன்றவற்றில் பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் இந்தப் பெண்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்தால், இதுவரை கிடைத்த தொகையை அரசுக் கணக்கில்தான் செலுத்தப்பட்டு வந்திருக்கிறது. இங்கே பேசிய மாண்புமிகு பேரவை உறுப்பினர், அருமைச் சகோதரி, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்கள் பெண்களுக்கு நிரம்ப உதவிகளைச் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். இதுவரை எந்த முதலமைச்சரும் இதைப் பற்றி கவலைப்பட்டதில்லை. ஆனால் நம்முடைய முதலமைச்சர் இந்தத் தொகை மொத்தமும் அரசுக் கணக்கில் செலுத்தப்பட வேண்டாமெனவும், இந்த முறையினால் பயிற்சி பெறுபவர்களுக்கு எதுவும் கிடைப்பதில்லை என்று கவலைப்பட்டு, இனிமேல் விற்பனைத் தொகையில் பாதியை பயிற்சியாளர்களுக்கும், பயிற்றுனர்களுக்கும் பிரித்துத் தரலாம் என்கின்ற அனுமதியை வழங்கி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி.)

பணிபுரியும் பெண்கள் விடுதி :

பணிபுரியும் பெண்களுக்கு வேண்டிய வசதியையும் பாதுகாப்பையும் செய்து தருவதில் மாண்புமிகு புரட்சித் தலைவியின் அரசு எப்போதுமே முன்னிலை வகிக்கிறது.

காலையில் குழந்தைகளை பள்ளிக்கும், கணவனை அலுவலகத்திற்கும் அனுப்பி விட்டு, தானும் அலுவலகத்திற்கு வர வேண்டிய நிலையில், அலுவலகம் செல்லும் பெண்களின் கஷ்டங்களை உணர்ந்து, அரசு அலுவலகங்கள் காலையில் துவங்கும் நேரத்தையே மாற்றி அமைத்தவர் நமது புரட்சித் தலைவி அவர்கள்.

பிற்பகல் 1-50

பணிபுரியும் பெண்கள் தங்கும் விடுதிகள் தற்போது தமிழகத்தில் 7 இடங்களில் நடத்தப்படுகின்றன. நான் மகிழ்ச்சியோடு சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். சென்னையில் மேலும் ஒரு விடுதியைத் துவக்குவதற்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டு இருக்கிறார்கள். இந்த விடுதிகளை நடத்துவதற்காக இந்த ஆண்டிற்கு ரூ. 8.25 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

<u>ஆதரவற்றோர் இல்லம்</u>.—'நம் மாநிலத்திலுள்ள ஆதரவற்ற குழந்தைகள் அனைவருக்கும் பாதுகாப்பு கொடுக்கவேண்டுமென்பது எனது ஆசையும் விருப்பமாகும். அவர்களுக்கு உணவும் உடையும் கொடுத்தால் மட்டும் போதாது. அவர்கள் உயர் கல்வி பெற்று வளர்ந்து நல்ல வளமான வாழ்க்கையைப் பெற வேண்டுமென்று மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சென்ற ஆண்டு குழந்தைகள் தினத்தின்போது பேசியதை சமூகநலத்துறை தன் செயல் இலக்காகக் கொண்டு தொண்டாற்றி வருகிறது.

தமிழக அரசு மாவட்டம் தோறும் ஆதரவற்றோர் இல்லங்களைப் பராமரித்து வருகிறது. இந்த இல்லங்களில் தங்கிப் பயிலும் குழந்தைகளுக்கு உணவுச் செலவிற்காக மாதம் ஒன்றுக்கு ரூ. 90ஐ கடந்த கால அரசு கொடுத்து வந்தது. ஆனால் இந்தக் குழந்தைச் செல்வங்களுக்கு அந்த உதவித் தொகை போதாது என்பதற்காக இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தாயுள்ளத்தோடு ரூ. 90-லிருந்து ரூ. 120 ஆக உயர்த்திக் கொடுக்க ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதே போல சமூக நலத் துறையின் சேவை இல்லங்களிலும், ஆசிரியை பயிற்சிப் பள்ளிகளிலும் தங்கிப் பயிலும் மாணவியருக்கு உணவுச் செலவுத் தொகையாக மாதமொன்றுக்கு ரூ. 120ஐக் கடந்த கால அரசு கொடுத்தது. ஆனால் இன்றைய தினம் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் மாணவியரின் நலனில் அக்கறை கொண்டு அந்த 120 ரூபாயை 150 ரூபாயாக உயர்த்தி உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் அரசுக்கு ரூ. 24 லட்சம்



கூடுதல் செலவாகும். இதற்காக எவ்வளவு லட்சம் செலவாகும் என்பதைப் பற்றிக் கவலைப்படாமல் ஏழைகளை உயர்வடையச் செய்யும் லட்சியமே பெரிதென வாழும் ஒரே அரசியல் தலைவர் புரட்சித் தலைவி அவர்கள்தான் என்பதைக் காலம் நிரூபித்துக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி.)

சமூக நலத்துறை நடத்தும் ஆதரவற்றோர் இல்லங்களில் உணவு, உடை, உறைவிட வசதியுடன நல்ல உடல் ஆரோக்கியத்தையும் அளிக்கும் வகையில் இந்த இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவியருக்கு யோகா பயிற்சி அளிக்கவும் முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு இரண்டு லட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கஞ்சி குடிப்பதற்கின்றி கந்தையணிந்து இரு கையை விரித்து தங்கள் மெய்யைப் போர்த்தி வாழும் ஏழைக் குழந்தைகள் போதிய புகலிடம் இல்லாமல் வீதிகளில் அலைந்து திரிந்து துன்பப்படும் நிலை மாற, அவர்களை அழைத்து புகலிடம் நல்கி அவர்களுக்கு உணவு, உறைவிடம், கல்வி ஆகியவற்றை அளித்து அவர்களை சமுதாயம் மதிக்கத் தக்கவர்களாக மாற்றி, மறுவாழ்வு கொடுக்கும் புதிய திட்டத்தினை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தின் வரலாற்றில் உருவாக்கிய முதலவருள் இவரே முதல் முதல்வராய் இருந்து எங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். தனியார் தொண்டு நிறுவனங்கள் மூலமாக இந்தக் குழந்தைகளுக்கு புகலிடங்களை உருவாக்கி அவர்களுக்குப் பயனுள்ள முறையில் கல்வி மற்றும் வேலை வாய்ப்பு அளிப்பதற்காக நிதியுதவி வழங்கப்படும். சென்ற ஆண்டு 5 நிறுவனங்களுக்கும் இந்த ஆண்டு மேலும் 5 நிறுவனங்களுக்கும் விரைவில் இது அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>சமூகப் பாதுகாப்பு</u>.—வீதியிலே கிடக்கும் வீணைகளை எடுத்து அதில் ஒட்டிக் கொண்டு இருக்கும் தூசிகளைத் துடைத்து நல்லதொரு இசையெழுப்ப நாட்டினிலே வழிவகுக்கும் வகையில் சமுதாயத்தில் தவறிவிட்ட, தவறிழைத்த பெண்கள், இளம் குற்றவாளிகள் ஆகியோர் நலனுக்காக இந்தத் துறை பாடுபட்டு வருகிறது. 14 கூர்நோக்கு இல்லங்களும் 21 சிறப்பு இல்லங்களும் இந்தத் துறையின் கீழ் செயல்பட்டு வருகின்றன. நீண்ட காலத்திற்குப் பின்பு இளம் குற்றவாளிகளின் நலனுக்கென வாரியங்களை நம்முடைய புரட்சித் தலைவியின் அரசு அமைத்து ஆணையிட்டுள்ளது. இளம் குற்றவாளிகள் மற்றும் தவறிழைத்த பெண்கள் ஆகியோரின் மறுவாழ்வுக்கு பல்வேறு விதமான தொழிற் பயிற்சித் திட்டங்கள் இந்தத் துறையினால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த இல்லத்தில் உள்ளவர்களுக்கு

[திருமதி இரா. இந்திரகுமாரி] [1992 ஏப்ரல் 1(

தொழில் பயிற்சி அளிப்பதற்கு ரூ. 2.10 இலட்சம் மதிப்பிலான திட்டத்திற்கு நம்முடைய புரட்சித் தலைவி அரசு ஒப்புதல் அளித்துள்ளது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள் கிறேன்.

குழந்தைகள் நலம்.—சமூக நலத்துறையின் சார்பாக காது கேளாதோருக்காக 10 பள்ளிகளையும். பார்வையற்றோருக் காக 11 பள்ளிகளையும் நடத்தி வருகிறோம், இந்தப் பள்ளி களில் பயிலும் மாணவர்களுக்குப் பொது அறிவை வளர்த்துக் கொள்ளவும், பொழுது போக்குவதற்கும் எவ்வித வசதியுமில்லை என்கின்ற காரணத்தால் நம்முடைய மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள், பார்வையற்றோர் பள்ளி ஒவ்வொன்றிலும் ஒரு டேப் ரிக்கார்டரும். காது கேளா தோர் பள்ளி ஒவ்வொன்றிலும் ஒரு தொலைக்காட்சிப் பெட்டி யும் வாங்கி வைக்க வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள், (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் அரசுக்கு ஒரு லட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும். தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சிறப்புப் பள்ளிகள், பயிற்சி நிலையங்கள் ஆகிய வற்றில் 1,200 ஊனமுற்றோர்கள் பயில்கிறார்கள், இவர்களுக்கு உணவுச் செலவாக மாதமொன்றுக்கு கடந்த ஆட்சிக் காலத்தில் 30 ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டதை இன்றையதினம் புரட்சித் தலைவி அவர்கள் 90 ரூபாயாக உயர்த்தி உத்தரவிட்டிருக் கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-55

ஆதரவற்ற பெண் குழந்தைகளுக்கு முறை சாராக் கல்வி மற்றும் கைத்தொழில் பயிற்சி அளிப்பதற்கு யூனிசெப் நிறுவனத் தின் முழு உதவியுடன் சமூக பாதுகாப்புத் துறையின் மூலம் ஒரு ''நல மையம்'' துவக்கப்படும்.

குடும்பநலத் திட்டத்தை ஊக்குவிக்கும் வகையிலும், பெண் குழந்தைகளின் நலம் பேணும் வகையிலும், குடும்ப நலத் திட்ட அறுவை சிகிச்சை செய்து கொண்ட பெற்றோரின் பெண் குழந்தை யின் பெயரில் ரூ. 2,000 முதலீடு செய்து தரப்படும், இத் தொகையை வட்டியுடன் அப்பெண் குழந்தையின் மேல் படிப்புக்கா கவோ. திருமணத்திற்காகவோ. அதன் 20-வது வயதில், அரசு அளிக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) ஆண்டுதோறும் 20,000 பெண் குழந்தைகள் இத் திட்டத்தின் மூலம் ஒளிமயமான எதிர் காலத்தில் தமிழகத்தின் வரலாறு எழுதப்படும்போது பெண் குழந் தைகளின் பாதுகாப்பிற்காக கவலைப்பட்ட ஒரே முதலமைச்சர் புரட்சித் தலைவி ஒருவர்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்று பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும், ஆகவே இத் திட்டத்



1992 ஏப்ரல் 10] [திருமதி இரா. இந்திரகுமாரி]

திற்கு புரட்சித் தலைவியின் பெயர் சூட்டப்படும். இனி இத் திட்டம் ''புரட்சித் தலைவி பெண் குழந்தைகள் நல பாதுகாப்பு திட்டம்'' என்று அழைக்கப்படும், (மேசையைத் தட்டும் ஒலி).

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம். இந்த திட்டத்தில் சுமார் 28,500 குழந்தைகள் நல மையங்களும் 39.000 பள்ளி சத்துணவு மையங்களும் இயங்கி வருகின்றன. சென்ற ஆண்டு இத்திட்டத்திற்காக ரூ. 236 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால இந்த ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய சத்துணவுத் திட்டம் சீரிய முறையில் செம்மைப்படுத்தப்பட்டு நடத்தப்பட வேண்டும் என்று புரட்சித் தலைவி அவர்கள் கருதுகின்ற காரணத்தால், இத்திட்டத்திற்கு ரூ. 256 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

சென்ற ஆண்டு சமூக நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதில் அளிக்கும்போது, சத்துணவு மையக் கட்டிடங்கள் பழுதுபார்க்கும் பொறுப்பை தொழில் அதிபர்களிடமும், தனியார் தொண்டு நிறுவனங்களிடமும் தத்தெடுத்தல் பாணியில் விடப்படும் என்று தெரிவித்தேன். அரசே இந்தக் காரியத்தை செய்ய வேண்டுமென்று சொன்னால் ஏறக்குறைய 18 கோடி ரூபாய் தேவைப்படும். ஆகவே தொண்டுள்ளம் படைத்தவர்களும், தனியார் நிறுவனங் களும் இந்த முயற்சியில் ஈடுபட்டு 8050 மையங்களை ஏற்றுக் கொண்டனர். அதிலே இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட மையங் களை ரூ. 1.45 கோடி மதிப்பில் பழுது பார்த்து முடிக்கப்பட் டுள்ளன என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு நம்முடைய ஒப்பற்ற தலைவி அந்த பழுதடைந்த சத் துணவுக் கூடங்களை பழுது பார்ப்பதற்காக ரூபாய் ஒரு கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். மேலும், இம்மையங்களில் உள்ள பாத் திரங்களை, பழுதடைந்துள்ள பாத்திரங்களை அகற்றி புதிய பாத் திரங்களை வாங்க வேண்டுமென்றால் அரசுக்கு 30 கோடி ரூபாய் செலவாகும். ஏற்கெனவே நம்முடைய சமூக நலத் துறையில் கடந்த ஆண்டு மானியக் கோரிக்கையில் ஒரு கோடி ரூபாயை ஒதுக்கினார்கள். இந்த ஆண்டும், அதே போல, பாத்திரங்களை வாங்குவதற்காக புரட்சித் தலைவி அவர்கள் மனமுவந்து ஒரு கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு (மேசையைத் தட்டும் ஒலி) தெரிவித்துக்கொள்கிறேன்.

வீணர்களின் ஆட்சியை விரட்டி அடிக்க தமிழகம் முழுவதும் பவனி வந்த புரட்சித் தலைவி அவர்கள் சத்துணவுத் திட்டத்தில் தான் தந்த வாக்குறுதியைத் தள்ளி வைக்காமல் நேற்றுவரை ஒரு குழந்தைக்கு ஒரு கிராம் எண்ணெய் என்ற நிலையை அகற்றி, டாக்டர் திருமதி ராஜம்மாள் தேவதாஸ் தலைமையில் அமைந்த

வல்லுநர் குழு அளித்த ஆலோசனையின்படி அதை இன்றிலிருந்து இரண்டு கிராம் வழங்க வேண்டும் என்ற உத்தரவை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் அளித்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

சனி, ஞாயிறு போன்ற விடுமுறை நாட்களில் குழந்தைகள் வருகை குறைவாக உள்ளது என்றும், அந்த நாட்களுக்கு சத்துணவுக் கூடங்களுக்கு விடுமுறை தர வேண்டும் என்றும் இந்த மாமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர் பலபேர் ஏற்கெனவே கூறியிருக்கிறார்கள். இன்றைக்கு மானியக் கோரிக்கையில் பேசிய உறுப்பினர்களும் இதை வலியுறுத்தியிருக்கிறார்கள். இந்த நாட்களில் வரும் ஏழை குழந்தைகளுக்கு கட்டாயம் உணவு அளிக்க வேண்டும் என்று புரட்சித் தலைவி விரும்புகிறார். சமூக நலத்துறை என்பது முழுக்க முழுக்க சமுதாய மக்களுக்கு சேவை செய்யவே செலவழிக்கும் துறைதான் என்றாலும், அரசின் நிதியில் சிறிதளவுகூட 'விழலுக்கு இறைத்த நீராய்' வீணாய் போய் விடக் கூடாது என்பதை கருத்திற்கொண்டு, சனி, ஞாயிறு போன்ற விடுமுறை நாட்களில் சத்துணவுக் கூடங்களுக்கு உண்மையாக எவ்வளவு பேர் வருகிறார்கள் என்பதை கணக்கில் எடுத்து அவர்களுக்கு உணவளிக்க வேண்டும் என்றும் அதற்கு மேலும் கூடுதலாக குழந்தைகள் வருகை தந்திருந்தால், ஒரு குழந்தைக்குக் கூட உணவில்லை என்று சொல்லுகின்ற நிலைமையை உருவாக்காமல், அனைத்துக் குழந்தைகளுக்கும் உணவளிக்க வேண்டும் என்றும் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் புரட்சித் தலைவியினுடைய அரசால் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குழந்தைகள் நல மையங்களில் சத்துணவு உட்கொள்ளும் குழந்தைகள் அனைவருக்கும் பேரறிஞர் அண்ணா, டாக்டர் எம்.ஜி.ஆர். ஆகியோரின் பிறந்த நாட்களில், இனிப்பு வழங்க மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். குழந்தைகள் நலனில் மிகுந்த அக்கறையும், ஆர்வமும் கொண்டு அவர்களுக்காக பல புதிய திட்டங்களைச் செயல்படுத்தி வரும் என் அன்புத்தாய் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் பிறந்த நாளின்போதும், தமிழகத்தில் உள்ள இலட்சோப இலட்சம் குழந்தைகள் மகிழ்ச்சியாக இனிப்பு உண்ண வேண்டும் என்பது எனது விருப்பம் மட்டுமல்ல, இப்பேரவைக்கு உள்ளேயும், வெளியேயும் உள்ள கோடிக்கணக்கான மக்களின் விருப்பமாகும். (மேசையைத் தட்டும் ஒலி). எனவே இனிமேல் சத்துணவுக் கூடங்களில் பேரறிஞர் அண்ணா, டாக்டர்



எம்.ஜி.ஆர்., டாக்டர் புரட்சித் தலைவி ஆகிய மூவரின் பிறந்த நாட்களின்போதும் இனிப்பு வழங்கப்படும் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 2.00

சத்துணவுத் திட்டத்தில் குழந்தைகளுக்கு 10 கிராம் பருப்பும், மாணவர்களுக்கு 15 கிராம் பருப்பும் தினந்தோறும் உணவுடன் அளிக்கப்படுகிறது. வளரும் குழந்தைகளுக்கு புரதச் சத்து மிகவும் அதிக அளவில் கிடைக்கச் செய்வது அவசியமாகும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் கருதுகிறார்கள். பருப்பில் உள்ளதைப்போல், சோயா மாவில் புரதச் சத்து இரு மடங்கு இருப்பதாகவும், பாலைப்போல் 15 மடங்கும், முட்டையைப் போல் 3 மடங்கும் புரதச் சத்து இருப்பதாகவும் வல்லுநர்கள் குழு தெரிவித்து இருக்கிறது. எனவே, சோயா மொச்சை மாவை இனிமேல் பருப்புடன் ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் கலந்துகொடுக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதனால் குழந்தைகளுக்கு புரத சத்து இனிமேல் அதிக அளவில் கிடைக்கும்.

தமிழகத்தில் சுமார் 28,500 குழந்தைகள் நல மையங்கள் செயல்படுகின்றன. இம்மையங்களில் மாலை நேரங்களில் பெண்களுக்கு கைத்தொழில் பயிற்சி, சுகாதாரக் கல்வி, முதியோர் கல்வி, பெண்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல், மதுவிலக்குப் பிரச்சாரம் போன்ற சீரிய பணிகளை மேற்கொள்வதற்கு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்கெனவே ஆணை பிறப்பித்துள்ளார்கள். இந்தத் திட்டங்களைச் செயல்படுத்த இம்மையங்கள் அனைத்திற்கும் மின் விளக்கு வசதி செய்து தரப்பட வேண்டும். தமிழக மின்வாரியம் செயல்படுத்தும் ''குடிசைக்கு ஒரு மின் விளக்கு'' என்ற திட்டத்தின் கீழ் இது படிப்படியாகச் செயல்படுத்தப்படும் என்பதை இத்தருணத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றதிலிருந்து சத்துணவுத் திட்டம் சீரும் சிறப்புமாக நடைபெற வேண்டும் என்று கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள்.

இந்தத் துறை சிறப்பாக சீரமைக்கப்பட வேண்டும். சீரமைப்புப் பணியை முதலில் மாவட்ட அளவில் துவங்க வேண்டும். மாவட்ட அளவில் துவங்க வேண்டுமென்றால், சத்துணவுத் திட்ட நேர்முக உதவியாளர்கள் சமூக நலத்துறையின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும். மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர், ஆதிதிராவிட நலத்துறையின் நேரடிக் கட்டுப்

பாட்டில் பணிபுரிகிறார். மாவட்ட விநியோக அலுவலர் உணவுத் துறையின் நேரடிக் கட்டுப்பாட்டில் பணிபுரிகிறார். மாவட்ட பிற் பட்டோர் நல அலுவலர், பிற்பட்டோர் நலத்துறையின் நேரடிக் கட்டுப்பாட்டில் பணிபுரிகிறார். இப்படி ஒவ்வொரு துறையின் மாவட்ட அலுவலர்களும் அந்தந்தத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரிகிறார்கள். சத்துணவுத் திட்டத்தை செயல்படுத்தும் சத்துணவு நேர்முக உதவியாளர்களும், சமூக நலம் மற்றும் சத் துணவுத் துறையின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் வர வேண்டுமென் கின்ற உத்தரவை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர் கள் வழங்கி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

மேலும் இந்தத் திட்டத்திற்கென தனியாக ஒரு துறை ஏற் படுத்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இந்த மன்றத்திலும் வலியுறுத்தி வந்து இருக்கின்றனர். இதற்கு ஒரு முன்னோடி நடவடிக்கையாக மாவட்டங்களில் பணிபுரியும் இந்த சத்துணவுத் திட்ட நேர்முக உதவியாளர்கள் சமூக நலத் துறையின் கட்டுப்பாட்டிற்கு வருவார்கள் என்றால், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எண்ணுவதைப்போல இந்த திட்ட மானது மேலும் நிர்வாகம், மற்றவற்றிலும் சிறப்பாக அமைய வழி வகுத்துத்தரும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சமூக நலத்துறை, இளம் குழந்தைகளின் எதிர்கால வாழ்வாய், ஏழை மகளிருக்கு ஏற்றதொரு துணையாய், ஊன முற்றோருக்கு உதவிக்கரமாய் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி காட்டும் புனிதப்பாதையில், அவர் தரும் அறிவு தீபத்தைக் கையிலேந்தி, காலத்தை வீணாக்காமல் கடமை யாற்றி,

'' எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்— இங்கு
இல்லாமை இல்லாத நிலை வேண்டும் ''

என்ற வகையில் புதியதோர் சமுதாயத்தை மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தலைமை யில் அமைக்க பாடுபடும் என உறுதி கூறுகின்றேன்.

அடுத்து வெட்டுத் தீர்மானங்கள். மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் மானியக் கோரிக் கைகள் என்றால், சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுக்கிற வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தையும் 'வெற்றுத் தீர்மானங்கள்' ஆக ஆக்குகின்ற வகையில் தன்னுடைய நா வன்மையால், தன்னுடைய சொல் வன்மையால், தன்னுடைய ஆற்றலால் இன்று இமயமாக உயர்ந்து நிற்கிறார்கள். இரண்டு ஆண்டுக் கால ஆட்சியில் சட்டமன்றத்தினை களங்கப்படுத்தி, மக்கள் மத்தியில் சட்டமன்றத்தின் மரியாதையைக் கெடுத்து வைத்து



இருந்தார்கள். ஆனால், இன்றைய தினம் புரட்சித் தலைவி அவர்கள் இந்த சட்டமன்றத்தில் ஆற்றுகின்ற உரையின் மூலமாக சட்டமன்றத்தின் மரபுகளைக் காப்பாற்றுவதன் மூலமாக சட்ட மன்றத்தையே ஒரு 'பல்கலைக்கழகம்' ஆக மாற்றி அமைத்து இருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். அவர்கள் எங்களுக்கு ஒரு வழிகாட்டி ; அவர்கள் எங்களுக்கு ஓர் அன்னை ; அவர்கள் எங்களுக்கு ஒரு முன்னோடி ; அவர்கள் இமயமாக உயர்ந்து இருக்கிறார்கள். அந்த இமயத்திலே இருக்கிற சிறுசிறு கற்களாக இன்றைக்கு நாங்கள் பணிபுரிந்து கொண்டு இருக்கிறோம். ஆகவே, இந்த வெட்டுத் தீர்மானங்களுக்கெல் லாம் முழுமையாகப் பதில் சொல்லக்கூடிய ஆற்றல் எனக்கு இல்லை என்று சொன்னாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் ராம சுப்பு, ஆண்டி அம்பலம், ராஜு, அப்துல்ஹசன், ரங்கநாதன், தெய்வநாயகம், வெங்கடேசன், இராசாராமன், குமாரதாஸ் போன்றவர்கள் கொள்கை பற்றி விவாதிக்க வேண்டுமென்று வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்து இருக்கிறார்கள். நாங்கள் தயாரித்து இந்த அவை முன் வைத்திருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பில் அனைத்தும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. எனவே, கொள்கை பற்றி தனியாக விவாதிக்க தேவையில்லை.

பிற்பகல் 2.05

அதைப்போல கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு வேலை வாய்ப்புக்கும், உடல் ஊனமுற்றவர்களுக்கும், விதவை தாய்மார்களுக்கும் உதவித் தொகை வழங்குவதைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சிங்காரம், திரு, சுவாமிநாதன், திரு. பழனிசாமி, திரு. ராமசுப்பு, திரு. தங்கராசு, திரு. செல்வராசு ஆகியோர் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத் திருக்கிறார்கள். அதைப்பற்றி நான் விளக்கமாக என்னுடைய பதிலுரையில் குறிப்பிட்டு இருக்கிறேன்.

எட்டாவது வகுப்பு வரை படித்த ஏழை பெண்களுக்கு திருமண உதவித் தொகை காலதாமதம் ஆவதைப் பற்றி இங்கே பல உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத் திருக்கிறார்கள். பேசியும் இருக்கிறார்கள். இதற்காக ஒதுக் கப்படுகிற தொகை 5 கோடி ரூபாய். இந்த 5 கோடி ரூபாயும் இந்த அரசு செலவழித்து விடுகிறது. அதிலே கொஞ்சமும் மீதம் வைப்பதில்லை. ஆகவே, இதற்கான தொகையை அதிகப் படுத்துவதைப் பற்றி அடுத்த ஆண்டு பரிசீலித்து இந்த அரசு முடிவு செய்யும் என்பதை இந்த நேரத்தில் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

புத்தாண்டு வருகிற நேரத்தில் கனிச்சியாக வந்திருப்பது சமூக நலத் துறை மானியக் கோரிக்கை. இந்த நேரத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய

இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன். ஏனென்றால், இதுவரையில் தமிழக வர
லாற்றில் எந்த முதலமைச்சரும் அனாதை குழந்தைகளைப் பற்றி
யும், அனாதை பெண்களைப் பற்றியும் கவலைப்பட்ட வரலாறே
கிடையாது. ஆனால், நம்முடைய முதலமைச்சர் புரட்சித்
தலைவி அவர்கள் இந்த புத்தாண்டு தினத்தன்று 32,000
குழந்தைகளுக்கும், அனாதைப் பெண்களுக்கும், தன்னுடைய
சொந்த செலவில்-சமூகநலத் துறையில் இருக்கிற குழந்தைகளுக்கு
—இனிப்பு வழங்க இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும்
ஒலி)

இந்த முதலமைச்சரின் காலத்தில் வாழ்கிறோம் என்று
சொல்வதே நமக்கு பெருமை. எப்படி சந்திரகுப்தர் காலத்தை
பொற்காலம் என்று சொல்வார்களோ, அதைப்போல தமிழகத்
தில் ஒரு பொற்காலம் என்று சரித்திரத்தில் எழுதப்பட்டால்
அது புரட்சித் தலைவி அவர்களின் காலம் தான் என்று எழுதப்
டும். (மேசையைத் தட்டும் ஒலி). நம்முடைய முதலமைச்
ர் நீண்ட ஆயுளோடு, எங்களுடைய ஆயுளையும் சேர்த்து,
ண்ட ஆயுளோடு வாழ வேண்டும் என்று இந்த நேரத்தில்
இறைவனைப் பிரார்த்தித்து, அவர் இப்படிப்பட்ட நல்ல
காரியங்களைச் செய்வதற்கு, உடல் தெம்பையும், மனத்
தெம்பையும் இறைவன் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு,
இந்த மானியக் கோரிக்கையை, வெட்டுத் தீர்மானங்களைத்
திரும்பப் பெற்றுக் கொண்டு, நிறைவேற்றித் தர வேண்டுமெனறு
மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களை கேட்டு அமைகிறேன்.
நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: திரு. சி. ஞானசேகரன்.

<u>திரு. சி. ஞானசேகரன்</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த சத்துணவு மையங்களில் காய்கறிகளை சத்
துணவு அமைப்பாளர்கள் தான் வாங்கிப் போட வேண்டுமென்று
அரசாணை இருக்கிறது. ஆனால், அந்த அரசாணையை பல
இடங்களில் பி.டி.ஓ.க்கள் செயல்படுத்தாமல் இருக்கிறார்கள்.
அதைப்போல, குடும்ப நல நிதிக்கு என்று பணம்
தமிழகம் முழுமையும் பிடிக்க வேண்டுமென்று அரசாணை
இருந்தும், பிடிக்கப்படாமல் இருக்கிறது. இதை உடனடியாக
தமிழகம் முழுமைக்கும் 'யூனிபார்ம் பாலிசி'யை கடைப்பிடித்து,
இந்த குடும்ப நல நிதிக்கு பணம் பிடிக்கப்படும், பணம் கொடுக்
கப்படும் என்ற நிலையை அமைச்சர் அவர்கள் உருவாக்கித்
தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி</u>: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, சில இடங்களில் பிடிக்கப்படு
கிறது, சில இடங்களில் பிடிக்கப்படவில்லை என்கிற தகவலைச்





சொல்கிறார்கள். எந்த இடங்களில் பிடிக்கப்படவில்லை
என்று அவர்கள் தெரிவித்தால், அதற்குரிய நட
வடிக்கையை அரசு எடுக்கும். அதைப்போல சத்துணவு அமைப்
பாளர்கள் சில இடங்களில் வாங்குகிறார்கள், சில இடங்களில்
பி.டி.ஓ.க்கள் வாங்கித் தருகிறார்கள் என்று சொன்னார்கள்.
குறிப்பிட்டு அந்த இடங்களை என்னிடத்தில் கொடுத்தால் அதற்
குரிய நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: திருமதி ஏ. எஸ்.
பொன்னம்மாள்.

<u>திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்</u>: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நாமெல்லாம் காது குளிர, மனம் நிறைய
பல நல்ல விஷயங்களை கேட்டு ஆனந்தப்பட்டுக் கொண்டிருக்
கிறோம். ஏழைகளுக்கு உதவி செய்வதற்காக நன்றி செலுத்து
வதோடு, சத்துணவு குழந்தைகளுக்கு மூன்று பெருந் தலைவர்
களுடைய பிறந்த நாளில் நாம் இனிப்பு வழங்க இருக்கிறோம்.
என்னுடைய தாழ்மையான வேண்டுகோள்—இந்த மதிய உணவுத்
திட்டத்தை கொண்டு வந்தது எங்களுடைய தலைவர் பெருந்
தலைவர் காமராஜர் அவர்கள். அவர்கள் கொண்டு வந்த
திட்டத்தை விரிவுபடுத்தினார்கள் நம்முடைய தலைவர்கள்.
ஆகவே, அவர் பிறந்த நாளிலும் இனிப்பு வழங்கப்படுமா என்று
அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்</u>: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இதே அவையில் பலமுறை
சொல்லியிருக்கிறோம். சத்துணவை முதன் முதலில் கொண்டு
வந்தது புரட்சித் தலைவர் அவர்கள்தான். (மேசையைத்
தட்டும் ஒலி) ஆனால் மதிய உணவு திட்டத்தைக் கொண்டு
வந்தது முதன் முதலில் வெள்ளுடை வேந்தர் தியாகராயர் தான்.
அதற்கு வரலாறு இருக்கிறது. இதையும் பல முறை சொல்லி
யிருக்கிறேன். நான் காமராஜர் அவர்களை குறைத்து மதிப்
பிடவில்லை. வெள்ளுடை வேந்தர் கொண்டு வந்ததை
காமராஜர் அவர்கள் பின் பற்றிய காரணத்தால் காமராஜர்
அவர்களுக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்
பிலும், திராவிட இயக்கத்தின் சார்பிலும் நான் பாராட்டுகளை
யும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி</u>: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்
களின் கோரிக்கையை நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம்
புரட்சித் தலைவி அவர்கள் நிறைவேற்றி இருக்கிறார்கள்
(மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த இனிப்பான அறிவிப்போடு விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 30—சமூக நலன்.

வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. பி. வி. இராஜேந்திரன்.

உறுப்பினர் தன் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

பிற்பகல் 2.10

டாக்டர் தே. குமாரதாஸ், உன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்படுகிறது.

'' சமூக நலன் பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 403,76,70,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் ''

என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெற்றது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 15—4—1992 புதன்கிழமை காலை 9.30 மணிக்குக் கூடும்.@@ வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.11 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

---

@@ பின்னர் மாண்புமிகு பேரவைத் தலைவர் வெளியிட்ட அறிவிப்புக்கு இணங்க பேரவை மீண்டும் 20—4—1992 ஆம் நாளன்று கூடியது.



## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

60. 1894 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் 55(1) பிரிவின்கீழ் வகுக்கப்பட்ட விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 11—6—1991 ஆம் நாளிட்ட 892 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1894 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1894) 55(1) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

61. தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட்டின் 1987–88 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

62. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1988–89 ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை [1948 ஆம் ஆண்டு மின்சார (விநியோகம்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 75(1) (ஏ) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

111. கோரிக்கை எண் 30—சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1992–93 (தமிழ், ஆங்கிலம்).

112. சமூக நலத்துறையின் சாதனைத் திட்டம், 1992–93 (ஆங்கிலம்).

113. உரிமைக் குழுவின் அறிக்கை.

114. அரசு உறுதிமொழிக் குழுவின் ஐந்தாவது அறிக்கை, 1991–92

255-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.

[1992 ஏப்ரல் 10]

## கோரிக்கை எண். 30

## சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை.

## கொள்கை விளக்கக் குறிப்பு 1992—1993.

## அத்தியாயம் 1.

முன்னுரை :

கோரிக்கை எண், 30-ன் கீழ் 1992-93-ஆம் ஆண்டிற்கு ரூபாய் 40,37,670 ஆயிரங்கள் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டு கிறேன்.

1.1. இன்றைய நிலையில் "மகளிரின் சராசரி வாழ்நாள் கூடியிருக்கிறது; ஆடவர்—மகளிர் விகிதாசாரம் சமநிலை அடைந்துள்ளது; நமது நாட்டில் மகளிர் திருமண வயது உயர்ந்திருக்கிறது; மகளிர் நலம் என்ற பொதுவான நிலையிலிருந்து, மகளிர் வளர்ச்சி, மகளிர் முன்னேற்றம் என்று சமுதாய நோக்கில் மாறுதல் ஏற்பட்டுள்ளது" என்பதை நாம் அனைவரும் அறிவோம். இருப்பினும் "கருவளர்ச்சி நிலையைத் தீர்மானிப்பதற்கான சோதனைகளைத் தவறாகப் பயன்படுத்துதல், பெண் குழந்தை பிறப்பதில் விருப்பமின்மை, சில இடங்களில் நிலவுகின்ற பெண் சிசுவதை, பெண் குழந்தையை அலட்சியம் செய்தல், பெண்களின் எழுத்தறிவின்மை, அவர்களின் உடல் நலப்பிரச்சினைகள், பணி செய்யும் மகளிரின் நலன் காப்பதற்கான முறையான அமைப்பு இல்லாத குறை" — ஆகிய பல எதிர்மறை பிரச்சினைகள் மகளிர் நலனில் ஆழ்ந்த அக்கறையையும், அவசரமான கவனத்தையும் செலுத்த வேண்டிய அவசியத்தை ஏற்படுத்துகின்றன.

1.2. மகளிருக்கு உரிய உரிமைப் பங்கை அவர்களுக்கு அளிக்க வேண்டியது இன்றைய அவசியத் தேவை ஆகும். ஒவ்வொரு பெண்மணியும் உறுதியான தன்னம்பிக்கையைப் பிரதிபலிக்க நாம் உதவ வேண்டும். பெண்களின் ஆக்க பூர்வமான திறமைகளை வளர்த்து உருவாக்க வேண்டும்; அதன் மூலம் புதிய சமுதாய மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான கூட்டுப் பணிகளில் அவர்களை ஈடுபடச் செய்ய வேண்டும்; அவர்களின் பொருளாதார சுதந்திரத்திற்கான புதிய எண்ணங்களையும், கருத்துக்களையும் கண்டு பிடிக்க வேண்டும்; அதன் மூலம் அவர்களின் உயர்ந்த நோக்கங்களையும், விருப்பங்களையும் பூர்த்தி செய்ய வேண்டும்.

"எந்த நாடு, எந்த தேசம் மகளிரை மதிக்கவில்லையோ, அந்த நாடு, அந்த தேசம் என்றும் உயர்ந்த நாடாக ஆனதில்லை; எக்காலத்திலும் உயர்ந்த நாடாக ஆகப் போவதும் இல்லை; எந்தக் குடும்பத்தில் பெண் கவலையுடன் வாழ்கிறாளோ, அக்குடும்பத்தின் வாழ்வுக்கு வழியுமில்லை; நம்பிக்கையும் இல்லை" என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

''பெண்களின் கவலையைப் போக்க வேண்டும்; நல்ல வாழ்க்கைக்குரிய நம்பிக்கையை ஊட்ட வேண்டும்'' இதைத்தான் சமூக நலத்துறை தனது கடமையாக, பணியாகக் கொண்டு இயங்கி வருகிறது.

*1.3.* அதே போல, சமுதாயத்தில் நலிவுற்றிருக்கும் மேலும் இரண்டு பிரிவினர் நலத்தையும் இந்தத் துறை கவனிக்கிறது. வளரும் பருவத்தில் போதிய ஊட்டச்சத்து கிடைக்காது, நோய் நொடிக்காளாகி இளம் வயதில் குழந்தைகள் இறந்து போவது இந்தியா போன்ற வளரும் நாடுகளில் சாதாரணமான ஒன்றாக இருந்தது. ஆனால், பல்வேறு குழந்தைகள் நலத் திட்டங்கள் மூலமும், சுகாதாரத் திட்டங்கள் மூலமும் நாம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளோம். எனினும் நாம் கடந்து செல்ல வேண்டிய பாதை மிகவும் நெடியது; நமது இலட்சியமும் உயர்ந்தது. குழந்தைகள் பிறந்த ஒரு வருடத்திற்குள் இறப்பதும், நோய்க்குள்ளாவதும் இன்னும் அதிக அளவிலேயே உள்ளன. அனைத்துக் குழந்தைகளையும் நல்ல உடல் வளமும், சிறந்த அறிவுத் திறனும் உள்ளவர்களாக உருவாக்கி, அவர்களுக்கு ஒளி மயமான எதிர்காலத்தை அமைத்துக் கொடுப்பதை இந்த அரசு ஓர் இலட்சியமாக ஏற்றுக் கொண்டுள்ளது.

*1.4.* ஊனமுற்றவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து அவர்களுக்கு உறுதுணையாக விளங்குவதில் தமிழக அரசு முன்னிலை வகிக்கிறது. ஊனமுற்றவர் நலனுக்காக ஆண்டு தோறும் கூடி வரும் அரசின் நிதி ஒதுக்கீடே இதற்குச் சான்றாகும். அவர்களுக்கு சிறப்புக் கல்வி மற்றும் தொழிற்பயிற்சி அளிப்பதிலும், தேவையான உபகரணங்கள் வழங்குவதிலும், அவர்களுக்கு வேலை வாய்ப்பு வசதிகள் ஏற்படுத்தித் தருவதிலும் இந்தத் துறை அதிக கவனம் செலுத்துகிறது.



## அத்தியாயம்-2.

## மகளிர் நலம்.

**2.1.** மக்ளிர் நலனுக்கான திட்டங்களைக் கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம் :

அ. வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள பெண்களின் கூடுதல் வருவாய்க்கான பொருளாதாரத் திட்டங்கள் அல்லது அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் திட்டங்கள்.

ஆ. திருமணம், கருவுற்ற நிலை, குடும்பத்தாரால் கைவிடப்படுகின்ற நிலை ஆகிய சூழ்நிலைகளில் நிதி உதவி வழங்குதல்.

இ. கடினமான பிரச்சினைக்குரிய சூழ்நிலைகளில் உள்ள பெண்களைப் பாதுகாப்பதற்கான நிறுவனங்களை நடத்துவது அல்லது நடத்துவதற்கு உதவி செய்தல்.

**2.2.** வருவாய்க்கான பொருளாதாரத் திட்டங்கள்:

ஏழைக் குடும்பங்கள்தான், பெரும்பாலும் பெண்களின் வருமானத்தை நம்பியுள்ளன. வறிய பொருளாதார நிலை, குடும்ப வருவாயைப் பெருக்குவதற்கு பெண்களும் உழைக்க வேண்டியதன் அவசியத்தை அதிகப்படுத்துகிறது. கிராமங்களில் வாழும் குடும்பங்களில், சுமார் மூன்றில் ஒரு பகுதியினர் அக்குடும்ப மகளிரின் வருமானத்தையே முழுமையாகச் சார்ந்துள்ளார்கள். குடும்பத்தின் வறுமையைப் போக்குவதில், பெண்கள் முக்கிய பங்கு வ்கிக்க முடியும். ஆகவே பெண்கள் மேம்பாட்டிற்காக; நாடு அதிக முதலீடு செய்ய வேண்டிய தருணம் வந்து விட்டது. நம் நாட்டில் பணிபுரியும் பெண்களில், ஆறு சதவிகிதத்தினர் மட்டுமே, அமைப்பு ரீதியான பணிகளில் ஈடுபட்டுள்ளனர்; பெரும்பான்மையான பெண்கள், ஆடவரை விடக் குறைந்த வருவாயில் தினக் கூலிகளாகவே பணிபுரிந்து வருகிறார்கள். இத்தகைய ஏழைப்பெண்களே, மரணத்திற்குக் காரணமாகும் நோய்களால் சுலபமாகப் பாதிக்கப்படுகிறார்கள். கடந்த சில ஆண்டுகளில் பெண்கள் நலனுக்கு வழங்கப்பட்டு வரும் மருத்துவ வசதிகளெல்லாம், முக்கியமான தாய் சேய் நலத்தை மட்டுமே அதிகமாகச் சார்ந்திருந்தனவேயன்றி நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தும் நேரடி நோக்கம் பெற்றவையாகவும் அமைந்திருக்கவில்லை. கண்கூடான, தொலை நோக்குள்ள திட்டங்கள் மூலம், நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் பங்கு அங்கீகரிக்கப்பட வேண்டும். அப்பொழுது தான் ஆண்—பெண் என்ற மாறுபாடு அற்ற, சமநிலை சமுதாய நீதியை நாம் அடைய முடியும்.

## மகளிருக்கான பொருளாதாரத் திட்டங்கள்.

### 2.3 ஒருங்கிணைந்த மகளிர் வளர்ச்சித் திட்டங்கள் :

(அ) ஒருங்கிணைந்த் மகளிர் வளர்ச்சித் திட்டம், ஒரு இலட்சம் பெண்களுக்கு சுய வேலைவாய்ப்பு வழங்கும் நோக்கம் கொண்டது. இத்திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதல் அமைச்சர் அவர்களால் சமீபத்தில் தொடங்கிவைக்கப்பட்டது. இத்திட்டம், முதல் கட்டமாக, செங்கல்பட்டு எம்.ஜி.ஆர்., தருமபுரி, சேலம், பெரியார், திண்டுக்கல், அண்ணா, மதுரை, புதுக்கோட்டை, இராமநாதபுரம் மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களில் செயல்படுத்தப்படும். இத்திட்டம், இரண்டாவது கட்டமாக, பிற மாவட்டங்களிலும், நகர்ப்புறப் பகுதிகளிலும் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் முன்னேற்றம், ''தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்'' ஆகிய இரு திட்டங்களோடு இணைக்கப்பட்டு, மகளிர் மேம்பாட்டிற்காக செயல்படுத்தப்படும். தாங்கள் வாழும் பகுதிகளின் தேவைக்கு ஏற்ப, தாங்கள் பெற்றுள்ள தொழில் பயிற்சி/திறன் ஆகியவற்றையும் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு பகுதி மகளிரும், சிறிய இசைவான குழுக்களாகச் சேர்ந்து, ஒரு தொழிலில் ஈடுபடுவதற்கு ஊக்குவிக்கப்படுவார்கள். இம்மகளிர் குழுக்களின் உறுப்பினர்களுக்கு நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் வழங்கப்படும்; அத்துடன் மானியமும் வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ், உறுப்பினர்களுக்கு தொழில் பயிற்சி அளிப்பதற்கும், உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு ரூ. 15 கோடி வழங்கும்; அத்துடன் பன்னாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து உதவி பெறுவதற்கும் முயற்சிகள் எடுக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் மொத்தம் பயன் அடையும் ஒரு லட்சம் மகளிரில், ஊனமுற்ற மகளிர் 10,000 பேரும், மூன்றில் ஒரு பகுதியினர் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருமாக அமைவர்.

(ஆ) சமூக நல அமைச்சரைத் தலைவராகக் கொண்ட ''மாநிலக்குழு'' இத்திட்டத்தின் முன்னேற்றத்தை ஆய்வு செய்யும்; தனியார் சேவை நிறுவனங்கள் இத்திட்டத்தில் பெரிய அளவில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

(இ) ஒரு முக்கியமான கருத்தை இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும். குழந்தைகளுக்கு ஏற்படும் உணவுப் பற்றாக்குறையாலும், அடிக்கடி ஏற்படும் தொற்று நோயாலும்தான், குழந்தைகளின் நலனும், வளர்ச்சியும் பாதிக்கப்படுகிறது. ஒரு லட்சம் பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தின் கீழ், வேலைவாய்ப்பினைப் பெறும் பெண்கள் வருமானத்தின் பெரும் பகுதி, அவர்களின் குழந்தைகளுக்கான உணவு, உடை, உடல் நல/ மருத்துவப் பாதுகாப்புக்கு செலவிடப்படும் நிலை உள்ளதால், இத்திட்டத்தால் குழந்தை நலம் சிறப்பாகப் பேணப்படும் வாய்ப்பும் உள்ளது.



### 2.4 தையல் கூட்டுறவு சங்கங்கள் :

(அ) சமூக நலத்துறையின்கீழ் 73 மகளிர் தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மாநிலம் முழுவதும் இயங்கி வருகின்றன. புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் மூலம் பயனடையும், ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவ மாணவியர், பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககக் கட்டுப்பாட்டின்கீழ் பயிலும் பள்ளி மாணவ மாணவியர் மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக் கட்டுப்பாட்டின் கீழ் பயிலும் மாணவ மாணவியர் ஆகியோருக்கு இலவசமாக வழங்கப்படும் சீருடைகளை இந்த 73 மகளிர் தையற் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தைத்து வழங்குகின்றன.

(ஆ) ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இந்த இலவச சீருடைத் துணிகளை வெட்டுவதற்கு தானியங்கி துணி வெட்டும் கருவிகளை அரசு இலவசமாக வழங்கியுள்ளது. துணிகள் அனைத்தும் அந்தந்த மாவட்டத்திலுள்ள துணி வெட்டும் மையத்தில் வெட்டப்பட்டு, வெட்டப்பட்ட 'துணிகளை சீருடைகள் தைப்பதற்காக இச்சங்கங்களுக்கு வழங்கப்படுகிறது. 1991–92–ல் பள்ளிக் குழந்தைகளுக்கான 65 இலட்சம் செட் சீருடைகள் சமூக நலத்துறையின் கீழ் இயங்கும் மகளிர் தையல் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் சில சிறந்த சேவை நிறுவனங்கள் மூலம் தைக்கப்பட்டன. இச்சீருடை தைக்கும் பணி மாவட்ட சமூக நல அலுவலரால் நேரடியாக கண்காணிக்கப்படுகிறது. இச்சீருடை தைக்கும் பணியின் மூலம் 20,000 மகளிருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஏறக்குறைய மூன்று கோடியே எண்பத்தேழு இலட்சம் ரூபாய் தையற் கூலியாக வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு உறுப்பினரும் ஏறக்குறைய மாதம் ஒன்றுக்கு ரூ. 400 முதல் ரூ. 500 வரையில் மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு குடும்பத்திற்கு கூடுதல் வருமானமாக இச்சீருடை தைக்கும் பணியின் மூலம் பெற்றனர். அரசு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாஸ்டர் கட்டர் ஒருவரை 3 மாத காலத்திற்கு மாதம் ரூ. 1,000 என்று நியமனம் செய்து ஆணை வழங்கியுள்ளது. 90 விழுக்காடு தையல் கூலியை கூட்டுறவு சங்க அங்கத்தினர்களுக்கு முன்பணமாக வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. மீதி 10 விழுக்காடு தையல் கூலி சீருடை தைத்து முடித்தபின் வழங்கப்படும்.

### 2.5 காலணி தயாரிப்போர் கூட்டுறவு சங்கங்கள் :

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மூலம் பயனடையும், ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரையில் கல்வி பயிலும் பள்ளி மாணவ மாணவியருக்கு, இலவச காலணிகள் வழங்கும் பொருட்டு, அக்காலணிகளை தயாரிப்பதற்காக சமூக நலத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 39 மகளிர் காலணி கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இரண்டாயிரம் ஆதி திராவிடர் மகளிர்க்கு இச்சங்கங்கள் மூலம் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. காலணிகளைத் தயாரிப்பதற்குச் சங்க

உறுப்பினர் அனைவருக்கும் ஒரு மாத காலம் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி காலத்தில் ஒவ்வொரு மகளிருக்கும் ரூ. 200 உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. காலணிகளைத் தயாரிப்பதற்காக ரூ. 250 மதிப்புள்ள கருவிகள் மற்றும் உபகரணங்கள் ஒவ்வொரு மகளிருக்கும் இலவசமாக அரசால் வழங்கப்பட்டுள்ளன. அரசின் தேவைக்காக செய்யப்படும் காலணிகளைத் தவிர, இம்மகளிர் தங்களது வருவாயைப் பெருக்கிக்கொள்ள உதவும் வகையில் சுய வேலை வாய்ப்பின் மூலம் காலணிகள் உற்பத்தி செய்ய, ஊக்குவிக்கப் படுகிறார்கள். 1990-91 ஆம் ஆண்டிற்கு இத்துறையால் 6.00 இலட்சம் காலணிகள் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. அதற்காக அரசு கூலிக்காகவும், சேவைக் கட்டணத்திற்காகவும் ரூ. 24 இலட்சம் வழங்கியுள்ளது.

பள்ளி செல்லும் பிள்ளைகளுக்கு இலவச காலணி வழங்கும் திட்டம் 1991–92 ஆம் ஆண்டிலும் தொடர்ந்தது.

**2.6, எழுதுபொருள் தயாரிக்கும் கூட்டுறவு சங்கங்கள் :**

இத்துறையின்கீழ் எழுதுபொருள் தயாரிக்கும் மகளிர் கூட்டுறவு சங்க்ங்கள் 13 செயல்பட்டு வருகின்றன. இக்கூட்டுறவுச் சங்கங்களில் சுமார் 700 மகளிர் உறுப்பினராக உள்ளனர். எழுது பொருள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, தங்கள் வியாபாரத்தை அபிவிருத்தி செய்யும் பொருட்டு 7 சங்கங்களுக்கு அச்சு இயந்திரமும் 12 சங்கங்களுக்கு இரு கோடிடும் இயந்திரங்களும், 12 சங்கங்களுக்கு காகித உறை தயாரிக்கும் இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன. மதிய உணவு திட்டத்தின் கீழ் பராமரிக்கப்படும் அனைத்துப் பதிவேடுகளும் இத்துறையின் கீழ் இயங்கி வரும் சங்கங்களால் தயாரிக்கப்படுகின்றன.

**2.7. கயிறு பொருட்கள் தயாரிக்கும் கூட்டுறவு சங்கம் :**

கயிறு மற்றும் கயிறு சம்பந்தப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் பணியில் மகளிர் கூட்டுறவுச்சங்கம் ஒன்று இத்துறையின் கீழ் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள நல்லூரில் இயங்கி வருகிறது. இச்சங்கம் உற்பத்தி நிலையமாகவும், மகளிருக்கு கயிறு தயாரிக்கும் பயிற்சி அளிக்கும் நிலையமாகவும் செயல்பட்டு வருகிறது. இது தவிர இங்கு 100 மகளிருக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பும் அளிக்கப்படுகிறது. இச்சங்கம் ஆலங்குடி, நீடாமங்கலம், மன்னார்குடி மற்றும் மெலட்டூர் ஆகிய இடங்களில் கிளைகள் கொண்டுள்ளது.

**2.8. சாக்கட்டி தயாரிக்கும் கூட்டுறவு சங்கங்கள் :**

இத்துறையின் கீழ் தற்போது 19 சாக்கட்டி தயாரிப்போர் தொழிற் கூட்டுறவுச்சங்கங்கள், 1000 பெண் உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வருகின்றன. சாக்கட்டி தயாரித்து கல்வித்



துறையின்கீழ் வரும் பள்ளிகளுக்கு சாக்கட்டி வழங்க மகளிருக்கு 1 மாத காலம் பயிற்சி ரூ. 100 மாதாந்திர உதவித் தொகையுடன் அளிக்கப்பட்டது. கல்வித் துறையின் மூலம் போதுமான அளவு விநியோக ஆணை பெறாததாலும், உற்பத்தி விலை அதிகரிப்பாலும் பல சங்கங்கள் நன்முறையில் செயல்படாத நிலையிலுள்ளன. இதன் காரணமாக இச்சங்கங்கள் இணை உணவு தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களாக மாற்றப்பட தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**2.9. இணைஉணவு தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் :**

இத்துறையின்கீழ் 22 இணை உணவு தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச்சங்கங்கள் இயங்கி வருகின்றன. இதன் மூலம் 1000 மகளிருக்கு மேல், தொடர்ச்சியாக வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இச்சங்கங்கள் மூலம் தயாரிக்கப்படும் இணை உணவு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இயங்கி வரும் மையங்களுக்கும், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தின்கீழ் வரும் வட்டார அலுவலகங்களுக்கும் வழங்கப்படுகிறது. 1992-93 ஆம் ஆண்டிற்கு சுமார் 6000 மெட்ரிக் டன் உணவு தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் ரூ. 30 இலட்சம், ஏழை மகளிருக்கு கூலியாக வழங்கப்பட உள்ளது.

**2.10. மகளிர் பயிற்சி நிலையங்கள் :**

சமூக நல இயக்ககத்தின் கீழ் 58 பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்கள் மகளிருக்காக நடத்தப்படுகின்றன. இவை 41 தையல் பயிற்சி நிலையங்கள், 4 பனை ஓலை பயிற்சி நிலையங்கள், 3 கம்பளி பயிற்சி நிலையங்கள், ஒரு பாய் முடையும் பயிற்சி நிலையம், ஒரு மூங்கில் பயிற்சி நிலையம், ஒரு பிரம்பு பயிற்சி நிலையம், ஒரு ஆயத்த ஆடைத் தயாரிப்பு நிலையம், ஒரு துணி பொம்மை தயாரிப்பு நிலையம் மற்றும் 5 உற்பத்தி நிலையங்கள் (இரண்டு சாக்கட்டி உற்பத்தி மையம், இரண்டு மெழுகுவர்த்தி உற்பத்தி நிலையம், ஒரு பெட்சீட் மற்றும் டவல் தயாரிப்பு நிலையம்) ஆகும். ஆண்டுதோறும் சுமார் 900 பெண்களுக்கு இப்பயிற்சி நிலையங்களின் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் மாதம் ரூ. 30 வீதம் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

**2.11. தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பயிற்சி அளித்தல் :**

இந்த தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பயிற்சிகள் மூலம் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1,500 பெண்கள் பயன் அடைகிறார்கள். தட்டச்சுப் பயிற்சியாளர்களுக்கு ரூ. 150 வீதமும் மற்றும் சுருக்கெழுத்து பயிற்சியாளர்களுக்கு ரூ. 220 வீதமும் ஆண்டொன்றுக்கு உதவித் தொகையாக அளிக்கப்படுகின்றது. 1991–92 ஆம்

ஆண்டில் சுமார் 1,315 பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்றனர், 1992–93 ஆம் ஆண்டிற்கு ரூ. 2.45 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சுமார் 1,500 பெண்கள் பயன் அடைய உள்ளனர்.

மகளிருக்கு நிதி உதவித் திட்டங்கள்.

ஏற்கனவே கூறியுள்ளபடி சமுதாயத்தில் நலிவுற்ற பெண்களுக்காக பல வகையான நிதியுதவி வழங்கும் திட்டங்களை திருமணத்திற்காகவும், தொடர் கல்விக்காகவும், சுய வேலை வாய்ப்புகளைப் பெறவும் இத்துறை செயல்படுத்தி வருகிறது.

2.12. ஏழை விதவையரது மகள் திருமண நிதி உதவித் திட்டம் :

ஆண்டு வருமானம் ரூ. 6,400-க்குக் குறைவாகப்பெறும் ஏழை விதவையரது மகளிர் திருமணத்திற்காக ரூ. 2,000 வீதம் வழங்கப்படுகிறது. திருமண உதவி கோரும் மகளிர் 18க்கும், 30க்கும் இடைப்பட்ட வயதுடையவராக இருத்தல் வேண்டும். ஒரு மகளின் திருமணத்திற்கு மட்டுமே இவ்வுதவி பெற முடியும். 1992–93 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 20.30 இலட்சங்களாகும்.

2.13. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம் :

(அ) இத்திட்டத்தின்கீழ், 8-ஆம் வகுப்பு படித்த ஏழைப் பெண்களுக்கு திருமண உதவியாக ரூ. 5,000 வழங்கப்படுகிறது. பழங்குடியின மகளிர் 5-வது வகுப்பு படித்திருந்தால் போதுமானது. இத்திட்டம் மகளிரின் கல்வி மேம்பாட்டிற்கு ஒரு வலுவான தூண்டுதலாக அமையும் என அரசு கருதுகிறது. மாநிலம் முழுவதும் கிராமங்கள் மற்றும் நகர்ப் புறங்கள் உட்பட இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதற்கான நிபந்தனைகள் பின் வருமாறு :

திருமணம் செய்யும் காலத்தில் மணப்பெண் 18 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும், மற்றும் அன்னாரது குடும்ப ஆண்டு வருமானம் ரூ. 5,000-க்குக் குறைவாக இருத்தல் வேண்டும்.

இம்மாநிலத்தில் குடும்ப நலத் திட்டக் கொள்கைக் கேற்ப, திருமண வயது வரம்பு 20 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

(ஆ) சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய மாநகராட்சிகளில் மாநகராட்சி ஆணையரும், ஊரகங்களில் ஊராட்சி ஒன்றிய அலுவலர்களும், நகராட்சியில் நகராட்சி ஆணையரும், நகரியத்தில் தனி அலுவலரும் அனுமதிக்க அதிகாரமும், அந்தந்த மாவட்ட சமூக நல அலுவலருக்கு இதற்கான தொகை



யினைப் பெறவும், வழங்கவும் அனுமதிக்கப்பட்டு இத்திட்டம் சீரிய முறையில் செயல்பட பொறுப்பானவர்கள் ஆவார்கள். மாநில அளவில் சமூக நல இயக்குநர் திட்ட செயலாக்கத்திற்கு பொறுப்பானவர்.

இத்திட்டத்தின் கீழ் 1992–93ல் ரூ. 5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 10,000 ஏழை மகளிர் பயனடைவர்.

2.14. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு மகப்பேறு உதவித் திட்டம் :

(அ) வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பத்தைச் சார்ந்த பெண்களுக்கு பேறு காலத்திற்கு முன் இரு மாதங்களிலும், அதற்கு பின் இரு மாதங்களிலும் அவர்களது வருமானத்தை ஈடுகட்ட ஆதரவாக இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்படுகிறது. முதல் 2 குழந்தைகளுக்கு மட்டுமே இந்த நிதி ஆதரவு வழங்கப்படும். விண்ணப்பதாரர் திருமணத்தின் போது 18 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும். மொத்த ஆண்டு வருமானம் ரூ 5,000க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். பேறு காலத்தின்போது குழந்தை பிறந்தாலும், இறந்தாலும் ரூ. 200 மொத்தமாக (மாதம் ரூ 50 வீதம் நான்கு மாதங்களுக்கு) வழங்கப்படும். துணை மருத்துவ செவிலியரது சான்றிதழ் பெற்றவர் இந்நிதி உதவி பெற தகுதியுடையவராவர். ஊரகங்களில் ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள், நகரியங்கள் மற்றும் மாநகராட்சிகள் இத்திட்டத்தினை செயல்படுத்தும் அதிகாரம் உடையவையாகும். கருவுற்ற பெண்களுக்கு கிராம மருத்துவ செவிலியர், பல நோக்கு சுகாதார பணியாளர் மூலமாக இத்தொகை வழங்கப்படும். மாநில அளவில் இத்திட்டத்தின் சீரிய செயலாக்கத்திற்கு சமூக நலத்துறைஇயக்குநர் பொறுப்பானவர். இத்திட்டத்திற்கென 1992–93ஆம் நிதியாண்டில் ரூ. 4 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சுமார் இரண்டு இலட்சம் தாய்மார்கள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுவர்.

(ஆ) இந்நிதியுதவி 1992–93 முதல் ரூ. 300 ஆக உயர்த்தப்பட உள்ளது. இதனால் அரசுக்கு ரூ. 2.00 கோடி அதிக செலவினம் ஏற்படுகிறது.

2.15. டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் திட்டம் (விதவை மறுமணத் திட்டம்) :

இத்திட்டம் விதவை மறுமணத்தை, தம்பதியருக்கு நிதியுதவி வழங்குதல் மூலம் ஊக்குவிக்கிறது. விதவையின் மறுமணத்தின்போது தம்பதியர் இருவரது பெயரிலும் ரூ. 5,000-க்கான தேசியசேமிப்புப் பத்திரம் வழங்கப்படுகிறது. இத்திட்டம் 18 வயது முதல் 30 வயதுடைய விதவைகளுக்கு மட்டுமே

வரையறுக்கப்பட்டுள்ளது. பயனடைவோர் வருமானம் அல் லது அவர்களது குடும்ப வருமானம் ரூ. 6,400-க்குள் இருத்தல் வேண்டும். 1992-93 ஆம் ஆண்டிற்கு சுமார் 200 தம்பதியர் பயன்பெறும் வண்ணம் ரூ. 10.20 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.16 ஆதரவற்ற பெண்களுக்கு திருமண உதவித் திட்டம் :**

ஆண்டு வருமானம் ரூ. 6,400-க்கு குறைவாக உள்ள குடும்பங்களிலுள்ள 18 முதல் 30 வயதுக்கு இடைப்பட்ட அனாதைப் பெண்கள் திருமணத்திற்கு தலா ரூ. 1,000 நிதி யுதவி அளிக்கப்படுகிறது. 1992-93 ஆம் ஆண்டிற்கு ரூ. 1 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.17 தமிழக அரசு கலப்புத் திருமண உதவித் திட்டம் :**

இத்திட்டம் கலப்பு மணத்தை ஊக்குவிக்கிறது. கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகளுக்கு, திருமண செலவிற்காக ரூ 1,000 மற்றும் தேசிய சேமிப்பு பத்திரமாக ரூ 4,000 ஆக மொத்தம் ரூ 5,000 வழங்கப்படுகிறது தம்பதி யர் இருவரது ஆண்டு வருமானம் ரூ. 12,000-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். 1992-93ல் 600 தம்பதியர் பயன்பெறும் வண்ணம், ரூ. 30.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.18 இலவச தையல் இயந்திரம் வழங்குதல் :**

ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1,000 தையல் இயந் திரங்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள விதவைகள், கணவ னால் கைவிடப்பட்டவர்கள் மற்றும் ஊனமுற்ற ஆண், பெண் இரு பாலருக்கும் இலவசமாக வழங்கப்படுகிறது. இவர்கள் முறைப்படி தையல் தொழிலை சுயவேலை வாய்ப்பாகக்கொண்டு தங்களது வருமானத்தை உயர்த்திக் கொள்கிறார்கள். 1992-93 ஆம் ஆண்டுக்கு ரூ 12.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**2.19 விதவைகளின் குழந்தைகளுக்கு பாட நூல்கள் மற்றும் குறிப்பேடு கள் இலவசமாக வழங்குதல் :**

இலவச பாடப் புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்த கங்கள் வழங்கும் திட்டம் ஆண்டு வருமானம் ரூ 6,400-க்குக் குறைவாக வருமானம் பெறும் விதவைகளின் குழந்தைகள் பயன் பெறுவதற்காக ஏற்படுத்தப்பட்டது இலவசமாக வழங்கப் படுகின்ற, ரூ. 15 முதல் ரூ. 190 வரை மதிப்புள்ள



பாடப் புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் அவர்கள் படிக்கும் வகுப்பிற்கேற்ப வேறுபடும். ஒவ்வொரு ஆண்டும் மொத்தம் 4,000 குழந்தைகள் பயன்பெறுகின்றனர். 1992-93 ஆம் ஆண்டுக்கு ரூ. 2.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

**துயருறும் பெண்களுக்கு நிறுவன ஆதரவு அளித்தல்.**

துயருறும் நிலையில் உள்ள பெண்கள், பெண்கள் சமுதாயத் தில் ஒரு நல்ல தகுதி நிலையை அடைய உதவி புரியும் வகையில் இத்துறை பல நிறுவனங்களை நடத்தி வருகிறது. இந்த நிறு வனங்கள் பெண்களின் உரிமைகளை அறியவும், திறமையை மேம் படுத்திக் கொள்ளவும் உதவுவதோடு, அவர்களுக்கு ஆதரவும் பாதுகாப்பும் அளிக்கின்றன.

**2.20 சேவை இல்லங்கள் :**

(அ) இத்துறை தாம்பரம், கடலூர், தஞ்சாவூர், சேலம், திருநெல்வேலி, காரைக்குடி ஆகிய இடங்களில் சேவை இல்லங்கள் நடத்தி வருகிறது. 18 முதல் 40 வயதுவரையுள்ளஏழை விதவைகள் கணவனால் கைவிடப்பட்டவர்கள் மற்றும் ஆதரவற்றோருக்கு கல்வி வசதி அளிப்பதே இவற்றின் நோக்கமாகும். இவர்களுக்கு 8 ஆம் வகுப்பு, 10 ஆம் வகுப்பு மற்றும் மேல்நிலைக் கல்வியில் தேர்வு எழுத பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. இதில் ஆர்வ மில்லாதோருக்கு தையல், பூ வேலை, துணி நெய்தல் மற்றும் வீட்டுபராமரிப்பு போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. தையல் மற்றும் பூ வேலையில் ஓராண்டு பயிற்சி முடித்தவர்கள் அரசின் தொழில் நுட்பத் துறையால் நடத்தப்படும் தேர்வுகள் எழுதத் தகுதியுடையவராவர்.

(ஆ) சேவை இல்லங்களில் பயிலும் உள்ளுறை மாணவிகளுடன் இரண்டு குழந்தைகள் தங்குவதற்கும்அனுமதியளிக்கப்பட்டுள்ளது அவர்கள் தொடர்ந்து மூன்று ஆண்டு காலம் மேற்படி இல்லத்தில் இருக்கலாம். உள்ளுறை மாணவிகளுக்கு மாதம் ரூ. 120 வீத மும், குழந்தைகளுக்கு ரூ. 90 வீதமும் உதவித் தொகை வழங்கப் பட்டு வருகிறது. சீருடைக்காக உள்ளுறை மாணவிகளுக்கு ஆண்டிற்கு ரூ. 100 வீதமும், குழந்தைகளுக்கு ரூ. 60 வீதமும் வழங்கப்பட்டு வருகின்றன. 6 ஆம் வகுப்பிலிருந்து 8 ஆம். வகுப்பு வரை படிக்கும் மாணவிகளுக்கு பாடநூல் மற்றும் குறிப்பேடுகள் வாங்குவதற்கு ரூ. 40 வீதமும், 9 மற்றும் 10 ஆம் வகுப்பு மாணவிகளுக்கு ரூ. 60 வீதமும் ஆண்டு தோறும் வழங்கப் பட்டு வருகின்றன. மேலும், குழந்தைகள் பிரிவில் படிக்கும் குழந்தைகளுக்கு (5 ஆம் வகுப்பு வரை) பாடநூல்களுக்காக ஆண்டுதோறும் ரூ. 15 வீதமும் வழங்கப்பட்டு வருகிறது.

(இ) தாம்பரம், தஞ்சாவூர் மற்றும் கடலூர் சேவை இல்லங் களில்-தலா 60 மாணவிகள் பயன்பெறும் வகையில் மேல்நிலைக் கல்வி பிரிவு நடத்தப்பட்டு வருகின்றது. இப்பிரிவில் பயிலும்

ஒவ்வொரு மாணவிக்கும் பாடநூல்கள் மற்றும் குறிப்பேடுகளுக்காக ஆண்டொன்றுக்கு ரூ. 100 வீதமும் சீருடைக்காக ரூ. 100 வீதமும் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. உடல் ஊனமுற்ற மகளிருக்காகவும், குழந்தைகளுக்காகவும் முறையே 30 மற்றும் 20 பேர் பயன்படத்தக்க அளவில் தாம்பரம் சேவை இல்லத்தில் ஒரு தனி பிரிவு நடைபெற்று வருகிறது.

(ஈ) தாம்பரம், கடலூர் மற்றும் தஞ்சாவூர் சேவை இல்லங்களில் செயலகப் பணிக் கல்விப் பிரிவு நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு சேவை இல்லத்திலும் தலா 20 பெண்கள் பயன் பெற்று வருகின்றனர். ஓராண்டு பயிற்சிக்குப் பின்னர் இம்மாணவிகள் அரசு தொழில் நுட்பத் தேர்வுக்கு அனுப்பப்படுகின்றனர். இப்பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூ. 20 வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இந்த சேவை இல்லங்களில் தையல் பயிற்சி பெறும் மாணவி ஒவ்வொருவருக்கும் ஆண்டுக்கு ரூ. 250 வீதம் உதவித் தொகை மொத்தமாக வழங்கப்படுகிறது.

(உ) இத்துறையின் சேவை இல்லங்கள் மற்றும் அரசு மானியம் பெறும் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் சேவை இல்லங்களில் 10 ஆம் வகுப்பு தேறியவர்கள் பொது சுகாதாரத் துறையால் நடத்தப்படும் பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் (மகளிர்) பயிற்சிக்கு அனுப்பப்படுகின்றனர். பொது சுகாதாரத் துறையினரால் தமிழ்நாட்டில் 9 இடங்களில் நடத்தப்படும் பயிற்சி நிலையங்களில் $1\frac{1}{2}$ ஆண்டுகள் இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுநாள் வரை சுமார் 1,000 சேவை இல்ல மாணவிகள் பயிற்சி பெற்றுள்ளனர். அரசு சேவை இல்லங்களுக்காக ரூ. 53.81 இலட்சம் 1992–93 ஆம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

**2.21 ஆசிரியர் பயிற்சிப் பள்ளி :**

(அ) ஒவ்வொரு பிரிவிலும் 50 பேர் பயிலும் வண்ணம் இளநிலைப்பிரிவு, முதுநிலைப்பிரிவு என இரு பிரிவுகளுடன் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி பல்லாவரத்தில் செயல்பட்டு வருகிறது. சேவை இல்லங்கள் மூலம் மேல்நிலைப் பிரிவில் (பள்ளி இறுதித் தேர்வு மற்றும் பிளஸ் 2) தேர்ச்சி பெற்று வயது வரம்பு கடந்த விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு இப்பயிற்சியில் சேர முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

(ஆ) இரண்டாண்டு பயிற்சிக் காலத்தில், பயிற்சி பெறும் ஒவ்வொருவருக்கும் மாதந்தோறும் ரூ. 120 வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. பயிற்சி முடிந்த பின் அவர்கள் இடைநிலை ஆசிரியர்களாக இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளிலும், கல்வித்துறை மற்றும் தனியாரால் நடத்தப்படும் பள்ளிகளிலும், மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பள்ளிகளிலும் பணியமர்த்தப்படுகிறார்கள். இவ்வேலைக்காக அவர்கள் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் தங்கள் பெயரைப் பதிவு செய்திருந்தால்



மட்டும் போதுமானது. வேலைவாய்ப்பில் இவர்களது வயது உச்ச வரம்பு 40 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1992–93 ஆம் ஆண்டிற்கு ரூ. 6.02 இலட்சங்கள் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**2.22. தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சேவை இல்லங்கள் :**

(அ) அரசு நிதியுதவியுடன் கஸ்தூரிபா சேவிகாஸ்ரமத்தினால் காந்தி கிராமத்திலும், கஸ்தூரிபா தேசிய நினைவு அறக்கட்டளையினரால் ஈரோட்டிலும், மதுரை சேவாஸ்ரமத்தினால் மதுரையிலும் சேவை இல்லங்கள் தொடங்கி நடத்தப்பட்டு வருகின்றன.

(ஆ) காந்தி கிராமத்திலுள்ள சேவை இல்லத்தில் 120 மாணவிகளுக்கும், மதுரை மற்றும் ஈரோட்டிலுள்ள சேவை இல்லங்களில் தலா 40 மாணவிகளுக்கும் இரண்டாண்டு குறுகிய கால 10 ஆம் வகுப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. இவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 75 வீதம் உதவித் தொகை மானியம் வழங்கப்படுகிறது. ஒரு பட்டதாரி ஆசிரியர், ஒரு தமிழ் ஆசிரியர் ஆகிய இருவருக்கான ஊதியத் தொகை ஒவ்வொரு சேவை இல்லத்திற்கும் மானியமாக வழங்கப்படுகிறது. சமூகத்தில் மிகவும் பின் தங்கிய மகளிருக்காக, தட்டச்சு, சுருக்கெழுத்து மற்றும் செயலகப் பிரிவு நடத்தும் சென்னை ''ஸ்திரி சேவா மந்திர்'' என்னும் நிறுவனத்திற்கு உதவித் தொகை மானியம் வழங்கப்படுகிறது. 1992–93 ஆம் ஆண்டிற்கு ரூ. 1.65 இலட்சங்கள் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**2.23. அரசால் நடத்தப்படும் பணிபுரியும் மகளிர் விடுதிகள் :**

(அ) அரசுத் துறைகளிலும் மற்றும் இதர பொது நிறுவனங்களிலும் மகளிர்க்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படுகிறது. பெண்களுக்காக 30 சதவீத இடஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதோடு, பள்ளிகளில் 5-ம் வகுப்பு வரை பெண் ஆசிரியர்கள் மட்டுமே நியமிக்கப்படுகின்றனர். மகளிரும் ஆடவருக்கு நிகராக போட்டியிட்டு பணிகளில் ஈடுபட முன் வருகின்றனர். பணிபுரியும் பெண்களுக்கு அவர்களது பணியிடத்திற்கு அருகாமையிலேயே பாதுகாப்புடன் கூடிய சிக்கனமான உறைவிடம் தேவைப்படுகிறது. பணிபுரியும் பெண்களின் குறிப்பாக ரூ.2,500-க்கு மிகாமல் மாத வருமானம் பெறும் நடுத்தர வருவாய் வர்க்கத்தினரின் பாதுகாப்பு மற்றும் நியாயமான வாடகையுடன் கூடிய இருப்பிடத்தினைத் தெரிவு செய்யும் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் அரசு சென்னை, கடலூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை, ஒசூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் பணிபுரியும் பெண்கள் விடுதிகள் ஏற்படுத்தியுள்ளது. இந்த விடுதிகளில் உள்ள மொத்த இருப்பிட வசதி 340 ஆகும்.

(ஆ) இவ்விடுதிப் பணியாளர்களான ஒரு கண்காணிப்பாளர், இரண்டு சமையலர்கள், ஒரு அலுவலக உதவியாளர், ஒரு காவலர் மற்றும் ஒரு துப்புரவாளரின் ஊதியத்திற்கான மொத்த செல

வையும் அரசு ஏற்றுக் கொள்கிறது. உணவு செலவு, கட்டிட வாடகை, மின் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் உள் உறுப்பினர்களிடமிருந்து சம அளவில் ஈடு செய்யப்படுகிறது. ரூ. 10.46 இலட்சங்கள் 1992—93-ம் நிதி ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) சென்னையில் மேலும் ஒரு பணிபுரியும் பெண்கள் விடுதி இந்த ஆண்டு துவக்கப்பட உள்ளது. இதற்காக இந்த ஆண்டு ரூ. 2.21 லட்சம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.24. பணிபுரியும் மகளிர் விடுதி கட்ட நிதி உதவி அளித்தல் :**

தொண்டு நிறுவனங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களால், பணிபுரியும் மகளிர் விடுதிக்கட்டிடம் கட்டுவதற்கான மொத்த செலவில் 75 சதவிகிதம் மத்திய அரசால் மானியமாக வழங்கப்படுகிறது. மொத்த மதிப்பீட்டில் 15 சதவிகிதம் அல்லது ரூ. 35,000 இவற்றில் எது குறைந்த தொகையோ அத்தொகை விண்ணப்பத்தின் பேரில் மாநில அரசால் மானியமாக வழங்கப்படுகிறது. மீதித்தொகையை நிறுவனமே ஏற்றுக் கொள்ள வேண்டும். இத்திட்டத்தை பயன்படுத்த விரும்பும் நிறுவனங்கள் கட்டிடம் கட்ட சொந்தமாக நிலம் வைத்திருக்க வேண்டும். இந்நிறுவனங்கள் மாநகராட்சி, நகராட்சியின் முன் அனுமதி பெற்றிருக்க வேண்டும். இதே பணிக்காக பிற அரசிடமிருந்தோ, நிறுவனங்களிடமிருந்தோ, உதவிகள் பெற்றிருத்தல் கூடாது. கட்டிடம் கட்டப்படும் நிலத்தின் மதிப்பில் 50 சதவிகிதம் மத்திய அரசால் மானியமாக அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மத்திய மாநில அரசுகளின் நிதியுதவியுடன் 1990—91 வரை 49 பணிபுரியும் மகளிர் இல்லக் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. 1992—93-ம் ஆண்டிற்கு பணிபுரியும் மகளிர் இல்லக் கட்டிடங்கள் கட்டுவதற்காக ரூ. 1.05 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.25 மகளிர் மன்றங்கள் :**

(அ) ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 30 மகளிர் மன்றங்கள் வீதம் மாநிலத்தில் மொத்தம் 11,520 மகளிர் மன்றங்கள் உள்ளன. கிராம மகளிர் மத்தியில் சமுதாய விழிப்புணர்வு ஏற்பட மகளிர் மன்றங்கள் உருவாக்கப்பட்டன. இம்மகளிர் மன்ற அமைப்பாளர் ஒவ்வொருவருக்கும் காலாண்டிற்கு ஒரு முறை ரூ. 90 மதிப்பூதியமாக வழங்கப்படுகிறது. அவர்கள் குழந்தைகள் கண்காட்சி மற்றும் கல்வி சுற்றுலா நடத்துவதற்கு முறையே ரூ. 200-ம், ரூ. 400-ம் வழங்கப்படுகிறது. புத்தகங்கள், பத்திரிகைகள் வாங்கப்பட்டு அதன் மூலம் சமூகக் கல்வியை வளர்க்கும் பொருட்டும் ஆண்டொன்றிற்கு ரூ. 360 வழங்கப்படுகிறது. ரூ. 51.16 இலட்சம் 1992—93 ஆம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



(ஆ) சிறப்பாக செயல்படும் மகளிர் மன்றங்களுக்கு ஆண்டு தோறும் தலா ரூ. 1000 வீதம் பரிசுத் தொகை வழங்கப்படுகிறது, மொத்த பரிசுகளின் எண்ணிக்கை 75, 1992—93-ம் ஆண்டிற்காக ரூ. 0.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) மத்திய அரசின் பரிசீலனையிலிருக்கும் இந்திரா மகிளா யோச்னா திட்டம் நடைமுறைக்கு வரும்போது, இந்த மகளிர் மன்றங்களை ஒருங்கிணைத்து பெண்கள்/குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த பணிகளை விரைவுபடுத்தவும், அவர்களுக்குப்போய் சேர வேண்டிய நலப் பணிகள் முறையாக சேரவும் வழிவகை செய்யப்படும். குழு முயற்சியின் மூலம் பெண்கள் தங்களைப் பற்றியும் தங்கள் உடல் நலம், சுகாதாரம், சத்துணவு நிலை ஆகியவை பற்றியும், அவர்களும் பங்கேற்று முன்னேறுவதில் சமுதாயத்தின் கவனத்தைத் திருப்புவது பற்றியும், அவசர உதவிகள் தேவைப்படும் பெண்களைக் கண்டறிவது பற்றியும், சமூகநலத்துறை செயல்படுத்தும் திட்டங்களின் வெற்றியின் அளவு என்ன என்பதைத் தெரிந்து கொள்வதற்கான விவரங்கள் கொடுப்பதற்கும், பெண்களிடையே முறையான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும் மகளிர் மன்றங்கள் மூலம் வழிவகை செய்யப்படும். பெண்களுக்கு எதிரான பாகுபாடு அல்லது வேறுபாடு, மது பழக்கம், வரதட்சணைக் கொடுமை, பெண்களுக்கும், ஆண்களுக்கும் இணையான ஊதியம் வழங்குதல் போன்ற பல சமுதாயப் பிரச்சினைகள் பற்றி பெண்கள் கூடி, விவாதிப்பதற்குரிய நல்ல இடமாக மகளிர் மன்றங்கள் செயல்படும்.

**2.26 வழிகாட்டி மையங்கள் :**

(அ) வழிகாட்டி மையம் ஒவ்வொரு மாவட்ட சமூகநல அலுவலகத்திலும் செயல்பட்டு வருகிறது. வழிகாட்டி மையங்கள், கணவரால் கைவிடப்பட்டவர், கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு வங்கி மூலம் கடனுதவி பெறுவதற்கு உதவி புரிகின்றன. ஏழைக் கைம்பெண்கள் ஆயுள் பாதுகாப்பு ஈட்டு தொகை, ஓய்வூதியம், பொது வைப்பு நிதியிலிருந்து கிடைக்க வேண்டிய தொகை ஆகியவற்றினைப் பெறுவதற்கும் இதர துறைகளுடன் தொடர்பு கொண்டு அவர்களுக்கு வழிகாட்டிஉதவி புரிகின்றன. வழிகாட்டி மைய அலுவலர்கள் குழந்தைகள் காப்பகங்கள் மற்றும் அரசு ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களில் உதவி வேண்டும் குழந்தைகளை சேர்க்க தக்க நடவடிக்கை மேற்கொள்கின்றனர். 1992—93-ம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ. 19.07 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) இவ்வழிகாட்டி நிலையங்கள் மேலும் சிறப்பாகவும் திறமையாகவும் செயல்பட செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. பெண்களிடையே உள்ள தாழ்வு மனப்பான்மை, ஆண்களைப் பற்றிய அச்சம், சட்டதிட்டங்கள் மற்றும் சமுதாயப் பழக்கங்கள் பற்றிய பயம் ஆகிய குணங்களின் உரு

வாகவே ஏழைப் பெண்கள் உள்ளனர். இத்தகைய சமுதாயப் பின்னணியில்தான், பெண்கள் அரசின் உதவியை ஏக்கத்துடனும் அடக்கத்துடனும் பெறுபவர்களாக அமைந்துவிடுகிறார்கள். உண்மையில் நாம் நிறைவேற்றும் திட்டங்களிலே சில நிர்வாகக் குறைபாடுகள் இருக்கலாம். குறிப்பாக பல துறைகளுக்கிடையில் போதிய ஒருங்கிணைப்பின்றி செயல்படுவதால் பெண்களுக்கு அவர்களின் உடல் நலம், குடும்பநலம், சத்துணவு மற்றும் அவை தொடர்பான பல தேவைகள் அவர்களுக்கு சரியாகவும், முழுமையாகவும் கிடைப்பதில் தடங்கல் ஏற்படலாம். சுருங்கச் சொல்வதென்றால் ஒரு பலவீனமான சூழ்நிலையில்தான் இன்றைய பெண்கள் உள்ளனர் என்பதை உணர்ந்து அரசின் அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைந்து செயல்படச் செய்து, மகளிர் முன்னேற்றத்திற்கு முயற்சிப்பதுதான், சமூக நலத்துறையின் தலையாய பணியாக இன்று அமைகிறது.

(இ) சர்வதேச மகளிர் வாரம், சத்துணவு வாரம் போன்ற சமூகநலத்துறையால் நடத்தப்படும் பல விழாக்கள் சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் பெண்கள் நலனின் மீது விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, அப்பிரச்சினையினை சவாலாக ஏற்று தீர்ப்பதற்கு சமுதாயத்தை தயார்படுத்தும் நோக்கம் கொண்டவை ஆகும்.

**2.27 நாகப்பட்டினத்தில் புதிய அலுவலகம் :**

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம் தோற்றுவிக்கப்பட்டதனால் தஞ்சாவூர் மாவட்ட சமூக நல அலுவலகத்திலிருந்து சில பணியாளர்களை மாற்றியதன் மூலம் ஒரு புதிய மாவட்ட சமூக நல அலுவலகம் நாகப்பட்டிணத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வலுவலகத்திற்கு மேலும் கூடுதல் பணியாளர் நியமனம் செய்வதற்கு தற்போது கருத்துரு உள்ளது. இதற்காக ரூ. 4.17 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.28 இயக்ககத்தில் தணிக்கைப் பிரிவு :**

இத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள பல்வேறு நிறுவனங்களுக்கு நிதி வழங்குவதில் போதிய தணிக்கையும் கட்டுப்பாடும் உள்ள வகையில் கட்டமைப்பு இல்லை என்பது அறிய வந்துள்ளது. நிறுவனங்களின் கணக்குகளின் பேரில் ஆய்வு செய்யக்கூடியது உள்ளாட்சி நிதித் தணிக்கை மட்டுமே. இது போதுமானதாக இல்லை. எனவே மானியத் திட்ட தணிக்கை பிரிவு (மானியத் தணிக்கை) ஒன்றினை ஏற்படுத்தலாம் எனும் கருத்துரு உள்ளது. வழங்கப்பட்ட நிதியின் முறையான பயன்பாட்டினை இத்தணிக்கைப் பிரிவு உறுதி செய்யும். இப்பணியை மேற்கொள்ள சமூக நல இயக்ககத்தில் சில பணியிடங்களை ஏற்படுத்திட ரூ. 2.05 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**2.29. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் :**

(அ) தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் 1956ம் ஆண்டின் கம்பெனிகள் சட்டத்தின்கீழ் 1983-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ரூ. 100 இலட்சம் அங்கீகரிக்கப்பட்ட பங்கு முதலீட்டுடன் பதிவு செய்யப்பட்டு தமிழ்நாடு அரசால் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மத்திய அரசு தனது பங்குத் தொகையாக ரூ. 38.42 இலட்சம் வழங்கியுள்ளது. மேலும் மொத்த பங்கு மூலதனத்தில் 49 சதவீதம் ஏற்று கொள்வதாக ஒப்புக்கொண்டுள்ளது. மாநில அரசு தனது பங்காக ரூ. 40 இலட்சம் அளித்துள்ளது.

**(ஆ) 1991 மார்ச் வரையிலான சாதனைகள் :**

இந்தக் கழகம் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் கிராமியமகளிர்களுக்கு வருவாய் ஈட்டும் பல திட்டங்களையும் மற்றும் சுயதொழில் வேலை வாய்ப்புத் திட்டங்களையும் அறிமுகப்படுத்தி 13,151 மகளிரை பயன்பெறச் செய்துள்ளது. இந்த திட்டத்திற்கான மொத்த நிதி முதலீடு ரூ. 1,119 இலட்சம் ஆகும். இதில் ரூ. 768 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது. ரூ. 351 இலட்சம் வங்கிகள் மூலமாக கடனாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த கழகம், மகளிர்கள் தங்களுடைய சொந்தத் தொழில்களைத் தொடங்க தொழில் முனைபவர்களாக உருவாக்க, தொழில்களைத் திறம்பட நடத்த வழிவகை செய்கிறது.

**2.30. 1991-92ல் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் :**

(அ) 1991-92ம் ஆண்டில் இந்த கழகம் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள 8,850 கிராமிய மகளிர் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை தீட்டி அதை அமுல்படுத்த ரூ. 771 இலட்சம் நிதி முதலீடு ஏற்பாடு செய்துள்ளது. இதில் மானியத் தொகை மட்டும் ரூ. 492 இலட்சங்கள் ஆகும்.

(ஆ) மேலும் இந்த ஆண்டில் இந்த கழகம் திரு. எல்னட் டெக்னாலஜிஸ்டின் (எல்காட்டின் துணை நிறுவனம்) உதவியோடு சென்னை நகரத்தில் கணிப்பொறியியலில் சேர்ந்துள்ள 50 மகளிர்க்கு உதவி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு மகளிருக்கும் ரூ. 7,700 விளிம்பு தொகையாகவும் ரூ. 4,000 மானியத் தொகையாகவும் கணிப்பொறியியல் கூடங்கள் வைத்துக் கொள்ள உதவி செய்கிறது. இந்தியன் வங்கி மூலமாக தேவையான கடன் தொகை வழங்கவும் ஏற்பாடு செய்துள்ளது.

**2.31. 1992-93ம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள் :**

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம்

(அ) இந்த திட்டம் 1989—90ல் விவசாய வளர்ச்சிக்கான பன்னாட்டு நிதி நிறுவன நிதி உதவியோடு துவக்கப்பட்டு 1992-93 ஆம் ஆண்டில் தருமபுரி, சேலம், தென்னாற்காடு ஆகிய மாவட்டங்களில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம்

தொடர்ந்து செயல்பட இருக்கிறது. வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள 40,500 மகளிர் இத்திட்டத்தின்கீழ் வரும் ஏழு ஆண்டுகளில் படிப்படியாக பயனடைவார்கள். இத்திட்டத்திற்கான முதலீடு ரூ. 4,592 இலட்சம் ஆகும்.

(ஆ) 1991—92ம் ஆண்டில் சுமார் 7,600 மகளிர் ரூ. 686.01 இலட்சம் முதலீட்டில் பயன்பெறும் வகையில் திட்டம் நடைபெற்று வருகிறது. வருவாய் ஈட்டித்தரும் தொழில்களுக்கான முதலீடு ரூ. 507.33 இலட்சமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) 1992—93ம் ஆண்டில் சுமார் 11,300 மகளிரை வருவாய் ஈட்டித் தரும் தொழில்களில் அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. தருமபுரி, சேலம் மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களில் நடைபெற இருக்கும் இத்திட்டத்திற்கான முதலீடு ரூ. 845 இலட்சமாகும்.

**2.32.** மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்ர ளில் இத்திட்டத்தின.ன விரிவுபடுத்தல் :

மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள மகளிர் பயன்பெறும் வகையில் இத்திட்டத்தினை விரிவுபடுத்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதன் மூலம் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள 20,000 மகளிர், ஒரு மாவட்டத்திற்கு 10,000 மகளிர் வீதம் மேற்படி மாவட்டங்களில் பயனடைவார்கள். இதற்கான திட்ட முதலீடு ரூ. 1,565 இலட்சமாகும். இந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கான ஆரம்ப கட்ட பணிகள் ஏற்கனவே துவங்கப்பட்டு விட்டன. சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் இத்திட்டத்தினை அமுல்படுத்த தக்க அரசு சார்பற்ற நிறுவனங்களை, தேர்வு செய்து கொடுக்குமாறு கோரப்பட்டுள்ளனர். நடப்பு ஆண்டில் மேற்படி இரண்டு மாவட்டங்களிலும் 5,000 மகளிர் அடங்கிய குழுக்களை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. 1992—93ம் ஆண்டிலிருந்து வருவாய் ஈட்டும் தொழில்களில் பெண்கள் அறிமுகப்படுத்தப்படுவார்கள்.

**2.33.** றொழிற் பயிற்சிந் நிட்டங்கள் :

1992—93ம் ஆண்டில் ரூ. 10 இலட்சம் முதலீட்டில் சிறந்த அரசு சார்பற்ற நிறுவனங்கள் மூலமாக சுமார் 400 மகளிர்க்கு பல்வேறு தொழில்களில் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. அவ்வாறு அறிமுகப்படுத்தப்படும் வாழ்க்கை தொழில் திட்டங்களாவன :

1. செவிலியர் பயிற்சி,
2. தோல் பொருட்கள் தயாரித்தல்,
3. மின்சாரம் மற்றும் மின்னணு கருவிகள் பழுதுபார்த்தல்,
4. வாழை நார் பொருட்கள் தயாரித்தல்,
5. கணிப்பொறிகளில் பயிற்சி,
6. மருத்துவமனை நிர்வாகம் முதலியன.



இப்பயிற்சிக் காலம் முடிந்தவுடன் பயிற்சி பெற்ற மகளிர் வேலை வாய்ப்பு மற்றும் சுயதொழில் வேலை வாய்ப்பு பெறும் வகையில் உதவி புரிந்திட தொண்டு நிறுவனங்கள் மூலமாக தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**2.34.** மதுரை மாவட்டம் உசிலம்பட்டி வட்டத்தில் சிசுவதைத் தடுப்பு திட்டம் :

பெண் சிசு வதையில் ஈடுபடுவோரும் மற்றும் அதனை
ஊக்குவிப்போரும், வறுமை, அறியாமை, பெண் குழந்தைளை
வளர்க்க இயலாமை என்ற, சில போலி காரணங்களைக் கூறு
கிறார்கள். உண்மையில் 'ஆண்டவனின் அரிய பரிசான பெண்
சிசுவை'—சுய நலத்திற்காகவும், தவறான பயம் காரண
மாகவும் அழிக்க முயல்வது பெரும் தவறு, குற்றமும் ஆகும்.
இக்கொடிய பழக்கம் எவ்வகையிலும் தடுத்து நிறுத்தப்பட
வேண்டும். தாயினால் புறக்கணிக்கப்படுகிற, இளம் குழந்தை
களைக் காப்பதற்கென்று, அதிகமான 'காப்பகங்கள்' தொடங்
குவதற்கு சேவை நிலையங்கள் இவ்வரசின் மூலம் ஊக்குவிக்கப்
படும். இது சம்பந்தமாக மகளிர் மேம்பாட்டுக்கழகம்,
மத்திய அரசு 'ஸ்டெப்' அமைப்பு நிதி உதவியின் கீழ் ரூ. 67.50
இலட்சம் பெறவும், அதைக்கொண்டு மதுரை மாவட்டம் உசிலம்
பட்டியில் ஒரு திட்டத்தைத் துவக்கவும் நடவடிக்கை எடுத்துள்
ளது. பூர்வாங்க பணிகள் துவங்கிவிட்டன. இந்திய
குழந்தைகள் நல கவுன்சிலின் உதவியுடன் 720 மகளிர் குழுக்
களாக அமைக்கப்படுகிறார்கள். அதில் 300 மகளிர் 1992-93ல்
சுய வேலை வாய்ப்பு பெறுவார்கள். மத்திய அரசின் முழு
உதவி கிடைத்ததும், விரிவான திட்டம் செயல்படுத்தப்படும்.

**2.35.** ஒருங்கிணைந்த மசளிர் மேம்பாட்டுத் திட்டம் :

ஒருங்கிணைந்த மகளிர் மேம்பாட்டுத் திட்டம் சமீபத்தில்
அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த திட்டத்தை அமுல்படுத்து
வதில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் முக்கிய பங்கு
வகிக்கின்றது. 'விவசாய வளர்ச்சிக்கான பன்னாட்டு நிதி
உதவியின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு
திட்டம் எங்கெல்லாம் அறிமுகப்படுத்தப்படுகிறதோ மற்றும்
விரிவுபடுத்தப்படுகின்றதோ அந்த மாவட்டங்களில் இந்த
கழகம் இந்த திட்டத்தை அமுல்படுத்துவதில் தலையாய
பொறுப்பு வகிக்கிறது. இந்த குறிக்கோளுடன் விவசாய வளர்ச்
சிக்கான பன்னாட்டு நிதி உதவி மதுரை மற்றும் இராமநாதபுரம்
மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## அத்தியாயம் 3

# குழந்தைகள் நலம்.

3.1. குழந்தைகளின் உடல் நலத்தையும், சத்துணவு பெறும் நிலைமையையும் நன்கு பாதுகாத்து, அவர்களின் மனத்திறனை/மன ஆற்றலை வளர்க்கும் நோக்குடன் தமிழ்நாடு அரசு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. நோயாலும், சத்துணவு பற்றாக் குறையாலும் ஏற்படும் இளம் வயது இறப்பினைக் குறைத்து, நமது மாநிலத்தில் ஒருங்கிணைந்த சத்துணவும், உடல் நலம் பேணும் வசதிகளும் வழங்கும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இத் திட்டங்களின் கீழ் குழந்தையின் உடல் வளர்ச்சியைக் அவ்வப்போது கணித்தல், உடல் நிலையைப் பரிசோதனை செய்தல், நோய் தடுப்பு மருந்து கொடுத்தல், அவசியமாயின் அருகிலுள்ள மருத்துவ மையங்களுக்கு அனுப்பி மேல் பரிசோதனை செய்தல், இணை சத்துணவு வழங்குதல், முன்பருவக் கல்வி வழங்குதல் ஆகிய பணிகள் அடங்கும்.

முக்கியமாக, முறையான வசதிகள் :—சத்துணவு, மருத்துவம், முன் பருவக் கல்வி மறுக்கப்பட்ட நிலையில் வாழும் குழந்தைகளுக்கு உதவுவதற்கு, முழுமையான முயற்சிகள் எடுப்பதற்கு அரசு தீர்மானித்து உள்ளது.

### 3.2. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்.

இத்திட்டம் தமிழ்நாட்டில் 1–7–1982 முதல் கிராமப் புறங்களிலும், 15—9–1982 முதல் நகர்ப்புறங்களிலும் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது 28044 குழந்தைகள் நல மையங்களும், 38500 பள்ளி மையங்களும் நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் நடைபெற்று வருகின்றன. இதில் 103 குழந்தை நல மையங்கள் மலைவாழ் பகுதியினர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக நடைபெற்று வருகின்றன.

இத்திட்டத்தில் முக்கியமான மூன்று அம்சங்கள்—ஊட்டச் சத்து, முன்பருவக்கல்வி, சுகாதாரப் பாதுகாப்பு—அடங்கும்.

*(அ) ஊட்டச்சத்து.*

ஊட்டச் சத்து குறைவினைத் தடுப்பதற்கு குழந்தைகளுக்கு சுகாதார முறையில் தலத்திலேயே சமைக்கப்பட்ட சூடான உணவு மதிய உணவாக மையங்களில் வழங்கப்படுகிறது. இந்த உணவு கீழ்க்கண்ட அளவு பொருளைக் கொண்டு சமைக்கப்படுகிறது. (2+—4+ குழந்தைகளுக்கு).

| | | |
|---|---|---|
| 1. | அரிசி .. .. | 80 கிராம் |
| 2. | பருப்பு .. .. | 10 கிராம் |
| 3. | எண்ணெய் .. .. | 1 கிராம் |
| 4. | தாளிதம் மற்றும் காய்கறி .. | 50 கிராம் |



ஒவ்வொரு மையத்திற்கும் ரூ. 2,000 மதிப்புள்ள சமையல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. எரி பொருட்களுக்கான செலவினத்தை மீதப்படுத்த குழந்தைகள் நல அமைப்பாளர்கள் வைக்கோல் பெட்டியை உபயோகிப்பது குறித்து அறிவுரைகளும், பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளன.

*(ஆ) முட்டை விநியோகம் :*

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தின் கீழ் சத்துணவு மையங்களில் குழந்தைகளுக்கு 15 நாட்களுக்கு ஒரு முறை தலா ஒரு கோழி முட்டை வழங்கப்படுகிறது.

*(இ) முன் பருவக்கல்வி :*

அரசின் கொள்கைப்படி அனைத்து சத்துணவு மையங்களும் நர்சரிபள்ளிகளாக முழு அளவில் செயல்பட உள்ளன. ரூ. 1,500 மதிப்புள்ள கல்வி உபகரணங்கள், விளையாட்டுச் சாமான்கள் மற்றும் மரச்சாமான்கள் எல்லா மையங்களுக்கும் திட்டத் துவக்கக் காலத்தில் வழங்கப்பட்டன. அவை தற்போது பழுதடைந்து உபயோகிக்க இயலாத நிலையில் உள்ளன. குழந்தைகள் நல மையங்கள் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழும், தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து திட்டம் II-ன் கீழும், தேவைக்கேற்ப முன் பருவக் கல்வி மையங்களாக மாற்றப்படுகின்றன. இத்திட்டங்களின் கீழ் அமைப்பாளர்களுக்கு முன் பருவக் கல்விக்கான பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், கல்வி உபகரணங்கள் மற்றும் விளையாட்டுச் சாமான்கள் அனைத்து மையங்களிலும் புதுப்பிக்கப்படுகின்றன. குழந்தையின் உடல் வளர்ச்சி மற்றும் மனவளர்ச்சியில் முன் பருவப் பள்ளியில் அக்குழந்தை பெறுகிற அனுபவம், ஓர் பயனுள்ள வளமான அனுபவமாகும். ஒவ்வொரு குழந்தையும் ஒரு தனிப்படைப்பு, பிரத்யேக விசேஷம் கொண்ட ஒரு உயிர். கல்வியின் தேவையும், அவசியமும் குழந்தையின் மனதில் ஆழப்பதிய வேண்டும். ஆகவேதான் குழந்தைகளின் முன் பருவக்கல்விக்கு தனியான, தலையாய கவனம் செலுத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. சமூகக்கல்வி, உடற்பயிற்சி, அறிவுவளம் மூன்றும் இதில் அடங்கும்.

*(ஈ) உடல் நலம் பேணுதல் :*

சீரான உடல்நிலையை பராமரிப்பதற்காக ஆரம்ப சுகாதார மையங்கள் மூலமாக அடிக்கடி மருத்துவ பரிசோதனை செய்வதன் மூலமும் தடுப்பூசிகளின் மூலமும் குழந்தைகளின் உடல்நலம் பேணப்படுகிறது. கிராமப் புறங்களிலும், நகராட்சிகளிலும் பொதுச் சுகாதாரத் துறையினர் குழந்தைகள் உடல் நலத்தைப் பேணுகின்றனர். இந்த மையங்கள் குழந்தைகள் ஊட்டச் சத்து குறித்து தாய்மார்களுக்கு கல்வி வழங்கும் ஒரு சமுதாய ஊட்டச் சத்து கல்வி மையமாகவும் செயல்படும்.

(உ) சமையல் பாத்திரங்கள் :

1991-92 ஆம் நிதியாண்டில் சத்துணவு மையங்களில் பாத்திரங்களை புதுப்பிப்பதற்கு ரூ. 2 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பாத்திரங்கள் வழங்கும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது.

(ஊ) மையங்கள் பழுது பார்த்தல் :

சென்ற நிதி நிலை அறிக்கையில் (1991--92) அறிவித்தவாறு பெரிய தொழில் நிறுவனங்கள் மற்றும் வணிக நிறுவனங்களின் உதவியுடன் மாநிலத்திலுள்ள பழுதுபட்ட சத்துணவு மையங்களை பழுது பார்க்கும் மற்றும் புதுப்பிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இதுவரை சுயவிருப்பத்துடன் இப்பணிகளை எடுத்து நிறைவேற்ற வந்துள்ள தொழில் அதிபர்கள்/வணிகர்கள் ஆகியோர் மாநிலத்திலுள்ள 8,050 சத்துணவு மையங்களை பழுது பார்க்க எடுத்துக்கொண்டதில் 2,600 மையங்களில் ஒரு கோடியே நாற்பத்தைந்து இலட்சம் ரூபாய் செலவில் பழுது பார்க்கும் பணி முடிந்துள்ளது.

(எ) முதியோருக்கு சத்துணவு :

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தின் கீழ் முதியோர் உதவித் தொகை பெறும் முதியோருக்கு உணவு வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொருவருக்கும் நாளும் 200 கிராம் அரிசி, 15 கிராம் பருப்பு, 1 கிராம் எண்ணெய், 50 கிராம் காய்கறி மற்றும் தாளிதம் அடங்கிய சத்துணவு வழங்கப்படுகிறது. அவர்கள் தங்களது உணவை முன்பருவக்கல்வி பயிலும் குழந்தைகளுக்கு தொந்தரவு இல்லாத வகையில் வீடுகளுக்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள். 1-1-1984 முதல் அரசு இத்திட்டத்தை முன்னாள் படை வீரர் நல நிதியிலிருந்து ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் அவர் தம் விதவையருக்கும் விரிவுபடுத்தி உள்ளது.

(ஏ) பள்ளிக்குழந்தைகளுக்கு சத்துணவு அளிக்கும் திட்டம்.

ஐந்து வயதுக்கு மேற்பட்டு 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளிக் குழந்தைகள் 38,500 பள்ளி சத்துணவு மையங்களின் மூலம் உணவு அளிக்கப்படுகின்றனர். அரசுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு சத்துணவு அளிக்கும் திட்டத்திற்கு ஊரக வளர்ச்சி ஆணையர் பொறுப்பாவார். நகராட்சி/மாநகராட்சி பள்ளி சத்துணவு மையங்களுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் பொறுப்பாவார்.



இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் வெவ்வேறு வயதுடைய பள்ளிக் குழந்தைகளுக்காக வரையறுக்கப்பட்ட உணவின் அளவு கீழ்வருமாறு :—

| வரிசை எண். | உணவுப் பொருளின் பெயர். | 5 முதல் 9 வயது வரை (ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை). | 10 முதல் 15 வரை. 6 முதல் 8-ம் வகுப்பு வரை | 9 மற்றும் 10-ம் வகுப்பு வரை. |
|---|---|---|---|---|
| | | | அளவு (கிராம்) | |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | அரிசி .. | 100 | 100 | 120 |
| 2. | பருப்பு .. | 15 | 15 | 15 |
| 3. | எண்ணெய் .. | 1 | 1 | 1 |
| 4. | காய்கறி, எரிபொருள் மற்றும் தாளிதப் பொருள் | 13 பைசா | 13 பைசா | 13 பைசா |

முட்டை சாப்பிட விரும்பும் பள்ளிக் குழந்தைகளுக்கு 15 நாட்களுக்குக்கொருமுறை வேகவைத்த முட்டை ஒன்று வழங்கபடுகிறது. முட்டை சாப்பிடாத பள்ளிக் குழந்தைகளுக்குப் நாளொன்றுக்கு 50 கிராம் வீதம் 15 நாட்களுக்கொருமுறை புரதச்சத்து மிகுந்த சத்துருண்டை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழுள்ள சத்துணவு மையங்களில் ஏற்படும் முறைகேடுகளை தவிர்ப்பதற்கு மைய ஆய்வு செய்யும் இயந்திரம் முடுக்கிவிடப்பட்டு உள்ளது. சில குறிப்பிட்ட நாட்களில் மையத்தினை ஆய்வு செய்து அந்நாட்களில் வருகை தந்துள்ள குழந்தைகள் அடிப்படையில் வருகைக் குறையீடு மறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையால் 1992-93 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கான செலவினம் கணிசமான அளவில் குறையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்திற்காக 1992-93-க்கு 256.32 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

### 3.3. இலவச சீருடை வழங்குதல் :

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் 1 முதல் 8 வகுப்புகளில் கல்வி பயிலும் ஏழைக் குழந்தைகளுக்கு இலவச சீருடை ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் தோராயமாக 65 இலட்சம் ஜோடி சீருடைகள் தைக்க வேண்டியுள்ளது. இச்சீருடைகளை தைக்கும் பொறுப்பு சமூகநல இயக்ககத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சீருடைகள் தைப்பதற்கு தேவையான துணி, கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநரால் நேரிடையாக மாவட்ட சமூகநல அலுவலர்களுக்கு வழங்கப்படுகிறது. சமூகநலத் துறையின் கீழ் செயல்படும் மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் சீருடைகள் தைக்கப்பட்டு கல்வித்துறை அதிகாரிகளின் மூலம் பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது.

### 3.4. இலவசக் காலணி வழங்குதல் :

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தின்கீழ் பயனடையும் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளிச் சிறார்களுக்கு இலவச காலணிகள் வழங்கும் திட்டம் 1987-88ஆம் ஆண்டு தமிழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளிச் சிறார்களுக்கு உரிய காலணியை தயார் செய்யும் பணி தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் மற்றும் சமூகநல இயக்ககம் ஆகிய மூன்று நிறுவனங்களுக்கும் 50:30:20 என்ற விகிதத்தில் ஒப்படைக்கப்பட்டது. காலணி தயாரிப்பதற்கு தேவையான மூலப் பொருட்கள் தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் வழங்கப்படுகிறது. சமூகநல துறையின்கீழ் செயல்படும் 39 மகளிர் காலணி தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இக்காலணிகள் தயாரிக்கப்பட்டு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயனடையும் குழந்தைகளுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை விநியோகிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 32.50 இலட்சம் குழந்தைகள் (50 விழுக்காடு) நடப்பு ஆண்டிலும் எஞ்சியவர்கள் அடுத்த ஆண்டிலும் பயன் அடைவர்.

### 3.5. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம்-II (உலக வங்கி உதவியுடன்)

(அ) தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம் — II உலக வங்கியின் இயக்குநர் குழுவினரால் அங்கீகரிக்கப்பட்டு வளர்ச்சிக் கடன் 5.12.1990 முதல் அமுலுக்கு வந்துள்ளது. இத்திட்டம் மத்திய அரசு உதவியுடன் செயல்படும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தை சேர்ந்த தொகுதியைத் தவிர மற்ற 316 வட்டாரங்களிலும் படிப்படியாக செயல்படுத்தப்படும். ஏற்கனவே, இத்திட்டத்தின் முதல் பகுதியின் கீழ் உள்ள 122 வட்டாரங்களும் இதில் அடங்கும். தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம், —II மூலம் தாய் சேய் நலம், ஊட்டச்சத்து, சுகாதாரம் மற்றும் முன் பருவக் கல்வி



ஆகிய பணிகள் கிராம அளவில் அளிக்கப்படும். சத்துணவு மையங்
கள் மூலம் கிராம அளவில் தாய் சேய் நலம் மற்றும் மூன்று —
ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு முன் பருவக் கல்வி
அளிக்கப்படும். இதற்கென பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்
பட்டு அவர்கள் செயல்பாட்டினை மேற்பார்வை செய்யப்படும்.
இக்குறிக்கோளை அடைவதற்கு போதிய வசதிகளும் உபகரணங்
களும் அளிக்கப்படும். போதுமான பயிற்சி மற்றும் புதிய மேற்
பார்வை முறை ஆகியவற்றின் மூலம் தாய் சேய் ஊட்டச்சத்து
மற்றும் சுகாதாரப் பணிகள் ஒருங்கிணைக்கப்பட்டு திட்டத்தின்
செயலாக்கம் சீர்திருத்தப்படும். ஊட்டச்சத்து, உடல்நலக் கல்வி
பற்றிய தொடர்பு பணிகளுக்காகவும் திட்டத்தில் மக்கள் பங்கை
அதிகரிக்கச் செய்யவும், நவீன உபகரணங்களுடன் கூடிய ஒரு
தகவல் தொடர்பு மையம் இத்திட்டத்தின்கீழ் செயல்பட்டு
வருகிறது.

(ஆ) இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோள்கள் வருமாறு :

1. தாய்நலம் மற்றும் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவதன் மூலம் கர்ப்பம் தரித்த நாளிலிருந்தே ஊட்டச்சத்து நிலையை உயர்த்தி, குழந்தை உயிர் வாழ்தல் மற்றும் குழந்தை வளர்ச்சியினை உறுதிப்படுத்துதல்.

2. 0—6 வயது குழந்தைகளின் ஊட்டச்சத்து மற்றும் சுகாதார நிலையை கீழ்க்கண்ட வழிமுறைகள் மூலம் மேம்படுத்துதல் :—

(அ) மிதமான மற்றும் கடுமையான ஊட்டச்சத்து குறைவினை தவிர்ப்பது;

(ஆ) தொற்று நோய்களை கட்டுப்படுத்தவும், தவிர்க்கவும், நோய்த் தடுப்பு மற்றும் பயனுள்ள திட்டத்தை செயல்படுத்துவது ;

(இ) குறிப்பிட்ட சில ஊட்டச்சத்து பற்றாக்குறை நோய்கள் வராமல் காப்பது.

3. மூன்று முதல் ஆறு வயது குழந்தைகளுக்கு பயனுள்ள முன் பருவ கல்வி அளிப்பது.

4. தனி நபர் மற்றும் சமுதாய நலத்தை மேம்படுத்த தாய்மார்கள், குடும்பம் மற்றும் இளம்பெண்கள் ஆகியோரின் செயல்திறத்தை அதிகரித்தல்.

5. சுகாதார நலக் கல்வி அளித்தல் மற்றும் ஊட்டச்சத்துத் திட்டங்களை திட்டமிடுவதிலும், செயல்படுத்துவதிலும், மதிப்பீடு செய்வதிலும் சமுதாயத்தின் ஈடுபாட்டை கிராம அளவில் அதிகப்படுத்துதல்.

6. மேற் கூறிய சுகாதாரம், ஊட்டச்சத்து மற்றும் மற்ற நோக்கங்களை நிறைவேற்ற தேவையான மனித ஆற்றலை மேம்படுத்துதல்.

7. மாநிலத்திலுள்ள ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரத் திட்டங்களை சரி வர நிறைவேற்றுவதற்கு தேவையான செயல் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுதல்.

(இ). திட்டத்தின் அமைப்பு : " கிராம அளவு அமைப்பு " :

இத்திட்டம் செயல்படுத்த தேவைப்படும் பொருட்கள் முதலில் சமுதாய ஊட்டச்சத்து மையங்களுக்கு வழங்கப்படும். சுமார் 1,500 மக்கள் தொகை உள்ள கிராமங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு மையம் துவக்கப்படும். குறைவாக மக்கள் தொகை உள்ள குக்கிராமங்களில் மகளிர் தொடர்புக்குழு மற்றும் இளம் மகளிர் குழு மூலம் இத்திட்டம் நிறைவேற்றப்படும். சமுதாய ஊட்டச் சத்துமையத்தை அந்தப்பகுதியில் நன்கு அறிமுகமான பேறு கால உதவியாளரின் உதவியுடன் சமுதாய ஊட்டச்சத்துப்பணி யாளர் இயங்கச் செய்வார். இந்த பேறுகால உதவியாளர் மையத்தின் ஆயாவாகவும் செயல்படுவார். கிராம சுகாதார செவிலியர் மாதந்தோறும் குறிப்பிடப்பட்ட நாட்களில் இந்த நிலையத்திற்கு வந்து மகளிருக்கும், குழந்தைகளுக்கும் நலச் சேவை புரிவர்.

(ஈ). கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் ஒரு மாதத்திற்குட்பட்ட குழந்தைகளுக்கான நலத் திட்டம் :

1. மகப்பேறுக்கு முன் பதிவு.
2. மகப்பேறுக்குப் பின் பரிசோதனை.
3. மகப்பேறு இடர்பாட்டை அறிந்து அதற்கான மருத்துவம் மேற்கொள்ளுதல்.
4. இரண ஜன்னி தடுப்பூசி.
5. இரும்புச் சத்து மற்றும் போலிக் அமில சத்து அளித்தல்.
6. இணை உணவு அளித்தல்.
7. மகப்பேறு காலத்தில் பயிற்சி பெற்ற பணியாளர்களின் உதவி.
8. மகப்பேறுக்குப் பின் கவனித்தல்.
9. சுகாதாரம் மற்றும் ஊட்டச் சத்துக் கல்வி.
10. பிறந்த குழந்தைகளின் பாதுகாப்பு.

(உ). 0—3 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான சேவை :

1. வளர்ச்சிக் கண்காணிப்பு.
2. வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு சிறப்பு இணை உணவு அளித்தல்.
3. நோய்த்தடுப்பு.
4. வயிற்றுப் போக்கு கட்டுப்பாடு,
5. கடுமையான சுவாச நோய் கண்டறிதலும், சிகிச்சை அளித்தலும்.



6. நுண் ஊட்டச்சத்து அளித்தல்.
7. கடுமையான ஊட்டச் சத்துக் குறைவினால் பாதிக்கப் பட்ட குழந்தைகளுக்கு மருத்துவம்.

கிராமத்தின் முன் பருவக்கல்வி வயது குழந்தைகளுக்கான புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையங்கள் இத் திட்டத்தில் கொண்டு வரப்பட்டு மேற்பார்வைக்காக இணைக்கப் படும். இந்த நிலையம் குழந்தைகள் நல அமைப்பாளர் மற்றும் ஆயாவால் நிர்வகிக்கப்படும். புதிய சத்துணவுத் திட்டம் தேவையான இடத்தில் திறக்கப்படுவதோடு, தற்போதுள்ள நிலையும் சீரமைக்கப்படும். அவற்றிற்குத் தேவையான பொருட் கள் வழங்குவதோடு பயிற்சிப் பெற்ற ஊழியர்களால் முன்பருவக் கல்வி வழங்கப்படும். 3 முதல் 6 வயதுக் குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கப்படுவதோடு உணவின் ஊட்டச்சத்து தரமும் மேம்படுத்தப்படும்.

(ஊ). 3 முதல் 6 வயதுக் குழந்தைகளுக்கான சேவைத் திட்டங்கள் :

1. முன் பருவக்கல்வி.
2. இணை உணவு அளித்தல்.
3. மருத்துவ பரிசோதனை மற்றும் சிகிச்சை அளித்தல்.
4. வயிற்றுப் போக்கை க்ட்டுப்படுத்துதல்.
5. கடுமையான சுவாச நோய் கட்டுப்பாடு.
6. நுண் ஊட்டச்சத்து அளித்தல்.

(எ). முறைசாரா முன்பருவக் கல்வி :

ஒவ்வொரு குழந்தைகள் நல மையத்திலும் 3 முதல் 6 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு முறைசாரா முன் பருவக் கல்வி அளிக்கப்படுகிறது. குழந்தைகளின் உடல் மற்றும் தசை வளர்ச்சி, அறிவு வளர்ச்சி மற்றும் மனவளர்ச்சிகளை தூண்டும் செயல்கள், விளையாட்டுகள் மூலமாக நடத்தப்படும். நல்ல மனப்போக்கையும், சமூக உணர்வையும், பண்புகளையும் வளர்க்க முன் பருவக்கல்வி வலியுறுத்தப்படுகிறது.

(ஏ). பிரிவு அளவிலான அமைப்பு :

சுமார் ஒவ்வொரு 15 மையங்களுக்கு ஒருவர் வீதம் ஊட்டச் சத்து மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டு அப்பகுதி ஊட்டச் சத்து பணியாளர் மற்றும் குழந்தை நல அமைப்பாளர் பணிகளை முறைப்படுத்தி மேற்பார்வையிடும் பணியினை மேற் கொள்வார்.

(i) வட்டார அளவிலான அமைப்பு :

ஆரம்பச் சுகாதார நிலைய குடும்ப நல மருத்துவ அதிகாரி வட்டார திட்ட அலுவலராக பணியாற்றுவார். அவருக்கு

உதவியாக சமுதாயச் சுகாதார செவிலி, வட்டார விரிவாக்க கல்வியாளர், சமுதாய ஊட்டச்சத்துப் பயிற்றுநர் ஆகியோர் இருப்பார்கள்.

(ii) மாவட்ட அளவிலான அமைப்பு :

இணை இயக்குநர் (மருத்துவப் பணிகள்) மாவட்டத் திட்ட அலுவலராக பணிபுரிவார். அவருக்கு உதவியாக மாவட்ட ஊட்டச்சத்து திட்ட அலுவலர், மாவட்ட தொடர்பு அலுவலர் மற்றும் புள்ளியியல் அலுவலர் ஆகியோர் இருப்பார்கள். மாவட்டத்தின் திட்ட செயல்பாடு மற்றும் முன்னேற்றத்திற்கு இவர்கள் பொறுப்பாவார்கள்.

(iiii) மாநில அளவிலான அமைப்பு :

சமூகநலத்துறை இயக்குநர் (இந்திய ஆட்சிப்பணி அலுவலர்) இந்தத் திட்டஒருங்கிணைப்பாளராக செயல்படுகிறார். ஒரு இணைதிட்ட ஒருங்கிணைப்பாளர் (இந்திய ஆட்சிப்பணி அலுவலர்) ஒரு இணை இயக்குநர் (பொதுச் சுகாதாரம்) மற்றும் ஐந்து துணை இயக்குநர்களும் அவருக்கு உதவியாக இருக்கிறார்கள். இந்தத் திட்ட அலுவலகத்திற்கு பொதுச் சுகாதாரத் துறையும், சமூக நலத்துறையும் உதவியாக இணைந்து செயல்படுகிறது. தலைமை செயலரின் தலைமையில்இயங்கும் அதிகாரம் அளிக்கப்பட்ட குழு இத்திட்டத்தின் ஆண்டுத் திட்டம், முன்னேற்றத்தை பரிசீலித்தல், திட்ட செயலாக்கத்திற்கான நிதித் தேவைகளை அனுமதித்தல் போன்றவற்றை மேற்கொள்ளும்.

(ஐ) திட்ட ஒதுக்கீடு :

இத்திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீடு கீழ்க்கண்டபடி ரூ. 321.34 கோடியாகும்

| | (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1. ஊட்டச்சத்துப் பணிகள் .. .. | 154.72 |
| 2. சுகாதாரப் பணிகள் .. .. .. | 51.21 |
| 3. பயிற்சி .. .. .. .. | 11.24 |
| 4. தொடர்பு .. .. .. .. | 5.99 |
| 5. திட்ட மேலாண்மை .. .. .. | 8.48 |
| 6. தொடர்பு மற்றும் பயிற்சிமையம் .. | 1.82 |
| 7. முறைப்படுத்துதல் மற்றும் மதிப்பாய்வு .. | 2.34 |
| 8. இதர எதிர்பார்ப்புச் செலவினங்கள் .. | 85.54 |
| மொத்தம் .. | 321.34 |



(ஓ) முன்னேற்றம்

இம்மாநிலத்தில் 10 மாவட்டங்களில் 1982 முதல் 1990
வரை நடைமுறைப்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத்
திட்டத்தின் மூலம் 23.30 இலட்சம் குழந்தைகள் மற்றும் 19.50
இலட்சம் கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள்
பயனடைந்தார்கள். 1991 சனவரியில் தொடங்கப்பட்ட ஒருங்
கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம்—II-ல் ஒருங்கிணைந்த குழந்தை
வளர்ச்சித் திட்டம், சிடா திட்டங்களின் கீழ் இயங்கி வரும்
செங்கற்பட்டு எம்.ஜி.ஆர், புதுக்கோட்டை, நீலகிரி மாவட்டங்
கள் தவிர மாநிலம் அனைத்திலும் உள்ள குழந்தைகள் மற்றும்
தாய்மார்கள் பயன்பெறுவார்கள். தமிழ்நாடு ஒருங்கிணைந்த
ஊட்டச்சத்துத் திட்டத்தின் கீழ் தற்போது 7,397 மையங்களில்
5.24 இலட்சம் (குழந்தைகள் மற்றும் கருவுற்ற, பாலூட்டும்
தாய்மார்கள்) பேர் பயனடைகின்றனர். 1992–93 ஆம்
ஆண்டில் இத்திட்டம் தர்மபுரி மற்றும் தென்னாற்காடு மாவட்டங்
களுக்கு விரிவாக்கப்பட உள்ளது. இது வரை தமிழ்நாடு
ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம் செயல்படாத
மாவட்டங்களுக்கு விரிவாக்குவதன் மூலம் 7.62 இலட்சம்
(குழந்தைகள் மற்றும் கருவுற்ற, பாலூட்டும் தாய்மார்கள்) பேர்
7,622 கூடுதல் மையங்கள் மூலம் பயனடைவார்கள். இத்திட்ட
விரிவாக்கத்தை மேலும் பல மாவட்டங்களில் 1992–93-லேயே
செயல்படுத்துவதன் மூலம் சுருக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

3,6. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்:

(அ) சமுதாயத்தில் நலிவுற்ற குழந்தைகள், கருவுற்ற மகளிர் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்துக் குறைவு மற்றும் அது தொடர்பான நோய்களை சமாளிப்பதற்காக ஒருங்கிணைந்த முறையில் வடிவமைக்கப்பட்ட ஒரு பணியே ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டமாகும், இத்திட்டத்தின் பணிகள், கருவில் உள்ள குழந்தையில் இருந்து தொடங்கி ஆறு வயது ஆகும்வரை, அக்குழந்தைக்குத் தேவையான சத்துணவு, சுகாதாரம் மற்றும் உடல், மன வளர்ச்சிக்கான தேவைகளையும் கருத்தாகக் கவனிப்பதே ஆகும், இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் முக்கிய பணிகள் :

துணை ஊட்டச்சத்து,

முறைசாரா முன்பருவக் கல்வி,

மருத்துவ சோதனை,

நோய்த்தடுப்பு,

ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி மற்றும்

மேல் மருத்துவ பரிசோதனைக்கு வழிசெய்தல் அடங்கும்,

(ஆ) ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், முதன் முதலில் '1975-76ஆம் ஆண்டு சென்னை நகரத்திலும், தளி மற்றும் நிலக்கோட்டை வட்டாரங்களிலும் தொடங்கப்பட்டது, இத்திட்டம் மேலும் விரிவாக்கப்பட்டு தற்போது 42 நகர்ப்புறத் திட்டம் மற்றும் இரண்டு மலைப்பகுதித் திட்டம் உட்பட தமிழ்நாட்டில் மொத்தம் 111 பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது,

(இ) ஒவ்வொரு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பகுதியும் ஒரு இலட்சம் மக்கள் தொகையை உள்ளடக்கியதாகும். ஒவ்வொரு திட்டப் பகுதியிலும் ஒரு குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலரின் தலைமையில் ஒரு மருத்துவ அலுவலர், நான்கு மேற்பார்வையாளர்கள் மற்றும் நான்கு துணை மருத்துவச் செவிலியர் உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது, கிராம மற்றும் மலைப்புற பகுதிகளில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் மூலம் சுகாதாரப் பணிகள் கவனிக்கப்படுகின்றன, ஒவ்வொரு திட்டப் பகுதியிலும் அங்கன்வாடிகள் என்றழைக்கப்படும் 100 குழந்தைகள் நல மையங்கள் செயல்படுகின்றன,

(ஈ) குழந்தைகள் நல மையங்கள் மூலம் தான் இத்திட்டப் பணிகள் கவனிக்கப்படுகின்றன. சுமார் 1,000 மக்கள் தொகை உள்ள பகுதிக்கு ஒரு குழந்தைநல மையம் என்ற விகிதத்தில் மையங்கள் அமைக்கப்படுகின்றன, இத்திட்டப் பகுதியில் 2 முதல் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் 40 பேருக்கும் 0 மாதம் முதல் 2 வயதுக்குட்பட்ட குழந்தைகள் 30 பேருக்கும். கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் 30 பேருக்கும் ஆக மொத்தம் 100 நபர்கள் ஒவ்வொரு திட்டப் பகுதியிலும் பயன் பெறுகின்றனர், இப்பணிகள் ஒவ்வொரு மையத்தின் மூலமும் செயல்படுகின்றன,

(உ) துணை ஊட்டச்சத்து :

திட்டப் பகுதிகளில் மத்திய அரசின் உதவியுடன் கோதுமையை அடிப்படையாகக் கொண்ட ''சத்து'' என்னும் உணவு ஆறு மாதத்திலருந்து 2 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும், கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் வழங்கப்படுகிறது. 80 கிராம் கொண்ட இச்சத்துணவு 60 சதவீதம் கோதுமையும் சோயா மாவு 15 சதவீதமும், வெல்லம் 25 சதவீதமும் கொண்டதாகும்.

2 முதல் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கு சத்துணவுத் திட்டத்தின்கீழ், வருடத்தில் எல்லா நாட்களிலும் (365 நாட்களிலும்) மதிய உணவு மையத்திலேயே வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு குழந்தைக்கும் அரிசி 80 கிராம், பருப்பு 10 கிராம். எண்ணெய் 1 கிராம் மற்றும் காய்கறியுடன் சத்துணவு வழங்கப்படுகிறது, இச்செலவினம் மாநில அரசு நிதியிலிருந்து செலவிடப்படுகிறது. மாதத்திற்கு இருமுறை குழந்தைகளுக்கு முட்டை வழங்கப்படுகிறது.



(ஊ) முறைசாரா முன்பருவக் கல்வி :

ஒவ்வொரு குழந்தைகள் நல மையத்திலும் 2 முதல் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு முறைசாரா முன்பருவக் கல்வி அளிக்கப்படுகிறது. நல்ல மனப்போக்கையும், நடத்தை யையும், பழக்க வழக்கங்களையும் வளர்க்க முன்பருவக்கல்வி பயன்படுத்தப்படுகிறது. குழந்தைகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையிலும், குழந்தைகள் நலப் பணியாளர்கள் திட்டமிட்டுச் செயல்படத் தக்க வகையிலும் கருத்தனுகு முறை செயல் படுத்தப்படுகிறது. ஒவ்வொரு மையத்திற்கும் விளையாட்டு சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், குறைந்த செலவில் கல்வி மற்றும் விளையாட்டு உபகரணங்கள் செய்ய பணியாளர் களுக்கு பயிற்சியும் அளிக்கப்படுகிறது;

(எ) மருத்துவ பரிசோதனை :

ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு உடல்நலம் மற்றும் ஊட்டச்சத்து நிலைமைகளை முறையாகக் கண்காணிக் கும் வகையில், அவர்கள் எடைபார்க்கப்பட்டு அவ்வப்போது மருத்துவ உதவிகள் வழங்கப்படுகின்றன. மருத்துவ அலுவல ரால் மாதத்திற்கொர்ருமுறை, பொது மருத்துவ சோதனைகளும் செய்யப்படுகின்றன. மேலும் அவ்வப்போது வயிற்றுப் பூச்சியை நீக்க மருந்து மற்றும் வயிற்றுப்போக்கு, சாதாரண நோய்கள், ரத்த சோகை நீக்கும் மருந்துகளும் வழங்கப்படுகின்றன. ஆறு மாதங்களுக்கொருமுறை வைட்டமின் ஏ மாத்திரைகள் கொடுக் கப்படுகின்றன. அனைத்து நகர்ப்புறத் திட்டப் பகுதிகளிலும் நவீன உபகரணங்களுடன் கூடிய 144 துணை மருத்துவ மையங்கள் அந்தந்தப் பகுதியில் உள்ள நோயாளிகளுக்கு மருத்துவ வசதி அளிப்பதற்காக நிறுவப்பட்டுள்ளன. சுகாதார திட்டத்தில் இது ஒரு சிறப்பு அம்சமாகும். பெண்கள் கருவுற்ற காலத்திலும், மகப்பேறுக்குப் பின் பாலூட்டும் காலத்திலும் இச்சுகாதாரத் திட்டத்தின் கீழ் அவர்கள் கவனிக்கப்படுகிறார்கள்,

(ஏ) நோய் தடுப்பு :

ஆறு வயதுக்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்ரும், இளம்பிள்ளைவாதம், தட்டம்மை, கக்குவான், காசநோய்; ரணஜன்னி, தொண்டை அடைப்பான் போன்ற நோய்களைத் தடுக்க, தடுப்பூசிகள்/மருந்துகள் போடப்படுகின்றன. அனைத்து கருவுற்ற பெண்களுக்கும் ரணஜன்னிக்கான தடுப்பூசியும் போடப் படுகிறது,

(ஐ) ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி :

15 வயது முதல் 45 வயது வரையுள்ள அனைத்துப் பெண்களுக்கும் ஊட்டசத்து மற்றும் சுகாதாரக் கல்வி வழங்கப்படுகிறது. குறிப்பாக கருவுற்ற மற்றும் பாலூட்டும்

தாய்மார்கள் அதிக கவனம் செலுத்தப்படுகிறார்கள். அடிக்கடி நோய்வாய்ப்படும் குழந்தைகள் மற்றும் சத்துக் குறைவான குழந்தைகளுக்கும், அவர்களின் தாய்மார்களுக்கும் சிறப்பு மேல் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சுகாதாரம் மற்றும் ஊட்டச் சத்துக் கல்வியானது கிராம மகளிர் குழுக்கள் மற்றும் தனி வகுப்புக்கள் மூலமும், திட்டப் பகுதிகளில் அங்கன்வாடிப் பணியாளர்களின் செயல்முறை விளக்கக் கூட்டங்கள் மூலமும், வானொலி போன்ற மக்கள் தொடர்புப் பிரிவுகள் மூலமும் இச் செய்திகள் எல்லாப் பகுதியினருக்கும் எட்டும் வகையில் செயல்படுத்தப்படுகிறது.

(ஒ) ஜூன் 1991ல் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பகுதிகள் 30 கூடுதலாகத் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன, தற்போது தமிழ்நாட்டில் இயங்கிவரும் 111 திட்டப் பகுதிகளின் விவரம் வருமாறு :

| | |
|---|---|
| நகர்ப்புறப்பகுதி | 42 |
| கிராமப்புறப் பகுதி | 67 |
| மலைப்புறப் பகுதி | 2 |
| மொத்தம் | 111 |
| மையங்களின் எண்ணிக்கை | 9,532 |

3.7. ஸ்வீடன் பன்னாட்டு வளர்ச்சி ஆணைக்குழு (SIDA) உதவியுடன் நடத்தப்படும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் (ICDS) :

செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள 8 கிராமப்புற குழந்தைகள் வளர்ச்சித் திட்டங்கள், ஸ்வீடன் நாட்டு உதவியுடன் 1990 முதல் செயல்படுகின்றன. இப்பகுதிகளுக்கான திட்டச் செலவை ஸ்வீடன் நாட்டு நிறுவனம் முழுவதுமாக ஏற்கிறது. இத்திட்டத்திற்கான ஒப்பந்தம் 1—1—1989 முதல் 31—12—1992 வரையிலானது.

இத்திட்டம் கூடுதல் முதலீட்டின் மூலம் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தில் அளிக்கப்படும் பணிகளை மேம்படுத்த உதவும்.

இத்திட்டத்தின் முக்கிய உறுப்புகள் :

- அங்கன்வாடிப் பணியாளர்கள், மேற்பார்வையாளர்கள், குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள் மற்றும் மருத்துவ அலுவலர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி அடங்கிய தரமான ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகள்,



- அங்கன்வாடி மையங்களுக்கு உபகரணங்கள்,

—ஊக்கத்தொகை மற்றும் வருவாய் பெருக்கும் பணிகள்,

—மேலாண்மை மற்றும் தகவல் திட்டம்,

—புதிய கட்டிடங்கள்,

—இரண்டாம் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு சம்பளம்,

—தலைமை அலுவலகத்திற்கு கூடுதல் பணியிடங்கள்.

சிடா— ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்ட உதவிக்கான இந்திய அரசுக்கும் ஸ்வீடனுக்குமான ஒப்பந்தம் மார்ச் 1989ல் 63 மில்லியன் க்ரோனருக்கு ஒப்புதல் இடப்பட்டது. செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள 19 கிராம மற்றும் மூன்று நகர்ப்புற ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டங்கள் சிடா திட்டத்தின் கூடுதல் உதவியுடன் 1—12—1991 முதல் செயல்பட்டு வருகின்றன,

இரண்டாம் கட்டமாக, நீலகிரி மற்றும் தர்மபுரி மாவட்டத்திலும் இத்திட்டத்தை விரிவாக்க சிடா முன் வந்துள்ளது.

3.8. ஆதரவற்ற குழந்தைகளுக்கான அரசு இல்லங்கள் :

(அ) 5 வயது முதல் 18 வயதுக்கு உட்பட்ட, ஆதரவற்ற குழந்தைகளைப் பராமரிப்பதற்காக, தமிழ்நாட்டில் ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள் 22 இத்துறையின் கீழ் இயங்கி வருகின்றன. மேற்படி இல்லங்கள் ஒவ்வொன்றிலும் அனுமதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை 250 ஆகும். ஆத்தூர் மற்றும் திக்கணங்கோடு இல்லங்களில் மட்டும் இவ்வெண்ணிக்கை ஒவ்வொன்றிலும் 100 ஆகும்.

(ஆ) இவ்வில்லங்களில் உள்ள குழந்தைகளுக்கு இலவச உணவு, உறைவிடம், உடை, பாடநூல், குறிப்பேடுகள், மருத்துவப் பாதுகாப்பு மற்றும் கல்வி ஆகியவை அளிக்கப்படுகின்றன. இல்லத்திலேயே 1 முதல் 5ம் வகுப்பு வரை கல்வி அளிக்கப்படுகிறது. ஆறாம் வகுப்பு முதல் குழந்தைகள் அரசு, மாநகராட்சி, நகராட்சிப் பள்ளிகளுக்கு உயர்கல்வி பயில அனுப்பப்படுகின்றனர். 1992—1993ஆம் ஆண்டிற்கு ரூ. 147.97 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) உணவிற்காக ஒரு குழந்தைக்கு ஒரு நாளைக்கு ரூ. 3 வீதமும், உடைக்காக ஓராண்டிற்கு ஒரு குழந்தைக்கு ரூ. 35 வீதமும், படுக்கைப் பொருட்களுக்காக ரூ. 20 வீதமும் வழங்கப்படுகிறது. குளிர்பிரதேசமான நீலகிரி மாவட்டத்திலுள்ள

அரசு ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லக்குழந்தைகளுக்கு, ஒரு குழந்தைக்கு ஆண்டொன்றுக்கு உடைக்காக ரூ. 60 வீதமும், படுக்கைப் பொருட்களுக்காக ரூ. 50 வீதமும் வழங்கப்படுகிறது.

(ஈ) 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 35 வீதமும், ஆறு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு ரூ. 50 வீதமும், 9 மற்றும் 10 ஆம் வகுப்புகளில் பயிலும் குழந்தைகளுக்கு ரூ. 90 வீதமும், மேல்நிலை வகுப்பில் பயிலும் குழந்தைகளுக்கு ரூ. 190 வீதமும், பாடநூல் மற்றும் குறிப்பேடுகள் வாங்கி வழங்கப்படுகின்றன. தற்பொழுது மாதாந்திர உணவூட்டுச் செலவினமாகிய ரூ.90—க்குப் பதிலாக, உணவு அளவீட்டு முறை அமுல்டுத்தப்பட்டு உள்ளது. பெண் கைதிகளின் குழந்தைகளும் இவ்வில்லங்களில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். அனைத்து அரசு ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களிலும் தையல் மற்றும் இதரத் தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

(உ) வடஆற்காடு அம்பேத்கார் மற்றும் நெல்லை கட்டபொம்மன் மாவட்டங்கள், ஒவ்வொன்றிலும், ஓர் ''அனாதை இல்லம்'' 1991–92 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட 100 குழந்தைகளுடன் தொடங்கி வைக்கப்பட்டது.

(ஊ) ''நமது மாநிலத்தில் உள்ள ஆதரவற்ற குழந்தைகள் அனைவருக்கும் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என்பதே என் பேரவா. அவர்களுக்கு உணவும், உடையும் அளிப்பது மட்டும் போதுமானது என எண்ணக்கூடாது. அவர்களும் உயர்கல்வி பெறவேண்டும். அவர்கள் உயர்ந்த எண்ணங்களோடு வளர்வதற்கு வழி வகுக்க வேண்டும்''—என்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சிவானந்த சரஸ்வதி ஆசிரமத்தில் நடைபெற்ற குழந்தைகள் தின விழாவில் கூறினார்கள். இதனையே சமூக நலத்துறை தன் இலட்சியமாக ஏற்றுக் கொண்டுள்ளது.

3.9 பராமரிப்பும் பாதுகாப்பும் தேவையான குழந்தைகளுக்கான மத்திய மாநில அரசின் நலத் திட்டம்.

(அ) ஆதரவற்ற குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளித்து, தனது சொந்த குடும்பங்களில் வசிப்பது போன்ற உணர்வில் அவர்களை வாழவைக்கும் நோக்கத்துடன் 1974—75ல் மத்திய அரசால் ''குடில் திட்டம்'' அறிமுகப்படுத்தப்பட்டது. 25 குழந்தைகளைக் கொண்ட பிரிவு ஒரு குடில் ஆகும். ஒவ்வொரு குடிலும் ஒரு இல்லத்தாயின் பொறுப்பில் இருக்கும். இவ்வில்லத்தாய் தனது குடிலிலுள்ள குழந்தைகளை, தன் குழந்தைகளைப் போல் பாவித்து, அவர்களுக்கு போதிய உணவு, உடை, இருப்பிடம், மருத்துவ வசதி, கல்வி வசதி, பொழுதுபோக்கு வசதி முதலயன வழங்கி அறிவுரை கூறி வழிகாட்டியாக நடந்து கொள்வார்.



(ஆ) ஆதரவற்ற குழந்தைகளைப் பராமரிப்பதற்கும் அதற்
கான கட்டிடங்களைக் கட்டுவதற்கும் தொண்டு நிறுவனங்களுக்கு
அரசு மான்யம் வழங்குகிறது. மொத்த செலவில் 90 சத
வீதத்தை அரசு மான்யமாக வழங்குகிறது. மீதி பத்து சத
வீதத்தை அந்தந்த நிறுவனங்களே ஏற்றுக் கொள்ளவேண்டும்,
இந்த 90 சதவீத மான்யத் தொகையை மத்திய அரசும், மாநில
அரசுப் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன. 1978 க்கு முன்பு
துவக்கப்பட்ட தொண்டு நிறுவனங்களில் உள்ள குடில்களுக்கு
மான்யம் வழங்குவதை முழுவதுமாக மாநில அரசே ஏற்றுக்
கொண்டுள்ளது. ஒவ்வொரு குழந்தைக்கும் உணவு, உடை
முதலியவற்றுக்காக மாதம் ரூ. 200 வீதம் மான்யம் கணக்
கிடப்பட்டு வழங்கப்படுகிறது.

3.10. பெண் சிசுக்கொலையைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் :

(அ) பெண் சிசுவதைப் பிரச்சினை சமீப காலமாக மிகவும்
முக்கியமான பிரச்சினையாக விவாதிக்கப்பட்டு வருகிறது.
மனிதாபிமானமற்ற இப்பழக்கம், நமது மாநிலத்தில் மதுரை
மாவட்டத்தில் உசிலம்பட்டியைச் சுற்றியுள்ள சில வகுப்பின
ரிடையே நிலவி வருகிறது. இப்பகுதி வறட்சி மிகுந்த பகுதி.
இங்கு வாழ்பவரில் பெரும்பாலானவர்கள் நிலமற்ற கூலித்
தொழிலாளர்கள்; ஏழ்மையாலும், கல்வி அறிவின்மையாலும்,
வரதட்சணையைக் கொடுமையாலும் பாதிக்கப்படும் இம்மக்களில்
சிலர், பிறந்த பெண் குழந்தையை பெரும் சுமையென எண்ணி
அப்பொழுதே கொன்றுவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள
தாகத் தெரிகிறது,

இவ்வாறு பாதிப்புக்கு உள்ளாகும் பெண் குழந்தைகளை
மீட்பதற்காகவும், காப்பதற்காகவும், ஒரு வரவேற்பு மையம்
உசிலம்பட்டியில் அரசு மான்ய உதவியுடன் இந்திய குழந்தை
நல சங்கத்தினால் தொடங்கப்பட்டுள்ளது. இவ்வில்லம் ஒரு
மூதாய் மற்றும் இரு ஆயாக்களின் உதவியுடன் உசிலம்பட்டி
யில் உள்ள கேசவன்காளைபுதூரில் நடத்தப்பட்டு வருகிறது.

(ஆ) தற்பொழுது இம்மையத்தில் 5 பெண் குழந்தைகள்
சேர்க்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறார்கள்; இம்மைய
வசதி இல்லை எனில், இந்த 5 குழந்தைகள், ஒருவேளை சிசு
வதைக் கொடுமைக்கு ஆளாகியிருக்கலாம்.

இப்பகுதியில் உள்ள குடும்பங்களுக்கு தக்க ஆலோசனை
களும், அறிவுரைகளும் வழங்கப்பட்டும், பொருளாதார வளர்ச்
சித் திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன. அதன் மூலம்
இம்மாதிரியான பல சிசுவதைகள் தடுக்கப்பட்டுள்ளன.

## அத்தியாயம் 4.

## ஊனமுற்றோர் நலம்.

4.1. தமிழ்நாடு அரசு, சமூகநலத்துறை ஊனமுற்றோரின் மருத்துவ, பொருளாதார மற்றும் சமூக மறுவாழ்விற்காக பல்வேறு திட்டங்களைச் செயல் படுத்தி வருகிறது. மேலும் ஊனமுற்றோர் நலனுக்காகப் பாடுபடும் தனியார் சமூக சேவை நிறுவனங்களையும் மிகவும் ஊக்குவித்து வருகிறது.

(அ) உலக சுகாதார நிறுவனத்தின் உத்தேச மதிப்பீட்டின் படி, உலகில் பத்தில் ஒருவருக்கு பேச இயலாமை, காது கேளாமை போன்ற மிகமிகக் குறைந்த ஏதாவதொரு ஊனத்தி லிருந்து, இரு கால்களோ, கைகளோ இல்லாமை போன்ற கடுமையான ஊனத்தினாலோ அல்லது இது போன்றஏதாவது ஒரு வகை ஊனத்தினாலோ பாதிக்கப்பட்டு உதவி தேவையான நிலையில் உள்ளனர் எனக் கணக்கிட்டுள்ளது. நம் நாட்டின் மொத்த மக்கள் தொகையில், சுமார் இரண்டு சதவீதத்தினர் உடல் ஊனத்தினால் பாதிக்கப்பட்டு உதவி வேண்டும் நிலையில் உள்ளனர். இதில் மூன்றில் ஒரு பகுதியினர், பதினைந்து வயதுக்கு உட்பட்டவர்கள். நமது திட்டங்கள், இந்த 2 சத வீதமாக உள்ள ஊனமுற்றோருக்கு உதவும் நோக்கம் கொண்டவை.

(ஆ) இவ்வாறு ஊனத்தால் பாதிக்கப்பட்டவர்களை மற்ற சாதாரண மக்களைப் போல சமமாக சமுதாயத்தில் வாழ வழி வகை செய்வது ஓர் சவாலாக அமைகிறது. இச்சீரிய பணியில் தனியார் சேவை நிறுவனங்களும், கருணை உள்ளம் கொண்ட தனி நபர்களும் ஆற்றி வரும் பங்கு மிகுந்த பாராட்டுக்குரிய தாகும். ஊனமுற்றோரை சமுதாயத்தின் பிற பகுதியினரோடு ஒருங்கிணைப்பதற்கு சமூக நலத்துறை முயன்று வருகிறது. சென்னையில் ஊனமுற்றோருக்கான தேசிய நிறுவனம் ஒன்றை, நிறுவுவதற்கு தமிழ்நாடு அரசு மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு, நடவடிக்கை எடுத்து வருகிறது.

**4.2 ஊனமுற்றோருக்கு சிறப்புக் கல்வி :**

(அ) கண்பார்வையற்றோர், காது கேளாதோர், மன வளர்ச்சி குன்றியோர், மற்றும் கை, கால் ஊனமுற்றோருக்கு, அவர்களுக்காக நிறுவப்பட்டுள்ள சிறப்பு பள்ளிகள் மூலம் கல்வி



அளிக்கப்படுகிறது. அரசு மற்றும் அரசு மானியம் பெற்று நடைபெறும் சிறப்புப் பள்ளிகள் விவரம் வருமாறு :

| வரிசை எண். | பள்ளியின் வகை | அரசுப் பள்ளி | அரசு மானியம் பெறும் பள்ளி | நகராட்சிப் பள்ளி | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| 1. | பார்வையற்றோருக்கான பள்ளி. | 11 | 9 | .. | 20 |
| 2. | காது கேளாதோருக்கான பள்ளி. | 10 | 15 | 2 | 27 |
| 3. | மனவளர்ச்சி குன்றியோருக்கான பள்ளி. | 1 | 7 | .. | 8 |
| 4. | கை, கால் ஊனமுற்றோருக்கான பள்ளி. | 1 | 5 | .. | 6 |
| 5. | தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான பள்ளி. | .. | 1 | .. | 1 |
| | | 23 | 37 | 2 | 62 |

இந்த சிறப்புப் பள்ளிகள் மூலம் சுமார் 7,000 ஊனமுற்ற குழந்தைகள் சிறப்புக் கல்வி பெறுகிறார்கள். ஊனமுற்றோருக்கான அரசு சிறப்புப் பள்ளிகளில் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு, இலவசமாக உணவு மற்றும் இருப்பிட வசதியுடன் இரண்டு ஜதை சீருடைகளும் இலவசமாக ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது. 1991-92ஆம் ஆண்டில் 7,123 குழந்தைகள் சிறப்புக் கல்வி வசதி பெற்றார்கள். 1991-92-ஆம் ஆண்டிற்கு சிறப்புக் கல்விக்கான நிதி ஒதுக்கீடு ரூ. 230.13 இலட்சங்கள் ஆகும். 1992-93ஆம் ஆண்டிற்கு ரூ. 320.71 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) பார்வையற்றோருக்கான அரசு சிறப்புப் பள்ளிகள் பூவிருந்தவல்லி, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், சேலம், மதுரை, கடலூர், சிவகங்கை, நாகர்கோவில், கோயம்புத்தூர், புதுக்கோட்டை மற்றும் தருமபுரியில் செயல்பட்டு வருகின்றன.

காது கேளாதோருக்கான அரசு சிறப்புப் பள்ளிகள் தஞ்சாவூர், தருமபுரி, கடலூர், புதுக்கோட்டை, காஞ்சிபுரம், சேலம், ஈரோடு, விருதுநகர், உதகமண்டலம் மற்றும் சென்னையில் இயங்கி வருகின்றன.

கடுமையான அளவில் கை, கால் ஊனமுற்றோருக்கான அரசுப் பள்ளி மதுரையில் செயல்பட்டு வருகிறது.

மனவளர்ச்சி குன்றியோருக்கான அரசுநிலையம் சென்னையில் இயங்கி வருகிறது.

5 முதல் 9 வயதுக்கு உட்பட்ட மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள், அவர்களின் மனவளர்ச்சிக்குத் தகுந்தபடி, மூன்று வகையாக — மென்மையான, சுமாரான, கடுமையான பாதிப்பு உடையவர்களாக பிரிக்கப்பட்டு சிறப்புக் கல்வி அளிக்கப்படுகிறார்கள்.

(இ) அரசு வழங்கும் ரூ. 1.00 இலட்சம் மானியத் தொகையைக் (ஒரு தடவை மான்யம்) கொண்டு, புதுக்கோட்டையில், மனவளர்ச்சி குன்றியோருக்கான நிலையம் ஒன்று, தனியார் சேவை நிறுவனத்தால் நிறுவப்பட்டு வருகிறது. இந்நிலையத்தில் மனவளர்ச்சி குன்றியவர் 50 பேர் பயன் பெறுவர்.

**4.3. 1992-93 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள் (சிறப்புக் கல்வி) :**

(அ) தனியார் தொண்டு நிறுவனம் மூலம் 1992-93ல் ரூ. 1·35 இலட்சம் செலவில் காது கேளாதோர் பள்ளி ஒன்றினைத் தொடங்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) ஆசிரியர் மாணவர் விகிதத்தை உகந்த நிலைக்கு படிப்படியாக கொண்டு வர, அரசு உதவி பெறும் சிறப்பு பள்ளிகளில் ஆசிரியர் பணியிடங்களின் எண்ணிக்கையை உயர்த்துவது என அரசு கொள்கையளவில் முடிவு செய்துள்ளது. சில பள்ளிகளில் புதிய பணி இடங்களை 1992-93ல் வழங்கிட கருத்துரு உள்ளது. இதனால் தொடரும் செலவினம் ரூ. 0·80 இலட்சமாகும்.

(இ) அரசு நடத்தும் காது கேளாதோருக்கான சிறப்புப் பள்ளிகளில் தேவையான இடங்களில், உயர்நிலை வகுப்புகள் தொடங்கப்பட உள்ளன. இதற்கு 1992-93ல் ஆகும் தொடரும் செலவினம் ரூ. 2.61 இலட்சம் ஆகும்.

(ஈ) தொண்டு நிறுவனங்கள் நடத்தும் மனவளர்ச்சி குன்றியோருக்கான இல்லங்களில் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளை அரசு செலவில் சேர்த்து, கல்வி/பயிற்சி அளிக்கும் புதிய திட்டம் ஒன்று 1992-93 லிருந்து அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் 10 குழந்தைகள் விதம் 30 குழந்தைகள், மூன்று நிறுவனங்களில் அரசு செலவில் சேர்க்கப்பட்டு, கல்வி/பயிற்சி அளிக்கப்படுவார்கள். இக்குழந்தைகளைப் பராமரிப்பதற்கென அந்நிறுவனங்களுக்கு அரசு நிதி உதவி வழங்கும். இத்திட்டத்திற்காக 1992-93 ல் ரூ. 0.46 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**4.4 காதுகேளாத குழந்தைகளுக்கான முன்பருவக் பள்ளிகள் :**

இருபது மாவட்டங்களில காது கேளாத குழந்தைகளுக்கான முன்பருவப் பள்ளிகள் 20 ஆரம்பிக்கப்பட்டுள்ளன. காது கேளாத குழந்தைகள் 188 பேர் இப்பள்ளிகளின் மூலம் சிறப்புக் கல்வி வசதி பெறுகிறார்கள். இத்திட்டத்திற்காக 1992-93 ஆம் ஆண்டிற்கு ரூ. 15.51 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.5 ஊனமுற்றோருக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சி :**

*(அ) பார்வையற்றோருக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சி :*

கண் பார்வையற்றோருக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு, சிறப்புப் பயிற்சி அளிக்கும் மண்டல பயிற்சி மையம் ஒன்று, பூவிருந்தவல்லி பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் இயங்கி வருகிறது. இந்தப் பயிற்சியில் ஒவ்வொரு ஆண்டும் 20 ஆசிரியர்கள் பயிற்சிக்காக சேர்க்கப்படுகிறார்கள். இதற்கான செலவினம் மத்திய அரசிடமிருந்து மீளப் பெறப்படுகிறது. மாநில அரசும் ஓர் சிறப்புப் பயிற்சிப் பிரிவை நடத்துகிறது. அதில் 15 ஆசிரியர்கள் ஆண்டுதோறும் பயிற்சி பெறுகிறார்கள். 1992-93 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 3.68 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*(ஆ) காது கேளாதோருக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சி :*

ஒவ்வொரு ஆண்டும் சென்னை சிறுமலர் காது கேளாதோருக்கான மேல்நிலைப்பள்ளி மூலம் காது கேளாதோருக்கு கற்பிக்கும் 10 ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தகுதி வாய்ந்த ஆசிரியர்களின் தேவை அதிகரித்திருப்பதை முன்னிட்டு, நூறு சதவீத அரசு மானியத்துடன் 25 ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. அரசு மற்றும் அரசு மானியம் பெறும் பள்ளிகளில் பணி புரியும் பயிற்சி பெறாத ஆசிரியர்கள் இப்பயிற்சியில் சேர்க்கப்படுகிறார்கள். இதற்கு 1992-93 ஆம் ஆண்டில், ரூ. 5.88 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*(இ) மனவளர்ச்சி குன்றியோருக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி :*

மனவளர்ச்சி குன்றியோருக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அரசு மானியத்துடன், சென்னை பாலவிகார் பயிற்சிப் பள்ளி என்னும் தனியார் சேவை நிறுவனத்தின் மூலம் அளிக்கப்படுகிறது. 20 ஆசிரியர்கள் ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி பெறுகிறார்கள். இதற்காக 1992-93 ஆம் ஆண்டிற்கு ரூ. 0.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளின் முன்னேற்றத்திற்கு, அவர்கள் சுயமாக வாழ உத

வும் பயிற்சிகள், மற்றும் பயனுள்ள கைத்தொழில்கள் இன்றியமையாதவை. இதுபோன்ற பயிற்சி அளிக்கும் தனியார் சேவை நிறுவனங்களுக்கு தேவையான உதவியும், ஊக்குவிப்பும் அளிக்கப்படும். 15—3—1992 அன்று அனுசரிக்கப்பட்ட ஊனமுற்றோர் உலக நாள் விழா, ஊனமுற்றோரின் பிரச்சினைகளை பொது மக்கள் உணர, அரிய ஒரு வாய்ப்பாகவும் அவர்களுக்கு தங்களின் கலை உணர்வையும் தொழில் நுட்பத்தையும் மற்றவர்கள் அறிய தக்க வாய்ப்பு அளிக்கும் பட்சத்தில் அவர்களின் பிரச்சினைகள் தீர்க்க இயலும் என்பதையும் மிகத் தெளிவாக உணர்த்தின என்பதில் சந்தேகமில்லை.

**4.6 ஊனமுற்றோருக்கு கல்வி உதவித் தொகை :**

*(அ) மத்திய அரசு கல்வி உதவித் தொகை :*

ஒன்பதாம் வகுப்பும் அதற்கு மேலும் கல்வி பயின்று வரும் ஊனமுற்ற மாணவர்களுக்கும், தொழில் பயிற்சி பெறும் ஊனமுற்ற மாணவர்களுக்கும், மத்திய அரசின் திட்டத்தின் கீழ் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. மத்திய அரசு 1991-92 ஆம் ஆண்டு ரூ 41 இலட்சம் நிதி அளித்துள்ளது. மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டை எதிர் நோக்கி தமிழ்நாடு அரசு இத்திட்டத்தை செயல்படுத்த முன்கூட்டி நிதி வழங்குகிறது. இத்திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் சுமார் 2,000 ஊனமுற்றோர் கல்வி உதவித் தொகை பெறுகின்றனர்.

*(ஆ) மாநில அரசின் கல்வி உதவித் தொகை :*

ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை கல்வி பயிலும் ஊனமுற்ற மாணவர்களுக்கு, அவர்கள் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வாங்குவதற்கான கல்வி உதவித் தொகை ஓராண்டுக்கு ரூ 10 லிருந்து ரூ 84 வரை அவர்கள் பயிலும் வகுப்பிற்கேற்ப சமூகநலத்துறை வழங்குகிறது. 1991-92 ஆம் ஆண்டில் 12,500 குழந்தைகள் கல்வி உதவித் தொகை பெற்றுள்ளார்கள். 1992-93 ஆம் ஆண்டில் சுமார் 15,000 ஊனமுற்ற மாணவர்கள் பயனடைவார்கள் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 9.65 இலட்சம் ஆகும்.

**4.7 பார்வையற்ற மாணவர்கள் தேர்வு எழுத உதவுபவர்களுக்கு உதவி :**

பார்வையற்றோருக்கான சிறப்புப் பள்ளிகளில் கல்வி பயிலும் பார்வையற்ற மாணவர்கள் தேர்வுகளில் வினாக்களுக்கு இவர்கள் வாய் மூலம் அளிக்கும் பதிலினை, அவ்வாறே எழுத பார்வையுள்ள உதவியாளரை வைத்துக் கொள்ள அனுமதி அளிக்கப்படுகிறார்கள். பார்வையற்ற மாணவருக்கு தேர்வு எழுத உதவி புரிபவருக்கு, ஒரு தேர்வுத் தாளுக்கு ரூ. 6 வீதம் உதவித் தொகை



யை சமூகநலத்துறை வழங்கி வருகிறது. இந்த உதவித் தொகை பெறும் பள்ளிகள் பின்வருமாறு :

பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப்பள்ளி, பூவிருந்தவல்லி.

பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப்பள்ளி, திருச்சிராப்பள்ளி.

பார்வையற்றோருக்கான சிறுமலர் மேல்நிலைப்பள்ளி, சென்னை மற்றும் பார்வையற்றோருக்கான புனித லூயிஸ் பள்ளி.

சுமார் 200 மாணவர்கள் இத்திட்டத்தினால் பயனடைகிறார்கள். இத்திட்டத்திற்கு ரூ. 20,000/ 1992-93—ஆம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.8 ஊனமுற்றோருக்குப் பயிற்சி :**

கண்பார்வையற்றோர், காதுகேளாதோர், கை—கால் ஊனமுற்றோர் — ஆகியோருக்குஏற்கனவே நிறுவப்பட்டுள்ள பயிற்சி நிலையங்கள் மூலம் சமூகநலத் துறை தகுந்த பயிற்சிகளை அளித்து வருகிறது. இதன் விவரங்கள் வருமாறு :—

(அ) கிண்டியிலுள்ள அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் காது கேளாதவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக, ஒரு சிறப்புப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு தற்போது 15 காது கேளாத மாணவர்கள் "பொருத்துநர்" பணியில் பயிற்சி பெற்று வருகின்றனர். இத்திட்டத்திற்காக 1991-92 ஆம் ஆண்டிற்கு ரூ. 0.62 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1992-93 ஆம் ஆண்டிற்கு ரூ. 0.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) பூவிருந்தவல்லியில் உள்ள பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில், பார்வையற்றோருக்கான அரசு தொழிற் பயிற்சி நிலையம் இயங்கி வருகிறது. இங்கு கீழ்க்கண்ட தொழில் பிரிவுகளில், திருத்தி அமைக்கப்பட்ட பயிற்சித் திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்கப்படுகிறது.

(1) பொறிப்பகுதி பொருத்துநர் மற்றும் அடிப்படை இயந்திரப் பொறியாளர்.

(2) புத்தகம் கட்டுதல்.

(3) மின் கம்பி சுற்றுதல்.

ஒவ்வொரு ஆண்டும் 30 பார்வையற்றோர் இந்நிலையத்தில் பயிற்சி பெறுகிறார்கள். பயிற்சி பெறும் மாணவர்களுக்கு இலவசமாக இருப்பிடம், உணவு, இரண்டு ஜதை சீருடைகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்காக 1992-93 ஆம் ஆண்டிற்கு ரூ 6.81 இலட்சம் நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது.

4.9 பயிற்சி பெற்ற பார்வையற்ற காது கேளாதவரை தொழி
பழகுநராக அமர்த்துதல் :

பார்வையற்றோருக்கான அரசு தொழிற் பயிற்சி நிலையம்
பூவிருந்தவல்லியிலும், சென்னை கிண்டி மற்றும் மதுரையில்
இயங்கும் அரசுதொழிற் பயிற்சி மையங்களில் பயிற்சி பெற்ற கண்
பார்வையற்ற மற்றும் காது கேளாதவர்கள் அரசு, அரசு சார்
மற்றும் தனியார் நிறுவனங்களில், தொழில் பழகுநராக மாதப்
ரூ. 400 உதவித் தொகையுடன் பணியமர்த்தப்படுகின்றனர்
தொழில் பழகும் காலம் ஓராண்டு முடிந்த பின், அவர்கள் பயிற்
பெற்ற அதே நிறுவனத்தில் காலி இடம் எழும்போது, நிரந்தரப்
பணியில் அமர்த்தப்படுவார்கள். 1992–93 ஆம் ஆண்டில் 10
ஊனமுற்றவர்கள் பயன் பெற ரூ. 2.00 இலட்சம் இத்திட்டத்
திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

4.10 ஊனமுற்றோருக்கான வேலை வாய்ப்பு உதவிகள் :

(அ) மண்டல மறுவாழ்வு மையங்கள் :

மத்திய அரசினால் நடத்தப்படும் ஊனமுற்றோருக்கான
மறுவாழ்வு மையத்தினைப் போல ஓர் சிறப்பு அமைப்பாக ஊன
முற்றோருக்கான மண்டல மறுவாழ்வு மையங்கள், சென்னை,
கோயம்புத்தூர், மதுரை, வேலூர், தஞ்சாவூர் ஆகிய ஐந்த
இடங்களில் செயல்பட்டு வருகின்றன. இந்த மண்டல மறுவாழ்வு
மையங்கள் ஊனமுற்றோருக்கு மருத்துவம், தொழிற் பயிற்சி
பொருளாதாரம் மற்றும் சமூக மறுவாழ்வுக்கான பணிகளைக்
கவனிக்கின்றன. இத்திட்டத்திற்காக 1992–93 ஆம் ஆண்டில்
ரூ. 28.76 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு
மண்டல மறுவாழ்வு மையமும் ஒவ்வொரு மாதமும் 130 ஊன
முற்றோருக்கு உதவுகிறது.

(ஆ) வேலை வாய்ப்பில் ஊனமுற்றோருக்கான 3 சதவிகித
இட ஒதுக்கீட்டை கண்காணிக்கும் மாவட்ட அளவி
லானகுழு :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவின்
வரம்பிற்குட்படாத "சி" மற்றும் "டி" பிரிவு பணிகளுக்கு
வேலை வாய்ப்பில் ஊனமுற்றோருக்கு 3 சதவிகித இட ஒதுக்
கீட்டை கண்காணிப்பதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள உறுப்
பினர்களைக் கொண்ட மாவட்ட அளவிலான குழு ஒன்று அரசால்
நியமிக்கப்பட்டுள்ளது :

(1) மாவட்ட ஆட்சித் தலைவர் .. தலைவர்

(2) மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் அல்லது உதவி இயக்குநர், வேலைவாய்ப்புத்துறை உறுப்பினர்



(3) எந்தத் துறையில் பணியிடம் காலியாக உள்ளதோ அந்த துறையைச் சார்ந்த அலுவலர் உறுப்பினர்

(4) மண்டல மறுவாழ்வு அலுவலர்/மாவட்ட சமூக நல அலுவலர் உறுப்பினர்-செயலர்.

இந்த மாவட்ட அளவிலான தேர்வுக் குழு அனைத்து மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த மாவட்ட அளவிலான தேர்வுக் குழுவின் மூலம் பல்வேறு அரசுத் துறைகளில் 1991-92-ம் ஆண்டில் பணியில் அமர்த்தப்பட்ட ஊனமுற்றவர்களின் எண்ணிக்கை 1,426. ஊனமுற்றோரை அரசு சார்பு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணியமர்த்துவதை இந்த அரசு ஊக்குவித்து வருகிறது. மத்திய அரசினால் ஊனமுற்றோரை பணியில் அமர்த்துவதற்காக வழங்கப்படும் 50 தேசிய விருதுகளில் 11 விருதுகள் 1992-ம் ஆண்டில் தமிழகத்திற்கு கிடைக்கப் பெற்றது மிகவும் பெருமைக்குரியதாகும்.

4.11 வேலை கிடைக்காத பார்வையற்றோருக்கு நிவாரணத் தொகை :

(அ) வேலை கிடைக்காத பார்வையற்றோருக்கு நிவாரணத் தொகை வழங்கும் திட்டம் 1981-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த நிவாரணத் தொகையைப் பெற கீழ்க்கண்ட தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

பார்வையற்றவராக இருக்க வேண்டும்.

வயது : 18 வயதுக்கு மேல் 40 வயதுக்குள்.
(தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை).

வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்து ஓராண்டுக்கு மேல் காத்திருப்பவராக இருக்க வேண்டும்.

(ஆ) வழங்கப்படும் நிவாரணத் தொகையின் விவரம் :

| | மாதம் ரூபாய் |
|---|---|
| பட்டதாரிகள்/முதுநிலைப் பட்டதாரிகள் | 200 |
| புகுமுக வகுப்பு/மேல்நிலை வகுப்பு தேறியவர் | 150 |
| இதர வகுப்புகள் | 100 |

(இ) இந்த நிவாரணத் தொகை இவர்கள் தகுதிபெறும் காலத்திலிருந்து வேலை கிடைக்கும் வரை அல்லது வயது 40 ஆண்டு (தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினருக்கு 45 வயது) முடியும் வரை அதிகபட்சமாக 5 ஆண்டுகள் வழங்கப்படும். இத்திட்டத்திற்காக 1992-93 ஆம் ஆண்டிற்கு ரூ. 14.03 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் 1991-92 ஆம் ஆண்டில் பயனடைந்தோர் எண்ணிக்கை 1,389 ஆகும்.

**4.12 ஊனமுற்றோருக்கான நவீன பயிற்சி மற்றும் உற்பத்தி கூடம், முட்டுக்காடு :**

செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம் முட்டுக்காட்டில் ஊனமுற்றோருக்கான நவீன பயிற்சி மற்றும் உற்பத்தி கூடம் இயங்கி வருகிறது. இந்தப் பணிமனையில் ஊனமுற்றோருக்கு மூச்சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள், பெட்டிக் கடைகள், அலமாரிகள் போன்ற உபகரணங்கள், அறைகலன்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இக்கூடம் ஊனமுற்றோருக்கான பயிற்சி மற்றும் உற்பத்திக் கூடமாக துவக்கப்பட்டது. தற்போது உற்பத்தி கூடமாக இயங்கி வருகிறது. இந்த ஆண்டு இக்கூடத்தில் ரூ. 19.94 இலட்சம் செலவில் 1,000 மூச்சக்கர வண்டிகள். 100 சக்கர நாற்காலிகள் 2,000 மடக்கு குச்சிகள் மற்றும் இதர எஃகு தயாரிப்புகள் உற்பத்தி செய்யப்பட்டன. இத்திட்டத்திற்காக 1992–93 ஆம் ஆண்டில் ரூ. 33.69 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசின் மூலம், இந்நிலையத்தை ''ஊனமுற்றோருக்கான தேசிய நிலையமாக'' மாற்ற முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

**4.13 ஊனமுற்றோருக்கு இலவசமாக வழங்கப்படும் உபகரணங்கள் :**

| வ. எண். | உபகரணங்கள் விவரம். | 1991–92ல் பயனடைந்தோர் எண்ணிக்கை. | 1992–93ல் பயன் பெற உள்ளோர் எண்ணிக்கை | 1992–93ம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சங்கள்) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | மூச்சக்கர வண்டிகள் | 1,000 | 1,000 | 16.27 |
| 2. | சக்கர நாற்காலிகள் | 100 | 100 | 1.30 |
| 3. | காதொலிக் கருவிகள் | 1,110 | 1,110 | 6.93 |
| 4. | கருப்புக் கண்ணாடிகள் மற்றும் மடக்கு குச்சிகள் | 2,000 | 2,000 | 1.50 |

**4.14 ஊனமுற்றவர்களுக்கு இலவச பயணச் சலுகை :**

பயணச் சலுகை பெறுவதை இலகுவாக்கி, பயனடைவோரின் எண்ணிக்கையும் அதிகமாக்கும் பொருட்டு ஊனமுற்றவர்களுக்கு இலவச பயணச் சலுகை வழங்குவது பற்றி இதுவரை வெளியிடப்பட்ட அனைத்து அரசு ஆணைகளையும் ரத்து செய்து, புதிய அரசு ஆணை (நிலை) எண். 2403



போக்குவரத்துத் துறை, நாள் : 20—8—1991 இல் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி ஊனமுற்றோருக்கு வழங்கப்படும் சலுகைகள் பின்வருமாறு :

**கண்பார்வையற்றவர் :**

மருத்துவமனை / பள்ளி / பயிற்சி மையம் / கல்லூரி / பணியிடம் போன்ற அனைத்து இடங்களுக்கும் பயணம் செய்ய அனைத்துப் போக்குவரத்துக் கழக பேருந்துகள் (திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்துகள் தவிர) மூலம் இலவசப் பயணச் சலுகை வழங்கப்படுகிறது.

**காது கேளாதோர் மற்றும் கை, கால் ஊனமுற்றவர் :**

காது கேளாதோர் மற்றுக் கை–கால் ஊனமுற்றோருக்கு பள்ளி/மருத்துவமனை சென்று வர அனைத்து போக்குவரத்து கழக பேருந்துகள் மூலம் (திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்து தவிர) தற்போது நடைமுறையில் உள்ள இலவச பயணச் சலுகைக்கான வயது வரம்பு 15லிருந்து 20–க்கு உயர்த்தப்பட்டுள்ளது. இந்தப் பயணச் சலுகை கல்லூரி மற்றும் பயிற்சி மையத்திற்கு சென்று வரும் ஊனமுற்றோருக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

**மனவளர்ச்சி குன்றியவர்கள் :**

சமூக நலத்துறையினால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட மனவளர்ச்சி குன்றியோருக்கான நிறுவனங்களில் பயிலும் மனவளர்ச்சி குன்றியவர்கள் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்துகள் தவிர, அனைத்து போக்குவரத்துக் கழக பேருந்துகளில் இலவசமாக பயணம் செய்ய இலவச பயணச் சலுகை வழங்கப்பட்டுள்ளது. மனவளர்ச்சி குன்றியவர்களுக்கு துணையாக வருபவருக்கும் இலவச பயணச் சலுகை தரப்பட்டுள்ளது.

அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகள் மூலம் இலவச பயணச் சலுகை பெற ஊனமுற்றவர்கள் ஒவ்வொரு ஆண்டும் ஊனத்தின் தன்மை பற்றி மருத்துவச் சான்றிதழ் தர வேண்டும் என இருக்கும் நிலையை மாற்றி, ஊனமுற்றோருக்கு சமூக நலத்துறையால் வழங்கப்படும் நிரந்தர அடையாள அட்டையின் அடிப்படையில் இலவச பயணச் சலுகை பெறத் தகுதியுடையவர்கள் அனைவருக்கும் இலவச பயணச் சலுகைகள் வழங்க 20—8—1991 அன்று அரசு ஆணையிட்டுள்ளது.

**4.15 பெட்ரோல் மான்யம் :**

ஊனமுற்றவர்கள், போக்குவரத்திற்கு இயக்கு ஊர்திகள் வைத்திருந்தால், 50 சதவீதம் பெட்ரோல் மானியம் தரும் திட்டம் இந்த ஆண்டும் தொடரப்படுகிறது. இந்த ஆண்டு 25 உடல் ஊனமுற்ற நபர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைவார்கள். இத்திட்டத்திற்காக 1992–93–ம் ஆண்டிற்கு ரூ. 0.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.16 செயற்கை அவயவங்கள் பொருத்தும் துணை நிலையம்—மதுரை:**

மதுரையிலுள்ள கடுமையாக கை–கால் ஊனமுற்ற குழந் தைகளுக்கான அரசுப் பள்ளியில் பயிலும் 100 ஊனமுற்ற குழந்தைகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு செயற்கை அவயவங்கள் பொருத்தும் துணை நிலையம் மதுரை யில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையம் ஊனமுற்ற குழந்தைகளுக்கு கல்வி, மருத்துவ அறுவைச் சிகிச்சை, இயற்கை முறை தசைப் பயிற்சி மற்றும் முடநீக்கு சாதனங்கள் ஆகிய வைகளை இலவசமாக வழங்கி வருகிறது. இந்த மையம் இயற்பியல் மருத்துவ நிபுணரின் தலைமையின் கீழ் தேவையான பணியாளர்களுடன் இயங்கி வருகிறது. இத்திட்டத்திற்காக 1992–93–ஆம் ஆண்டில் ரூ. 3.34 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.17 பார்வையற்றோரை திருமணம் செய்து கொள்ளும் பார்வை யுள்ளவர்களுக்கான சலுகைகள் :**

கலப்புத் திருமணம் செய்து கொள்ளும் தம்பதிகளுக்கு அளிக்கப்படும் சலுகைகள், பார்வையற்றவரை திருமணம் செய்து கொள்ளும் பார்வையுள்ளவர்களுக்கு நீட்டிக்கப்படும் சலுகைகள் பின்வருமாறு :

பாராட்டுச் சான்றிதழ்.

திருமண செலவிற்காக ரொக்கத் தொகை ரூ. 500

தேசிய சேமிப்புப் பத்திரம் ரூ. 5,500.

1991–92 ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தின் கீழ் பயனடைந் தோர் எண்ணிக்கை 75. இத்திட்டத்திற்காக 1992–93 ஆம் ஆண்டிற்கு ரூ. 1.32 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள் ளது. இதன் மூலம் 22 தம்பதியர்கள் பயனடைவார்கள்.

**4.18 மாவட்ட மறுவாழ்வு மையம், செங்கல்பட்டு :**

(அ) 1986–ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசின் நிதியுதவியுடன் மத்திய அரசால் நம் நாட்டில் 12 மாநிலங் களில் 12 இடங்களில், துவக்கப்பட்ட மாவட்ட மறுவாழ்வு மையங்களில் மாவட்ட மறுவாழ்வு மையம் செங்கல்பட்டும் ஒன் றாகும்.

**இத்திட்டத்தின் நோக்கங்கள் :**

ஊனமுற்றோரைக் கண்டறிதல்,

அவர்களின் மறுவாழ்வுக்கான தேவைகளைக் கணித்தல்.

அவர்களின் முழுமையான மறுவாழ்வுக்கு உதவிகள் வழங்குதல்.



(ஆ) முதல் கட்டமாக இத்திட்டம் காட்டாங்குளத்தூர், மற்றும் திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் மட்டும் செயல்படுத்தப்பட்டது. தற்பொழுது மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியப் பகுதிக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள மூன்று ஊராட்சி ஒன்றியப் பகுதிகளி லிருந்து 1986-ஆம் ஆண்டு முதல் 1992 ஆம் ஆண்டு வரை 5,286 ஊனமுற்றோர் கண்டறியப்பட்டுள்ளார்கள். இந்தத் திட்டம் தற்போது செங்கல்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டம் முழுமைக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக 1992-93-ஆம் ஆண்டிற்கு ரூ. 11.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.19 அரசு மண்டல பிரெய்லி அச்சகம் :**

(அ) பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப்பள்ளி பூவிருந்தவல்லி வளாகத்தில் பார்வையற்றோருக்கான பிரெய்லி புத்தகங்களை அச்சிட்டுத் தரும் அரசு மண்டல பிரெய்லி அச்சகம் இயங்கி வருகிறது. இவ்வச்சகம் 1989-90 ஆம் ஆண்டு முதல் அரசு மற்றும் அரசு மானியம் பெறும் பார்வை யற்றோருக்கான பள்ளிகளில் பயிலும் பார்வையற்றோருக்கு இலவசமாக பிரெய்லிப் புத்தகங்கள் அச்சிட்டு வழங்குகிறது. சுமார் 2,000 பார்வையற்ற மாணவர்கள் இதன் மூலம் பயனடை கிறார்கள். இத்திட்டத்திற்காக 1992-93 ஆம் ஆண்டில் ரூ. 5.03 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) 1968 ஆம் ஆண்டில் வாங்கப்பட்ட பிரெய்லி அச்சு இயந்திரம் பழுதடைந்து விட்டது. பார்வையற்றவர் களின் நலனை முன்னிட்டு புதியதாக பிரெய்லி அச்சு இயந்திரம் ரூ. 11 இலட்சம் செலவில் வாங்க அரசு முடிவு செய்துள்ளது.

**4.20 ஊனமுற்றோருக்கு சுய வேலைவாய்ப்பிற்கு உதவி அளித்தல் :**

(அ) பெட்டிக் கடை வைக்க உதவி.

ஊனமுற்றோர் பெட்டிக்கடை வைப்பதன் மூலம் சுயவேலை வாய்ப்பு பெறுவதை ஊக்குவிக்க தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடனுதவியும் அரசு மானியமாக ரூ. 250 லிருந்து ரூ. 500 வரை வழங்கப்படுகிறது. 1991–92 ஆம் ஆண்டில் 300 ஊனமுற்றோர் இத்திட்டத்தின் மூலம் பயன டைந்துள்ளனர். 1992–93 ஆம் ஆண்டில் ரூ. 1.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 300 ஊனமுற் றோர்கள் பயனடைவார்கள்.

**(ஆ) பிற சுயதொழில் செய்ய உதவி :**

ஊனமுற்றவர்கள் சுயவேலை வாய்ப்பின் மூலம் மறுவாழ்வு பெற தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடனுதவி பெற உதவி செய்யப்படுகிறது. ரூபாய் ஆயிரம் அல்லது மொத்தக் கடன் தொகையில் மூன்றில் ஒரு பங்கு இதில் எது குறைவோ அது அரசு மானியமாக வழங்கப்படுகிறது. இத் திட்டத்திற்காக 1992–93ஆம் ஆண்டிற்கு ரூ. 8.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.21 பார்வையற்ற பெண்களுக்கான தொழிற் கூடத்துடன் கூடிய அரசு மறுவாழ்வு மையம் :**

செங்கல்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டம் பூவிருந்தவல்லியிலுள்ள பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் பார்வையற்ற பெண்களுக்கான தொழிற் கூடத்துடன் கூடிய அரசு மறுவாழ்வு மையம் இயங்கி வருகிறது.

18 வயதிலிருந்து 40 வயது வரையான (தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 45 வயதுவரை) பார்வையற்ற, ஆதரவற்ற மற்றும் அனாதைப் பெண்கள் இந்த இல்லத்தில் சேர்க்கப்படுகிறார்கள். இவர்களுக்கு சாக்கு கட்டிகள் தயாரிப்பதிலும், துணி நெய்வதிலும் ஆறு மாத காலத்திற்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக்குப்பின் இவர்களுக்கு இல்லத்திலேயே வேலை அளிக்கப்படுகிறது. இங்கு தயாரிக்கப் படும் படுக்கை விரிப்புகள், துண்டுகள், கட்டுத் துணிகள் மற்றும் சாக்குக் கட்டிகள் அரசு மருத்துவமனை மற்றும் பள்ளிகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

இத்திட்டத்திற்கு 1992–93 ஆம் ஆண்டிற்கு ரூ. 2.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மொத்தம் 40 பார்வையற்ற பெண்கள் இவ்வில்லத்தில் பயிற்சி பெற்று பணிபுரிந்து வருகிறார்கள்.

**4.22 வடசென்னை, அம்பத்தூர் தொழிற் பயிற்சி மையங்களில் மூன்றாம் பணிமுறை**

அம்பத்தூர், மற்றும் வட சென்னை தொழில் பயிற்சி மையங்களில் கை-கால் ஊனமுற்றவர்களுக்கு பொறிப்பகுதி பொருத்துபவர் இயந்திர பணியாளர், குழாய் பணியாளர், வர்ணம் பூசுபவர், வரைவாளர் (கட்டிடம்) போன்ற பிரிவுகளில் பயிற்சியளிக்க மூன்றாம்பணிமுறை தொடங்கப்பட்டுள்ளது. 1992-93ஆம் ஆண்டில் 16 ஊனமுற்றவர்கள் பயிற்சி பெறுவார்கள்.

இத்திட்டத்திற்காக 1992-93 ஆம் ஆண்டில் ரூ. 0.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது



**4.23 கடும் ஊனத்தால் பாதிக்கப்பட்டோருக்கு பராமரிப்பு உதவித் தொகை :**

எந்த திட்டங்கள் மூலமும் உதவியோ, பயனோ அடைய இயலாத அளவிற்கு கடும் ஊனத்தால் பாதிக்கப்பட்ட கை-கால் ஊனமுற்ற மற்றும் மனவளர்ச்சி குன்றிய நபர்களுக்கு ரூபாய் 100 மாதமொன்றுக்கு பராமரிப்பு உதவித் தொகை அளிக்கப்படுகிறது. பராமரிப்பு உதவித் தொகை பெற தகுதிகள்:

ஊனத்தின் அளவு 75 சதவீதம் அல்லது அதற்கு மேலும் இருக்க வேண்டும்.

பெற்றோர்/காப்பாளர் மாத வருமானம் ரூ. 1,000க்கு கீழ் இருக்கவேண்டும். அரசின் வேறு எந்த உதவியும் பெறுபவராக இருக்கக்கூடாது. ஏற்கனவே பராமரிப்பு உதவித் தொகை பெறும் 420 நபர்களுடன் தற்போது மேலும் 630 பேர் 1991- 92-ஆம் ஆண்டில் கூடுதலாக பயனடையும் வண்ணம் அரசு ஆணை பிறப்பித்துள்ளது, 1992–93 ஆம் ஆண்டிற்கு ரூ.7.78 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.24 ஊனமுற்ற குழந்தைகளைப் பராமரிக்க, தொண்டு நிறுவனங்களுக்கு மானியம் :**

ஊனமுற்ற குழந்தைகள், தொழுநோயால் பாதிக்கப் பட்ட குழந்தைகள், தொழுநோயால் பாதிக்கப்பட்டோரின் குழந்தைகளைப் பராமரிக்கும் தனியார் சேவை நிறுவனங்களுக்கு ஒரு குழந்தைக்கு மாதம் ரூபாய் 30 வீதம் அரசு மானியம் வழங்கப்படுகிறது.

பெற்றோர்/பாதுகாவலர் மாத வருமானம் ரூ. 200க்கு கீழ் இருக்க வேண்டும்.

1992-93ஆம் ஆண்டிற்கு ரூ. 2.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

26 தனியார் சேவை நிறுவனங்களில் உள்ள 713 ஊனமுற்ற குழந்தைகள் இந்த ஆண்டு இத்திட்டத்தின்கீழ் பயனடைவார்கள்.

**4.25 இளம்பிள்ளைவாதத் தடுப்பு மற்றும் மறுவாழ்வுத் திட்டம்:**

(அ) இளம்பிள்ளைவாதத் தடுப்பு மற்றும் இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டம் சமூக நலத்துறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் நோக்கம் :

இளம்பிள்ளை வாத நோய் வராமல் தடுப்பது.. இளம் பிள்ளை வாத நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது.

(ஆ) 1989-90 ஆம் ஆண்டில் இத்திட்டம் முதல் கட்டமாக 40 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் (அதாவது ஒரு மாவட்டத்திற்கு இரண்டு ஊராட்சி ஒன்றியப் பகுதிகள் வீதம்) செயல்படுத்தப்பட்டது. மத்திய அரசு இத்திட்டத்தின் முதல் கட்டத்திற்கு ரூ. 109.50 இலட்சம் ஒதுக்கீடு செய்தது. இத்திட்டத்தின் முதல் கட்டத்தில் 13,352 இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்டவர்கள் பயனடைந்தார்கள்.

(இ) இத்திட்டத்தின் இரண்டாவது கட்டம் 51 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டது. ரூ. 80.15 இலட்சம் செலவிடப்பட்டு 11,806 இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்டவர்கள் பயனடைந்தார்கள்.

(ஈ) இளம்பிள்ளை வாதத் தடுப்பு மற்றும் மறுவாழ்வுத் திட்டத்தின் மூன்றாம் கட்டம் 40 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் ரூ 80.48 இலட்சம் செலவில் தற்போது செயல்படுத்தப்படுகிறது. மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு 13,621 இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்டவர்கள் கண்டறியப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு அறுவை சிகிச்சை, தசைப் பயிற்சி, இலவசமாக முச்சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள், முட நீக்கு சாதனங்கள், ஊன்றுகோல்கள், கல்வி உதவித் தொகை, தொழிற் பயிற்சி, வேலை வாய்ப்பு, சுய வேலை வாய்ப்பிற்கு வங்கிக் கடனுடன் அரசு மானிய உதவி, முதியோர் உதவித் தொகை, ப்ராமரிப்பு உதவித் தொகை மற்றும் இடை மாறுபாட்டு பள்ளியில் சேர்த்தல் போன்ற உதவிகள் தேவைக்கேற்ப வழங்கப்படுகின்றன. இளம்பிள்ளை வாதத் தடுப்பு பற்றிய நடவடிக்கைகளை மக்கள் நல்வாழ்வுத் துறை எடுத்து வருகிறது. சமூக நலத்துறை இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்டோரின் மறுவாழ்விற்காக கீழ்கண்ட வழிமுறைகளை பின்பற்றி வருகிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்டோரை கணக்கெடுத்தல்.

இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்டோரின் மறுவாழ்வுக்கான தேவைகளைக் கணித்தல்.

தேவையான மறுவாழ்வு உதவிகள் அளித்தல்.

1992-93 ஆம் ஆண்டில் இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு திட்டத்தின் நான்காம் கட்டமாக தேர்ந்தெடுக்கப்பட்ட 40 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் ரூ. 76.17 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட உள்ளது.

**4.26 ஊனமுற்றோருக்கான விளையாட்டுப் போட்டிகள் :**

உடல் ஊனத்தாலோ அல்லது மன ஊனத்தாலோ பாதிக்கப்பட்ட குழந்தைகள், ஊனமுற்ற குழந்தைகளை விட எவ்விதத்திலும் குறைந்தவர்கள் அல்ல என்பதை, 13-3-1992-ல்



இராசரத்தினம் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற ஊனமுற்றோருக்கான விளையாட்டுப் போட்டிகளில் மிகவும் உற்சாகத்தோடும் உறுதியுடனும் கலந்து கொண்டு நிரூபித்தார்கள்

இந்த விளையாட்டுப் போட்டியில் சுமார் 50 நிறுவனங்களைச் சார்ந்த ஊனமுற்றோர் கலந்து கொண்டனர். இது போன்ற விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதின் முக்கிய நோக்கம் ஊனமுற்றோரின் திறமைகளை அனைவரும் அறியச் செய்வது, மற்றும் இவ்வரசு ஊனமுற்றோர் நலனுக்காக ஆற்றி வரும் பணிகளை அனைவரும் அறியச் செய்வதே ஆகும்.

## அத்தியாயம்—5

## தமிழ்நாடு சமூக நல வாரியம்

5.1. தமிழ்நாடு சமூக நல வாரியம் 1954-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, தமிழ்நாட்டில் தொண்டு நிறுவனங்கள் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் முக்கிய பங்கு வகிக்கிறது.

வாரியத்தின் முக்கிய நோக்கங்கள் வருமாறு :—

1. சமூக நல அமைப்புகளை ஆரம்பித்து உயர்வடையச் செய்தல்.

2. தனியார் சேவை நிறுவனங்கள் பணித் திறனை வளர்ப்பதற்கு தொழில் நுட்ப மற்றும் நிதி உதவியளித்தல்.

3. உதவித் திட்டங்களை மதிப்பீடு செய்தல்.

5.2. தமிழ்நாடு சமூகநல வாரியம், மத்திய சமூகநல வாரியத்திடமிருந்து நிதி உதவி பெற்று, தொண்டு நிறுவனங்கள் மூலம் குழந்தைகள், ஊனமுற்றவர்கள் மற்றும் மகளிர் ஆகியோரது மேம்பாட்டுக்காகப் பணியாற்றுகிறது. சுமார் 50 சதவீதம் முதல் 90 சதவீதம் வரை தொண்டு நிறுவனங்களுக்கு நிதி உதவி செய்யப்படுகிறது. எஞ்சிய செலவுத் தொகை தொண்டு நிறுவனங்களால் ஏற்கப்படுகிறது. சில சிறப்புத் திட்டங்களுக்கு 100 சதவீதம் கூட நிதிஉதவி செய்யப்படுகிறது.

5.3. 1561 தொண்டு நிறுவனங்களுக்கு ஏப்ரல் 1991 முதல் ஜனவரி 1992 முடிய மொத்தம் ரூ. 202.05 இலட்சங்கள் நிதி உதவி செய்யப்பட்ட விவரங்கள் பின்வருமாறு :

| வரிசை எண்ணும் திட்டமும். | அலகுகளின் எண்ணிக்கை. | அனுமதிக்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. வருடாந்திர உதவி | 190 | 6.36 |
| 2. மகிலா மண்டல திட்டம் | 30 | 1.69 |
| 3. சத்துணவுத் திட்டம் | 94 | 6.35 |
| 4. குழந்தைகள் காப்பகத் திட்டம் | 750 | 96.13 |
| 5. விடுமுறை முகாம் | 53 | 3.71 |
| 6. பணி புரியும் மகளிர் தங்கும் விடுதி | 13 | 1.05 |
| 7. விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் திட்டம் | 37 | 3.70 |
| 8. மாநில அரசு மானியம் | 228 | 9.14 |
| 9. குடும்ப நல அறிவுரை நிலையம் | 17 | 7.80 |
| 10. குறுகிய காலக் கல்விப் பயிற்சி (1 வருடம், 2 வருடம்) | 12 | 5.60 |
| 11. வாழ்க்கைத் தொழிற் பயிற்சி | 43 | 35.56 |
| 12. சமூகப் பொருளாதாரத் திட்டம் | | |
| அ. உற்பத்தி அலகுகள் | 4 | 4.39 |
| ஆ. சேவை முனைப்புத் திட்டம் | 2 | 1.10 |
| இ. பால்வளத் திட்டம் | 69 | 14.40 |
| ஈ. சுய வேலை வாய்ப்புத் திட்டம் | 11 | 2.33 |
| உ. ஆடு வளர்த்தல் | 8 | 3.34 |
| மொத்தம் | 1,561 | 202.05 |



5.4 மகளிர், குழந்தை மற்றும் ஊனமுற்றோர் நலப் பணிகளில் சேவை நிறுவனங்களுக்கு பெரும்பங்கு அளிக்கப்பட உள்ளது. போதை மருந்து உட் கொள்ளுதல், மதுப் பழக்கம் போன்ற தீய பழக்கங்களை எதிர்த்துப் போராடி, ஒழிக்கும் பணியில் அரசுத் துறைகளும், சேவை நிறுவனங்களும், மிகுந்த ஒத்துழைப்புடன் இணைந்து செயல்பட வழி வகுக்கப்படும்.

## அத்தியாயம்—6

### சமூக பாதுகாப்புத்துறை

6.1. தமிழக அரசினரால் சமூகப் பாதுகாப்புத் துறை மூலம் இளைஞர் நீதிச் சட்டம் 1986 (நீக்கப்பட்ட தமிழ்நாடு குழந்தைகள் சட்டம் 1920) மற்றும் பரத்தமை தடுப்புச் சட்டம் 1956 இவற்றின் கீழ் பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுகின்றன. குறிப்பாக குழந்தைகள் நலம், குற்றத் தடுப்பு, ஒழுக்க நெறி தவறிய பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

(அ) புறக்கணிக்கப்பட்ட சிறார்கள் (ஆதரவற்ற, கைவிடப்பட்டவர்கள், அனாதைகள்), குற்றம் இழைத்த சிறுவர், சிறுமியர் மற்றும் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்கள், சிறுமியர் ஆகியோரின் பாதுகாப்பு, பராமரிப்பு, கல்வி, தொழிற் கல்வி மற்றும் மறுவாழ்வு ஆகியவை சமூகப் பாதுகாப்புத் துறையின் முக்கிய நோக்கங்களாகும்.

(ஆ) சமூகப் பாதுகாப்புத் துறையின் நிர்வாகம் மற்றும் செயல்பாடுகளுக்கென ஒரு முழு நேர இயக்குநர் இத்துறையின் பொறுப்பினை வகிக்கிறார். மாநிலத்தின் தென் மாவட்ட நிறுவனங்களின் நிலையான மற்றும் திறமையான மேற்பார்வைக்கென ஒரு மண்டல அலுவலகம் மதுரையில் துணை இயக்குநரின் கீழ் இயங்கி வருகிறது.

6.2 இளைஞர் நீதிச் சட்டம் 1986ன் கீழ் அமைந்துள்ள நிறுவனங்கள் :

(அ) பதினான்கு கூர்நோக்கு இல்லங்கள் (குறுகிய காலத்திற்கு தங்கும் இல்லங்கள்) இம்மாநிலத்தில் உள்ளன. இக்கூர் நோக்கு இல்லங்கள், இள்ளைஞர் நல குழுமத்திற்குவரும் ஆதரவற்ற சிறார்களையும், இளைஞர் நீதிமன்றத்திற்கு வரும் விசாரணைக் குட்படும் சிறுவர் சிறுமியரை விசாரணைக் காலங்களில் பொறுப் பேற்று கவனித்து ஆதரவு அளித்து வருகின்றன. சிறப்பு/ இளைஞர் இல்லங்களின் நுழைவு ஆதார இல்லங்களாக இவை உள்ளன. மொத்தமுள்ள 14 கூர்நோக்கு இல்லங்களில், பதி னொன்று அரசினராலும், ஏனைய 3 இல்லங்கள், குழந்தைகள் பாதுகாப்புச் சங்கம், விடுதலைப் பெற்ற கைதிகள் உதவிச் சங்கம் மற்றும் பாலமந்திர் ஆகிய தனியார் நிறுவனங்களாலும், அரசின் நிதியுதவியுடன் நடத்தப்படுகின்றன. மைய அரசின் விதி முறைகள் படி இல்ல வாசிகளுக்கு பராமரிப்பு மான்ய உதவியாக ஒரு இல்ல வாசிக்கு வயது வித்தியாசமின்றி மாதமொன்றுக்கு ரூ. 240 (உணவு, உடை, எண்ணெய் மற்றும் சோப்பு வகைகள்) அரசினரால் வழங்கப்படுகிறது.



(ஆ) 1986 ஆம் ஆண்டு இளைஞர் நீதிச் சட்டத்தின்படி. மொத்தம் 21 சிறப்பு/ இளைஞர் இல்லங்கள் மாநிலத்தில் உள்ளன. இந்த 21 நிறுவனங்களில் 3 சிறப்பு இல்லங்களும், 7 இளைஞர் இல்லங்களும் அரசினராலும், மீதமுள்ள 11 இளைஞர் இல்லங்கள் அரசிடமிருந்து பராமரிப்பதற்கு என மானிய உதவி பெற்று தனியார் நிறுவனங்களால் நடத்தப்பட்டு வருகின்றன. இளைஞர் நீதிச் சட்டத்தின் கீழ் துவங்கப்பட்ட இளைஞர் நீதி மன்றங்கள் மூலம், குற்றம் புரிந்த சிறார்கள் சிறப்பு இல்லங்களிலும் இளைஞர் நலக் குழுமங்கள் மூலம் ஆதரவற்ற சிறார்கள் இளைஞர் இல்லங்களிலும் அனுமதிக்கப்படுகின்றனர். மனநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், சென்னையிலுள்ள பாலவிஹார் நிறுவனத்தின் கீழ் உள்ள இளைஞர் இல்லங்களில் அனுமதிக்கப் படுகின்றனர்.

6.3 இளைஞர் நீதிச் சட்டம் 1986ன் கீழ் அமைந்துள்ள மாதிரி நிறுவனம் :

அரசினர் சிறப்பு இல்லம், செங்கல்பட்டு என்ற அரசு நிறுவனமானது ரூ. 3.17 இலட்சம் செலவில், யுனிசெப் நிறுவனத்தின் உதவியால் விரிவாக்கப்பட்டு, 1991–92 ஆம் ஆண்டில் மேம்படுத்தப்பட்டு, கீழ்க்காணும் கூடுதல் வசதிகள் ஏற்படுத்தப்பட்டு மாதிரி நிறுவனமாக உருவாக்கப்பட்டுள்ளது.

1. உலோகத் தகடு பணி, விசைத்தறி மற்றும் பாய் பின்னும் தொழில்களை நவீனப்படுத்துதல்;

2. விசைக் கலப்பை கொண்டு விவசாயத்தில் நவீனப் பயிற்சியளித்தல்;

3. இரண்டு சக்கர வாகன பராமரிப்பு அறிமுகப்படுத்துதல்;

4. கல்விப் பிரிவை பலப்படுத்த நூலகத்திற்கு புது புத்தகங்கள் அளித்தல், வண்ண தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குகல், ஒலிப்பதிவு நாடாக் கருவி, ஒலி மற்றும் ஒளி நாடாக்கள் மற்றும் வானொலியுடன் கூடிய ஒளிப்பதிவு பெட்டி வழங்குதல்;

5. விளையாட்டிற்கு பொருட்கள் வழங்கி பொழுது போக்கிற்கு உதவுதல்.

6.4 இளைஞர் நலக் குழுமங்கள் :

புறக்கணிக்கப்பட்ட சிறார்கள் தொடர்புடைய வழக்குகள் விசாரணைக்கென ஒரு தலைவரும், 5 உறுப்பினர்கள் கொண்ட (மகளிர் உறுப்பினர் ஒருவர் உட்பட) 13 இளைஞர் நலக் குழுமங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### 6.5 இளைஞர் நீதிமன்றங்கள் :

சென்னை நகரினைப் பொறுத்த வரை, பன்னிரண்டாவது நகர நீதிபதியும், வெளியூர்களில் தலைமைக் குற்றவியல் நீதிபதி, சார்பு உட்கோட்ட குற்றவியல் நீதிபதி மற்றும் முதன்மை குற்ற வியல் நீதிபதிகள் ஆகியோர், குற்றம் புரிந்த சிறார்களை விசா ரித்து தீர்ப்பு வழங்கும் பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளனர்.

### 6.6 பரத்தமைத் தடுப்புச் சட்டம் 1956ன் கீழ் அமைந்துள்ள மகளிர் காப்பகங்கள் / பாதுகாப்பு இல்லங்கள் :

அரசினர் மகளிர் காப்பகங்கள்/பெண்கள் பாதுகாப்பு இல்லங் கள் (நீண்ட கால வரையறை) 1956 ஆம் ஆண்டின் பரத்தமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் சேர்க்கப்படும் பெண்டிர் மற்றும் சிறுமியர்கட்கு புகலிடமும், பயிற்சியும், மறுவாழ்வும் அளிக்கின் றன. இந்நிறுவனங்கள் ஒழுக்க நெறி தவறிய மற்றும் ஒழுக்க நெறிக்கு ஊறுவிளையக் கூடும் என அஞ்சி தானாக சேர விரும்பும் மகளிருக்குப் பாதுகாப்பு அளிக்கின்றது. இத்துறையில் ஆறு மகளிர் காப்பகங்கள்/பாதுகாப்பு இல்லங்கள், சென்னை, மதுரை, திருச்சி, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் நிறு வப்பட்டுள்ளன.

### 6.7 விழிப்புப் பணி மீட்பு இல்லங்கள் :

அரசினரால் நடத்தப்படும் ஆறு (குறுகிய கால) மீட்பு இல்லங் கள் சிறுமியர் மற்றும் பெண்கள் நீதிமன்ற விசாரணைக் காலங் களில் பொறுப்பேற்கின்றன. இவை தவிர, ஒழுக்க நெறி தவறிய சிறுமியர்களுக்கும் மற்றும் திருமணமாகாத தாய்மார் களுக்கும் 2 இல்லங்கள் தனியார் நிறுவனத்தாரால் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வில்லங்களிலுள்ள இல்லவாசிகளுக்கு, ஒரு மாதத்திற்கு தலா ரூ. 70 வீதம், மானியம் இத்துறையால் வழங்கப் பட்டு வருகிறது. இக்குறுகிய கால வரையறையுள்ள நிறுவனங் கள் நீண்ட கால வரையறையுள்ள பாதுகாப்பு இல்லங்களுக்கு நுழைவாயில்களாகும்.

### 6.8 பிற்காப்பு நிறுவனங்கள் :

(அ) நிறுவனங்களிலிருந்து வெளியேறும் இல்லவாசிகளின் பரா மரிப்புக்காக மூன்று பிற்காப்பில்லங்கள் உள்ளன. இவற்றுள் இரண்டு சிறுவர்களுக்காகவும், ஒன்று சிறுமியர் மற்றும் பெண்டிருக் காகவும் உள்ளது. பெண்களுக்கான ஒரு இல்லம் வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் வேலூரிலும், சிறுவர்களுக் கான இரண்டு இல்லங்கள் ஆத்தூர் (செங்கற்பட்டு ஏம்.ஜி.ஆர். மாவட்டம்) மற்றும் மதுரையிலும் உள்ளன. இவ்வில்லங்கள் இளைஞர் இல்லங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட இல்லவாசிகளுக்கு தொழிற் கல்வி பயிற்சி அளிப்பதுடன், அவர்களை வெளிக் கல்லூரிகளிலும், தொழிற் பயிற்சி நிலையங்களிலும் பயிற்சி அளித்து, அவர்கள் சுய வேலைக்கு தகுதி பெறுமளவுக்கு, நேர்மை யான வாழ்க்கை அமைத்துக் கொள்ள வழி செய்யப்படுகிறது.



(ஆ) உடைகள், உள்ளடக்கிகள் மற்றும் தோல் பொருட் கள் தயாரிப்பதற்கான தொழில் பயிற்சியளிக்கும் வசதிகளும் வேலூர் அரசினர் மகளிர் பிற்காப்பு நிறுவனத்தில் செய்யப்பட் டுள்ளன. இல்லவாசிகளுக்கு பயிற்சியளிப்பதுடன், பர்மா மற்றும் இலங்கை அகதி பெண்கள் மற்றும் உள்ளூர் பெண்கள் இந்நிலையத்தில் பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

### 6.9 கல்விப் பயிற்சி :

அனைத்து சிறப்பு/இளைஞர் இல்லங்களிலும் 8 ஆம் வகுப்பு வரை கல்வி அளிக்கப்படுகிறது. இவை கல்வித் துறையால் அங்கீ கரிக்கப்பட்டுள்ளன. செங்கல்பட்டு அரசினர் சிறப்பு இல்லம், சென்னை அரசினர் பெண்கள் சிறப்பு இல்லம் ஆகியவற்றில் மாணவ மாணவியர்க்கு 10 ஆம் வகுப்பு வரை உயர்கல்வி கற்பிக்கப்படு கிறது. உயர் கல்வியில் நாட்டமுள்ள இல்லவாசிகள் மேல் நிலைப்பள்ளி/கல்லூரி/தொழிற்பயிற்சி நிலையங்கள்/பல்தொழில் நுட்பக் கல்லூரி ஆகியவற்றில் பயிற்றுவிக்கப்படுகின்றனர். சாதாரணப் பள்ளிக் கல்வி மட்டுமல்லாமல் முறை சாரா கல்வித் திட்டத்தின் கீழ் நடத்தப்படும் கல்வி பெறவும், தேர்வு எழுத் வும் அனுப்பப்படுகின்றனர்.

### 6.10 தொழிற் பயிற்சி :

சிறப்பு/இளைஞர் இல்லங்களில் பயின்று வெளிவருவோர் களுக்கு பள்ளிக் கல்வியுடன், மறுவாழ்வுக்கென, கீழக் குறிப் பிட்டுள்ள வருவாய் ஈட்டக் கூடிய தொழிற்கல்வி பயிற்சி களும் அளிக்கப்படுகின்றன :—

(அ) சிறப்பு/இளைஞர் இல்லங்கள் ;

தச்சு, புத்தகம் கட்டுதல், இயந்திரமய தச்சுப்பணி, கொத்து வேலை, தையல் மற்றும் பூவேலை, சோப்பு தயாரிப்பு, தோட் டம் மற்றும் வேளாண்மை, நெசவு, இசைக் கருவி, பாய் நெசவு, மாட்டுப் பண்ணை, கருமாரப் பணி மற்றும் உலோகப் பணி.

மேற் குறிப்பிடப்பட்ட தொழிற் கல்வி பயிற்சிகள் மட்டும் அல்லாமல் கீழ்க்காணும் செயல்திறன் வளர்ச்சித் திட்டங்களும் அண்மைக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

1. மெழுகுவர்த்தி தயாரிப்பு
2. சிறு பேக்கரி
3. பனை நார் பொருட்கள்
4. பனை ஓலைப் பொருட்கள் தயாரிப்பு
5. காகித உறை தயாரித்தல்
6. காகித பொம்மை தயாரித்தல்

7. இல்லம் மற்றும் வாணிப இடங்களில் மின்சார ஒயர் பணி.

8. மாவு அரைப்பதில் இல்லவாசிகளுக்கு பயிற்சியளிக்க மாவு இயந்திரம் அமைத்தல்.

245 இல்லவாசிகள் மேற்குறிப்பிடப்பட்ட செயல் திறன் வளர்ச்சி திட்டத்தால் பயிற்சி பெறுகிறார்கள்.

(ஆ) விழிப்பு/பிற்காப்பு இல்லங்கள் :

1. தையல் மற்றும் பூ வேலை
2. பாய் நெசவு
3. நெசவு
4. மின்சலவையகம்

இத்திட்டத்தில் 50 இல்லவாசிகள் பயிற்சி பெறுகின் றனர்.

(இ) பிற்காப்பு நிறுவனங்கள் :

1. புத்தகம் கட்டுதல்
2. கருமாரப் பணி
3 வேளாண்மை

20 இல்லவாசிகளுக்கு உதவித் தொகையுடன் பயிற்சி அளிக்கப்படுகிறது.

மேலேயுள்ள தொழிற் பிரிவு அலகுகளில் சென்னை அர
சினர் பெண்கள் இல்லம் மற்றும் தஞ்சாவூர் அரசினர்
இளைஞர் இல்லங்களின் தையற் கூடங்களும் செங்கற்பட்டு
அரசினர் சிறப்பு இல்லத்தின் தச்சு மற்றும் நெசவுத் தொழில்
கூடங்களும் இயந்திரமயமாக்கப்பட்டு, மின் பொறிகளின் உதவி
யால் மாணவ..ட்கு உற்பத்தி செய்யப் பயிற்சி அளிக்கவும்,
இல்ல நீக்கம் பெற்று வெளியேறி அவர்கள் நிறுவனங்
களில் வேலை வாய்ப்புப் பெற வசதியும் செய்யப் பட்டுள்
ளது. தஞ்சாவூர் அரசினர் இளைஞர் இல்லம் மற்றும்
இராணிப்பேட்டை அரசினர் இளைஞர் இல்லத்திலும் உள்ள
தச்சுப் பிரிவுகள் இயந்திரமயமாக்கப்பட்டு இயங்கி வரு
கிறது. பற்ற வைப்பு மற்றும் உற்பத்தித் தொழிற்கூடம்
ஒன்று இராணிப்பேட்டையில் துவக்கப்பட்டு, இல்லவாசி
களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. மேற்குறிப்பிடப்பட்ட
பயிற்சியின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள்
1991-92 ஆம் ஆண்டில் ரூ. 9 லட்சத்திற்கு விற்பனை செய்
யப்பட்டுள்ளது.



சென்னை அரசினர் பெண்கள் சிறப்பு இளைஞர் இல்ல
வளாகத்தில் ஒரு குழந்தைகள் காப்பகம் இயங்கி வருவதுடன்
15 மாணவிகள் இப்பிரிவில் பயிற்சி பெற்று வருகின்றனர்.
சென்னை அரசினர் மகளிர் காப்பகத்தில் 20 இல்லவாசி
களுக்கென மனையியல் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது.

## 6.11. இளைஞர் வழிகாட்டி நிலையங்கள் :

சென்னை, மதுரை மற்றும் வேலூர் ஆகிய மூன்று இடங்களில்
உள்ள இளைஞர் வழிகாட்டி நிலையங்கள், இளைஞர் நீதி மன்
றங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் அனுப்பும் சிறுவர்,
சிறுமியரைப் பற்றிய மனோ நிலைகளை ஆராய்வதுடன்
சிறுவர்களிடையே நிலவும் குற்றவியல் தன்மை பற்றியும்
ஆய்வுகள் மேற்கொள்ளுகின்றன. இவ்வழிகாட்டி நிலையங்கள்
அருகில் உள்ள கூர்நோக்கு இல்லங்களின் கோரிக்கைகளை
கவனிக்கின்றன. இந்நிலையங்களின் மீதான செலவினம்
அரசால் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இவ்
வழிகாட்டி நிலையங்கள் செயற்குழுவினரால் நடத்தப்படு
கின்றன.

## 6.12 மறுவாழ்வு :

இல்லவாசிகள் மற்றும் முன்னாள் இல்லவாசிகளுக்கு
மறுவாழ்வு வழங்குவதற்கு உதவியாக தொழிற்கூட்டுறவுச்
சங்கம் ஒன்று தொழில் வணிகத் துறையில் பதிவு செய்யப்
பட்டு ''கஸ்தூரிபாய் காந்தி மறுவாழ்வு தொழிற் கூட்டுறவு
சங்கம்'' எனப் பெயரிடப்பட்டுள்ளது. சென்னையில் உள்ள
அரசு இளைஞர் சிறப்பு இல்ல வளாகத்தில் இது இயங்கு
கிறது.

இத்திட்டத்தின் ஒரு பகுதியாக பனை ஓலை பொருட்கள்
தயாரித்தல், பனைநார் பொருட்கள் தயாரித்தல், மற்றும்
மெழுகு வத்தி தயாரித்தல் போன்றவற்றில் பயிற்சி வகுப்புகள்
துவக்கப்பட்டு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின்
நிதி உதவியுடன் நடைபெற்று வருகிறது.

நிறுவனங்களில் இல்லவாசிகள் பயிற்சி பெற்ற பின்னர்,
அவர்களை சமுதாயத்தில் தகுந்த இடத்தில் அமர்த்துவதன்
மூலமாக மறுவாழ்வு அளிக்கப்படுகிறது. மறுவாழ்வு அளிக்
கப்படும் முறைகளாவன:

1. ஆதரவற்ற பெண்களுக்கு திருமண ஏற்பாடு செய்தல்.

2. வேலை வாய்ப்பு வசதி ஏற்படுத்தித் தருதல்.

3. வேலைத் திறமையுள்ள மாணவர்கட்கு அவர்கள் பயின்ற தொழிற் கல்விக்கேற்ப கருவிகள் வழங்கி அவர்கள் சுயமாக முன்னேற வழியேற்படுத்துதல்.

4. தமிழ்நாடு தேர்வாணைக் குழுவினரின் தேர்வு வரம்புக்கு உட்படாத இத்துறையின் அனைத்துப் பணியிடங்களுக்கும் மாவட்ட வேலை வாய்ப்பகங்கள் மூலம், தகுதி வாய்ந்த முன்னாள் இல்லவாசிகளைக் கொண்டு நிரப்பப்படுகின்றன.

5. திருமணம் செய்து கொள்ளும் மணமக்களுக்கு அவர்கள் குடும்பம் துவங்க சீதனமாக ரூ. 1,000 மற்றும் திருமணச் செலவுகளுக்கென ரூ. 100-ம் அரசால் வழங்கப்படுகிறது.

மகளிர் காப்பகங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட சிறுமியர் மற்றும் பெண்டிருக்கு தேவைப்படும் நிதியுதவியை அளிக்க "ஒழுக்க நெறி பிறழ்ந்த மகளிருக்கான தமிழ்நாடு நல நிதி" என்று ஒரு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இது காறும் 82 இல்லவாசிகள் இந்த நிதி மூலம் பயனடைந்துள்ளனர்.

6.13 இளைஞர்/சிறப்பு இல்லங்களுக்கு ஏற்படுத்தி தரப்பட்ட வசதிகள் :

பாத்திரங்கள், மருத்துவ உபகரணப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், சமையற் கூடத்திற்கு எரிவாயு இணைப்புகள் அளித்து நவீனமாக்குதல், நூலகப் புத்தகங்கள் வழங்குதல், தொலைக்காட்சிப் பெட்டிகள், வானொலியுடன் கூடிய ஒலிப்பதிவு பெட்டி வழங்குதல், ஆகியவை மூலம் உள்ளமைப்பு வசதிகள் இளைஞர்/சிறப்பு இல்லங்களுக்கு வழங்கப்பட்டு இல்லவாசிகளின் நலத்திற்கும் பொழுது போக்கிற்கும் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் இல்லவாசிகளின் குறைந்த பட்ச நிலையை உயர்த்த, வகுப்பறைகளை கட்டுதல், உறைவிட வசதியை மேம்படுத்துதல் மற்றும் கழிப்பிட வசதியை பெருக்குதல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

6.14. இளைஞர் நீதிச் சட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள் :

(அ) இளைஞர் நீதிச் சட்டம் 1986-ன் கீழ் இந்திய அரசினரால் பல்வேறு திட்டங்களுக்கென 50 சதவீதம் பங்குத் தொகையாக ரூ. 105.30 இலட்சம் 1988–89 மற்றும் 1989–90 ஆண்டுக்கென வழங்கியுள்ளது.

1. அரசு/தனியார் இளைஞர்/சிறப்பு/கூர்நோக்கு இல்லச் சிறார்களின் பராமரிப்பு மானியம் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

2. இத்திட்டங்களில் கட்டுமான பணிகள் நடப்பு ஆண்டில் (1992–93) பூர்த்தி செய்யப்படவுள்ளன.





3. சட்ட அலுவலர்கள், காவல் துறை அலுவலர்கள், இல்லக் கண்காணிப்பாளர்கள், நல அதிகாரிகள், ஆசிரியர்கள், பயிற்றுநர்கள், காவல் பணியாளர்கள், நன்னடத்தை அலுவலர்கள் ஆகிய இளைஞர் நீதிச் சட்ட அமுலாக்க அலுவலர்களுக்கு திறன் வாய்ந்த பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. இதுகாறும் அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையம், சென்னை கிறித்துவ ஆலோசனை மையம், வேலூர் மற்றும் தமிழ்நாடு நன்னடத்தை சீர்திருத்த சங்கம் ஆகியவற்றின் மூலம் 13 பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

4. சமையல் எரிவாயு இணைப்புகள் இளைஞர்/சிறப்பு இல்லங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

(ஆ) கூடுதலாக, மைய அரசு ரூ. 26.29 இலட்சத்தை இளைஞர் ஒழுக்கக் கேட்டினை தடுப்பதற்காக ஒதுக்கியுள்ளது. இதன்படி கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன.

1. சிறப்பு / இளைஞர் இல்லங்களில் உள்ள ஊனமுற்ற சிறார்களுக்கு ரூ. 1.64 இலட்சத்தில் சிறப்பு பயிற்சி அளிக்கும் திட்டம் ;

2. ரூ. 24.65 இலட்சத்தில் அரசு சிறப்பு/இளைஞர் இல்லங்களின் நிலையை உயர்த்தி வசதிகளை ஏற்படுத்துதல் ;

மேற்குறிப்பிட்ட திட்டங்கள் 1992–93 ஆம் நிதி ஆண்டில் செயல்படுத்தப்பட உள்ளன.

6.15 குழந்தைகளுக்கான இரவு பாதுகாப்பு இல்லத் திட்டங்கள் :

தெருக் குழந்தைகள் மற்றும் குப்பை பொறுக்கும் சிறார்கள் சமூக விரோத சக்தியினராலும், திருடர்களாலும், இரவு நேரங்களில் ஏமாற்றப்படுகின்றனர். குழந்தைக் குற்றவாளிகளின் விகிதத்தைத் தடுப்பதற்காக சென்னை பகுதியில் உள்ள தெருக் குழந்தைகள் மற்றும் குப்பை பொறுக்கும் சிறார்களுக்காக 1990–91 ஆம் ஆண்டில் 5 இரவு பாதுகாப்பு இல்லங்கள் அரசால் துவக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. கல்வி மற்றும் தொழில் பயிற்சிகள் இவர்களுக்கு அளிக்கப்படுகிறது. 1991–92 நிதி ஆண்டில் மேற்குறிப்பிடப்பட்ட 5 இரவு பாதுகாப்பு இல்லங்கள் தெருக் குழந்தைகளுக்காக துவங்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

6.16. திட்ட வளர்ச்சி மற்றும் கணிப்பாய்வுப் பிரிவு :

2–10–1987 முதல் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் 1986 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் சட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு, இச்சட்டத்தின் ஆக்கப் பணிகளை கண்காணிக்க ''யூனிசெப்'' உதவியுடன் ஒரு திட்ட வளர்ச்சி மற்றும் கணிப்பாய்வு பிரிவு அமைக்கப்பட்டுள ளது. சமூக நலம் மற்றும் சத்துணவுத் துறையின் அரசு செயலாளர் இப்பிரிவின் தலைவராவார். இப்பிரிவில் கீழ் குறிப்பிட்டோர் உறுப்பினர்களாகச் செயல்படுகின்றனர் :—

1. இயக்குநர், சமூகப் பாதுகாப்புத் துறை.

2. தலைவர், சமூக நல வாரியம்.

3. திட்ட ஒருங்கிணைப்பாளர், தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம்.

4. இயக்குநர், பொது சுகாதாரம்.

5. இயக்குநர், சமூக நலத் துறை.

பெற்றோரின் கவனிப்பற்ற குழந்தைகள் மற்றும் கடுமையான சூழலுக்கு உட்பட்ட சிறார்களின் நலனை மேம்படுத்துவதையும், இளைஞர் நீதிச் சட்டம், 1986ன்படி இச்சட்டத்தின் செயலாக்கத்தினை முறையாக நடைமுறைப்படுத்துவதையும், இப்பிரிவு குறிக்கோளாகக் கொண்டுள்ளது. நிறுவனங்களின் ஒவ்வொரு நடைமுறையாக்கத்தினையும், இல்லங்களில் உள்ள சிறார்களுக்கு, உணவு, உடல்நலம், சுகாதாரம், உறைவிடம், உடைகள், தொழில் மற்றும் கல்விப் பயிற்சி ஆகியவற்றையும் இத்திட்ட வளர்ச்சி மற்றும் கணிப்பாய்வுப் பிரிவு கூராய்வு செய்கிறது.

6.17. வரவு-செலவு :

1992–93 ஆம் ஆண்டிற்கு இத்துறைக்கான நிதி ஒதுக்கீடு (பணியாளர் சம்பளங்கள் உள்பட) ரூ. 388.45 இலட்சம் ஆகும். மானிய உதவியாக தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்படுவது ரூ. 11.86 இலட்சமாகும்.



## அத்தியாயம் 7

## முதியோர்களுக்கான ஓய்வூதியத் திட்டம்.

7.1. இத்திட்டம் முதியோர்களுக்கு சமூக பாதுகாப்பு அளிக்கக் கூடிய முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். உற்றார் உறவினர் ஆதரவின்றி பாதுகாப்பு அளிப்பார் இல்லாமல், வழியற்ற நிலையில் வாழ்ந்து வரும் முதியோர்களுக்கு உதவித் தொகை அளிக்கும் பொருட்டு, அரசு கீழ்க்கண்ட இனங்களின் கீழ் இத்திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

1. முதியோர் உதவித் தொகைத் (சாதாரணம்) திட்டம் (1–4–1962).

2. முதியோர் உதவித் தொகைத் (ஆதரவற்ற உடல் ஊன முற்றோர்) திட்டம் (1–11–1974 முதல் அமுல்படுத்தப்படுவது).

3. முதியோர் உதவித் தொகைத் (ஆதரவற்ற விதவை) திட்டம் (1–6–1975 முதல் அமுல்படுத்தப்படுவது).

4. முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள் திட்டம், (21–8–1981 முதல் அமுல் படுத்தப்படுவது).

5. கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்களுக்கு உதவித் தொகை (25–4–1986 முதல் அமுல்படுத்தப்படுவது)

7.2. வழங்கப்படும் ஓய்வூதிய விவரம் :

1. 1–4–1962 முதல் 31–3–1979 முடிய மாதம் ரூ. 20.

2. 1–4–1979 முதல் 31–3–1982 முடிய மாதம் ரூ. 25.

3. 1–4–1982 முதல் 30–4–1989 முடிய மாதம் ரூ. 35.

4. 1–5–1989 முதல் 31–1–1992 முடிய மாதம் ரூ. 50.

5. 1–2–1992 முதல் மாதம் ரூ. 75.

7.3. இலவச கைத்தறி ஜனதா ஆடைகள் வழங்குதல் :

ஆண்டுதோறும் பொங்கல் நாள் மற்றும் சுதந்திர நாள் ஆகிய நாட்களில் முதியோர் உதவித்தொகைபெறும் ஆண்களுக்கு தலா ஒரு கைத்தறி வேட்டியும், பெண்களுக்கு தலா ஒரு கைத்தறி ஜனதா சேலையும் 1979 சுதந்திர நாள் முதல் இலவசமாக அளிக்கப்பட்டு வருகிறது.

அரசு ஆணை எண். 459, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 25—10—1991ன்படி 1991ஆம் ஆண்டு முதல் தீபாவளி பண்டிகைக்கும் முதியோர் உதவி பெறுவோருக்கு தலா ஒரு கைத்தறி வேட்டியும், கைத்தறி சேலையும் இலவசமாக வழங்கப்படுகிறது. 1992-93ஆம் ஆண்டில் இந்த இலவச சேலை மற்றும் வேட்டி வழங்கும் திட்டம் பொங்கல் 'மற்றும் தீபாவளி ஆகிய இரு பண்டிகைகளுக்கும் வழங்கப்படும்.

**7.4. மதிய சத்துணவு வழங்குதல் :**

முதியோர் உதவித் தொகை பெறுபவர்களில், விரும்புவோர்களுக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுக் கூடங்களில் மதிய உணவு 15–9–1991 முதல் வழங்கப்படுகிறது.

உணவு உட்கொள்ளும் முதியோர் உதவித் தொகை பெறுபவர்கள் ஒவ்வொருவருக்கும் வாரம் ஒரு முறை ½ கிலோ அரிசியும், சத்துணவுக் கூடங்களில் சாப்பிடாத முதியோர்கள் ஒவ்வொருவருக்கும் வாரம் 1 முறை 1 கிலோ அரிசியும் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

**7.5. ஒவ்வொரு காலாண்டுக்கும் காத்திருப்போருக்கு முதியோர் உதவித் தொகை வழங்குதல் :**

ஒவ்வொரு காலாண்டின் முடிவிலும் காத்திருப்போர் பட்டியலில் இருப்பவர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்க வேண்டும் என்ற அரசு ஆணை (நிலை) எண். 440, சமூக நலம், நாள் 08—03—1989ன்படி நடை முறைப்படுத்தப்படுகிறது.

முதியோர் உதவித் தொகை திட்டத்தின் கீழ் பயனடைவோரின் எண்ணிக்கை 31—12—1991ன்படி:

| | | எண்ணிக்கை |
|---|---|---|
| (அ) | முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) திட்டம் .. | 2,32,821 |
| (ஆ) | முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற விதவைகள்) திட்டம் .. | 1,96,931 |
| (இ) | முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்) திட்டம் .. | 27,940 |
| (ஈ) | முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள்) திட்டம் | 72,404 |
| (உ) | முதியோர் உதவித் தொகை (கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் ஆதரவற்ற பெண்கள்) திட்டம் .. | 24,078 |
| | மொத்தம் | 5,54,174 |



30—6—1991 மற்றும் 30—9—1991 முடிய, முடிந்த காலாண்டுகளில் காத்திருப்போர் பட்டியலிலிருந்து முதியோர் ஓய்வூதியம் மாதம் ரூ. 50 வீதம் வழங்குமாறு உத்திரவிடப்பட்டு உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி முதியோருக்கான ஓய்வூதியத் தொகை மாதம் ரூ. 50 லிருந்து ரூ. 75 ஆக அதிகரித்து 01—02—1992 முதல் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**7.6. முதியோர் இல்லங்கள் :**

வறுமை நிலையில் உள்ள குடும்பத்தைச் சார்ந்த முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற வறுமையில் உள்ள முதியோர்கள் ஆகியவர்களின் அன்றாட வாழ்வில், உணவு, உறைவிடம் இன்றி துயர் உறுவோர் பலர் உள்ளனர். இவர்களுடைய துயர்களைய, தனியார் தொண்டு நிறுவனங்களின் சேவையை பயன்படுத்தி இந்த ஆண்டு ஐந்து முதியோர் இல்லங்கள் துவக்கப்பட்டுள்ளன.

தொகுப்புரை:—

இளம் குழந்தைகளுக்கு நலமான, வளமான வாழ்வை வகுப்போம்; ஏழை மகளிருக்கு ஒளி மயமான எதிர்காலத்தை உருவாக்குவோம்; உதவிக் கரம் நீட்டி ஊனமுற்றோரை உயர்த்துவோம். நலிந்தோர் அனைவருக்கும் நாளும் உதவுவோம். அதன் மூலம்—

எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும்—இங்கு,
இல்லாமை இல்லாத நிலை வேண்டும்
என்ற வகையில்

புதியதோர் சமுதாயத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தலைமையில் அமைக்க உறுதி பூணுவோம்.

164940
D
V2... M92/24-2

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelvely) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jegannatham Book House, 55, Nanthi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore 1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.